AR
907

# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

17




அறிஞர் அண்ணா



# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

பதினேழாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 4

அறிஞர் அண்ணா

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

# தம்பிக்கு
# அண்ணாவின் கடிதங்கள்

பதினேழாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 4

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988
பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09217
தமிழ் நகர். விருத்தாசலம் - 606 001.

விலை ரூ 16-00

அச்சிட்டோர்: சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-600 086 [107]

முதல் இரண்டு தொகுதிகளின்
முதற் பதிப்பின்

# முன்னுரை

திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல்வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப்போன்ற பல்லாயிரக் கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை. 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன். பாரிநிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்—கட்டுரைகள் — நாடகங்கள் — திரைப்பட வசனங்கள்—எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச்சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசைபயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்றலும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர்வர் தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லாவகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன.

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்த போதிலும்,ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப் பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்துகொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந் தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல் களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கரை யும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கரையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர் களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட் டுவர். அவ்வளவு கவர்ச்சியும் அறிவுத் தெளிவும் ஆராய்ச் சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப் பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந் நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங் களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட் டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத் தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவன வாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலையத்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன் பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

4-1-63

—இரா. நெடுஞ்செழியன்

# பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக் களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிட நாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963 ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந் தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங் களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவ மாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனிநூலாக வெளி யிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின் மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கி னார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்.

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு

பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடையின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் **பதினேழாம்** தொகுதியாகும். காஞ்சியில் வெளிவந்த கடிதங்களின் **நான்காம்** தொகுதியாகும். இதில் பதினைந்து கடிதங்கள் வெளிவந்துள்ளன. **'காஞ்சிக் கடிதங்கள்–4'** என்று தலைப்பிட்டுப் புதிய எண்கள் கொடுத்திருக்கிறோம்.

வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் காஞ்சியில் வந்த கடிதங்களுக்கு உரிய உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கி அச்சிட்டு உதவினார்கள். இவ்விரு அறிஞர்களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல் வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசையினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**பாரி நிலையத்தார்**

# பொருள் அடக்கம்


| கடித எண் | பொருள் | நாள் | பக்க எண் |
|---|---|---|---|
| 36. | பொருத்தம்-1 | 17-10-65 | 1 |
| 37. | பொருத்தம்-2 | 24-10-65 | 19 |
| 38. | கனவான் காற்று வாங்குகிறார்! | 31-10-65 | 36 |
| 39. | நாநலம் | 7-11-65 | 49 |
| 40. | இது போதாதா? | 14-11-65 | 66 |
| 41. | கிழக்கு வெளுத்திடும் வேளை | 21-11-65 | 82 |
| 42. | வானுலக வீதியிலே... | 5-12-65 | 96 |
| 43. | கனிவும் கசப்பும்-1 | 12-12-65 | 107 |
| 44. | கனிவும் கசப்பும்-2 | 19-12-65 | 118 |
| 45. | அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே!-1 | 26-12-65 | 129 |
| 46. | அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே!-2 | 2-1-66 | 141 |
| 47. | அகமும் புறமும் | 14-1-66 | 160 |
| 48. | வெள்ளை மாளிகையில்-1 | 6-2-66 | 179 |
| 49. | வெள்ளை மாளிகையில்-2 | 13-2-66 | 200 |
| 50. | வெள்ளை மாளிகையில்-3 | 20-2-66 | 211 |

தமிழ் நூல் காப்பகம்



# பொருத்தம்-1

பொருத்தம் என்றால் என்ன?

ஆன பிறகே பொருத்தம் இல்லை என்பார் அதிகம்

கவர்ச்சிக்கு இலக்கணமே இல்லை!

பொருத்தம் நீருக்கும் நெய்க்கும் இல்லை; நீருக்கும் பாலுக்கும் உண்டு!

விஞ்ஞானமே பொருத்தமற்றதையும் பொருத்தமுள்ள தாக்கக் கூடியது.

பழந்தமிழர் தெளிவாகத் தெரிந்திருந்த பொருத்தங்கள்.

தம்பி,

சிறப்பு நிகழ்ச்சிக்கான நாள் குறிக்கப்பட்டான பிறகு அந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர் நண்பர் டி. கே. சீனுவாசன், நான் எந்தப் பொருள் குறித்து—எந்தத் தலைப்பில்—பேச இருக்கிறேன் என்று கேட்கலானார். பிடி கொடுக்காமல் இருந்து பார்த்தேன். இயலவில்லை; சிறப்புச் சொற்பொழிவு என்றால் ஏதேனும் ஓர் தனிப் பொருள் குறித்து, தனித் தலைப்பிட்டுப் பேசுவதுதான் 'பொருத்தம்' என்ற எண்ணம் நண்பருக்கு; அவர் விளக்கிக் கூறவில்லையே தவிர, ஏதாவது ஒரு பொருள் பற்றிப் பேசவேண்டும் என்பது பற்றி அவர் வலியுறுத்தி

யதிலிருந்து நானாக அவருடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு, 'பொருத்தம்' என்ற பொருள் குறித்துப் பேசுவதாகக் கூறினேன்; கூறியான பிறகுதான் 'பொருத்தம்' என்ற அந்த எளிமையான சொல்லுக்குள்ளே என்னென்ன ஒளிந்துகொண்டுள்ளன என்பதனை எண்ணிப் பார்த்தேன்; ஏ! அப்பா! ஒரு சிறப்புக் கூட்டத்திலே சொல்லி விளக்கிவிடக் கூடியதாகவா இருக்கிறது, 'பொருத்தம்' பற்றிய விளக்கம்! காலமெல்லாம் பேசிக்கொண்டிருந்தாலும், சொன்னவைகளைவிடச் சொல்ல வேண்டியவைகளின் அளவே அதிகம் என்றுதான் எவரும் கூறவேண்டி நேரிடும்.

மிக நெடுந் தொலைவிலே உள்ள கோளங்களை இங்கிருந்து காணும்போது எத்துணை சிறிய அளவினதாகத் தெரிகின்றன; ஆனால் விஞ்ஞானிகள் அறிந்து கூறுகிறார்கள் அல்லவா, சில கோளங்கள், பூமியைவிட எத்தனையோ மடங்கு பெரியவைகள் அளவில் என்று.

ஐந்தே எழுத்துக்களாலான சிறிய சொல் 'பொருத்தம்'—ஆனால் பொருள்பற்றி ஆராய ஆராய, விரிகிறது விரிகிறது அத்தனை பெரிதாக—கோளம் போல. பொருளினைக் கண்டறியக் கண்டறிய நாமே ஒரு கட்டத்தில், இது நம்மாலே ஆகிற காரியமல்ல, இந்த வேலைக்கு நாம் பொருத்தமல்ல என்று கூறிடவேண்டி வரும். ஆனால், நமது செவிகளில், தம்பி! மிக அதிகமாக விழுகிற சொல் இந்தப் 'பொருத்தம்' என்பது. நாமே அடிக்கடி இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறோம், இந்தச் சொல்லின் நடமாட்டம் மிக அதிகம். காதிலே வீழ்ந்ததும், எளிய சொல் என்று தோன்றுகிறது; பொருள் என்ன இதற்கு என்று கூடப் பெரும்பாலும் கேட்கத் தோன்றுவதில்லை; பொருத்தம் என்றால் தெரியாதா, பொருத்தம் என்று கூறிவிடுகிறோம், தன்னாலே விளங்கிவிடும் ஒரு சொல்லுக்கு விளக்கம் வேறு தனியாகத் தரவேண்டுமா என்ற எண்ணத்தில்.

வன்கணாளர்

இடுக்கண்

உடுக்கள்

இப்படி உள்ள சொற்கள், கடினமானவைகளாக, பொருள் அறிந்தாக வேண்டும் என்ற எண்ணத்தைக்



கிளறுவனவாக உள்ளன; தோன்றுகின்றன, ஆனால், பொருத்தம்! இதற்கு இன்னொருவரிடம் பொருள் கேட்க வேண்டுமா!—என்று எண்ணிடச் செய்கிறது. ஆனால், இத்துணை எளிதா—எண்ணிப் பார்த்திடேன்,

அவனுக்கு அவள் துளிகூடப் பொருத்தமில்லை.

சொல்கிறோமல்லவா! ஆம்! என்கிறாய்! ஆனால், தம்பி! நமக்குள்ளே பேசிக்கொள்வதிலே தவறு என்ன, உண்மையில், அப்படிச் சொல்வதில்லை.

அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தமில்லை.

என்றுதான் பெரும்பாலும் பேச்சு!! கூச்சப்படாதே. தம்பி! வாடிக்கையான பேச்சு, இது. சொல்பவரின் கண்களுக்கு 'அவர்களுக்குள்' உள்ள பொருத்தம் தெரிவதில்லை; அதனால எழும் பேச்சு அது; கெட்ட நினைப்பிலே எழுவது என்று கூடக் கூறுவதற்கில்லை.

அந்த வேலைக்கு அவன்தான் பொருத்தம்,

பொருத்தம் இல்லையாம், சொன்னார்கள்!

பொருத்தம் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டாமா!

பொருத்தமானவனாகப் பார்த்தாகவேண்டும்,

பொருத்தமான வேளை அல்லப்பா, இது!

ஒன்றுக்கொன்று பொருத்தம் இருக்க வேண்டுமே,

பொருத்தமான பேச்சாகப் பேசு,

இப்படிப் பலப்பல—அடிக்கடி—எங்கும். இவை ஒவ்வொன்றுக்கும் பின்னணியில் சொல்பவர்களின் விருப்பு வெறுப்பு தொக்கி இருக்கிறது.

அழைப்பின் பேரில் திருமண வீடு செல்கிறான்; வாழ்க்கையில் வசீகரம் பெற எண்ணி ஏங்கிக் கிடப்பவன் அல்லது ஏமாற்றமடைந்தவன், தன்னிடம் உள்ள வனப்புக்கு ஏற்றவிதமான 'துணைவி'யல்ல தன் இல்லத்தரசி என்ற எண்ணம் — பெரும்பாலும் தவறான எண்ணம் கொண்டவன். அவன் தன்னைப் போன்ற நினைப்பினனுடன் பேசும்போது சொல்கிறான்,

அவளுக்கு அவன் பொருத்தமானவனே அல்ல

என்று. 'அவள்' அழகி! 'அவன்' அப்படியல்ல! இது 'இவன்' எண்ணம்! என்ன 'இவன்' அளவுகோல்? ஒன்றும் இல்லை! 'இவன்' மனத்திலே உள்ள விருப்பு வெறுப்பு. சலிப்பு கசப்பு, இவற்றின் விளைவு அந்தப் பேச்சு.

பொருத்தமானவனா அல்லவா என்பது குறித்து அறிந்துகொண்டாக வேண்டியவர்கள், தமது திறமைக்கேற்ற விதத்தில் ஆராய்ந்து பார்த்தாகி விட்டது; அதற்குப் பிறகே, மணமேடையில் மணமக்கள் அமர்ந்திருக்கிறார்கள்; மாலை மாற்றிக் கொள்வதைக் கண்டு களிக்கவும், (முடியுமானால்!) வாழ்த்தவும் (தெரியுமானால்!!) வந்துள்ளவன் சொல்கிறான்.

அவளுக்கு அவன் துளியும் பொருத்தம் இல்லை

என்று! யாரோ இவன் கருத்தைக் கேட்டதாலே, அல்ல! கருத்துத் தெளிவுள்ளவன் என்ற விருது பெற்றவன் என்பதாலே அல்ல! இவன் கருத்து என்ன என்று கண்டறிந்து பிறகே திருமண ஏற்பாட்டினை மேற்கொள்ளப் போகிறார்கள்என்ற நிலை இருப்பதால் அல்ல! கெட்டிமேளம் கொட்டியாயிற்று! தொட்டுத் தாலி கட்டிவிட்டான்! பிறகு, பேசுகிறான்,

'பொருத்தம் இல்லை'

என்று!

தம்பி! அவனுக்கும் அவளுக்கும் பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்பது இருக்கட்டும் ஒருபுறம்; 'இவன்' பேசுகிறானே அந்தப் பேச்சு, பொருத்தமானதா? துளிகூட இல்லை.

பொருத்தமறிந்து பேசவில்லை.

பொருத்தமான நேரத்தில் பேசவில்லை,

பொருத்தமானவன் பேசவில்லை.

மணமேடையில் அமர்ந்துள்ளவர்களைப் பார்த்தான பிறகு,

அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தம் இல்லை என்று பேசுகிறான்!!



அவளுக்கு அவன் துளிகூடப் பொருத்தமில்லை என்பது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், அந்த எண்ணம் யாருக்கு ஏற்பட வேண்டுமோ, எந்த நேரத்தில் ஏற்படவேண்டுமோ, அந்தநேரத்தில் ஏற்பட்டிருந்தால், பொருத்தமாக இருந்திருக்கும். இவனுக்கு, 'இலை போடும்' வேளையில் இந்த எண்ணம் ஏற்பட்டு என்ன பயன்? துளியும் இல்லை.

இதுபோலத் தம்பி! பொருத்தம் பற்றித் துளியும் பொருத்தமற்ற முறையில் பொருத்தமற்றவர்கள் பொருத்தமற்ற வேளையில் பேசிக்கொள்கிறார்களே, அதுதான் நமது செவிகளிலே நிரம்ப விழுந்திருக்கிறது. புரிகிறதல்லவா!! நாமும், பலமுறை, ஆழ்ந்த சிந்தனையற்று, ஆமாமாம்! என்று சொல்லியிருந்திருப்போம். மறுக்கமாட்டாயல்லவா?

மங்கைக்கேற்ற மணாளன் அமையவேண்டும்; இல்லையென்பார் இல்லை ஆனால், அதற்கான முறை, அந்தக் கடமையை மேற்கொள்ள வேண்டியவர்கள், அதற்கான நேரம் எது? மணமக்கள் மாலை மாற்றிக் கொண்டான பிறகா! முதல் பந்தியா, இரண்டாம் பந்தியா! முந்திரிப் பருப்பு பகோடாவா, மோர்க்குழம்பு வடையா! - என்ற பேச்சோடு பேச்சாகப் பேசித் தீர்க்கவேண்டிய பிரச்சினையா இது? இல்லையல்லவா! ஆனால், பேசுகிறார்களே! கேட்டிருக்கிறாயே. ஆக, பேசுபவர்களும் சரி, கேட்பவர்களும் சரி, பொருத்தம என்பது பற்றி ஆர அமரஎண்ணிப் பார்த்தவர்கள் தானா? இல்லை, அத்தகையவர்கள் கூறிடுவதைக் கொண்டு,

பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்று தீர்ப்பளிக்க முடியாது.

பொருத்தம் பார்ப்பது—அதுபற்றிக் கூறுவது—அறிந்து கொள்வது சாதாரணமல்ல! மிகக் கடுமையான காரியம்; பக்குவம், பயிற்சி, தெளிவு, விருப்பு வெறுப்புக்கு ஆளாகாமை இவ்வளவும் நிரம்பவேண்டும். பொறுப்பான காரியம். ஆனால், இதனைத்தான், மிக எளிதாக, விநாடிக்கு விநாடி செய்துகொண்டிருக்கிறார்கள்; வேறு யாராரையோ சொலலுவானேன், தம்பி! நாமே செய்து கொண்டிருக்கிறோம்!

பொருத்தம என்பதுபற்றி நன்றாகச் சிந்தித்துப் பார்க்காமல்,

பொருத்தம் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளாமல்,

பொருத்தம் இருக்கிறதா இல்லையா என்பதனைக் கண்டறியும் முறை அறியாமல், தெளிவு பெறாமல், பயிற்சி பெறாமல், பொருத்தம் எது என்பதனைக் கண்டறியும்போது, விருப்பு வெறுப்பு நீக்கிக்கொண்டு உண்மையைக் கண்டறியும் தூய்மையைத் தேடிப் பெறாமல்,

இது பொருத்தமில்லை, அது பொருத்தமில்லை என்று வெகு எளிதாகப் பொறுபபற்றுப் பேசுவதில் சுவை காண்கிறோம்.

நான் அறிந்தவரையில் தம்பி! இது பொருத்தமில்லை, அது பொருத்தமில்லை! என்ற பேச்சு கிளம்பும் அளவிலும் வேகத்திலும், இது பொருத்தம்! அது பொருத்தம்! என்று கூறப்படும் பேச்சின் அளவும் வேகமும் குறைவு,

இந்த மங்கை நல்லாளுக்குப் பொருத்தமானவன் இன்னான் என்றோ,

இந்தக் காரியத்தை முடித்திடப் பொருத்தமானவன் இவன் என்றோ,

இதனை முடித்திட இந்த வழிதான் பொருத்தம் என்றோ,

இதற்கு இந்த நாள்தான் பொருத்தம் என்றோ

கூறிடும் போக்கினர் அதிகம் இருப்பதில்லை, நடைபெற்றான பிறகு, பொருத்தமில்லை என்று கூறுவோர் மிக அதிகமான எண்ணிக்கையினர். நடைபெற ஏற்பாடாகி விட்டது என்பதனை அறிந்த பிறகு, 'பொருத்தமில்லை' என்று கூறுபவர்கள் அதற்கு அடுத்த அள்வினர். பொருள் தெரிகிறதா தம்பி!

இதற்குப் பொருத்தம் இதுதான்

என்று முன்னதாகச் சொல்லிடும் பொறுப்பினரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. பொருத்தம் இல்லை என்று முடிந்துபோன, அல்லது முடியப் போகிறபோது சொல்லிவைக்கும் பொறுப்பு ஏற்காதாரின் எண்ணிக்கை மிக அதிகம். இடையில் மற்றோர் வகையினரும் உண்டு,



பொருத்தம் எது என்று சொல்ல என்னால் முடியாது; ஆனால், இது பொருத்தமில்லை என்பது என் அபிப்பிராயம்

என்று, கெம்பீர நடையில் பேசித் தட்டிக் கழித்து விடுபவர்!

இதற்கு நான் பொருத்தமானவன் அல்ல!—

தம்பி! இந்தப் பேச்சு உன் காதிலே விழுந்ததுண்டா! ஆம்! என்கிறாயா!! நாடக மேடையில் கேட்டதைச் சொல்லாதே! வாழ்க்கையில் மிகமிகக் குறைந்த அளவுதான், இத்தகைய பேச்சு; அதிலே பாதி, தன்னடக்கத்தின் விளைவு; மற்றோர் பகுதி, இதற்கு உங்களைவிடப் பொருத்தமானவர் வேறு யார் இருக்க முடியும் என்று சொல்லமாட்டார்களா என்ற ஆவலுடன் பிணைக்கப்பட்ட பேச்சு! உண்மையாகவே, உள்ளத்திலிருந்து இந்தப் பேச்சு வருகிறது என்றால், அது ஆயிரத்தில் ஒருவன்கூட அல்ல, இலட்சத்தில் ஒருவன் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொதுவான எண்ணம், உள்ளத்திலே பாதி உறக்க நிலையில் உள்ள எண்ணம், ஒவ்வொருவருக்கும், எதற்கும் பொருத்தம் நமக்கு உண்டு என்பதுதான். அச்சம், கூச்சம் தடுப்பதால் அனைவரும் இதனைச் சொல்லுவதில்லை, ஆனால், மிகப பலருடைய மனத்திலே இந்த எண்ணம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த எண்ணத்தைத் துணைக்கொண்டு, தகுதியையும் திறமையையும் பெற்றிடப் பயிற்சி பெற்று, நிலையை உயர்த்திக்கொண்டால், நல்லது ஆனால், இந்த எண்ணத்தை மட்டும் கட்டிப் புரணடபடி தகுதி, திறமை பெறப் பயிற்சியும் பெறாமல், என்னை ஏன் இதற்கு அமர்த்தவில்லை, இந்த வேலையினை என்னிடம் ஏன் ஒப்படைக்கவில்லை, நான் தானே இதற்குப் பொருத்தமானவன் என்று கொதிப்படைந்து கூவி, வாய்ப்புத் தரப்படவில்லை என்று வேதனை அடைந்து, தராததற்காக அனைவரிடமும் வெறுப்புக் காட்டிடத் தொடங்கினால், பொல்லாத மனநோயால் பீடிக்கப்பட்டு, உளள திறமையும் அழிந்து உருக்குலைந்து போய்விடும் நிலை ஏற்பட்டு

விடும். அவ்விதம் ஆகிவிட்டவர்களைக் கண்டுமிருக்கிறேன்.

இதற்கு இது பொருத்தம் என்று கண்டறிவதற்கு, எந்த இரண்டுக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று கண்டறிய விரும்புகிறோமோ, அந்த இரண்டு பற்றியும் முழுவதும் முழு அளவிலும் தெரிந்திருக்க வேண்டும்

தெரிந்திருக்க வேண்டும் என்று நான் கூறுகிறபோது, தம்பி! தெளிவு இருக்கவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகிறேன்—ஓ! தெரியுமே! என்று வழக்கமாகச் சொல்லிவிடுகிறோமே, அந்த முறையிலே அல்ல.

அவனுக்கும்—அவளுக்கும் பொருத்தம் இருக்கிறதா என்று கூறுவதற்கு, முதலில் அவனைப்பற்றியும் அவளைப் பற்றியும் முழுவதும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

தோற்றத்தை மட்டும் கண்டுவிட்டு, தெரிந்து விட்டதாகக் கூறிவிடுவது சரியல்ல.

பிறர் கூறக்கேட்டு, அவர்களின் இயல்பு, நிலை, நினைப்பு குறித்து அறிந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு, அடிப்படையற்ற அந்த அறிவை அளவு கோலாகக் கொண்டு பொருத்தம் உண்டா இல்லையா என்று கூற முற்படுவது பேதைமை.

அஃதேபோலத்தான் மற்ற எதுபற்றிய 'பொருத்தம்' குறித்த கருத்தளிப்பதற்கும்.

மணவாழ்க்கையில் பொருத்தம் அமைந்து, அந்தப் பொருத்தம் காரணமாக இல்லற இன்பம் அமைவது, வெறும் உடல் தோற்றத்தின் காரணத்தால் மட்டுமல்ல, உடல் தோற்றத்தின் பொருத்தம் தேவையேயில்லை என்று நான் கூறவில்லை; கண்படைத்தவர் எவரும் கூற மாட்டார்கள் உடல் தோற்றத்திலே பொருத்தம் இருக்கவேண்டும் ஆனால், அந்தப் பொருத்தம் வாழ்க்கை மாளிகையின் 'நுழைவு வாயில்'—அவ்வளவே- நுழைவு வாயில் வேலைப்பாடு மிகுந்ததாக மட்டும் இருந்தால் போதாதல்லவா! அதுபோலத்தான் தோற்றம் வனப்பானதாக இருப்பதும்.

இந்த வனப்பு—அல்லது கவர்ச்சி என்பதற்கு ஒவ்வொருவருக்கும், அவரவர்களின் இயல்பு, அறிவு ஆகியவற்றினுக்கு ஏற்ப ஒரு இலக்கணம் அமைகிறது.



'சோகை' என்று ஒருவர் கருதும் முகத்தோற்றம், பளிங்கு நிறமாக மற்றொருவருக்குத் தோன்றக்கூடும்! 'எலும்புக்கூடு' என்று ஒருவர் ஏளனமாகப் பேசி இருக்கக்கூடும், மற்றொருவரின் 'பூங்கொடி'யை!! 'ஆணவம்' என்று ஒருவருக்குத் தென்படும் பேச்சு, 'கெம்பீரம்' என்றாகிவிடக்கூடும் மற்றொருவருக்கு. 'பகட்டு' என்று கூறுவார் ஆடை அலங்காரம் கண்டு ஒருவர், நவீனமுறை என்று அதனைப் பாராட்டுவார் மற்றொருவர்! இதற்கெல்லாம் தம்பி! ஒரு திட்டவட்டமான இலக்கணம் கிடையாது ஆளாளுக்கு மாறும்! ஒரே ஆளுக்கே வேளைக்கு வேளை மாறுகிறதே! பார்க்கிறோமே!!

'பார்த்தால் பசி தீரும்' என்று கூறிடும் பருவம் மாறி விடுவதையும், தொட்டேன்! கெட்டேன்! என்று பேசும் பருவம் தோன்றுவதையும், கதைகளில் மட்டுந்தானா காண்கிறோம்? வாழ்க்கையில் இத்தகைய படப்பிடிப்புகள் பல உள்ளன.

தம்பி! மணவாழ்க்கையின் பொருத்தம், மணவாழ்க்கையில் ஈடுபடும் அந்த 'இருவர்' உய்த்து உணரத்தக்கது; பிறர் கண்டு அறிவிப்புத் தரத்தக்கதல்ல.

உய்த்து உணரத்தக்கது மட்டுமல்ல, தொடர்ந்து முயன்று முயன்று, இடையிலே முளைத்திடும் இன்னல்களைந்து பிறகு கன்னல் சுவை பெறுவது அல்லது கிடைப்பதனைக் கன்னல் சுவை எனக் கொள்வது என்ற முறையில் அமைந்துள்ளது, வாழ்க்கைப்பயணம். அது பிறர் கண்டதும் இன்ன விதமாகத்தான் இருக்கும் என்று முடிவு செய்து அறிவித்துவிடக் கூடியதல்ல. வாழ்க்கைப் பயணத்தின்போது எத்தனை எத்தனையோ சோதனைகள், சாதனைகள், இன்னல்கள், வெற்றிகள், முயற்சிகள், ஏமாற்றங்கள், புன்னகை, பெருமூச்சு, கண்ணீர், இணைப்பு, பிணைப்பு, அணைப்பு என்று பலப் பல! இவ்வளவும் கணக்குப் பார்த்து, 'பொருத்தம்' காண வேண்டும்! யார் கணக்கேட்டுக்கு உரியவர்களோ அவர்களாலேயே எளிதாகக் கண்டுபிடிக்க முடியாத ஒன்று; அந்நிலையில், 'காகிதப் பையில் வைத்தளிக்கப்படும் தாம்பூலத்தை' வாங்கிக் கொண்டுபோக வந்திருப்பவர்கள், துளியும் பொருத்தம் இல்லை என்று சொல்லி விடுவது, பொருள் உள்ளதாக முடியுமா!!

இருபொருள்களின் தன்மையும் ஒன்றுக்கொன்று சிறப்பளிக்கத் தக்கன என்கிறபோது, 'பொருத்தம்' இருக்கிறது என்று கூறலாம்.

இதற்கு அதுதேவை, துணை என்று ஏற்படும் போது பொருத்தம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம்.

இதுவும் அதுவும் ஒன்று கூடினால், அந்த இரண்டும் தனித்தனியாக இருக்கும்போது கிடைத்திடக் கூடிய பயனைவிட மிகுதியான பயன் கிடைத்திடும் என்பது புரிகிறபோது, இதற்கு அது பொருத்தமாக இருக்கும் என்று கூறிடலாம்.

ஆக, இருவேறு இயல்புகள், தன்மைகள், திறமைகள் தகுதிகள் ஒன்று கூடி, மொத்தமாக இயங்கி, அவ்விதம் இயங்குவதன் காரணமாக, புதிய பயன் கிடைத்திடும் போது, அந்த இரண்டுக்கும் பொருத்தம் அமைந்திருக்கிறது என்கிறோம்.

பொருத்தமான நிலம்—பொருத்தமான விதை! பொருத்தமான பண்ணைமுறை!—நிரமபிய அறுவடை!

இந்த நிலத்திற்கு, சம்பாதான் பொருத்தம் என்கிறோம்.

கரிசல் பூமி—பருத்திப் பயிருக்குப் பொருத்தமானது என்கிறோம்.

மணலும் செம்மண்ணும் கலந்த பூமி—முந்திரிக்குப் பொருத்தமான இடம் என்கிறோம்.

ஊர்க்கோடியில் உள்ள வயல்—இரண்டாம் போகம் பயிரிடப் பொருத்தம் இல்லை என்கிறோம்.

இவ்விதம் கூறிட, மண்ணின் இயல்பும் பயிரின் தன்மையும், இவைகளின் 'கூட்டு' என்னென்ன விதமாக அமைய முடியும் என்ற வகைபற்றியஅறிவும், என்னென்ன வகையான 'கூட்டு' என்னென்ன விதமான பலனைத் தருகிறது என்பதுபற்றிய ஒப்பிட்டுக் கண்டிடும் அறிவும் தேவை.

வாழைக்கு ஏற்ற வயலில் வரகரிசி தூவிடலாம், பருத்திக்கேற்ற காட்டில் பழச் செடிகளை நட்டுப் பார்க்கலாம்,—ஆனால், பொத்தமற்றது என்பது அறுவடையில் தெரிந்துவிடும்!



பொருத்தம் அறிவதற்குத் தேவைப்படும் அறிவினைப் பெறுவது எளிதானதுமல்ல, எல்லாத் துறைகளிலும் 'பொருத்தம்' எவ்விதம் இருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள இயலும் என்று கூறுவதும் சரியல்ல!

வயலுக்கும் பயிருக்கும் இருக்கக்கூடிய பொருத்தம் அறிந்து கூறிடக்கூடிய உழவர் பெருமகனிடம் மருத்துவத்துறைபற்றியோ, மணவாழ்க்கைத்துறை குறித்தோ, 'பொருத்தம்' கேட்டால் என்னகிடைக்கும்?

'பொருத்தம்'பற்றிய அறிவு பெறுவதும், தெளிவளிக்கும் பயிற்சி பெறுவதும் கடினம் என்பதுடன், ஒருவரிடம் எல்லாத் துறைகள் குறித்தும் 'பொருத்தம்' கூறிடத் தக்க திறமை இருக்கும் என்று எதிர்பார்ப்பது மிகமிகத் தவறு என்பதனையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவரே இதற்குப் பொருத்தமானவர் என்று ஒருவரைக் கண்டறிவதே கடினம் என்கிறபோது, இவரே எல்லாவற்றுக்கும் பொருந்தமானவர் என்று கூற முற்படுவது, எங்ஙனம் இயலும்?

எல்லாம் எனக்குத் தெரியும் என்று சிலர் கூறலாம்; அதனை நம்பி அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைக்க முன்வருவார் உண்டா! இவருக்கு எல்லாம் தெரியுமாம்!—என்ற ஏளனப் பேச்சுக்குத்தான் 'அவர்' பயன்படுத்தப்படுவார்.

'பொருத்தம்' என்பது தம்பி! பொருந்துவது—சரியாகச் சேருவது—கூடுவது—பயன் தரத்தக்க விதத்தில் கலப்பது—எனும் பொருள் தருவது.

தண்ணீரில் எண்ணெய் பெய்துபார்—பொருத்தமில்லை—எண்ணெய் மேலே மிதக்கிறது; தனியாகத் தெரிகிறது; தண்ணீருடன் கலந்துவிட மறுக்கிறது; பொருத்தம் இல்லை.

பொருத்தம் இல்லாதது தெரிவது மட்டுமல்ல, பொருத்தமில்லாத இரண்டினை—தண்ணீரையும் எண்ணெயையும் நாம் வேண்டுமென்றே ஒன்றாகக் கலக்கியதால், எண்ணெய் எரிபொருளாகும் இயல்பினை இழந்து

விடுகிறது, பயன் கெடுகிறது; தண்ணீர் பருகிடப் பயன் படுவதில்லை; இயல்பு கெட்டொழிகிறது; இந்த இரண் டின் இயல்புகள் கெட்ட பிறகு, பொதுவான, பயன்தரத் தக்க ஒரு புதிய இயல்பு கிடைக்கிறதா என்று பார்த்தால், இல்லை!!

பாலில் கலக்கும் தண்ணீர் அவ்விதம் இல்லையே-கலந்துவிடுகிறதே; தனித்தனி தெரிவதில்லையே; பருகிடத் தக்கது என்ற இயல்பும் கெடுவதில்லையே என்று வாதாட முயல்வார்கள்—வாதாடுவதில் சுவை காண்பவர்கள். சுவையான வாதம் தம்பி! சூடு ஏறுகிற வரையில், பாலுடன் கலந்த தண்ணீர், ஆவியாகத் தனியே பிரிந்து, சொல்லாமல் கொள்ளாமல் மேலே போயேவிடுகிறது தெரியுமல்லவா, பாலைக் காய்ச்சும்போது! 'சூடு' கொடுத் ததும், பொருத்தமற்ற கூட்டு, உடைபட்டுப் போய்விடு கிறது.

எண்ணெய் என்பதனை மட்டுமேதான் எடுத்துக் கொள்ளேன் தம்பி!

விளக்கெரிக்கப் பயன்படும் எண்ணெய் யாவும் யந்திரங்களை இயங்கவைக்க முடிகிறதா! டீசலை ஊற்றி இயங்கவைக்க வேண்டிய யந்திரத்தில் விளக்கெண்ணெய் ஊற்றுவாரும், விளக்கெண்ணெய் ஊற்ற வேண்டிய அகல் விளக்கில் பெட்ரோலை ஊற்றுவாரும் உண்டா!! பொருத்தம் இல்லை என்பது தெரிகிறது.

ஒரு பொருளுடன் மற்றோர் பொருள் கூடிப் பயன்தர முடியுமா என்பதனைப் பொறுத்து, 'பொருத்தம்' இருப் பதனை அறிந்துகொள்ளலாம்.

விஞ்ஞானம், பொருத்தமற்றது என்று நாம் கருதி வந்த பொருள்களை, இயல்பினை மாற்றியோ, திருத்தி அமைத்தோ, பொருத்தம் உள்ளது ஆக்கித் தரப் பயன்படுகிறது.

இயற்கையான இயல்பின்படி இருவேறு பொருள்களின் கூட்டு பயன்தரத்தக்கதாக இருந்திடும்போது, 'பொருத் தம்' இருக்கிறது என்று கூறிடலாம்.

வழிவழி வந்த அறிவின் துணைகொண்டும், கண்டு கண்டு பெற்ற தெளிவின் துணைகொண்டும், இயற்கைப் பொருள்களிடையே உள்ள 'பொருத்தம்' அல்லது



பொருத்தமற்ற தன்மை ஆகியவற்றினை, சராசரி அறி வுள்ளவர்களும் அறிந்து கூற முடிகிறது.

வெங்காயத்துண்டும் பச்சை மிளகாயும் கடித்துக் கொண்டு கூழ் சாப்பிட்டால் ஒரு பொருத்தம் இருக்கிறது என்பதும், அதே பச்சை மிளகாய் பால் சாப்பிடுவதற்குப் பொருத்தமாக இராது என்பதும், தெரிந்து கொள்ள பல்கலைக்கழகம் போகவேண்டுமா; பட்டி தொட்டி யெல்லாம் தெரிந்த அனுபவ அறிவு, அது. மார்கழி மாதம் பயன்படும் கம்பளிப் போர்வை கோடையில் பொருத்தமில்லை என்பதனைக் கூட்டம் கூட்டியா சொல்ல வேண்டும்,

கூடுமானவரையில் இயற்கைப் பொருள்களுக்குள்ளே இருக்கக்கூடிய பொருத்தம் பற்றிய அறிவும் தெளிவும் வியந்து பாராட்டத்தக்க அளவு பரவி இருக்கிறது; நிலைத்து இருக்கிறது.

மக்களுக்குள்ளே ஏற்படக்கூடிய பொருத்தம், செய லுக்கும் செய்பவனுக்கும் இருந்தாக வேண்டிய பொருத் தம், செயலுக்கும் செயல்பட வேண்டிய காலத்துக்கும் உள்ள பொருத்தம், செயலுக்கும் செயல்முறை, கருவி ஆகியவற்றுக்கும் உள்ள பொருத்தம் ஆகியவை குறித்த அறிவினைப் பெறுவதும், தெளிவடைவதும், போதுமான அளவிலோ, தரத்துடனோ, வளர்ந்திடவில்லை; வளர்ந் தாக வேண்டும்.

கோட்டை, எதிரியிடம் சிக்காதிருக்க என்பதும், அகழ் கோட்டைக்கு அரணாக என்பதும், காட்டுவழி எதிரி அறியாமல் அவன்மீது பாய்ந்திட என்பதும், மலைச்சரிவு, பள்ளத்தாக்கு, ஆற்றோரம், நகர்ப்புறம், சதுப்புநிலம் எனும் இன்னபிற இட அமைப்புகள் ஒவ் வோர் வகையான போர் முறைக்கு ஏற்றதென்பதும், நெடுங்காலத்துக்கு முன்பிருந்த தமிழகம் பெற்றிருந்த நுண்ணறிவாகும்.

வீசுவதற்கு வாள், எறிவதற்கு ஈட்டி, குத்திக் குடலெடுக்க வேல், எய்வதற்கு அம்பு, நொறுக்குவதற்குப் பெருந்தடி, சுழற்றி அடிப்பதற்குக் கம்பு, வாளிட உறை, அம்புகளுக்குத் தூணி, தடுப்புக்குக் கேடயம், உடலுக்குக் கவசம்—எனும் இந்தப் பொருத்தங்கள் நீண்ட நெடுங்

காலத்திற்கு முன்பிருந்தே தமிழகம் தெரிந்து வைத்திருந்தது.

கோட்டைகளைத் தாக்கிட யானைப் படையையும் விரைந்து சென்று எதிரிப்படையைப் பிளந்தெறியக் குதிரைப்படையையும் பயன்படுத்துவதே பொருத்தமான போர்முறை என்பதனைப் பழந்தமிழகம் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறது.

எதிரியின் போக்கைக் கண்டறிய, உளவுத்துறை துறை பொருத்தமானது என்பதுபற்றிய நுண்ணறிவு நிரம்ப இருந்திருக்கிறது.

போர் முறை, போர்க் கருவிகள் என்பவைகளுடன் போருக்கான காலம், எந்தெந்தக் காலத்தில் என்னென்ன விதமான போர்முறையை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்பது பற்றிய நேர்த்தியான அறிவுத் தெளிவு மிகுந்திருந்திருக்கிறது.

காலம், இடம், முறை இவைகளைப் பொறுத்து ஒரு செயலின் வெற்றிக்கான பொருத்தம் அமைகிறது என்ற அறிவுத் தெளிவும், அந்த அறிவுத் தெளிவினை எல்லாத் துறைகளிலும் பயன்படுத்திய திறனும் கொண்டவர்களாகத் தமிழர் விளங்கி வந்தனர்.

பொருத்தமான காலம், இடம், முறை ஆகியவற்றினைத் தேர்ந்தெடுத்தும், வெற்றி கிட்டாமல் போவதுண்டு; அதனால், காலம், இடம், முறை பற்றிய பொருத்தம் பார்க்கவே தேவையில்லை என்று முடிவு கொள்வது பெருந் தவறு. பொருத்தம், பொருத்தமாக அமையவில்லை என்று மட்டுமே கொள்ள முடியும்.

அதுபோலவே, தம்பி! ஏதேனும் ஓர் துறையில் எவரோ ஒருவருக்கு ஏதாவதொரு வகையான வெற்றி கிட்டிவிட்டதும், அந்தத் துறையில் அவரே பொருத்தமானவர் என்றோ, அவருடைய முறைகளே பொருத்தமானவை என்றோ தீர்மானித்து விடுவதும் சரியல்ல.

பல துறைகளிலே பலருக்குக் கிடைத்திடும் வெற்றி, பொருத்தத்தினாலேயே அமைந்துவிடுவதுமில்லை.

தம்பி! இவ்விதம் நான் கூறுவதால், 'அதிர்ஷ்டம்'—'ஜாதக பலன்'—என்பன போன்றவைகளை நம்புகிறேன் என்றோ, நம்பச் சொல்கிறேன் என்றோ தவறாக எண்ணிக் கொள்ளாதே!



எந்தத் துறையிலும், போர்த் துறை எனினும் வாணிபத் துறையெனினும், அரசியல் துறையெனினும், இல்லறத் துறையெனினும், இருவேறு 'சக்திகள்' ஒன்றுடன் மற்றொன்று மோண்டிடும் தொடர்பின் விளைவாகவே, வெற்றியோ தோல்வியோ ஏற்பட முடியும். தொடர்பு கொள்கிற இருவேறு சக்திகளும், இடம், காலம், முறை ஆகியவற்றின் பொருத்தமறிந்து செயல்படும்போது, இரு சக்திகளில் ஒன்றின் முறைப் பொருத்தம் மற்றொன்றின் முறைப் பொருத்தத்தை மிஞ்சக் கூடியதாக அமைந்துவிடுமானால், வெற்றி அந்தப் பக்கம் இருந்திடுமல்லவா?

சர்க்கரை மூட்டைகளை இந்த மாதம் இன்ன விலைக்கு வாங்கி இன்ன மாதத்தில் விற்றால் இவ்வளவு இலாபம் கிடைக்கும் என்று சாந்தப்பன் திட்டம் வகுத்திருப்பான்—இடம், காலம், முறை ஆகியவை பற்றிய பொருத்தத்தைப் பார்த்து.

ஆனால், சாத்தப்பன், எந்தக் கந்தப்பனிடம் மூட்டைகளை விற்கலாம் என்று எண்ணித் திட்டமிடுகிறானோ, அந்தக் கந்தப்பன் இன்ன மாதத்தில் வாங்காமலிருந்து விட்டால், நாலு மாதத்திற்குப் பிறகு தன்னாலே சரக்கு விலை விழும் என்று ஒரு கணக்குப் போட்டுப் பார்த்து, சாத்தப்பன் விற்க வருகிறபோது, சரக்கு இப்போதைக்குத் தேவையில்லை என்று தீர்மானித்து விடுவானானால், சாத்தப்பன் போட்டிருந்த திட்டம் கெட்டுவிடுகிறது.

விந்தை இதிலேகூட இல்லை, சாத்தப்பன்—கந்தப்பன் எனும் இருவரன்றிப் பிறிதொருவரின் நடவடிக்கைகாரணமாகவும், சாத்தப்பன்—கந்தப்பன் எனும் இருவருக்குள் அமையவேண்டிய வாணிபத் நொடர்பு கெட்டுவிடக் கூடும்.

திட்டமிட்டபடி சாத்தப்பன் சரக்கினை விற்க முனைகிறான். கந்தப்பனும் வாங்க வருகிறான். ஆனால், திடீரென்று சர்க்கார் உத்திரவு ஒன்று கிளம்புகிறது—இன்னும் ஆறு திங்களுக்கு, தனிப்பட்ட வாணிப முறைப்படி சர்க்கரை விற்பனை நடத்தப்படக்கூடாது என்று. அப்போது? சாத்தப்பன் திட்டம், கந்தப்பனால் அல்ல, பிறி

தோர் 'சக்தி'யின் நடவடிக்கை காரணமாகக் கெட்டுவிடுகிறது.

இவைகளைக் கொண்டு. திட்டமிடுவதே கூடாது என்ற முடிவுக்கும் வருவதல்ல, திட்டமிட்டாலுங்கூடச் சில சூழ்நிலைகள் கெடுதலை உண்டாக்கிவிடும் என்ற பாடம் மட்டுமே பெறவேண்டும்.

வெற்றி கிடைத்திடப் பெற்றவர்களெல்லோரும், பொருத்தமான முறையிலே பணியாற்றியதாலேயே வெற்றி பெற்று விடுவார்களென்று பொருள் கொண்டிடுவது, கானலை நீரென நம்பிடுவதாகி விடும்!

சிறுகதையொன்று நினைவிற்கு வருகிறது. ஒரு அலுவலகத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகிறார் ஒருவர்; போதும் இத்தனை ஆண்டுகள் பணியாற்றியது என்று கருதுகிறார்; வேலையை விட்டுவிட வேண்டும், வீட்டோடு ஓய்வாகஇருந்திட வேண்டும் என்று விருப்பம். இதனை அவருடைய இல்லத்தரசி ஒப்பவில்லை அதனால் கூடச் சங்கடம் அதிகம் இல்லை. அலுவலக உரிமையாளர் இவர் விலகுவதைத் துளியும் விருமபவில்லை. விலகுவதாகக் கூறியபோதெல்லாம் மறுத்து வந்தார். என்ன செய்வதென்று எண்ணிப் பார்த்து எண்ணிப் பார்த்து, அலுவலக உரிமையாளரே தன்னை விலக்கிவிடும்படியான சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதற்கோர் வழி கண்டுபிடித்தார்.

ஒரு மாலை, அலுவலக உரிமையாளரின் தனி அறைக்கு வெளியே நின்றுகொண்டு, வாய்க்கு வந்தபடி அலுவலக உரிமையாளரை ஏசலானார்.

> முதலாளியாம், முதலாளி! முகத்தைப் பார், முகத்தை! இவனைப்போய் என் முதலாது என்று கூறவேண்டுமாம்! மோசக்காரன்! நயவஞ்சகன்! நல்லவன் போல் வேடம் போட்டுக்கொண்டு ஊரை ஏய்க்கிறான், நானா ஏமாறுவேன்! உன் கபட நாடகம் எனக்கு நன்றாகத் தெரியும்!

அலுவலக முதலாளியைத் தாறுமாறாக ஏசும் குரல்கேட்டு அலுவலகப் பணியாளர் பலரும் வந்து கூடினர். அவர்களுக்கு ஒரே வியப்பு! திகைப்பு! முதலாளியின் நன்மதிப்பைப் பெற்றவர், நீண்ட பல ஆண்டுகளாகப் பணியாற்றி



நல்லபெயர் பெற்றவர். இவரா முதலாளியை இப்படி ஏசுகிறார். குடிவெறியா! மூளைக் குழப்பமா!—என்றெண்ணித் திகைத்தனர்.

கேவலமாக ஏசியதுடன் நிற்கவில்லை! கையில் கொண்டு வந்திருந்த கணக்கு ஏடுகளை, உள்ளே நாற்காலி மீது உட்கார்ந்து கொண்டிருந்த முதலாளி மீது வீசலானார். அலுவலகப் பணியாளர்கள் பதறிப்போய், வேண்டாம் வேண்டாம்! என்று கூவினர், தடுத்துப் பார்த்தனர், முடியவில்லை. கணக்கு ஏடுகள், உள்ளே உட்கார்ந்திருந்தவரின் தலையிலே விழுகின்றன, மூக்குக் கண்ணாடி நொறுங்குகிறது.

அக்கிரமக்காரன்! அநியாயக்காரன்! பிடித்து உதையுங்கள், போலீசைக் கூப்பிடுங்கள்!—என்று அலுவலகப் பணியாளர்கள் கூவுகின்றனர். அருகே செல்ல அவர்களுக்கு அச்சம்! வெறி தலைக்கேறிவிட்டது; அதனால்தான் முதலாளியைத் தாக்குகிறான்; நாம் அருகே சென்றால் என்ன செய்வானோ; கத்தி வைத்துக் கொண்டிருப்பானோ என்னவோ! இப்படியெல்லாம் பீதி கொண்டனர்.

> என்னையா அக்கிரமக்காரன் என்கிறீர்கள்! அட! பைத்தியக்காரர்களே! அக்கிரமக்காரன் உள்ளே இருக்கிறான், உள்ளே! ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். நாற்காலியில். அவனைப் பிடித்து உதையுங்கள், பலமாக! போலீசையா கூப்பிடச் சொல்கிறீர்கள், கூப்பிடுங்களேன்! தாராளமாக! உடனே! வரட்டுமே போலீஸ்! போலீஸ் வந்தால்தானே தெரியும்; இந்தப் புரட்டனுடைய விஷயம் அம்பலமாகும். கூப்பிட்டுக்கொண்டு வாருங்கள் போலீசை! ஓடுங்கள்! ஓடுங்கள்! போலீஸ்! போலீஸ், உடனே போலீஸ்!

இவ்விதம் கூவுகிறார். சந்தேகமே இல்லை ஆசாமிக்குப் பைத்தியமேதான் பிடித்துவிட்டது என்று அனைவரும் முடிவு செய்தனர்,

பிறகு என்ன நடந்தது என்கிறாயா, தம்பி! என்ன நடக்கும் என்று எதிர்பார்க்கிறாய்! அவரைப் பிடித்துக்


கட்டிப்போட்டு நல்ல டாக்டரிடம் காட்டுவார்கள்; பித்தர் விடுதியில் சேர்ப்பார்கள் என்றுதானே.

அதுதான் இல்லை! தம்பி! அத்தனை வெறிச் செயலைச் செய்தவனுக்கு, அதே அலுவலகத்தில் பதவி உயர்வு, பாராட்டு, பரிசு, விருந்து கிடைத்தது.

எப்படி? எப்படி? முதலாளியைத் தாக்கினார், அவருக்கா பதவி உயர்வு, பட்டம், பரிசு என்றுதானே கேட்கிறாய். கிடைத்தது! ஏன் என்பதனை அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அண்ணன்,

17—10—'65



காஞ்சிக் கடிதம் : 37

# பொருத்தம் - 2

பொருத்தத்திற்குத் திட்டவட்டமோ இலக்கணமோ இல்லை.

காலம், இடம், கருவி, முறை பொருந்தியிருக்கும்போதே பொருத்தமறிய வாய்ப்புண்டு.

காலத்துக்கேற்ற செயல்; செயலுக்கேற்ற காலம்

சமூகச் செயலுக்குப் பொருத்தம் தேவை

இதனை, இதனால், இவன்: எளிய சொற்கள்: பொருள் பொதிந்த விளக்கங்கள்

உண்மை உணரத் தெளிவு, துணிவு தேவை

தம்பி,

அலுவலக உரிமையாளரைத் தாறுமாறாக ஏசி, அவர் மீது கணக்கேடுகளை வீசிக் கலகம் விளைவித்தவரைப் போலீசிடம் ஒப்படைக்க வேண்டியது முறையாயிருக்க, அதே அலுவலகத்தில் அவருக்குப் பரிசும் பாராட்டும் பதவி உயர்வும் கிடைத்த விந்தைக்கான காரணம் பற்றி அடுத்த கிழமை தெரிவிப்பதாகச் சென்ற கிழமை சொல்லியிருந்தேனல்லவா, சொல்லுகிறேன்.

உள்ளே உட்கார்ந்திருந்த முதலாளியைக் கண்டபடி ஏசினாலே போதும், அவர் கடுங்கோபம் கொண்டு

இந்த வெறியனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் என்று முதலாளி உத்திரவிடுவார் என்றுதான் எதிர்பார்த்தார், தூற்றியவர். உள்ளே இருந்தவரோ ஆடவில்லை அசையவில்லை, ஏன் என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. பிறகுதான் கணக்கேடுகளை வீசினார். அலுவலகப் பணியாளர் பலரும் வந்து குழுமினர். அப்போதும், ஒருவார்த்தை பேசவில்லை, உள்ளே இருந்தவர்.

வீசப்பட்ட கணக்கேட்டிலே ஒன்று, தலைமீது பலமாக வீழ்ந்தது; பதறிப்போய்ப் பணியாளர்கள் உள்ளே சென்றனர் முதலாளிக்குப் பாதுகாப்பளிக்க. அவர்கள் கண்ட காட்சியோ அவர்களைத் திடுக்கிட வைத்தது.

கணக்கேடு வீழ்ந்ததால், தலைப்பாகை மட்டுமல்ல, செயற்கை முடியும் கீழே வீழ்ந்தது; உட்கார்ந்திருந்த ஆசாமி பதறி எழுந்திருக்கக் கண்டனர்.

பொய்முடி! முதலாளிபோல வேடம்! முதலாளி அல்ல!! ஆ! ஆ! என்று அலறினர். வேடமிட்டோன் தப்பி ஓட முயன்றான்; பிடித்தனர்; நையப் புடைத்தனர்.

நடைபெற்றது என்னவென்றால், உண்மையான முதலாளியைக் கண்டு பேசவந்த ஒரு கயவன், அவரைக் கட்டிப்போட்டு ஒரு பேழையில் அடைத்துவிட்டு, அவர் போலவே வேடமணிந்து கொண்டு, அலுவலகப் பொருளைக் களவாடிக்கொண்டு எவரும் சந்தேகிக்காத படி தப்பிச்செல்லத் திட்டமிட்டிருந்தான்.

கயவன் செய்ததனை எவரும் அறிந்துகொள்ளவில்லை. சற்றுத் தொலைவிலிருந்து பார்ப்பவருக்கு அவன் உண்மையான முதலாளி போலவே தோற்றமளித்ததால், எவரும் எந்தவிதமான ஐயப்பாடும் கொள்ளாமல், அவரவர் தத்தமது அலுவலைக் கவனித்து வந்தனர்.

தூற்றினாரே அவராகிலும் இந்தச் சூது தெரிந்து கொண்டாரா என்றால், இல்லை. அவர் உண்மையான முதலாளியைத் தூற்றுவதாகத்தான் முழுக்க முழுக்க எண்ணிக் கொண்டிருந்தார். அவர் வீசிய கணக்கேடு, கயவன் தலைமீது வீழ்ந்து, வேடத்தைக்கலைத்துவிட்டது; உண்மையை அம்பலப்படுத்திற்று.

முதலாளி கட்டி அணைத்துக் கொள்கிறார்; அலுவலகப் பணியாளர்கள் பாராட்டுகிறார்கள்; போலீஸ் துறையினர் புகழ்கிறார்கள், திகைத்துக் கிடப்பவரை.



என்ன எண்ணிக் கொண்டார்கள் என்றால், கயவன் இப்படி ஒரு சூது செய்திருக்கிறான் என்பதை எப்படியோ கண்டறிந்து, அவனைத் தூற்றியும் தாக்கியும், அலுவலகத்தாரை அவ்விடம் கூடும்படி செய்தும், தந்திரமாக முதலாளியைக் காப்பாற்றிவிட்டார், நீண்ட காலமாக அந்த அலுவலகத்தில் அக்கறையுடன் பணியாற்றி வந்தவர் என்று எண்ணிக் கொண்டனர்.

நீ இருக்கிற வரையில் எனக்கு ஒரு ஆபத்தும் வராது; ஒரு பயலும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்பது எனக்குத் தெரியும் என்று கூறிப் பாராட்டுகிறார் முதலாளி.

முதலாளியாம், முதலாளி! முகத்தைப் பார்!! உன்னைப் போய் முதலாளி என்று கூறவேண்டி இருக்கிறதே! —என்று கூச்சலிட்டாரே, அப்போது, என்ன இப்படி வெறி பிடித்தவர்போலப் பேசுகிறாரே என்று எண்ணிக் கொண்டேன். இப்போதல்லவா தெரிகிறது, உள்ளே இருப்பவன் ஒரு கயவன், வேடதாரி, உண்மையான முதலாளி அல்ல என்று எப்படியோ தெரிந்து கொண்டு தான் அப்படியெல்லாம் பேசினார் என்பது என்று புகழ்கிறார் அலுவலகத்தார் ஒருவர்.

துப்பறியும் இலாக்காவிலே உள்ளவர்களுக்கு மட்டும், இவருக்கு உள்ள திறமையிலே நாலிலே ஒரு பாகம் இருக்குமானால், குற்றம் செய்பவன் தப்பித்துக் கொள்ள முடியுமா என்று பெருமிதத்துடன் பேசுகிறார் பெரியவரோருவர்.

திட்டமிட்டு வேலைசெய்தார் என்றே எல்லோரும் நம்பிக் கொள்கிறார்கள். அவரே மறுத்துப் பார்க்கிறார்; அடக்கத்தின் காரணமாக அவ்விதம் பேசுகிறார் என்று கூறி, மேலும் பாராட்டுகிறார்கள்

பிறகு பரிசும் பாராட்டும் பதவி உயர்வும் எப்படிக் கிடைக்காமலிருக்கும்,

தமது அபாரமான திறமையால் அலுவலகத்தில் நடைபெற இருந்த கொள்ளையைத் தடுத்த தீரர் என்ற பட்டம் கிடைத்தது.

தம்பி! இதுபோலத் தற்செயலாக நடைபெற்று விடுகிற சில நிகழ்ச்சிகளைக்கொண்டு, ஒரு முடிவுக்கு வருவது மிக மிகத் தவறு.

இவர் ஒன்று எண்ணிக்கொண்டு வேலை செய்தார்; அது வேறொன்றாகப் போய் முடிந்தது. இதனை அறியாதவர்கள் என்ன முடிவுக்கு வருவார்கள்? எத்தகைய கபடத்தையும் கண்டறிந்து உடைத்தெறியக்கூடிய திறமை படைத்தவர் இவர் என்றுதானே!! சரியா அது! முழு உண்மையைத் தெரிந்துகொண்டவர்கள் கூறுவார்கள், இந்த முடிவு சரி அல்ல என்று.

எனவே தம்பி! ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலாற்றுவதற்குப் பொருத்தமானவரா என்பதனைத் தெரிந்து கொள்வது எளிதானதல்ல; இடையிலே தவறான முடிவுக்கு நம்மை இழுத்துச் செல்லும் நிலைமைகள், நினைப்புகள் நிகழ்ச்சிகள் எழக்கூடும். அவைகளின் தன்மையையும் கண்டறிய வேண்டும்; முழு உண்மையையும் தெரிந்து கொள்ளவேண்டும், 'பொருத்தம்' இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிந்து முடிவு கட்ட,

''பெரியவரே! தங்களுக்கு வயது 90 என்கிறார்களே, இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்திருக்க, தாங்கள் மேற்கொண்டுள்ள முறை என்ன? தாங்கள் எவ்விதமான உணவு உட்கொள்கின்றீர்கள்? பொழுதுபோக்கு என்ன?'' என்று கேட்கப்படுவதுண்டு; நீண்ட காலமாக வாழ்ந்துவருபவர் கூறிடும் முறைப்படி வாழ்ந்து வந்தால் நாமும் நீண்டகாலம் வாழ்ந்திடலாம் என்ற நினைப்பினால்,

நீண்ட காலம் வாழ்வதற்குப் பொருத்தமான யோசனையை அவருடைய பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில்.

முதியவர் ஒருவர்; ''ஐயா! நான் அதிகமாக அலைவதில்லை. அளவோடு சாப்பிடுகிறேன். எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லை. சுருட்டுக் கூடக் குடிப்பதில்லை'' என்கிறார். ஓ! நீண்டகாலம் வாழ இவர் வாழ்ந்துவந்தவிதம் பொருத்தமான முறை என்று எண்ணிடத் தோன்றும்.

அலைச்சல் அதிகம் சர்ச்சிலுக்கு! பரபரப்பு மூட்டிடத்தக்க செயல்களுக்கு நடுவிலேயே உழன்றவர். ஓயாமல் பெரிய பெரிய சுருட்டுகளைக் குடித்தபடி இருந்தவர். அவரும் மிக நீண்டகாலம் வாழ்ந்திருந்தார். நீண்டகாலம் வாழ்ந்திருக்கப் பொருத்தமான முறை என்ன என்று



சர்ச்சிலிடம் கேட்டால் பதில் என்ன கிடைத்திருக்க முடியும்!!

'பொருத்தமானது' என்பது தம்பி! எல்லாக் காலத்துக்கும் எல்லா இயல்பினருக்கும் ஒரேவிதமானதாக இருந்திடும் என்று எண்ணுவதே தவறு. தென்றல் குளிர்ச்சி தரும், வாடைக்காற்று வறட்சி தரும், குளிர் நடுக்கம் தரும், வெப்பம் புழுக்கம்தரும் என்று திட்டவட்டமாகக் கூறிட முயல்வதுபோல், 'பொருத்தம்' இதற்கும் இதற்கும் இருந்திடும் என்று திட்டவட்டமாகக் கூறிட முடியாது. தென்றலும் திங்களும்கூட நெருப்பாகிவிடுமாமே, காதல் பிடியில் சிக்கிக் கலங்கிக் கிடப்பவர்க்கு.

எனவே, 'பொருத்தம்' எது என்பதனைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறிடும், கணக்கேடு இல்லை, இலக்கண ஏடும் இல்லை; ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொருவரும் தத்தமது அறிவுத் தெளிவின் துணைகொண்டு, 'பொருத்தம்' எது, எப்படி, எதனால், என்பது பற்றிக் கண்டறியவேண்டும்.

ஆனால் சில பொதுவிதிகள் உள்ளன, 'பொருத்தம்' அமைந்திட.

காலம், இடம், கருவி, முறை என்பவைகளை நன்கு ஆராய்ந்து தேர்ந்து எடுத்துச் செயல்படும்போது வெற்றி கிட்டிட வாய்ப்பு பெருமளவு இருக்கிறது.

காலமும் இடமும், கருவியும்முறையும் 'பொருந்தி' இருக்கும்போது செயலிலே வெற்றி கிடைத்திடுவதற்கான வாய்ப்பு நிரம்ப இருக்கிறது,

எந்தச் செயலிலே நமக்கு நாட்டம் ஏற்பட்டு அதிலே நம்மை ஈடுபடுத்திக்கொள்வதானாலும் காலம், இடம், கருவி, முறைபற்றிய தெளிவு இருந்தாக வேண்டும்.

எத்தகைய செயலுக்கு எத்தகைய காலம், இடம், கருவி, முறை தேவை என்பதனை அறிந்துகொள்ளாமல், ஆற்றல் இருக்கிறது, ஆகவே நாம் மேற்கொள்ளும் செயலில் நமக்கு வெற்றி எப்படியும் கிடைத்தே தீரும் என்று எண்ணிக்கொள்வது, நம்பிக்கை அல்ல, ஏமாளித்தனம். தம்பி! காலம், இடம், கருவி முறை என்று நான் கூறும்போது, ஜோதிடர்கள் சொல்கிறார்களே, அமாவாசை கழிந்த ஆறாம்நாள் என்றும், வடமேற்குப் பக்கத்திலே இருந்துதான் உங்களுக்கு வரப்போகிறது

09217
விருத்தாசலம் - 606 00

அதிர்ஷ்டம் என்றும், இந்தக் கங்கணத்தைப் பதினெட்டு நாள் பூஜையில் வைத்திருந்து பிறகு, வலக்கையிலே கட்டிக்கொள்ளுங்கள் நினைத்தது நடந்தே தீரும் என்றும் சொல்கிறார்களே, அதனைக் குறிப்பிடுவதாக எண்ணிக் கொள்ளாதே, நான் ஆருடக் காரரின் துணையைத் தேடச் சொல்ல வில்லை; அறிவுத் தெளிவினைத் தேடித் தேடிப் பெற்றிடக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மக்களிலே மிகப் பலர்—படித்தவர்களிலேயே மிகப் பலர்—இன்னமும் இந்தப் 'பொருத்தம்' காண ஆருடக்காரரை நாடிக்கொண்டிருக்கிற அவலநிலையில் உள்ளனர்; என் செய்வது!

ராகு காலம், குளிகை காலம், கரிநாள், மரணயோகம், சகுனம் என்பவைபற்றி அழுத்தமான— ஆனால் பொருளற்ற நம்பிக்கைகொண்டுள்ளவர்கள் நிரம்பப்பேர் இருக்கிறார்கள். அந்தப் பொருளற்ற நம்பிக்கை பற்றிப் பகுத்தறிவாளர் அலசிக் காட்டிடும்போது, சிரிக்கக்கூடச் செய்கிறார்கள்; ஆனால் அந்த மூட நம்பிக்கையின் பிடியிலிருந்து விடுபட மட்டும் மறுக்கிறார்கள்.

எங்கோ நெடுந்தொலைவிலே உள்ள விண் மீன்களே! இங்கே நடைபெறும் நல்லனவற்றுக்கும் அல்லன வற்றுக்கும், உங்கள் பேரிலே பாரத்தை தூக்கிப் போட்டுக் கொண்டிருக்கிறார்களே மாந்தர், இதனை நீங்கள் அறிவீர்களா என்று கருத்துத் தெளிவுள்ள பேரறிஞர்கள் கேலிக் குரலில் பேசியுள்ளனர். பயன்? நாம் மகிழத்தக்க அளவு ஏற்படவில்லை.

ஆகவேதான், காலம், இடம், கருவி, முறை என்று நான் குறிப்பிடும்போது, எனக்கே ஒரு அச்சம் வந்து விட்டது, ஆருடக்காரன் பேசும் காலம், இடம், கருவி முறையும் நான் கூறுவதும் ஒன்று என்று எங்கேஎவரேனும் எண்ணிக்கொண்டு விடுகிறார்களோ என்று.

காலமறிந்து செயலாற்றவேண்டும்; செயலுக்கேற்ற காலத்தைக் கண்டறியவேண்டும் என்பது பற்றிவள்ளுவர் தந்துள்ள அறிவுரை அருமை மிக்கது. எளிதில் உணர்ந் திடத்தக்கது,

பகலிலே காக்கை ஆந்தையை வென்றுவிடும், அறிவாயல்லவா என்றுகேட்டிருக்கிறார். ஆந்தை பகலில்



கண்மூடிக்கிடக்கும்; அப்போது அதனை வென்றிடக் காக்கையால் முடியும்!

தண்ணீருக்குள் இருக்கும் முதலை எதனையும் இழுத்துக் கொன்றுவிடும், தண்ணீரைவிட்டு முதலை வெளியே வந்தாலோ, எதுவும் அதனைக் கொன்று விடும் என்கிறார்.

எந்தச் சமயத்தில், எந்த இடத்தில், எவ்விதமான வலிவு இருக்கும் என்பதுபற்றிய கணக்குத் தெரியாமல், செயல்பட்டால், வெற்றி எங்கனம் கிட்டும்?

போர் முறை, உழவு முறை, வாணிபம், அரசியல் முறை, காதல் முறை எனும் எதிலேயும் காலம், இடம், கருவி, முறை அறிந்தாலன்றிச் செம்மையான முறையிலே செயல் அமைந்திடாது.

இந்தச் செயல் இந்தக் காலத்திற்குப் பொருத்த மானது;

இந்த இடத்துக்குப் பொருத்தமான செயல், இதுவே!

இந்தச் செயலுக்குப் பொருத்தமான கருவி இஃதே;

இந்தச் செயலுக்கு மேற்கொள்ள வேண்டிய முறை, இதுவே என்று கண்டறியும் திறனை, ஆட்சி நடாத்து வோருக்காக மட்டுமல்ல, அனைவருக்குமே வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார் என்று கொள்ள வேண்டும்.

காலம், இடம், கருவி என்பவை பொருத்தமாக அமைக்கப்பட்ட பிறகு செயலிலே ஈடுபட்டிருக்கும்போது இடையிலே, இவைகளிலே ஒன்றோ பலவோ கெட்டுப் போவது உண்டு, ஆனால் 'முறை' இருக்கிறதே, அது, இந்தப் புதிய நிலைமையில் யாது செய்திடவேண்டும் என்ற அறிவினைத் தந்திடத் துணை செய்திடும்.

காடு நுழைந்து சென்றால், மாற்றானின் பாசறையை அவன் அறியாவண்ணம் சுற்றி வளைத்துக் கொண்டு அழித்திட வாய்ப்பாக இருக்கும்; அதிலும், மேகம் கருத்திருக்கும் இந்தக் காலம் அதற்கு ஏற்றது என்று எண்ணிப் படையைச் செலுத்திடுகையில், எங்கோ நெடுந் தொலைவில் பெருமழை பெய்ததால் காட்டாறு கரை புரண்டு ஓடிவரக் கண்டால், இடம், காலம், முறை ஆகிய

வற்றினைப் பொருத்தமுற அமைத்துக்கொண்டும், எதிர்
பாராத இந்த இடையூறு வந்துற்றதே என்று எண்ணிக்
கலங்கிடத் தோன்றும். ஆனால், அந்த நிலைமையில்,
போர்முறையில் தக்கமாற்றத்தைக் கண்டறிந்து செயல்
படும் நுண்ணறிவு இருந்திடுமானால், கலக்கம் பீடித்துக்
கொள்ளாது; வெற்றிக்கு வழி கிடைக்கும்.

எத்தனைத் திறத்துடன் காலம், இடம், கருவி, முறை
ஆகிய பொருத்தம் அமைத்துக் கொண்டாலும், ஏதாகி
லும் இன்னல் கிளம்பி எடுத்த காரியத்தைக் கெடுத்
திடுமோ என்ற அச்சமும் ஐயபபாடும்கொண்டு, கால
மாவது இடமாவது, பொருத்தமாவது, பார்ப்பதாவது
என்று எண்ணிக்கொள்வது பேதைமை! இடையிலே
என்னென்ன இன்னல் வந்திடக்கூடும் என்பதுபற்றிய
தெளிவினை நாம் போதுமான அளவு பெற முடியாமற்
போய்விட்டதன்மூலம், அதற்கான தெளிவைச் செம்மைப்
படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உறுதிதான் பெற்றிட
வேண்டும்.

பல துறைகளிலே மனித முயற்சியும் உழைப்பும்
நேரமும் நினைப்பும் பாழ்பட்டுப் போவதன் அடிப்படைக்
காரணம், தெரிந்து செயல்படாததேயாகும்; பொருத்த
மான முறையில் செயல்படாததேயாகும்.

நம்மில் ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் செயலுக்கு,
காலம், இடம், கருவி, முறை இவை பொருத்தமாக
இருக்கிறதா என்பது பற்றிய தெளிவு பெற்றிட
வேண்டும் ஆனால் தம்பி! எல்லாச் செயலையும் நாமே
செய்துகொண்டிருக்க இயலுமா! எத்துணை வல்லமை
மிக்கவரெனினும், எல்லாச் செயலினையும் ஒருவரே மேற்
கொள்ள முடியாததல்லவா! ஆகவே, நாம் விரும்பும்
செயலை, அல்லது நமக்குத் தேவைப்படும்செயலை, நாமே
யன்றி, மற்றவர்களைக் கொண்டும் செய்து கொள்ள
வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது எந்தச்
செயலுக்கு எவர் பொருத்தமானவர் என்று கண்டறியும்
பொறுப்பு நமக்கு ஏற்படுகிறது இந்தப் பொறுப்பினுக்
குத் தேவைப்படும் திறம் நமக்கு இருந்தாலொழிய, எந்தச்
செயலிலும் வெற்றிகிட்டிடும் நிலையை நாம் காண
முடியாது.

மனித குலத்தின் வளர்ச்சியிலே, தம்பி! இப்போது
ஏற்பட்டுள்ள கட்டம், ஒவ்வொருவரும் தத்தமக்குத்



தேவையானவைகளைப் பெற்றிடத் தாமே செயலாற்றிட
வேண்டும் என்ற நிலையில் இல்லை; மாறிவிட்டிருக்கிறது.

அடவி சென்று வேட்டையாடி, இறைச்சியைத் தின்று
தோலை ஆடையாகக் கொண்டு, குகையினில் பதுங்கிக்
கிடந்த காலத்தில் ஒவ்வொருவரும் தத்தமது தேவை
களைப் பெறத் தாமே செயலாற்றி வந்தனர்.

அந்தக் காலத்தில், மனிதனுடைய தேவைகளுக்கும்
மிருகங்களின் தேவைகளுக்கும் அதிக வித்தியாசம்
இல்லை; ஆகவே, செயல் முறைகளிலும் அதிகமான
வித்தியாசம் இல்லை. தன் வாழ்வுக்குத் தன் வலிவினையே
நம்பி இருந்திட்ட நிலை.

இன்று, முறைகள் மாறிவிட்டன, தேவைகள் பெருகி
விட்டன; வளர்ந்தபடி உள்ளன; அளவு வகைஇரண்டிலும்.
எனவே, தானே செய்துகொள்ளக்கூடியவை என்பவை
களுடன், தனக்காக மற்றவர்கள் செய்யக்கூடியவை
என்பவைகள் சேர்ந்துவிட்டுள்ளன.

மற்றப் பலருடைய செயல் திறமையால் கிடைத்திடும்
பொருள்பெற்று இன்றைய மனிதன் தன் தேவைகளைப்
பெற்று வாழ முற்பட்டிருக்கிறான்.

எனவே, தானே மேற்கொள்ளும் செயலுக்குப்
'பொருத்தம்' பார்ப்பது மட்டுமன்றி, தனக்காக மற்ற
வர்கள் செய்திடும் செயல்களுக்கும் பொருத்தம் பார்த்திட
வேண்டியவனாகி விட்டான்.

வயலில் உழவு செய்திடுகிறான், காலமறிந்து,
முறை அறிந்து; அந்த வயலுக்கு உரம் வேண்டும்; முன்பு
உழவன் தானே பசுந்தழையை உரமாக்கிக் கொண்டான்!
இப்போது, உரம்' வேறுவகையானதாகிவிட்டது; இந்த
வகையான உரத்தை உழவனே செய்துகொள்ள முடியாது;
உழவனுக்காக இந்த உரம்' தயாரிக்கும் வேலையை
வேறு சிலர் மேற்கொண்டுள்ளனர்.

எனவே, இப்போது உழவன் காலம், இடம், கருவி,
முறை இவற்றின் பொருத்தமறிந்து பண்ணையம் செய்
தால் மட்டும் போதும் என்ற நிலை இல்லை; உழவனுக்
காக உரம் தயாரிப்பவர்களும், காலம், இடம், கருவி,
முறை ஆகியவற்றினைப் பொருத்தமுள்ளதாக்கிச் செயல்
பட்டாக வேண்டும். இதுபோன்றே வேறு பலப் பல

துறைகளிலும். எனவே, இன்று 'பொருத்தம்' சமூகத்தில் அமைந்துள்ள எல்லாச் செயல் துறைகளிலும் செம்மையாக இருந்தாக வேண்டியதாகிவிட்டது சமூகத்தில் அமைந்துள்ள செயல் துறைகளில் ஏதேனும் ஓர் முனையில் பொருத்தமற்ற செயல் நடைபெற்று விட்டால், அதனால் விளையக்கூடிய கெடுபாடு சமூகம் முழுவதிலும் பரவிவிடுகிறது.

எனவே சமூகத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு செயல் துறையிலும், பொருத்தம் அமைந்திருக்க வேண்டும்.

இந்தப் பொருத்தம் செம்மையாக அமைந்திருக்க வேண்டிய பொறுப்பினை மேற்கொண்டிருக்கும் அமைப்பே அரசு.

இத்துணைப் பெரிய, இவ்வளவு முக்கியமான பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமானால், அந்த (அமைப்பு) அரசு, அதற்குப் பொருத்தமானதாக இருந்திட வேண்டும்; அமைந்திட வேண்டும்.

அரசு அவ்விதமாக அமைந்திட வேண்டுமானால், அரசினைப் பொருத்தமானதாக அமைத்திடும் திறமை மக்களுக்கு இருக்கவேண்டும்; ஏனெனில், இப்போது அரசு அமைக்கும் பொறுப்பு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, மீண்டும் தனி மனிதனின் திறமை பற்றிய பிரச்சினைக்கே வந்து சேருகிறோம்.

பொருத்தமான அரசு அமைத்திடும் திறனைத் தனித் தனி மக்கள் போதுமான அளவு பெற்றிருப்பார்களானால், சமூகத்தில் உள்ள பல்வேறு செயல் துறைகளிலும் பொருத்தமானவர்கள் பொருத்தமான முறையில் பணியாற்றிச் சமூக மேம்பாடு பெற்றளித்திடுவர்.

முடியாட்சிக் காலத்தில், மன்னன் இந்தப் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான்; அமைச்சு, போர்த்துறை, வாணிபத்துறை, உழவுத்துறை, அறிவுத்துறை எனும் பல்வேறு துறைகளில் தக்கார் இருந்து, தக்கன செய்திட வழி கண்டிடும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தான். அந்தப் பொறுப்பினை மன்னன் செம்மையாக நிறைவேற்றிடத் தேவைப்படும் அறிவாற்றல் குறித்தும், மேற்கொள்ளவேண்டிய வழிவகை பற்றியும் எடுத்துக் கூறப்



பட்டுள்ளவைகள் அனைத்தும் இன்று மக்கள் தமக்காகக் கூறப்பட்டவை என்று கொள்ள வேண்டும்; ஏனெனில், இப்போது நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! அல்லவா தம்பி! ஆகவே,

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து**
**அதனை அவன் கண் விடல்**

என்று திருவள்ளுவர் கூறியது அரசனுக்காக மட்டுமே, நமக்கல்ல என்று கருதிடலாகாது; நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்! ஐந்தாண்டுகளுக்கு ஒரு நாளாகிலும்!!

இதனை
இதனால்
இவன்

எவ்வளவு எளிய சொற்கள், தம்பி! எவ்வளவு தாராளமாக இந்தச்சொற்களைப் பயன்படுத்தி வருகிறோம். ஆனால், இந்தச் சொற்களைப் பற்றிய பொருளினை எண்ணிப் பார்த்திடேன்! எத்தனை சரிவுகள் சருக்கல்கள்; சதுப்புகள் உள்ளன என்பது புரியும்.

இதுதானே!—என்று மிக அலட்சியமாகப் பேசிவிடுகிறோம். ஆனால் 'இது' என்று 'எதை'ச் சொல்கிறோமோ, 'அது' அவ்வளவு எளிதானது அல்ல என்பதனை 'அதனை'ப் பற்றிய முழு விவரம் தெரிந்திட முனையும் போது புரியும்; புன்னகை மறையும்,

அதிலும் இன்று ஆட்சியிடம் போய்ச் சேர்ந்துள்ள பொறுப்புகளைப் பார்த்திடும்போது, தலையே சுற்றும்; அவ்வளவு பெரிய அளவு; பலவகையினதாக இருந்திடக் காண்கிறோம்.

பொருள் ஈட்டிடல், காத்திடல், வகுத்திடல் என்பவை, ஒரு திறமை மிக்க நல்லரசு இருந்தாலொழிய இயலாது என்று கூறவேண்டிய காலம்.

அரசு மேற்கொள்ளும் செயல்களின் வகை பலப்பல என்பது மட்டுமல்ல, தம்பி! அந்த வகையும் அளவும் நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளன.

ஆகவே, 'இதனை' என்ற ஒரு எளிய சொல்லுக்குள் பின்னிப் பிணைந்து கிடந்திடுபவைகளைப் புரிந்து கொள்ளுவது எளிதான காரியமல்ல.

எடுத்துக்காட்டுக்காக ஒன்று கூறட்டுமா, தம்பி! தொழில் வளர்ச்சி என்பதனை 'இதனை' என்பதற்குப் பொருளாகக் கொள்வோம்.

தொழில் வளர்ச்சி (இதனை)யைத் திட்டமிட்டுச் செய்திட வல்லவன் நல்லான் (இவன்) என்று கண்டறிந்து, அந்தத் தொழில் வளர்ச்சியை (அதனை) நல்லானிடம் (அவன்கண்) ஒப்படைக்க வேண்டும் (விடல்).

புரிந்துவிடுகிறதல்லவா! ஆம்! என்கிறாய். ஆனால், தம்பி! தொழில் வளர்ச்சி என்று பொதுவாகக் கூறிடு கிறோமே, போதுமா!

எத்தகைய தொழில் வளர்ச்சி?

எந்த முறையில் அந்த வளர்ச்சி அமைவது?

எவருடைய நலனுக்காக அந்தத் தொழில் வளர்ச்சி தேவை?

இவைகள் எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அல்லவா?

டாட்டா, பிர்லா, பஜாஜ், டால்மியா, சிங்கேணியா, டி. வி. எஸ்., கோத்தாரி, சங்கர், சேஷசாயி, இப்படி ஒரு குழுவிடம் ஒப்படைத்தால் தொழில் வளர்ச்சி நிச்சயம் ஏற்படும். திட்டமிடுவதில் வல்லவர்கள்; நிர்வாகத் திறமை மிக்கவர்கள்; இலாபம் பெறத் தெரிந்தவர்கள்; இல்லை என்பார் இல்லை. ஆனால், இந்தக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஏற்படும் தொழில் வளர்ச்சி, யாருக்குப் பயன்படும்? முதலாளிகட்கு. மறுப்பார் உண்டா? முதலாளிகளின் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அந்தத் தொழில் வளர்ச்சி இருந்திடும். மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கான முறையில் உற்பத்தி அமையாது; இலாபம் தரத்தக்க பொருள்களாக உற்பத்தி செய்யப்படும். வெண்ணெய் உற்பத்தியில் கிடைப்பதைவிடச் சுண்ணாம்பு உற்பத்தியில் இலாபம் அதிகம் என்று கணக்குக்காட்டி



டின் வெண்ணெய் உற்பத்தியை நிறுத்திவிடுவார்கள்.

தொழில் வளரும், ஆனால், அதன் விளைவாக முதலாளித்துவ முறை வளரும்.

மாளிகைகள் எழும்; வண்ணமிக்கன! ஆனால் யந்திரங்களாக்கப்படுவர் ஏழை மக்கள்!

பன்னீரில் குளித்திடுவர் சிலர்; பல்லோர் கண்ணீர் பொழிவர்!

ஆனால், எட்டே தொழிற்சாலை இருந்த இடத்தில் எண்பது எழும்! தொழில் வளர்ச்சி காட்டும்.

தொழில் வளர்ச்சிக்கான திட்டத்தை நிறைவேற்றத் தக்கவர் இன்னார், அவரிடம் தொழில் வளர்ச்சிக்கான பொறுப்பை ஒப்படைக்கலாம் என்ற முடிவெடுக்கும் போது, நாம் எந்தவிதமான தொழில் வளர்ச்சியைக் காண விரும்புகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் பொருத்தமான முடிவெடுக்க முடியும்.

இப்போது இதனை இவனால் என்ற இரு எளிய சொற்களுக்கும் எத்தனை சுவை சேர்ந்துவிடுகிறது. கவனித்தனையா தம்பி! சுவை இருக்கட்டும், 'இவன்' யார் என்பது பற்றிய 'ஆய்வு' எத்தனை சிக்கலைக் கிளப்பிவிடுகிறது என்பதனைப் பாரேன்; திகைத்திட வைக்கும்.

இடையிலே, தம்பி! ஒரு சொல்லை விட்டு வைத்துள்ளேன்; மறந்துவிடாதே.

இதனை
இவனால்

என்ற இரு சொற்களுக்கு இடையில் 'இதனால்' என்றோர் சொல் இருக்கிறது.

இதனை (இந்தச் செயலை) இவன் முடிப்பான் என்று அறிந்து அந்தச் செயலை அவனிடம் ஒப்படைப்பது என்று மட்டும் கூறிவிட்டால், பொருள் முழுமை பெறவில்லையே. இதனை இவன் முடிப்பான் என்று எதைக் கொண்டு கண்டுபிடிப்பது என்ற சிக்கல் எழுமல்லவா? ஆகவேதான், இதனை இவன் எனும் இருசொற்களுக்கு இடை

யில் 'இதனால்' என்ற சொல்லை இணைத்தளிக்கிறார் வள்ளுவர்.

இவன், இன்ன திறனுடையான், இன்ன தகுதியுடையான், இன்ன நினைப்புடையான், இன்ன கருவியுடையான், இன்ன முறையுடையான், இன்ன அனுபவமுடையான், ஆகவே, அவனிடம் அந்தச் செயலை ஒப்படைக்கலாம் என்ற முடிவுக்கு வரச் சொல்லுகிறார்.

சிற்பி சீருடையான் பேரூரில் சமைத்த சிலை அருமைமிக்கது.

சிற்பி சீருடையானிடம் சிற்பக்கலைக்குத் தேவையான கருவிகள் பாங்குடன் உள்ளன.

சிற்பி சீருடையான் சிற்பம் செதுக்கித் தந்திடுவதில் மிகுந்த ஆர்வமுடையான்.

ஆகவே, சிற்பி சீருடையானிடம் பாராண்டான் சிலை சமைக்கும் பணியினை ஒப்படைக்கலாம்.

இப்படி ஒரு முடிவு செய்வதுபோல, 'இதனை'ச் செய்திட 'இவன்' என்ற முடிவு செய்திட, அவனிடம் உள்ள

திறமை

முறை

கருவி

வாய்ப்பு

ஆர்வம்

அனுபவம்

என்பவைகளை ஆய்ந்து அறிந்திட வேண்டும். இவ்வளவும், 'இதனால்' என்ற சொல்லிலே அடங்கிக் கிடக்கிறது!

ஆகவே தம்பி! செய்யப்பட வேண்டியது பற்றிய தெளிவும், செய்வோனின் திறன் அறியும் தெளிவும் வேண்டும்; அந்தத் தெளிவு பெற்று 'அதனை அவன்கண் விட' வேண்டும். நாம் இந்த முறையில் செயலாற்ற வல்லவர்கள் என்று நம்பித்தான், மக்களாட்சி முறை இங்கு நடத்தப்பட்டு வருகிறது.

ஆனால், நமக்குள்ளே பேசிக்கொள்வோம் தம்பி!



இதனை இதனால்

இவன் முடிக்கும்

என்று அறிந்து தெளிந்து, அரசு அமைக்கிற நிலையிலா நாட்டவர் உள்ளனர்? அந்த உரிமை நாட்டு மக்களுக்கு நிச்சயமாக இருக்கிறது; ஆனால், அந்த உரிமையின் சுவை மிகு பயனைப் பெறத்தக்க விதமாக மக்கள் செயல்பட முடிகிறதா! எத்தனை மயக்கம் குறுக்கிடுகிறது! எது எதை எண்ணி எண்ணித் தயக்கம் காட்டவேண்டி ஏற்பட்டு விடுகிறது! இது எப்படி, அது எப்படி என்று எண்ணுவதாலே எத்தனைக் குழப்பம் ஏற்படுகிறது!

எந்தக் காரியத்துக்கு எவர் பொருத்தமோ அவரிடம் அந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற தத்துவத்தை மறுக்கமாட்டார்கள்.

ஆனால், அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே எத்தனை சிக்கல்!

இந்தக் காரியத்திற்குப் பொருத்தமானவர் இவர் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன், ஏழுமலை சொல்கிறார், இவர் இதற்குப் பொருத்தமே இல்லை என்று. என்ன செய்வது என்ற மயக்கம் எழுகிறது.

ஏழுமலையின் கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்ன, நம்முடைய கருத்துக்கு நாம் மதிப்பளிக்க வேண்டுமல்லவா என்று எண்ணிடக் கூடாதா என்று கேட்கிறாய் தம்பி! அவ்வளவு எளிதல்ல, ஏழுமலையின் கருத்து ஒரு மயக்கத்தை மூட்டிவிட்டிருந்தால்.

தனக்கு ஒரு கருத்து, ஏழுமலைக்கு வேறு ஒரு கருத்து, இரு கருத்துக்களில் எது சிறந்தது என்பது பற்றி ஒரு குழப்பம் என்று மட்டும் நிலை இருந்தால், சிறிதளவு தீவிரச் சிந்தனை செய்து குழப்பத்தை நீக்கிக் கொள்ளலாம்; முடியும். ஆனால், ஏழுமலை குழப்பத்தை அல்ல, மயக்கத்தை மூட்டிவிட்டால்? விடுபடுவது கடினம்.

மயக்கம் எப்படி ஏற்படுகிறது என்கிறாயா, தம்பி! பலவகையில் ஏற்படலாம்: ஏழுமலையிடம் கடன்பட்டிருக்கிறாய் என்று வைத்துக்கொள், அடித்துப் பேச முடியுமா, நீ கூறுவது சரி அல்ல; என் முடிவுதான் சரி என்று!! முடி

யாதே! ஏழுமலை, ஊர்ப் பெரியதனக்காரர் என்று வைத்துக் கொள். அவருடைய கருத்தை மறுத்துப் பகை யைத் தேடிக் கொள்ளலாமா! முடியாதல்லவா? ஏழுமலை, வீட்டிலே ஒரு சுவையான விருந்தளித்துவிட்டுப் பிறகு தன் கருத்தைப் புகுத்துகிறார் என்று வைத்துக் கொள், தள்ளிவிட முடியுமா? முடியாதே!!

உயர்தரமான காரணமே காட்டுகிறேனே; ஏழுமலை இதற்கு முன்பு பல சமயங்களில் தக்கவிதமான கருத்தளித் துப் புகழ் பெற்றவர் என்று வைத்துக் கொள்ளேன்; அப்படிப்பட்டவர் சொல்லும் கருத்தை எளிதிலே தள்ளி விட முடியுமா! முடியாதல்லவா!!

ஆகவே, இந்த மயக்கம் பலவேறு காரணங்களால் ஏற்படக்கூடும். இதிலிருந்து விடுபடத் துணிவு வேண்டும்.

உண்மையை உணரத் தெளிவு வேண்டும்,

அந்த உண்மையின் பக்கம் நின்றிடத் துணிவு வேண்டும்.

அந்தத் தெளிவும் துணிவும் பெற்று, இதனை முடித் திட இவனால்தான் ஆகும் என்று அவனிடம் அதனை ஒப்படைக்க வேண்டும் என்று தம்பி! நீயும் நானும். நம் மோடு சேர்ந்து ஒரு நாற்பது பேர்களும் கூறுகிறார்கள்; நானூறுபேர்கள் வேறுவிதமான தீர்ப்புத் தருகிறார்கள் என்று வைத்துக்கொள்; நாம் கண்டறிந்த உண்மை என்ன ஆகிறது! வெற்றி பெறவில்லை. அந்த உண்மை வெற்றி பெறாதபோது, நாம் எதிர்பார்க்கும் பயன்? கிடைக்காது! கிடைக்காதபோது, நாம் மேற்கொண்ட முயற்சி? வீண் என்று ஆகிறது. அவ்விதம் ஆகிவிடுவதால், விளைவது என்ன? ஒருவிதமான சலிப்பு! அந்தச் சலிப்பின் விளைவு! நமக்கேன் இந்தச் சங்கடம் என்ற நினைப்பு எழும். அந்த நினைப்பு 'இந் நாட்டு மன்னர்' என்ற பட்டம் இருந்தும், இழுப்பார் பின் செல்லும் நிலையை ஏற்படுத்திவிடும்; அந்த நிலையைப் பெறவா மக்களாட்சியைக் கேட்டுப் பெற்றது? இல்லை.

எனவே, உண்மையை உணரும் தெளிவும், அதன் பக்கம் நின்றிடும் துணிவும் பெறுவதுடன், அந்த உண்மையின் பக்கம் மற்றவர்களையும் நின்றிடச் செய்திடும் பணியினையும் மேற்கொண்டாக வேண்டும்.



மக்களாட்சி முறைதான் பொருத்தமான ஆட்சி முறை என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளோம்; ஆனால், அந்த மக்களாட்சி முறைக்குப் பொருத்தமானவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொண்டிருக்கிறோமா என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். மக்களாட்சி ஒரு முறை, ஒரு கருவி! ஆனால், அந்த முறைக்கும் கருவிக்கும் பொருத்தமானவர்களாக நம்மை நாம் ஆக்கிக்கொள்ள வேண்டும்.


இதனை இதனால் இவன்

முடிக்கும் என்றாய்ந்து

அரசியல் வித்தகர்கள், அரசு அமைக்கும் பொறுப்பினை நிறைவேற்றத்தக்க பொருத்தம் நமக்கு இருக்கிறது என்று ஒப்படைத்துள்ளனர். நாம் நமது பொருத்தத்தை மெய்ப் பித்துக் காட்டியாக வேண்டும்!

அண்ணன்,

24—10—'65



காஞ்சிக் கடிதம்: 38

# கனவான் காற்று வாங்குகிறார்.

**இடம், நேரம், நிலை அறிந்து பேசுக**

**மமதை மதியைக் கெடுத்த கதை**

**பேச்சின் தன்மை பற்றிய விளக்கங்கள்**

தம்பி,

"ஜெர்மன் மருந்தாமா! அற்புதமானது என்கிறாரா, டாக்டர்! இதைக் கொடுத்தால் ஆபத்துப்போய்விடும், ஆசாமி பிழைத்துக்கொள்வான் என்று சொன்னாரா! சொல்லுவார்! சொல்லுவார்! சொல்லுவார்! கோடிவீட்டுக் குமரப்பனுக்கு உயிர் போய்க்கொண்டு இருக்கும்போது, இதே போலத்தான் ஒரு மருந்தைக் காட்டி, அது அற்புதமான மருந்து, இனி ஆபத்து இல்லை என்று அடித்துப் பேசினார், இவரைவிடப் பெரிய டாக்டர்! ஜெர்மன் மருந்தாவது, ஜப்பான் மருந்தாவது, இனி எந்த மருந்தும் வேலை செய்யாது; நள்ளிரவு வரையிலாவது தள்ளுமா என்பதுகூடச் சந்தேகம், வீணாக ஏன் அந்த நாட்டு மருந்து, இந்த டாக்டர் சொன்னது என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்!"

★

"அழாதே தம்பி! அழாதே! இப்போது என்ன நடந்து விட்டது என்று இப்படிப் புலம்புகிறாய்! டாக்டர் இப்போது கொடுத்தனுப்பியுள்ள மருந்து, ஜெர்மன்



மருந்தாம், இது அற்புதமான மருந்தாம், பலர் சொல்லி இருக்கிறார்கள்; இந்த மருந்து ஒருவேளை சாப்பிட்டால் உன் அப்பாவின் மயக்கம் தெளிந்துவிடும்; கண் விழித்துப் பார்த்து உன்னிடம் பேசுவார்; பயப்படாதே. பக்கத்துத் தெரு பார்வதிக்குப் பல்லெல்லாம் கிட்டிவிட்டது, பார்த்தவர்களெல்லாம் இனிப் பிழைக்காது என்று சொன்னார்கள்; ஆனால், இதே டாக்டர், இதே விதமான ஜெர்மன் மருந்து கொடுத்தார்; ஒரே மணி நேரத்தில் பார்வதி எழுந்து உட்கார்ந்துவிட்டாள்; தெரியுமா! நான் கண்ணால் பார்த்ததைச் சொல்லுகிறேன். வீணாக ஏன் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளுகிறாய். நல்ல மருந்து கிடைத்துவிட்டது, இனித் துளியும் பயம் வேண்டாம்."

★

தம்பி! முதல் பேச்சு இருக்கிறதே அதுதான் உண்மை. எந்த மருந்தும் இனி வேலை செய்ய முடியாத கட்டம், சந்தேகமில்லை ஜெர்மன் மருந்தோ ஜப்பான் மருந்தோ எல்லாம் வீணான ஒரு நம்பிக்கையை மற்றவர்கள் பெற்றிட உதவிடும்; அவ்வளவுதான்; ஆள் பிழைக்க மாட்டான். அதுதான் உண்மையான நிலைமை.

இரண்டாம் பேச்சு இருக்கிறதே, அது உண்மை அல்ல! சொல்லுபவருக்கே தெரியும், நம்பிக்கை இல்லை, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்ற உண்மை. அந்த உண்மையை மறைத்துவிடுகிறார். பிழைத்துக்கொள்வார், புது மருந்து அற்புதமானது என்று பொய் பேசுகிறார். அழுதுகிடப்பவர்களைத் தேற்றுகிறார். அவர்களின் வேதனையை மாற்றிட முயல்கிறார்.

★

எப்படியாவது பிழைத்துக்கொள்ள மாட்டாரா என்று குடும்பத்தார் குமுறிக்கொண்டிருக்கும்போது, எதுபற்றியும் கண்டிப்புடன், ஒளிவு மறைவு இல்லாமல் பேசிடும் பழக்கமுள்ள ஒருவர், அதுபோலப் பேசினால், பாராட்டவா செய்வார்கள்! ஒளிவுமறைவின்றிப் பேசுபவர், அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டு மனத்திற்குச் சரியென்று பட்டதை மறைத்துக் கொள்ளாதவர் என்பதற்காக அவரைப் பலர் பாராட்டியிருக்கக்

கூடும்; முன்பு. ஆனால் இப்போது இந்த நிலையில், இந்த இடத்தில்? எவ்வளவு விளக்கமாகப் பேசுகிறார், இது அல்லவா அறிவாளிக்கு அழகு; துளியும் நெளிகிறாரா வளைகிறாரா! இல்லையே! டாக்டர் பேச்சை நம்பாதே! மருந்து இனி வேலை செய்யாது என்ற உண்மையைத் துளியும் மறைக்காமல் பேசுகிறார்; பொய்பேச, மயக்க மொழி பேச மறுக்கிறார்; அவர் எப்போதும் அப்படித் தான்; வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற விதமான போக்கினர்!—என்று பலரும் பாராட்டவா செய்வார்கள்?

''இவனும் ஒரு மனிதனா! துளியாவது இடம் நேரம் தெரிகிறதா இவனுக்கு. குடும்பம் 'கோ'வெனக் கதறு கிறது; இவன் இந்த நேரமாகப் பார்த்து, இவ்விதம் பேசுகிறானே; ஆணவம்! இரக்கமற்ற நெஞ்சம்!''—என்றெல்லாம் பலரும் பதறிப் பேசுவார்கள்; ஏசுவார்கள்.

ஓடிப்போய் டாக்டரைக் கேட்டால், 'கண்டிப்பாகப் பேசுபவர்' சொன்னதுதான் உண்மை என்று கூறுவார்.

''நான் உண்மையைச் சொல்லுகிறேன். பொய் சொல்லமாட்டேன். வீண் நம்பிக்கையூட்டமாட்டேன்'' என்று கண்டிப்புப் பேர்வழியேகூட வாதாடிடக்கூடும். ஆனால், மற்றவர்கள் சமாதானம் அடையமாட்டார்கள்; அந்த வாதத்தில் நியாயம் இருப்பதாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; அந்தப் பேச்சிலே பண்பு இருப்பதாகக் கருதமாட்டார்கள். இந்தக் கண்டிப்புப் பேச்சு, மற்ற வர்கள் விஷயமாகத்தான்; இவர் வீட்டிலே இப்படி ஒரு நிலைமை என்றால், வேறு யாராவது இந்தவிதமான கண்டிப்புப் பேச்சுப் பேசினால் இதே ஆசாமி 'ஆமாம்' என்றா ஒப்புக்கொள்ளுவார்; ஆகாயத்துக்கும் பூமிக்கு மாகத் துள்ளிக் குதிப்பார், ஆத்திரத்துடன்! மற்றவர் கள் விஷயம் என்கிறபோது, 'மனத்திற் பட்டதைப் பேசு கிறார்; கேட்பவர்களின் உள்ளம் எப்படி வேதனைப்படும் என்பது பற்றித் துளியும் கவலைப்படாமல். அறிவு இருந்துவிட்டால் போதுமா; அதை எப்படி எப்படிப் பண்புடன் பயன்படுத்த வேண்டும் என்ற பக்குவம் இருக்க வேண்டாமா என்றுதான் கூறிக் கண்டிப்பார்கள்.

''காயமே இது பொய்யடா!—நல்ல
காற்றடைத்த பையடா!''

—இது பொய்யல்ல; மெய். யாரிடமும் இதுபற்றிய விளக் கம் சொன்னாலும் மறுக்கமாட்டார்கள். பலர், தமக்கே



ஒருவிதமான சலிப்பு ஏற்படுகிறபோது இந்த முணு முணுத்திருப்பார்கள். ஆனால், வெண்கலக் குரலில், இதைப்பாடுகிறார், ஒருவர்; பலராலும் பாராட்டப்பட்ட வர் இந்தப் பாடலைத் தனிச் சுவையுடன் பாடியதற்காக மெச்சி ஊரார் தங்கப் பதக்கம்கூடக் கொடுத்திருக்கிறார் கள் இவருக்கு! ஆயினும், அன்று அவர்

காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா!

என்று பாடத்தொடங்கியதும் மூலைக்கு மூலைகூச்சல்! மூடு வாயை! பாடாதே! மூடு வாயை!! என்று, சிலர் அடிக்கவே கிளம்புகிறார்கள். ஏன்? அந்தப் பாடல் தவறு என்பதால் அல்ல, பொருள் பொய் என்பதாலே அல்ல; முறையாகப் பாடவில்லை என்பதாலே அல்ல; எந்தப் பாட்டுக்குப் பதக் கம் வாங்கினாரோ அதே பாட்டுதான், அதே பாகவதர் தான்! ஆனாலும் பதறுகிறார்கள், பாவி என்கிறார்கள், அடிக்கவே கிளம்புகிறார்கள். ஏன்? பாடிய இடம் ஒரு திருமண வீடு! தாலி கட்டும் வேளை! ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள்! பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்துவார்கள். அத்தகைய இடத்திலே காயமே இது பொய்யடா! என்று பாடினால், பாடியவர் படாதபாடு படத்தான் வேண்டிவரும்; பாடலிலே உள்ள பொருள் என்பதாலே அல்ல; இடமும் நேரமும் அந்தப் பாடலுக்கு ஏற்றது அல்ல என்பதால்.

★

1962 வருஷத்து மாடல்.
பிளைமவுத்.
நேவிபுளூ—நீலநிறம்!
எக்ஸ்ட்ரா பிட்டிங்ஸ் ஏராளம்!
உள்ளே அழகான ரேடியோ!
சீட்டுகளுக்குப் பிளாஸ்டிக் கவர்.
பின்சீட்டில், ஆறு ஆப்பிள், மூன்று சாத்துக்குடி.
'சூட் கேஸ்' பிரிட்டிஷ் மாடல்.
அமெரிக்க மாடல் தெர்மாஸ்,
ஒரு ஜப்பான் காமிரா!
மோட்டார் விலை முப்பதாயிரம் ரூபாய்.
சேட் ரங்கலாலிடம் வாங்கினார்கள்.

மேலும் விவரங்களைத் தர முயல்கிறார் நிருபர், தமது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தபடி. இவ்வளவு விவரமான தகவலைத் தருகிறாரே என்பதற்காக ஆசிரியர் பாராட்டத்தானே வேண்டும்? இல்லை! கோபிக்கிறார்; மேஜையை ஓங்கி அடித்துக்கொண்டு கூறுகிறார்,

'உம்மை யாரய்யா இந்த விவரமெல்லாம் கேட்டது? எந்தவிதமான காமிரா இருந்தது? எந்த ஊர் தெர்மாஸ்? இவைகளா இப்போது எனக்குத் தேவை. விபத்து எப்படி நடந்தது? யாராருக்கு ஆபத்து? போலீசார் யாரையாவது கைது செய்திருக்கிறார்களா! என்ற விவரமல்லவா எனக்கு வேண்டும்: ஊராருக்கும் அவைதானே முக்கியம்—அது பற்றி ஒரு வார்த்தை பேசாமல், மோட்டாரில் ஆப்பிள் இருந்தது என்று கணக்குக் கொடுக்கிறீரே! நான் என்ன செய்ய? தலைதலை என்று அடித்துக் கொண்டு எங்காவது ஓடித்தொலைக்க வேண்டியதுதான். உம்மோடு மாரடிக்க நம்மாலே ஆகாது என்று.

காரணம் புரிகிறதல்லவா, தம்பி! கடற்கரைப்பக்கம் நேரிட்டுவிட்ட மோட்டார் விபத்து பற்றி, நேரிலே போய்ப் பார்த்துவந்து விவரம் கூறும்படி நிருபரை அனுப்பி இருக்கிறார் ஆசிரியர். விவரம் ஒன்றுவிடாமல் வேண்டும் என்று சொல்லி அனுப்பினார். அதை அப்படியே நிறைவேற்றத் திட்டமிட்டதன் விளைவு, மோட்டாரில் அரைபட்டு உயிரிழந்த சிறுவன் ஆறுவயதுள்ளவன், மோட்டார் டிரைவர் கைது செய்யப்பட்டான் என்ற விவரத்தைத்தானே தரவேண்டும் என்று கருதாமல், மோட்டாருக்குள்ளே இருந்த பழத்தின் கணக்கும் விட்டு விடக் கூடாது என்று குறிப்பு எடுத்துவந்த வேதனை தரும் வேடிக்கை.

விவரம் தேவை, ஆனால், கிடைத்திடும் தகவல்களில் எவையெவை முக்கியமானவை, மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியவை என்ற பாகுபாடு வேண்டுமல்லவா! அந்தப் பக்குவம் இல்லாமல் நான் கூறியது அவ்வளவும் உண்மை; சந்தேகமிருந்தால் போய் எண்ணிப் பாருங்கள் ஆறே ஆறு ஆப்பிள்தான் இருக்கிறது என்று பேசி, உண்மைக்கு இந்த ஆசிரியர் மதிப்பளிக்க மறுக்கிறார் என்று குறை கூறிக்கொள்வதா! உலகம் ஏற்றுக்கொள்ளாது.

★



இடமறியாது பேசுவது போலவே, பாகுபாடு அறியா மற்பேசுவதும், எதிர்பாராத இக் கட்டுகளை மூட்டிவிடுவதாகி விடும்.

அதனால், உண்மையைப் பேசக்கூடாது; இடத்திற்குத் தக்கபடி, வேளைக்குத் தக்கபடி, ஆளுக்குத் தகுந்தபடி, உண்மையை மறைத்தும் குறைத்தும் திரித்தும் பேச வேண்டும் என்பதல்ல பொருள்.

உண்மையைக் கூறுவதால் தன்னுடைய உயிருக்கே ஆபத்து ஏற்படக் கூடும் என்ற நிலை இருப்பினும் அஞ்சாமல், உண்மையைக் கூறவேண்டும்,

உண்மையைக் கூறுவதால் தன் உயிருக்கு அல்ல, மற்றவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றாலோ, மற்றவருடைய மனம் வேதனைப்படும் என்றாலோ, உண்மையைக் கூறாமலிருப்பது, பக்குவத்தில் ஒன்றாகும்.

தம்பி! நோயாளி துடிப்பதையும், அதைக் கண்டு குடும்பத்தார் குமுறுவதையும் பார்த்தும் டாக்டர் கொடுக்கும் புதிய மருந்தினால் பயன் இல்லை, ஆள் பிழைக்கப் போவதில்லை என்ற 'உண்மை'யைக் கூறினானே 'கண்டிப்பு'ப் பேர்வழி அவன் அந்த உண்மையக் கூறியதாலே யாருக்கு என்ன பயன் விளைந்தது? அவ்விதம் பேசாதிருந்தால், யாருக்கு என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும்? ஒன்றுமில்லையல்லவா! ஆனால் 'பச்சை'யாகப் பேசியதால், ஏற்கனவே குமுறிக் கிடந்தவர்கள் மேலும் பதறுகிறார்கள்; வேதனை அடைகிறார்கள். இந்த வேதனையைத்தான் அவனுடைய 'பேச்சு' மூட்டிவிட்டதேயன்றி, வேறென்ன செய்தது! ஒன்றுமில்லை.

அந்த இடத்திலே அவன் பக்குவமாகப் பேசியிருக்க வேண்டும் அல்லவா?

நீதியை நிலைநாட்ட, பிறர் நன்மை பெற, ஊர் வாழ, உரிமை காத்திட, இவை போன்றவைகளுக்காகப் பணியாற்றிடும்போது, உண்மை பேச வேண்டும்; அவ்விதம் பேசுவதால் தன் உயிருக்கே ஆபத்து வந்திடும் என்றாலும் கவலையற்று, கலங்காமல்!

○

இடமும் நேரமும் தெரியாமல் சிலர் பக்குவமற்றுப் பேசுவதுபோலவே, தனக்கேற்ற இடம், தனக்குச் சாதகமான நேரம் கிடைத்ததைப் பயன்படுத்திக்கொண்டு, சிலர் தமது ஆதிக்கத்தை வளர்த்துக் கொள்ளும் விதமாகவும், பிறரை இன்னலுக்கும் இழிவுக்கும் ஆளாக்கும் நோக்கத்துடனும், பேசுவது காண்கிறோம்.

முன்னது மடைமையிலே சேருவது; இஃது கொடுமையிலே சேர்க்கத்தக்கது.

நோயாளியிடமே செல்வோம், தம்பி! டாக்டர் சொன்ன மருந்து வாங்கி வரவேண்டும். யாரும் கிடைக்கவில்லை; குடும்பத்தார் துடிக்கிறார்கள், எதிர் வீட்டு இளைஞன் தெரிகிறான்; அவனிடம் கெஞ்சுகிறார்கள், மருந்து வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லி.

> ''இப்பத்தான் கண்ணுக்குத் தெரியுதா என்னை! சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும் என்பார்கள். அந்தப் புத்திகூட இல்லாமல் நான், மணி பார்க்க வீட்டுக்குள்ளே வருகிற போதெல்லாம், இங்கே என்ன வேலை! மணிபார்த்து எந்த ஆபீசுக்குப் போகப் போகிறாய்! போ! போ! கடிகாரம் ஓடவில்லை!என்று ஏசி அனுப்புவீர்களே, கவனமிருக்கிறதா! இப்போது நான்தான் உதவவேண்டி வருகிறது! போக முடியாது என்றால் என்ன செய்து விடுவீர்கள்! காலிலே கூட விழுவீர்கள்!! தெரியுமே, எனக்கு,''

என்று அந்த இளைஞன் பேசினால், அதுதான் கொடுமை என்பது.

நோயாளியின் நிலைமை மோசமாகிவிட்டதை அறிந்து, இதுவரை பார்த்த டாக்டரால் பயனில்லை என்று உணர்ந்து புதிய டாக்டரை அழைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்; அந்தப் புதிய டாக்டர் இதுதான் தக்க சமயம் என்று எண்ணிக்கொண்டு,

> யாரு? எல்லப்பனா! ஏது இந்தப் பக்கம்? உனக்குத்தான் வேறு எத்தனையோ டாக்டர்கள் உண்டே! என்னிடம் வருவானேன். போ! போ! உயிர் போகிற நேரம் என் கவனம் வருகிறது இல்லையா! நான் என்ன வேலையற்றவன், எவன் எந்த நேரத்தில் வந்து கூப்பிட்டாலும் வந்துவிடுவேன் என்ற எண்ணமோ?



என்றெல்லாம் பேசினால் நிலைமையைத் தனக்குச் சாதகமானதாக்கிக்கொண்டு, கொடுமையைக் கொட்டுகிறார் என்பது பொருள்.

ஃ

> ''ஐயா, எப்பவும் மோட்டார் பஸ்ஸிலேதானே போற பழக்கம். நாமாகப் பார்த்து, கொடுப்பதைக் கொடுங்க, ஏறுங்க வண்டியிலேன்னு கூப்பிட்டாக்கூட, பொழுது விடிந்து விடுமே உன் வண்டியிலே ஏறினா என்று பேசறவராச்சே. இப்ப? பஸ் இல்லை! நம்ம வண்டியை விட்டா வேறே வழி இல்லை. கூப்பிட வர்ரீங்க, இல்லையா! மூணு ரூபா சம்மதமானா, வாங்க. இல்லையானா காத்துக்கிட்டு இருங்க; நாளைக்கு வருவான் பஸ்ஸுக்காரன்''

என்று பேசிடும் வண்டிக்காரர்களைப் பார்க்கிறோமல்லவா? இந்தவிதமான மனப்பான்மையினர், மேல்மட்டத்தில் நிரம்ப! 'அடிமட்டத்தினர்' அஞ்சுவார்கள், இந்தப் போக்கினைக் கொள்ள! மேல்மட்டத்தினரோ, கூசாமல், இந்தக் கொடுமையுள்ள போக்கினை மேற்கொள்வர்; அதிலே ஒரு குதூகலமும் காண்பர்!

'மேல்மட்டத்தினரில்' சிலர் தம்மிடம் மதிப்பு வைத்துள்ளவர்களை, குத்திவிட்டு வேடிக்கை பார்க்கும் விதமாகப் பேசுவதில் தனிச்சுவை காண்பவர்கள்.

> ''நான் சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ளக்கூடாது; அப்படிக் கோபித்துக் கொண்டாலும் நான் கவலைப்பட போவதில்லை; சொல்ல வேண்டியதைச் சொல்லித்தானே ஆகவேண்டும்? உன் அண்ணன் ஒரு பெரிய முட்டாள். ஆமாம்! காரணத்தோடுதான் சொல்கிறேன். உன்னைச் சொன்னேனா, முட்டாள் என்று. எனக்கு அப்படித் தோன்றவில்லை; ஆகவே சொல்லவில்லை, ஆனால், உன் அண்ணனைப் பற்றி என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.''

இவ்விதம் 'மேல்மட்டம்' பேசுவது கேட்டு, அவரிடம் உள்ளபடி மதிப்பு வைத்துள்ள இளைஞன் என்ன நினைத்துக் கொள்வான், சங்கடமான நிலைமை; ஆனால்; இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமையை உன்

டாக்கி மகிழ்வதில் ஒரு தனிச் சுவை கொள்கிறார்கள் மேல்மட்டத்தினர்; என்ன செய்வது?

மேலதிகாரி, தன்னை மெச்சிடுபவர் எதிரில், தன்னிடம் வேலை பார்ப்பவர்களைப் பற்றிக் கேவலமாகப் பேசி மகிழ்வதைக் கண்டதுண்டா, தம்பி?

> ''இவன் சார்! எட்டு வருஷமாக இங்கு வேலை பார்க்கிறான். சம்பளம் நூற்று ஐம்பது. பி ஏ படித்தவனாம் ஒரு நாளாகிலும் ஒரு பக்கமாகிலும் பிழையில்லாமல் எழுதுவானா என்று நான் தவம் கிடக்கிறேன்; இதுவரையில் பிழையில்லாத ஒரு பக்கத்தைக்கூடப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆசை மட்டும் இருக்கிறது கொள்ளை கொள்ளையாக! ஆபீஸ் மானேஜராக ஏன் வரக்கூடாது என்ற ஆசை—என்னவோ பழமொழி சொல்லுவார்களே, ஆசை இருக்கு தாசில் பார்க்க... என்னது சார் அந்தப் பழமொழி......''

என்று சொல்லி, ஏசல் நிரம்பிய பகுதியை வந்தவரைக் கொண்டே சொல்லவைப்பார்,

> ஆசை இருக்குது தாசில் பார்க்க......

என்று பழமொழியில் பாதிசொல்லி மற்றப் பாதியைச் சொல்லச் சொல்லும்போது எவ்வளவு நேரம் தயக்கம் காட்டிக் கொண்டிருக்க முடியும். வலியுறுத்தல் வளர வளர,

> ''ஆசை இருக்குது தாசில் பார்க்க, அம்சம் இருக்குது கழுதை மேய்க்க''

என்று பழமொழியை, வந்தவர் சொல்லித் தீரவேண்டி வருகிறது.

தனியாகக்கூப்பிட்டு நாலு வார்த்தை கண்டிக்கட்டும், கேட்டுக் கொள்ளலாம்; வேறொருவர் எதிரில் இப்படியா அவமானப்படுத்துவது என்று அந்த B A வருத்தப்படுகிறான், வருத்தத்தை யார்மீது காட்ட முடியும்! மேலதிகாரி மீதா!! முடியாதே.

அவனால் 'முடியாது' என்பது தெரிந்து, மேலதிகாரி வாட்டுகிறார்; கவ்விக்கொண்ட எலியைப் பூனை வாட்டுகிறதே அதுபோல!



இடம், நேரம், நிலை இவற்றினைச் சாதகமாக்கிக் கொண்டு, இழிவுபடுத்தும் முறையிலும், சங்கடம் ஏற்படுத்தும் விதத்திலும் பேசுவது, இடமறியாது, நிலை புரியாது, நேரமறியாது பேசுவது போலவே, கேடு நிரம்பியது; ஆனால், நாட்டினில் இந்தவிதமான பேச்சுகளை நிரம்பக் கேட்டுத் தீரவேண்டி இருக்கிறது.

வறுமையால் கொட்டப்பட்ட நிலையில், மனைவியிடம் ஆத்திரத்தைக் காட்டுகிறான் கணவன். அந்த ஆத்திரம் அவள் கன்னத்தை வீங்கச் செய்து விடுகிறது; தாய்வீடு சென்று விடுகிறாள். கணவன் கோப மிகுதியால்,

> ''அந்தக் கழுதை எங்கே ஓடிப் போனால் எனக்கு என்ன!''

என்று கூவுகிறான். நடைபெற்றது இவ்வளவுதான். ஆனால், அவனுடைய 'எஜமானன்' அந்த நிலை காரணமாக, நாலு பேர் எதிரில் கேட்கிறார் அவனை,

> ''என்னடா சடையா! உன் பெண்ஜாதியா ஓடிப் போயிட்டா''

என்று. என்ன செய்வான் இந்தப் பேச்சைக்கேட்டு?

> ''ஆத்தா வீட்டுக்கு......''

என்று கூறுகிறான்; அங்கேபோய்ப் பார்த்தாயா? என்று குறுக்குக் கேள்வி கேட்கிறார் எஜமானன்! ஆத்திரம் பொங்கி வழிகிறது அவனுக்கு. ஆனால் நிலைமை! ஏதாகிலும் எருது, எருமை அந்தப் பக்கம் வந்தால். அதன்மீது காட்டிக் கொள்ளலாம் ஆத்திரத்தை—எஜமானரிடம் காட்ட முடியுமா! துடிக்கிறான், அவர் சிரிக்கிறார்.

ஃ

கிடைத்துவிட்ட அல்லது பிடித்துக்கொண்ட நிலை காரணமாகச் சிலருக்குப் பேச்சு தன்னாலே தடித்துவிடுவதுண்டு. நிலை என்பது, பணம், பதவி எனும் எதன் காரணத்தாலும் வரலாம்.

கதை ஒன்று சொல்லுவார்கள், கையிலே நாலு காசு சேர்ந்ததும், தன்னாலே 'திமிரான' பேச்சு வந்து சேர்ந்து விடும் என்பதை விளக்கிட.

பட்டிக்காட்டான் ஒருவன் சந்தையிலே மாடுவிற்று இருநூறு ரூபாய் பெற்றான்; பெற்றதை மடியினில் பாது

காப்பாக வைத்துக்கொண்டு, சாவடியிலே படுத்தான், உறக்கம் தொட்டிழுக்கும் நிலை. அந்தப் பக்கத்தில் களவு, வழிப்பறி நடத்துபவர் நாலைந்துபேர், சாவடிக்குள் நுழைந்தனர் பதுங்கிக்கொள்ள. இருட்டு; உள்ளே ஆள் படுத்துக் கிடப்பது தெரியாமல், ஒருவன் பட்டிக் காட்டான் காலை இலேசாக மிதித்துவிட்டான்; இடறி விழ இருந்தவன் சமாளித்துக்கொண்டு, உற்றுப்பார்க்க, படுத்திருப்பது ஒரு ஆள் என்று தெரிந்ததும் கேலியாக, கட்டை போலக் கிடக்கிறான் பயல்! என்றான், படுத்துக் கிடந்தவன், சும்மா இருப்பானா; மடியில் பணம் இருக் கிறதே இரண்டு நூறு!! அதனால் என்றுமில்லாத ஒரு இறு மாப்பு. அதன் காரணமாக, ''கட்டையா! உங்க வீட்டுக் கட்டைம் மடியிலே இருநூறு ரூபாய் முடிந்து வைத்துக் கொண்டிருக்குமோ?'' என்று கேட்டான். உயர்தரமான நகைச்சுவை என்ற எண்ணம், மடியில் இருநூறு! என்று சென்னதும், வழிப்பறிக்காரன் சும்மா இருப்பானா? எடடா! என்றான் ஒருவன், போடடா! என்றான் இன் னொருவன், மற்றொருவன் மடியில் இருந்ததைப் பறித் துக்கொண்டான். வேறொருவன் ஏதாகிலும் கூச்சல் கிளப்பினே, தொலைத்துவிடுவோம் என்று மிரட்டினான். பணத்தைப் பறி கொடுத்தவன், பயத்தால் வெடவெடத் துப் போய், உயிர் தப்பினால் போதுமென்று ஓராயிரம் கும்பிடுகள் போட்டான்! போ! என்று களவாடுபவர் உத்தரவு கொடுத்தனர், ஓடிவிட்டான், உயிர் தப்பினோம் என்று. ஓடும்போதுதான் புத்தியிற்பட்டது அவனுக்கு. மடியில் பணம் இருக்கிறது என்பதைச்சொல்லி நாமேயல் லவா சிக்கிக்கொண்டோம். ஒரு விநாடி ஆணவத்துக்கு இடம் கொடுத்ததன் பலன், பணம் பறிபோயிற்று. வாய் திறவாது இருந்திருந்தால் வந்திராதே இந்த இழப்பு, ஆபத்து என்று எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டான், காரியம் கெட்டபிறகு!! மடியிலே பணம் என்றதும் மமதைப் பேச்சு தன்னாலே வந்துவிடும் என்பதையும், மமதை மதியைக் கெடுக்கும் என்பதையும், விளக்கும் கதை.

சாவடியில் படுத்துக்கிடப்பவன் மட்டுமல்ல, அரசுக் கட்டில் ஏறிடுவோர் பலருக்கு இத்தகைய வாய்த்துடுக்கு எளிதாக ஏற்பட்டு விடுகிறது. சாவடியில் இருந்தவனுக்கு ஏற்பட்ட இன்னல் இவர்களுக்கு ஏற்படுவதில்லை; ஏனெ னில், இருக்கும் இடம் அத்தனை பாதுகாப்புள்ளது. ஆனால், இறுதியில், பொதுமக்கள் விழித்தெழுந்து இத்



தகையவர்களுக்குத் தக்க தண்டனை தந்துவிடுவார்கள்; தீர்ப்பு நாளன்று.

ஜனநாயக ஆட்சி முறையில் அரசுக் கட்டில், எவருக் கும் கிடைத்துவிடக்கூடும்; அவர்கள் எந்தக் காரணத்தா லாவது மக்களின் பேராதரவைப் பெற்றிட்டால்! அரசாள வாய்ப்புக் கிடைத்த பிறகு, அவர்களிலே பலருக்கு, எங்கு இருந்தோம், எங்கே வந்திருக்கிறோம்? என்ன முறை யாலே வந்தோம்? என்னென்ன கூறிவிட்டு வந்திருக் கிறோம்? என்பவைகள் மறந்து போகின்றன; பழங்கதை யாகிவிடுகின்றன. பெரிய இடத்துக்கு வந்து சேர்ந்திருக் கிறோம் என்ற எண்ணம் போய்விடுகிறது. நாம் பெரிய ஆசாமி என்ற நினைப்பு மேலோங்கி விடுகிறது. உடனே, தன்னைச் சுற்றி உள்ளவை அனைத்தும் அற்பமாகத் தெரியத் தொடங்குகின்றன. தகுதிகள் யாவும் தமக்கே உண்டு என்ற தருக்கு தலைக்கு ஏறிவிடுகிறது. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் போக்கு மிகுந்து விடுகிறது. பெரிய இடத்தில் உள்ளவர் பேசுகிறார் என்பதால், கேட்டுக் கொள்கிறார்கள், சகித்துக் கொள்கிறார்கள். அதைக் கண்டதும், ஆணவம் மேலும் வளருகிறது. டாக்டர்களுக்கு மருத்துவ முறைபற்றியும், பொறி இயல் துறையினருக்குக்கட்டட அமைப்புப்பற்றியும்,பேராசிரியர் களுக்குக் கல்வியின் மேம்பாடு பற்றியும், தொழிலதிபர் களுக்குத் தொழிற்சாலை அமைப்புபற்றியும் புத்திகூற முனைந்து விடுகிறார்கள்!

ஜனநாயக முறை காரணமாக ஆட்சிப் பொறுப்பில் இடம் பெற்றுவிட்டதாலேயே, அந்த ஆட்சிக்கு உட்பட்ட நிலையில் உள்ளவர் எவர் என்றாலும், அவர்களுக்கு உள்ள தகுதிகள் திறமைகள் எவ்வளவு உயர்ந்தன என் றாலும், மதிப்பளிக்கத் தேவையில்லை என்ற எண்ணம் வளர்ந்து விடுவது, ஜனநாயகப் பயிரைக் கெடுத்திடும் களை போன்றது. கதிரை அழித்திடும் பூச்சி போன்றது. இதனால் ஜனநாயக முறை மூலம் கிடைக்க வேண்டிய பலன் வெகுவாகக் குறைகிறது, கெடுகிறது.

பதவி காரணமாக மட்டுமல்ல, பணம் காரண மாகவேகூட இந்த மனப்பான்மை வளர்ந்து விடுவதைக் காண்கிறோம். காண்பது மட்டுமல்ல, அதற்கு அடங்கிக் கிடக்கிறோம்; அடங்கிக் கிடப்பதன் மூலம் நாமே அந்த மனப்பான்மையை மேலும் வளர்த்தும் விடுகிறோம்!

கையில் காசு இல்லாதவன் அதிகம் பேசாமலிருந்தால் ஊமை உன்மத்தன்; பேசத் தெரியாததால் பணம் படைத்தோன் வாய் மூடிக்கிடந்தால், அடக்கம், பெருந்தன்மை. கண்டபடி பேசமாட்டார், அளந்து பேசுவார் நிறுத்துப் பேசுவார் என்ற புகழாரம்; நாமே சூட்டிவிடுகிறோம்! களங்கமற்றுச் சிரிப்பவன், காசு இல்லாதவனானால், என்னடா இளிக்கிறாய் என்று கேட்டு விடுகிறோம்;பணம் படைத்தவனை அவ்விதம் கேட்போமா? ஐயா எப்போதும் இப்படித்தான், கலகலப்பாக இருப்பார் என்று கூடப் பாராட்டுகிறோம். கனவான், கடற்கரையில் காற்று வாங்குகிறார்! காசில்லாதவனை அதே இடத்தில் கண்டால்? கடலோரம் அலைந்து கொண்டிருக்கிறான்! என்கிறோமல்லவா!! பதவியில் உள்ளவர்கள் பற்றி இதே போலத்தான, பேசுகிறோம்.


இது தம்பி! ஒருவர் இருக்கும் நிலையைக் கண்டு மற்றவர்களுக்கு ஏற்பட்டுவிடும் நினைப்பும், அந்த நினைப்பின் காரணமாகக் கிளம்பும் பேச்சுமாகும். இது ஒருசிலருக்கு மட்டும் இருந்தால் கேடு அதிகம் இல்லை, ஆனால் இது 'சமூக இயல்பு' ஆகிவிட்டால், அங்கு 'ஜனநாயகம்' பிழைக்காது, தழைக்காது. அதற்காகத்தான் அது குறித்துச் சொல்கிறேன் இந்த அளவு.

ஆக, நிலைமை அறியாது பேசுவது தவறு; நிலைமையைச் சாதகமாக்கிக்கொண்டு பேசுவதும் தவறு. நிலைமையைக் கண்டு அஞ்சி நடுக்குங்குரலிற் பேசுவதோ, மயங்கி மழுப்பும் குரலில் பேசுவதே, இவை யாவுமே தவறுதான்.

என்ன அண்ணா! 'பேச்சு' பற்றி இத்தனைக் கூற வேண்டுமா? என்று கேட்கிறாயா, தம்பி! இன்னமும் கூற வேண்டியது இருக்கிறதே! அடுத்த கிழமை மேலும் சில கூற இருக்கிறேன்.

அண்ணன்'

31—10—'65



காஞ்சிக் கடிதம் : 39

# நாநலம்

**பயன் தராததைப் பேசுபவன் பதர்**

**ஜனநாயக நாள்களில் நாநலம் தேவை!**

**கொக்கொக்கக் கொத்திட வேண்டும்**

**பேச்சிலே பக்குவம், பயன், தெளிவு வேண்டும்**

**எனக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற இறுமாப்புக் கூடாது**

**காமராசர் விரும்பும் ஜனநாயகம்**

தம்பி,

பயனறிந்து பக்குவம் கெடாமல், பண்பு குறையாமல், பேசிட வேண்டும். அது போன்றே, மேல்மட்டத்து இடம் கிடைத்துவிட்டது என்பதாலோ, நேரம் தனக்குச் சாதகமானது என்பதாலோ, மற்றவர்களைக் கெடுத்திடத்தக்க இன்னலை உண்டாக்கத்தக்க விதமாகவும் பேசக்கூடாது.

ஃ

'பயனில சொல்லாமை' என்று ஓர் அதிகாரமே அளித்திருக்கிறார் வள்ளுவர்.

வெறும் சொல்வன்மையைக் காட்டவோ, தான் எது சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையிலே சிலர் உளர் என்ற நினைப்புடனோ, எந்தவிதமான பயனும் தராததைப் பேசுபவனைப் 'பதர்' என்றே கடிந்துரைக்கிறார்! 'பதர்' உருவில் நெல்போலத்தான் இருக்கிறது; பயன்? ஏதுமில்லை அல்லவா! அதுபோலத்தான் பயனற்றன பேசுவான் மனித உருவில்தான் இருக்கிறான், ஆனால், பயன் ஏதும் இல்லை என்கிறார்.

**பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்;**
**மக்கட் பதடி எனல்.**

ஜெர்மன் மருந்தாவது ஜப்பான் மருந்தாவது என்று பேசினானே, அந்தப் பேச்சு பயனற்றது மட்டுமல்ல, பலருக்கும் கோபமூட்டிடத் தக்கது. அவ்விதமானவனைத் தான் வள்ளுவர் முதலில் காட்டிச் சாடுகிறார்.

**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்.**

நான் உண்மையைத்தானே சொன்னேன் என்று வாதாடுவானல்லவா, அதனையும் விளக்குகிறார் வள்ளுவர். வாய்மைக்கு ஒரு இலக்கணம் வகுத்தளிக்கிறார்:

**வாய்மை எனப்படுவது யாதுஎனில் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

என்று கூறிவிட்டு, அப்படியானால் பொய் பேசுவதோ என்று கேட்பார்களே என்று உணர்ந்து, அதற்குத் தக்க விளக்கம் தந்துவிடுகிறார்:

**பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்**

தம்பி! நன்மை பயக்கும் என்கிறபோது பேசுபவருக்கு நன்மை பயப்பது என்று கொள்ளக்கூடாது; மற்றவர்க்கு என்பதே பொருள்.

மற்றும், கடுஞ் சொல் கூடாது என்பது குறித்தும், தெளிந்த பிறகு பேசு; தெரிந்ததை எல்லாம் கூறிவிடலாம் என்று எண்ணிப் பேசாதே என்றும், குறிப்பறிந்து பேச



வேண்டும், அவை அறிந்து பேச வேண்டும் என்றும் வலியுறுத்தி இருக்கிறார்.

பேசுவதுபற்றி இவ்வளவு கூறவேண்டுமா என்று என்னை எங்கே கேட்டு விடுகிறாயோ என்றுதான், தம்பி! வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவரே, அதுபற்றிய இலக்கணத்தை மிக விளக்கமாக அளித்திருக்கிறார் என்பதனை எடுத்துக் காட்டுகிறேன்.

தம்பி! எழுதுவது என்பதைவிட எளிதாக உள்ளதல்லவா, பேசுவது? ஒரு சமூகத்தில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மட்டுமே எழுத்தாளர் ஆகின்றனர்; அவர்களில் சிலரே எழுத்தாளர் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். பேசுபவர் என்று சமூகத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் காட்ட முடியாது; பேச்சாளர்கள் இருக்கிறார்கள், சமூகத்தில் ஒரு பகுதியினரக; ஆனால் பேசுவோர், சமூகத்தினர் முழுவதுமல்லவா! பேசுவோர், எங்குப் பேசினும், எவரிடம் பேசினும், எதற்காகப் பேசினாலும், ஏதேனும் ஓர் விளைவு ஏற்பட்டுத்தானே தீரும்? ஒரு அவசரப் பேச்சு, ஆத்திரமிக்க பேச்சு, பழிச் சொல், சமூகத்தில் எத்தனை கேட்டினை உண்டாக்கிவிட முடிகிறது! தீயினால் சுட்ட புண்ணை ஆற்றிவிடலாம், நாவினால் சுட்ட வடு ஆற்ற முடியாதது என்று அறிவிக்கிறார்.

தீப்பட்ட இடம் புண்ணாகிப் பிறகு உலர்ந்து வடுக் கூடத் தெரியாது போய்விடும் தக்க மருத்துவ முறையினால். ஒருவருடைய பேச்சினால் மனம் புண்ணாகிப் போனால், அது ஆறாது, ஆற்றவே முடியாத புண்ணை ஏற்படுத்தக்கூடிய பயங்கரமான கருவி நாக்கு என்பதால் தான்,

யா காவாராயினும் நா காக்க!

என்று எச்சரிக்கிறார். காத்திடுவது எங்ஙனம் என்பது பற்றிய விளக்கமும் அளிக்கிறார்; குடும்பத்தாருக்கு, நண்பர்களுக்கு, அமைச்சர்கட்கு, தூதுவர்க்கு.

**கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து**
**எண்ணி யுரைப்பான் தலை.**

தன் கடமை என்ன என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும், காலம் இடம் தெரிந்து கொண்டு பேசவேண்

டும் என்று வள்ளுவர் தூதருக்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்.

ஃ

தம்பி! நாநலம், நாகாத்திடல், நல்லன நவின்றிடல், அல்லன தவிர்த்திடல், பயனில சொல்லாமை எனும் பண்புகள் மற்ற எந்த நாட்களையும்விட ஜனநாயக நாட்களில் மிகமிகத் தேவைப்படுகிறது.

மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளுகிறார்கள் என்பது ஜனநாயக முறை. இது நடைமுறையில், மக்கள் தங்கள் சார்பில் ஆட்சி நடத்தச் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள் என்று ஆகிறது. சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்ற முறை இருக்கிறது என்றால், அதன் முழுப் பொருள், பலருக்கும் தேர்தலில் ஈடுபடும் உரிமை இருக்கிறது என்பதாகும். இந்தப் 'பலரில்', சிலர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குப் பலர் பேசுவதனையும் கேட்டு, சீர் தூக்கிப் பார்த்து, பயன் அறிந்து, தக்காரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, தேர்தலில் ஈடுபடுபவர்கள், மக்களிடம், தமது நோக்கம், திறம் பற்றிய விளக்கமளித்துப் பேசவேண்டும். அதற்கு நாநலம் இருந்தால் மட்டும் போதாது; பறை ஓசை கிளப்பிடின் யாழ் இருக்குமிடம் தெரியாது போய்விடும்! சங்குகொண்டு ஊதிடின் குழல் இனிமை விளங்கிடாது.

ஃ

பேச்சிலே அழுத்தந் திருத்தம் இருந்திடல் வேண்டும், அப்போதுதான் கேட்பவர் மனத்திலே அந்தப் பேச்சுப் பதியும், ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

இது ஓரளவுக்கு உண்மை.

பொறி பறக்கப் பேசினான் என்று கூறுகிறோமல்லவா! பொறி மட்டும் இருந்திடின், பயன் இல்லை; ஒளி கிடைத்திட வேண்டும். சம்மட்டி அடி நொறுக்கத் தக்க வலிவு மிக்கது. ஆனால், அது இரும்பு அடிக்க அல்லது பாறையைப் பிளக்கத் தேவை, ஆடையின் அழுக்கெடுக்க அல்ல. பொன்னை அணியாக்கிட அல்ல!



இது 'மடத்தனம்'—இவர்கள் 'முட்டாள்கள்' இதுகளை 'ஒழித்துக் கட்டாமல் விடமாட்டேன்' என்றெல்லாம் பேசுவது எளிது; அதிலும் முழுக்க முழுக்க நம்மவர்கள் உள்ள அவை என்று அறிந்துவிட்டால், மிக மிக எளிது; கைதட்டுதல் பெற இது பயன்படும், இதயத்தைத் தடவிட அல்ல.

குழலூதும்போது கவனித்துப் பார் தம்பி! விரல்கள் எவ்வளவு 'நளினமாக' வேலை செய்கின்றன என்பது விளங்கிடும். ஓவியம் தீட்டுவோன் தூரிகையை எவ்வளவு பக்குவமாகப் பயன்படுத்துகிறான் என்பதனையும் பார்த்திடு, கல்லிழைத்த நகை செய்திடும் பொற்கொல்லரின் கைத்திறனையும் பக்கமிருந்து பார்! பொன்னார் இழை கொண்டு ஆடைநெய்திடும் கலைஞன் என்ன முறையில் வேலை செய்கிறான் என்பதனைப் பார்! கட்டை பிளப்பவன், கோடாரியை வீசிடும் விதத்தையும் பார்!

முன்னவர்கள் புதிய 'படைப்புகளை'ச் செய்தளிக்கிறார்கள்; கோடாரிக்காரன் கிடைத்ததை உடைத்துத் தருகிறான். பேச்சிலேயும், இப்படி வகை உண்டு,

நாம் கூறிடும் கருத்தினை ஏற்க மறுப்பவர்கள் எல்லோரும் மாற்றார்கள் — நம்முடைய கண்டனக் கணைக்கு ஆளாக வேண்டியவர்கள் அல்லது நம்மாலே அலட்சியப்படுத்தத் தக்கவர்கள் என்ற நினைப்புடன்—முனைப்புடன் என்றாலும் தகும்—பேசுவது ஏற்கனவே நம்மோடு இணைந்து போய்விட்டவர்களுக்குக் கரும்பு! மற்றவர்களுக்கு அது வேம்பு மட்டுமல்ல, எட்டி என்றே தோன்றும்; நம்மை நெருங்கிடவே அவர்களுக்கு விருப்பம் வராது!

பொறி பறக்கப் பேசுவது என்றால், ஒருவரையும் அருகே நெருங்கவிடாதபடிப் பேசிடுவது என்பதல்ல பொருள்; கொள்கையிலே நமக்குள்ள ஆர்வம் கொழுந்து விட்டு எரிந்து, அதன் பொறிகள் பேச்சின் மூலம் சிதறுகின்றன என்பதுதான் உண்மையான பொருள்,

கனியிருக்கக் காய் கவருவது போன்றது என்றார் வள்ளுவர் கடுஞ்சொல் பேசும் முறையை.

நாம் எங்கு இடம் பெற்றிருக்கிறோமோ, அந்த இடத்திற்கு உள்ள வலிவு, நமக்கும் வந்து சேருகிறது, இது

இயற்கை. நாற்பது மைல் வேகத்தில் ஓடும் மோட்டாரில் உள்ளவன் தானாக நடந்தால் 'மாதம் காதவழி' மட்டும் போகத்தக்க 'நோன்ஜான்' ஆக இருந்தாலும் அவன் மேற்கொண்ட பயணம், வேகமாக அமைந்து விடுகிறது.

அதனை உணராமல், அவன், நான் மணிக்கு நாற்பது மைல் வேகம் செல்லவல்லேன் என்று கூறிடின், அவனைப் பேதை என்று அறிவாளர் கூறுவர்; கூறுவரா? இல்லை! எண்ணிக்கொள்வர்!

இருக்கும் இடத்தின் வலிவு கண்டு இறுமாந்து கிடந்திடும் இயல்பினின்றும் தப்புவது மிகக் கடினம். பயில்வான் வீட்டில் பாத்திரம் துலக்கும் வேலைதான் என்றாலும், அவன் பக்கத்து வீட்டுக்காரனிடம் வம்புக்கு நிற்கும்போது, பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துவிடுவேன் பயலே! என்றுதான் ஆர்ப்பரிக்கிறான்!

ஆட்சியிலே அமர்ந்திருக்கும் கட்சியிலே புகுந்து கொள்ளும் 'அடைக்கலம்' முழக்கம் எழுப்பும்போது, ஆட்சிக் கட்சியின் முழு வலிவும் அந்த நா வழி வழிந்திடுவதைக் காண்கிறோமல்லவா! அதுபோலத்தான்.

அத்தகைய இயல்பினரால் இருக்குமிடத்திலே கிடைக்கும் இனிப்புப் பண்டங்களைப் பெற்றிட முடியுமேயன்றி, புதிதாக ஒன்றையும் செய்திடவோ, உள்ளதைப் பெருக்கிடவோ முடியாது.

இருக்கும் இடம் வலிவுள்ளது என்பதால் எழும் எண்ணம் தடித்துத் தடித்து, எதையும் செய்தளிக்கத் தக்க ஆற்றலையே மாய்த்துவிடும்!

தம்பி! நீ இருக்கும் இடம் இனிப்புப் பண்டம் நிரம்பிக் கிடந்திடும் இடமுமல்ல, அதிகாரம் அளித்திடும் வலிவு உள்ள முகாமுமல்ல.

ஆட்சியால் கிடைத்திடும் வலிவே, நா நலமற்றவர்களால் சிதைக்கப்பட்டுப் போய்விடும் என்கிறபோது, ஆட்சியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளவர்களின் கருத்துகளுக்கு மறுப்புக் கூறிடும் முகாமில் உள்ளவர்கள், நா நலத்தை எத்தனை பக்குவமுள்ள தாக்கிடப் பயிற்சி மேற்கொண்டபடி இருக்கவேண்டும் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.



நம்முடன் இல்லாதவர்களையும் நம்முடன் வந்திடச் செய்திடும் வகையிலே பேச்சு சிறந்திடவேண்டும். நம்மை அந்த நெறியினின்றும் மாறிடச் செய்வதற்காக மற்றவர்கள் தடித்த சொல் வீசும்போது, பொறுத்துக் கொள்ளும் மனத்திடம் இருக்கவேண்டும். சாக்ரடிஸ், இன்று உலகோரின் வழிகாட்டிகளில் ஒருவராக அரசோச்சுகிறார். ஆனால், அவர் வாழ்ந்த நாட்களில், நாடகம் எழுதிடும் புலவரொருவர் அழுக்காறு காரணமாக சாக்ரடீசைக் கேலி செய்திட, கேவலப்படுத்திட, 'மேகங்கள்' என்றோர் நாடகம் நடத்திக் காட்டினாராம். அந்த நாடகத்தை, தம்பி! சாக்ரடீசே நேரிலே கண்டு களித்தாராம்!! எத்தனை பொறுமைக் குணம், சகிப்புத்தன்மை என்றுதான் நீ எண்ணி எண்ணிப் பாராட்டுகிறாய். நான் தம்பி! அதனை எண்ணிடவில்லை, எத்தனை நம்பிக்கை சாக்ரடிசுக்கு, தன்னைக் கேவலம்படுத்தும் ஒரு நாடகம், தன் செல்வாக்கைத் துளியும் சிதைத்திடாது என்பதில்! அந்த நம்பிக்கைதான் எனக்கு வியப்பளிக்கிறது.

நாநலத்துடன், நமது சொல், வெல்லும் என்ற நம்பிக்கையும், வெற்றி கிட்டத்தக்க முறையில் பணியாற்றிடும் திறனும், அவற்றைவிட, காலம் வருகிற வரையில் காத்திருக்கும் பொறுமையும் வேண்டும்.

கொக்கொக்கக் காத்திரு!
அதன் குத்து ஒக்கச் செயலை முடித்திடு

என்கிறார் வள்ளுவர்.

துள்ளி ஓடிடும் சிறு மீன்கள், கரையில் உள்ள கொக்கு கண்ணற்றது. செயல் திறனற்றது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கும் ஏன்? கொக்கு, தான் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கிறதே அதனால்.

இத்தனை மீன்கள் துள்ளி ஓடின, கரையோரக் கொக்கு ஏதும் செய்திடவில்லை, இயலவில்லை; இனி நமக்கென்ன பயம் என்று எண்ணிக் கிளம்புகிறது. சிறிதளவு பெரிய மீன்! என்ன ஆகிறது? கொக்கு கொத்திக் கொள்கிறது! கொக்கு அங்கே இருந்தது அதற்குத்தானே?

ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

இரைதேடிக் காத்திருப்பதும், கிடைத்ததும் பற்றிக் கொள்வதும் கொக்குக்கு மட்டும்தானா இயல்பு; மற்றப் பலவற்றினுக்கும் உண்டே! ஏன் கொக்கினை மட்டும் குறிப்பாகக் காட்டுகிறார் வாக்குண்டாம் பாடிய ஔவை யார் என்று கேட்கத் தோன்றுகிறதா தம்பி? காரணத் தோடுதான், காட்டியிருக்கிறார்.

புலிகூட இரை தேடிக் காத்திருக்கிறது, பதுங்கிக் கொள்ளக்கூடச் செய்கிறது.

வல்லூறு கூடப் புறாவைத் தேடி வட்டமிடுகிறது.

ஆனால், பதுங்கி இருந்திடும் புலி, மானைக் கண்ட தும் பாய்கிறது, மான் ஓடுகிறது, புலி துரத்துகிறது, பல மைல்கள் கூட அலுப்பு மேலிட ஓடி ஓடி வேட்டையாடிய பிறகே மானைக் கொல்ல முடிகிறது புலியினால்; ஒரு போராட்டம் நடைபெறுகிறது.

வல்லூறு பாய்ந்து வருவது கண்ட புறா தப்பித்துக் கொள்ளப்படும் பாடு, கொஞ்சமல்ல.

கொக்கு மீனைக் கொத்துவது அவ்விதமல்ல! என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் மீன் துள்ளி வரு கிறது. கொக்கு அதைக் கொத்தப்போக, மீன் தப்பித்து ஓட, கொக்கு விடாமல் துரத்திச் சென்று கொத்திடும் முறை இல்லை. மீன் வருவதும் கொக்கு கொத்துவதும், மீன் சிக்கிக் கொள்வதும் உடனே இரையாகிவிடுவதும் எல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள். மீன் வருவதற் கும், மீன் சிக்குவதற்கும், உள்ளே இரையாகிச் செல்லு வற்கும், இடைவெளிகளே இல்லை; எல்லாம் ஒரே நேரத் தில் நடைபெற்று விடுகிறது. அதனால்தான் கொக் கொக்கக் கொத்திட வேண்டும் என்றார். பாம்புகூட, ஓசைப்படாமல் தீண்டிவிடுகிறது. ஆளை வேட்டை யாடிக் கடிப்பதில்லை. ஆனால், மனிதனைத் தீண்டித் தீர்த்துக் கட்டுமேயன்றித் தின்பதில்லை. கொக்கு தீண்டித் தீனியாக்கிக் கொள்கிறது மீனை. அவ்வளவு கூர்மையான பார்வை. அத்தனை நேர்த்தியான குறிபார்த்திடும் திறன், அவ்வளவு வேகமான கொத்தும் தன்மை, கொக்குக்கு! அத்தனை திறமையாக இரைதேடிக்கொண்ட கொக்கு, புலிபோல உறுமுவதில்லை, இரத்தம் குடித்த மகிழ்ச்சியில் புலி படுத்துப் புரள்கிறதே அதுபோலவும் இல்லை, ஏதும் அறியாததுபோல, எப்போதும் போல



இருக்கிறது கொக்கு, காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு! இவற்றினை எல்லாம் எண்ணிப் பார்த்துத் தான் வள்ளுவர், 'கொக்கொக்க' என்று கூறினார்.

□

துடுக்குத்தனமாக புட்டோ பேசியதைக் கண்டதாலே, பேச்சின் தன்மை பற்றிய விளக்கம் அளித்திட முற்பட் டிருக்கிறேன் என்று எண்ணிக்கொள்ள வேண்டாம், தம்பி! அறிவுத் தெளிவும், சராசரிப் பண்பும் உள்ளவர்கள் சிலவேளைகளில் பக்குவம் மறந்து பேசிவிடுகிறார்களே, அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக, இதனைக் கூறுகிறேன், வெறியும் மண்டைக் கனமும் கொண்ட காட்டுமிராண்டியாக உள்ள புட்டோ போன் றோரைத் திருத்த முடியும் என்ற நோக்கத்துடன் அல்ல; லால்பகதூர் கூறியபடி, புட்டோ போன்றாரின் பேச்சுக்கு வார்த்தைகளை வீசிப் பதில் அளிக்கத் தேவையில்லை, தீரமிக்க நமது படை வீரர்களின் வல்லமைமிக்க பதி லடியே பொருத்தமானதாக இருக்கும்! இன்னவிதமான 'சோப்பு' தேய்த்துக் குளித்து வந்தால், சொறி சிரங்கு அரிப்பு ஆகியவை போய்விடும் என்று கூறும்போது, குட்டம் போன்ற வியாதியாலே பீடிக்கப்பட்டவனுக் காகக் கூறப்படும் யோசனை என்று கொள்ளக்கூடா தல்லவா? அதுபோல பேச்சிலே பக்குவம் இருக்கவேண்டும் பயன் இருக்க வேண்டும், இடம் நேரம் பற்றிய தெளிவு இருக்க வேண்டும் என்று நான் கூறுவது, இயல்பு அடி யோடு பாழ்பட்டு விட்டவர்களுக்கு அல்ல. திருந்திவிடக் கூடிய அளவு நலிவுற்றிருப்பவர்களுக்கு; புட்டோக்களுக்கு அல்ல.

ஃ

யார் என்ன எண்ணிக் கொண்டாலும் கவலை யில்லை! கொள்ளினுஞ்சரி. தள்ளினும்சரி கவலை கொள் ளேன், என் மனதுக்குச் சரியென்று பட்டதனைச் சொல் லித் தீருவேன், என்னை எவரும் தடுத்திட முடியாது என்ற போக்குக் கொள்வது கொள்வோருக்குச் சுவை தந் திடும், சிற்சிலருக்குப் புகழ்கூடத் தந்திடும்; ஆனால், அதனை எல்லோராலும் எல்லாக் காலத்திலும் எளிதிலே கையாளத்தக்க பொது விதியாகக் கொண்டிட முடியாது; கூடாது.

தீவிரமான பேச்சுக்காரர் என்ற பட்டத்தைத் தட்டிப் பறித்துக் கொள்வதற்காக, சிலர் எத்தனை வேகம் காட்டி னார்கள் என்பதும், அதைவிட வேகமாக வேறு திக்கு நோக்கிப் பாய்ந்தார்கள் என்பதும், எனக்குத் தெரியும்; உனக்குந்தான் தெரியுமே தம்பி!

வளையவேண்டும், நெளியவேண்டும், வழவழா என்று குழையவேண்டும் என்று சொல்லுவதாக எண்ணிக் கொள்ள மாட்டாய்.

எல்லாம் எனக்குத் தெரியும்; எனக்கு மட்டும் தெரியும் என்ற இறுமாப்புக் கூடாது என்று மட்டுமே கூறுகிறேன்; அழுத்தந் திருத்தமாகப் பேசவேண்டாமென்றோ, திட்ட வட்டமாகப் பேச வேண்டாமென்றோ, அச்சமற்றுப் பேசவேண்டாமென்றோ கூறவில்லை; கூறுவேனா?

பொதுவாக நாம் கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதிலே நம்பிக்கை நிரம்ப இருக்குமானால், அடித்துப் பேசவேண்டும். இடித்துப் பேசவேண்டும் என்ற எண்ணம் வராது. நாம் எடுத்துக் கூறுவதிலே நமக்கே ஐயப்பாடு இருந்திடிலோ, நமது வாதத் திறமையிலே குறையிருக் கிறது என்ற எண்ணம் நமக்கே தோன்றினாலோ, பேசிடும் பேச்சிலே பொறிபறக்கும், நெடி அடிக்கும், காட்டுமிராண்டித்தனம் வெடித்துக் கிளம்பும்!

ஃ

ஜனநாயக முறை, கருத்து வேற்றுமைகளை மதித் திடும் அடிப்படையிலும், கருத்துக்களை அச்சமற்று எடுத்துக் கூறிடும் உரிமையின் அடிப்படையிலும் அமைந் திருக்கிறது.

போர்க்காலம் இது. இந்த நேரத்தில் கருத்து வேற்றுமைகளை மூட்டைகட்டி ஒரு பக்கம் வைத்து விடுங்கள்

என்று அகில இந்தியக் காங்கிரசின் தலைவர் காமராஜர் கூறுகிறார். எவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்து நமது கழகம் இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இது போது செயல்பட்டு வருகிறது.



நாட்டு மக்களின் முழுவலிவும் அன்னியன் கொட் டத்தை அடக்கவே பயன்படவேண்டும்.

அந்த முழு வலிவு கிடைக்கவேண்டுமானால், நேரத்தையும் நினைப்பையும் வேறு பக்கம் அல்லது வேறு பிரச்சினையில் திருப்பிவிடக் கூடியநிலை ஏற் படக்கூடாது.

அந்த நிலை ஏற்பட வேண்டுமானால், கருத்து வேற்றுமைகளைக் கிளறிக் கொண்டிருக்கக்கூடாது.

கருத்து வேற்றுமையை ஜனநாயகப் பண்புகளிலே ஒன்று, அடிப்படையானது என்று நாம் போற்றினா லும், அது பிளவு, பேதம், வலிவிழக்கும் நிலைமை என்ற விதமாக வடிவமெடுத்து, பகைவர்களுக்குச் சாதகமாகிவிடக்கூடும்.

எனவே, போர்க்காலத்தில், கருத்து வேற்றுமை களைக் கிளறிக் கொண்டிருப்பது நல்லதல்ல.

இதனை வலியுறுத்தும் காமராஜர் கருத்து வேற்றுமை எனும் உரிமையை மதிக்கிறாரா என்று பார்க்கும் போதுதான், திகைப்பு ஏற்படுகிறது!

போர்க்காலமல்லாதபோது, உங்கள் கருத்து வேற்றுமைகளைப் பேசித் தொலையுங்கள்!

என்றுதான் கூறுகிறார். கருத்து வேற்றுமை என்றால் அவ்வளவு கடுங்கோபம் பிறக்கிறது. பேசித் தொலையுங் கள் என்று கூறித் தமது கோபத்தையும், வெறுப்பையும் காட்டிக்கொள்கிறார். இது ஜனநாயகப் பண்பு ஆகாது. இந்த நோக்கத்துடன்தான் அரசு நடத்தப்பட வேண்டும் என்றால், பல நாடுகளிலே செய்துவிட்டிருப்பதுபோல,

கட்சிகள் பல கூடாது

என்று சட்டமியற்றிவிட்டு, ஒரு கட்சிச் சர்வாதிகாரத்தை மேற்கொண்டுவிடலாம்.

ஜனநாயகம்—அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் பாராளுமன்ற ஜனநாயகம்—எமது முறை, இங்கு வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை உண்டு, எந்தக் கட்சி யும் தேர்தலில் ஈடுபடலாம் என்றெல்லாம் சொல்லிவிட்டு,

கருத்து வேற்றுமையைப் பேசித் தொலையுங்கள்

என்று வெறுப்புடன் பேசுவதில் பொருள் இல்லை; பொறுப்புள்ள ஜனநாயக உணர்வு ஆகாது அந்தப் போக்கு.

நாட்டுக்கு எது நல்லது என்பதைக் கண்டறிந்து கூறிடும் உரிமை, உனக்கு இருப்பதைப் போலவே எனக்கும் உண்டு,

நாட்டிக்கு எது நல்லது என்பதனைக் கண்டறியக் கூடிய திறமை உனக்கு மட்டுந்தானா, எனக்கும் உண்டு,

நாட்டுக்கு நல்லது என்று எதனை நீ நம்புகிறாயோ அதனை நாட்டினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நீ எதிர்பார்ப்பது போல நானும் எதிர்பார்க்க உரிமை இருக்கிறது.

என்ற இந்த அடிப்படைகளின் மீது ஜனநாயகம் எழுப்பப் பட்டிருக்கிறது.

பேசுவதற்கு உரிமை தரப்பட்டிருப்பதால் பேசுகிறான்—ஆனால், இவனுக்கு ஏது அறிவு, நாட்டுக்கு நல்லது எது என்று கண்டறிய என்ற எண்ணமும்,

இவனுக்கு நாட்டுக்கு நல்லது எது என்று கண்டறியும் நோக்கமே இருக்க முடியாதே, வெறும் சுயநல உணர்ச்சிதானே இருக்கும், தனக்குச் சுகம், பதவி பட்டம் இவைகளைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் நோக்கம் கொண்டவன்தானே, இவனுக்கு எங்கிருந்து நாட்டுக்கு எது நல்லது என்று கண்டுபிடிக்கும் எண்ணம் ஏற்பட முடியும் என்ற நினைப்பும் தடித்துப்போன நிலையிலேதான், மற்றவர்கள் ஜனநாயக அடிப்படையில் பெற்றிருக்கிற கருத்துச் சுதந்திரத்தைக் கேவலமாக்கிடும் எண்ணம் வரமுடியும், அந்த எண்ணத்தின் காரணமாகத்தான் காமராஜர்

"சாதாரண காலத்தில் கருத்து வேற்றுமைகளைப் பேசித் தொலையுங்கள்"

—என்று கூறுகிறார்.

நாட்டுக்குத் தேவையான நல்லனவற்றை எல்லாம் கண்டறிந்து செயல்படுத்தும் அறிவாற்றல், இவருக்கும் இவருடன் இணைந்துள்ள பேரறிவாளர் சிலருக்கும்



மட்டுமே உண்டு, மற்றவர்களுக்குக் கிடையாது என்ற எண்ணத்தை வளர்த்துக்கொணடு, ஜனநாயகத்தை எப்படிச் செம்மையாக நடத்திச் செல்ல முடியும்!

ஜனநாயகமோ அல்லவோ, முறை எதுவோ அது பற்றிக் கவலை இல்லை, நாட்டுக்கு எது நல்லது என்பது தெரியும், அதனைச் செயல்படுதத முடியும், இது வேறு எவராலும் ஆகாது எனற நம்பிக்கை பொங்கிடும உள்ளம் கொண்டவர்களாக இருந்திடின் மற்றவர்களுக்கும் உரிமை உண்டு என்று ஒப்புகமகொண்டு, முறை வகுத்திருக்கத் தேவையில்லை. நான் கொடுப்பதுதான் சரக்கு, சொன்னதுதான் விலை, கூறுவதுதான் எடை என்று ஒரு அடாவடிக் கடை நடத்தலாம்; ஆதாயம் பெறலாம். ஆனால், ஜனநாயகமும் இருக்கும், அங்கு ஆட்சியில் உள்ளவர்கள் தவிர, மற்றவர்கள் எவரும் 'பேசித் தொலைக்கலாம்'—சகித்துக்கொள்கிறோம் என்றும் பேசுவது என்றால், அது ஜனநாயகம் அல்ல.

எல்லாம் எமக்குத்தான் தெரியும், மற்றவர்கட்கு ஏதும் தெரியாது என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்களேயொழிய இன்றைய ஆளுங் கட்சியினர் எல்லாம் அறிந்தவர்களாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று துதி பாடிடுவோர் கூடத் துணிந்து பேசி, மெய்ப்பிக்க முடியாதே.

சீனா பகைவனாகிவிடுவான் என்று யூகித்தறிந்திட முடிந்ததா? இல்லையே! பாய்—பாய் பாடிக்கொண்டிருந்தனரே!! இப்போது? சீனாவின் ஆதிக்கவெறி புரிகிறது, அதனைத் தடுத்திட நாட்டு மக்களை ஒன்று திரட்டிடும் பணி நடந்துவருகிறது.

நாட்டுக்கு உணவு நெருக்கடி வராமல் தடுத்திடத் தெரிந்ததா — எல்லாம் தெரிந்தவர்களுக்கு — எவனுக்கு என்ன தெரியும் என்று பேசுபவர்களுக்கு—இல்லை என்பதை அளவரிசி முறை காட்டுகிறதே!

திட்டத்தின் பலன் ஏழை எளியோர்களுக்குப் போய்ச் சேர்ந்திடும் முறையிலே காரிய மாற்றிடத் தெரிந்ததா? இல்லையே! பலன் எங்கே போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதனைக் கண்டுபிடிக்க ஒரு துப்பறியும் இலாகாவே அல்லவா அமைக்கவேண்டி வந்துவிட்டது!

இதுபோன்றே பல்வேறு துறைகளில், பிரச்சினைகளில். இந்நிலையில், எல்லாம் எமக்குத் தெரியும், எவ

னும் எமக்கு எதையும் கூறத் தேவையில்லை என்றா எண்ணிக்கொள்வது? பேரரசர்கள் இதுபோல எண்ணிக் கொண்டபோதே, பேதைமை என்று உலகு கண்டித்தது. நம்மிலே ஒரு பகுதியினர், எல்லாம் எமக்குத் தெரியும் என்று எக்காளமிடுவது, அதிலும் ஜனநாயக முறையை வைத்துக்கொண்டு பேசுவது, கொடுமை அல்லவா! ஆனால், பேசுகிறார்கள்.

> அன்னியனை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், நமக்குள் உள்ள கருத்து வேற்றுமைகளைக் காட்டிக் கொண்டிருக்கக் கூடாது, ஒற்றுமை குலையும்படி நடந்துகொள்ளக் கூடாது.

இது அறிவுரை! தம்பி! நாம் வரவேற்கத் தயங்கமாட்டோம். ஆனால், அமைதி மலர்ந்த பிறகும், கருத்து வேற்றுமைகளைப் பேசிடும் உரிமை இல்லை என்ற நிலை பிறந்தால், அந்த அரசினை ஜனநாயக அரசு என்று எண்ணி மதித்திட இயலாதல்லவா?

நாட்டுக்கு நெருக்கடி நிலை இல்லாதபோதுகூட, அவரவர்கள் தத்தமக்குச் சரியென்று பட்ட கருத்தினை எடுத்துக் கூறி மக்களின் ஆதரவினைப் பெற்றிடும் உரிமையைப் பெறக்கூடாது என்ற உள்ளம் கொண்டுள்ள காமராஜர்களின் கட்சிக்கு உள்ளாகவே, கருத்து வேற்றுமைகள் இல்லையா, அவைகளை வெளியே கூறாமலிருக்கிறார்களா!

> உணவுப் பிரச்சினை ஒன்றிலே மட்டும் ஆளுங் கட்சித் தலைவர்களுக்கிடையிலே எத்தனை விதமான கருத்து வேற்றுமைகள் உள்ளன, என்பது நாடு அறியாததா!

சென்ற கிழமை பேசியிருக்கிறார் மொரார்ஜி தேசாய், உணவு நெருக்கடிக்குக் காரணம், உற்பத்திக் குறைவு அல்ல; விளைந்ததைச் சரியான முறையில் பங்கிட்டுத் தராததுதான் என்று!

மற்றோர் ஆட்சித் தலைவர், தேவைக்குமேல் அதிகம் விளைவித்துள்ள மாநிலங்கள், பற்றாக்குறை இடங்களுக்கு உணவுப் பொருளை அனுப்பாமல் பதுக்கியதுதான் நெருக்கடிக்குக் காரணம் என்று பேசுகிறார். கருத்து வேற்றுமை இல்லையா—வெளியே பேசிக் கொண்டில்லையா? பேசுகிறார்கள்!



புட்டோவின் போக்குக்கு இடமளித்த காரணத்தால், ஐ. நா. மன்ற நடவடிக்கையில் கலந்துகொள்ளவில்லை; வெளியேறிவிட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் சுவரண்சிங் பேசுகிறார்; அதுவே சரியான முறை என்று பலரும் பாராட்டியுள்ளனர்.

> தவறு! தவறு! மிகப்பெருந்தவறு! ஐ. நா. கூட்டத்தைவிட்டு வெளியேறி இருக்கக் கூடாது

என்று பேசுகிறார் முன்னாள் அமைச்சர் கிருஷ்ணமேனன். சாதாரணமான பிரச்சினையிலே வந்ததா இந்தக் கருத்து வேற்றுமை? அதிலும்எப்படிப்பட்ட நெருக்கடி நேரத்திலே பேசுகிறார் கிருஷ்ணமேனன்? என்ன சொல்கிறார் காமராஜர்?

> இங்கே ஒவ்வொரு மாலையும் போடுபோடு என்று போடுகிறார் காமாராஜர், அமெரிக்காவை; உன் காலிலே வந்து விழவா! முடியாது! செத்தாலும் சாவேன், காலில் விழ மாட்டேன் என்று பேசுகிறார்.

தம்பி! அந்தப் பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அந்தப் போக்கை நான் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத்தான் வேண்டும்; அடிமையாகிவிடக் கூடாது, ஒப்புக்கொள்கிறேன்.

> ஆனால் அதேபோது பெரிய அமைச்சர் பட்டீல் என்ன செய்துகொண்டிருக்கிறார்? ஜான்சன்—சாஸ்திரி சந்திப்புக்கு 'முகூர்த்தம்' பார்த்துக் கொண்டிருக்கிறார், அமெரிக்காவில். டிசம்பரில் இந்தச் சந்திப்பு ஏற்படலாம் என்று தெரிவிக்கிறார். ஜான்சனுக்கு உடல் நலம் இடம் கொடுக்கவில்லை என்றால், சாஸ்திரி 'டெக்சாஸ்' மாநிலம் சென்றுகூட ஜான்சனைச் சந்திப்பார் என்கிறார்.

மாலைநேரப் பேச்சிலே பூத்திடும் கருத்துக்களுக்கும், பட்டீல் அமெரிக்காவிலே தூவிக்கொண்டிருக்கும் கருத்துக்களுக்கும் வித்தியாசம் இல்லையா? இருக்கலாமா?

> பாகிஸ்தான் நம்முடைய விரோதி அல்ல, சீனாவே நம்முடைய பகைவன்

என்று பட்டீல் அமெரிக்காவிலே பேசுகிறார். காங்கிரசின் மற்றத் தலைவர்கள் கொண்டுள்ள கருத்துடன் பட்டீலின்

கருத்து மோதவில்லையா! கருத்துவேற்றுமை இல்லையா! இருக்கிறது! வெளிப்படையாகத்தான் பட்டீல் காட்டுகிறார். காமராஜர் என்ன செய்கிறார்? டெக்கான் எரால்டு எனும் இதழ்தான் முன்வந்திருக்கிறது, பட்டீலின் போக்கைக் கண்டிக்க.

இவைபற்றித் தம்பி! நான்கூறுவதன் காரணம், கருத்து வேற்றுமை, ஆளுங்கட்சிக்கு உள்ளேயே நிரம்ப இருக்கிறது; பேசிக்கொளளப்படுகிறது. அதைத் தாங்கிக் கொள்ளும் காமராஜர், போர்ச் சூழ்நிலை உள்ள இந்த நாளில் அல்ல, அமைதி நிலவிடும் நாடகளிலே கூட, மற்றக் கட்சிகள் தமது கருத்தைக் கூறுவதை வரவேற்கும் ஜனநாயகப் பண்பு காட்டுகிறாரா என்றால், இல்லை;

பேசித் தொலைக்கட்டும்

என்று பெரிய மனது வைத்து அனுமதி கொடுக்கிறார்; சகித்துக்கொள்ளச் சம்மதிக்கிறார். இதுதான் இவர் விரும்பும் ஜனநாயகமா?

> உன்னுடைய கருத்தை நான் ஏற்றுக்கெள்ளமாட்டேன், ஆனால் நீ உன்னுடைய கருத்தை எடுத்துக் கூறும் உரிமையை எவன் எதிர்த்தாலும் அவனை நான் எதிர்த்து உன் உரிமையைப் பெற்றுத் தருவேன்.

வால்டேர், தம்பி! இவ்விதம் கூறியவர். எத்தனை இனிய ஜனநாயக மணம் வீசுகிறது பார்த்தனையா!

எத்தனையோ இன்னல்களைத் தாங்கித் தாங்கி தகர்ந்து போகாமல், பேரறிவாளர்கள் ஜனநாயகப் பயிரைத் தழைக்கச் செய்திருக்கிறார்கள்.

> அந்த ஜனநாயகம் தழைத்திட, கனிந்திட, பேச்சுச் சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்படவேண்டும்.

பேச்சு பக்குவம் கொண்டதாக, பயன் உள்ளதாக, காலம் இடம் பற்றிய தெளிவு கொண்டதாக, நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு மற்றவர்களை நிந்திக்கும் போக்குஅற்றதாக, நாவால் சுட்டிடும் கேட்டினை நீக்கியதாக, அமைய வேண்டும்.

எடுத்துக் கூறி மெய்ப்பிக்கப்பட வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன; தொகை வளர்ந்தபடியும்இருக்கிறது.




விளக்கிக் காட்டி, ஒப்புக்கொள்ளச் செய்திடவேண்டியதாகப் பல பிரச்சினைகள் உள்ளன.

கேட்போர் உள்ளத்திலே, வாழ்க்கைத்தொல்லை காரணமாக ஏற்பட்டுவிடும் 'சோர்வு', பிரச்சினைகளின் முழுத் தன்மையை உணர்ந்துக்கொள்ளும் ஆற்றலை அரித்துவிட்டிருக்கக் கூடும்; அதனை அறிந்து அவர்கட்கும் பிரச்சினையிலே அக்கறை ஏற்படச் செய்திடும் விதமாகப் பேசிட வேண்டும்.

ஆதிக்கத்தில் இடம் பெற்றோர், அதுகளுக்கு என்ன தெரியும் என்பர்; ஆத்திரம் கொள்ளலாகாது; இடம் பெறாத நிலையில் எல்லோருமே, 'அதுகள்' என்ற பட்டியலில்தான் இருந்திருக்க முடியும் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றினுக்கான பயிற்சி நிரம்ப வேண்டும்; நான் கூறியுள்ள சிலவற்றுடன் மேலும் பலகருத்துக்களைத் தேடிப் பெற்று பயிற்சி பெற்றிட வேண்டுகிறேன்.

அண்ணன்,

7—11—'65



## காஞ்சிக் கடிதம் : 40

# இது போதாதா?

**வினோபா பாவே, கஜேந்திர கட்கர் ஜெயப்பிரகாசரின் இடித்துரைகள்**

**மக்களின் ஆர்வம் நாட்டுப் பாதுகாப்பிலே**

**போர்ச் சூழ்நிலையில் கட்சிக் கண்ணோட்டத்துடன் காரியமாற்றுகிறது காங்கிரஸ் கட்சி.**

தம்பி,

மகன், மன்னன்போல இருக்கிறானா! உன் கண்ணுக்கு விருந்தாக இருக்கிறதா அந்தக் காட்சி! மெத்தவும் நல்லவனப்பா நீ!! மெத்தவும் நல்லவன். ஆனால், உன் கண்களுக்குத் தெரிவதுபோல என் கண்களுக்குத் தெரியவில்லை. பாசம் நிரம்பிய மனம்; என்றபோதிலும் என் கண்கள் அவனுடைய உண்மை வடிவத்தைத்தான் காண்கின்றன. அவனைக் கண்டு நான் அகமகிழ்ச்சி கொள்வதற்கும் இல்லை; பெருமைப்படுவதற்கும் இல்லை; மனம் வெதும்பிடும் நிலையில் நான் இருக்கிறேன்.''

ஊர் கொண்டாடும் நிலையை, மகன் தன் தந்திரத்தாலே ஏற்படுத்திக்கொண்டாலும் அவனுடைய உண்மையான இயல்பு அறிந்து மனம் நொந்து கிடந்திடும் நிலையில் உள்ள தந்தை பேசுவது, முன்னாலே தரப்பட்டிருப்பது.



வினோபாபாவே, தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் இன்றைய ஆட்சிபற்றிப் பேசுவதைக் காண்பவர்களுக்கு, இத்தகைய தந்தையின் மனக்குமுறல்தான் நினைவிற்கு வரும்.

போர் நெருக்கடி காரணமாக, நாட்டிலே ஏற்பட்டுள்ள எழுச்சியைப் பொன்னான வாய்ப்பாக்கிக் கொண்டு, ஆளுங்கட்சியான காங்கிரஸ் கட்சி, தனக்குப் புதுப்பொலிவும், அசைக்க முடியாத வலிவும் கிடைத்துவிட்டதாகப் பெருமிதம் கொண்டிருக்கிறது.

நாட்டினைப் பாகிஸ்தானியர் நாசமாக்கிடக் கிளம்பியது கண்டு கொதித்தெழுந்த மக்கள், நாட்டினை ஆண்டிடும் கூட்டத்தினர் மீது தமக்கு உள்ள வெறுப்பினையும் மறந்து அவர்க்குத் துணைநின்று, பகைவர்களை வீழ்த்திடும் செயலினைச் செம்மையாகச் செய்து வருகின்றனர். இது ஆளுங்கட்சிக்கு, ஒரு இன்பமான மனமயக்கத்தைத் தரத்தான் செய்யும். இயற்கைதான். ஆனால், இந்த நிலை காரணமாக, மக்கள் இந்த ஆட்சியாளர்களால் தொடர்ந்து அடைந்து வரும் தொல்லைகளை மறந்தே போவார்கள், துரைத்தனத்தை நடத்தத் தகுதியுள்ளவர்கள் இந்தக் கட்சியினரே என்று நம்பிவிடுவர் என்று கருதுவது எத்தனை பெரிய தவறு என்பதனை எடுத்துக் காட்டுவதுபோல ஆசார்ய வினோபா பாவே பேசி வருகிறார்.

இந்த நேரத்தில், எத்தனை மனக்குமுறல் இருப்பினும் மக்கள் அதனை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலே மூழ்கி, மேலும் தொடர்ந்து மோசமான முறையிலே ஆட்சியை நடத்திடுவரே, நாமாகிலும் உரிய நேரத்திலேயே இடித்துக்கூறுவோம் என்ற எண்ணத்தில், வினோபா பேசி வருகிறார் என்று தெரிகிறது.

இந்தியா—பாகிஸ்தான் போர் என்பது இரு நாடுகளுக்குள்ளே நடைபெறும் போர் என்று மட்டும் கருதுவது முழு அளவு உண்மையாக இருக்க முடியாது; இரு வேறு அரசு முறைகளுக்குள்ளே ஏற்பட்டுள்ள மோதுதல் இது என்பதே முழு உண்மை என்பதனை அடிக்கடி லால்பகதூர் விளக்கிக் காட்டியபடி இருக்கிறார்.

மக்களின் நலனைக் கவனியாமல் மமதை ஆட்சி நடப்பது மக்களின் உரிமைகளை மதிக்காது மதோன்-

மத்தர்கள், மதத்தைக்காட்டி மக்களை மாக்கள் நிலைக்குத் துரத்துவதுமான ஆட்சி நடப்பது பாகிஸ்தானில்; உரிமைகள் வழங்கப்பட்டு, நலன்கள் பேணி வளர்க்கப்பட்டு வருவதான ஆட்சி நடப்பது இந்தியாவில்—இந்த இரு வேறு ஆட்சி முறைகளுக்கும் மோதல் நடைபெறுகிறது என்பது வாதமாக மட்டுமன்றி, நிலைத்து நிற்கத்தக்க உண்மையாகிட வேண்டுமென்றால், இங்கு மக்களின் நலன் பேணி வளர்க்கப்படுவதிலும், உரிமைகள் வழங்கப்படுவதிலும், ஆட்சியினர் திறமையையும் காட்டிட வேண்டும்; தகுதியினையும் சந்தேகத்துக்கு இடமின்றி மெய்ப்பித்து வரவேண்டும்.

நாட்டுக்கே பேராபத்து என்கின்றபோது, தனி மனிதர்கள் தமது நலனையா முக்கியமானதாகக் கருதுவது என்று கேட்பர். பேதையும் நாட்டுக்கு நெருக்கடி இருந்திடும்போது தனது நலத்திலே நாட்டம் காட்டிட மாட்டான், நாடு ஓர் போரினில் ஈடுபட்டிருக்கும்போது, மக்கள் கட்டுப்பாட்டு உணர்ச்சிக்கு மதிப்பு அளித்திட வேண்டுமேயன்றி அந்தச் சமயத்திலா, தங்களுக்கான உரிமைகளைப் பற்றிப் பேசுவது என்று கேட்பர். எந்த அறிவிலியும், நாட்டுக்கு ஆபத்துச் சூழ்ந்துள்ள வேளையில், தனது உரிமைகளை வலியுறுத்தமாட்டான்.

இதுபற்றி எள்ளளவும் ஐயப்பாடு கொள்வதற்கு இடமின்றி நம் நாட்டு மக்கள் நடந்து காட்டியுள்ளனர்; பல்வேறு அரசியல் கட்சிகளும் நடந்து கொண்டுள்ளன. எனவே, பன்னிப் பன்னி, போர்க் காலத்திலா, என் நலம்! என் உரிமை! என்று எக்காளமிடுவது? நாட்டுப் பற்று அற்றவர்களன்றோ இந்தப் போக்குக் கொள்வர் என்று பேசிக்கொண்டிருப்பது அறமுமல்ல, பொருத்தமுமாகாது.

போர்ச் சூழ்நிலையின் காரணமாக, எத்தனை பெரிய தியாக உணர்ச்சி காட்டவும் மக்கள் முன்வந்துள்ளனர்; உண்மை; ஆனால், அதேபோது, ஆட்சி நடாத்துவோர் மீது, அவர்களின் நடவடிக்கைகளாலும், மேற்கொண்டுள்ள முறைகளினாலும் ஏறிப்போயுள்ள கறை அடியோடு துடைக்கப்பட்டு விட்டதாகவோ, தூய்மையாளர்களாகி விட்டனர் என்றோ மக்கள் நம்பிக் கிடந்திட மாட்டார்கள்; நல்லாட்சி முறைகள் குறித்து வலியுறுத்தத் தவறவும் மாட்டார்கள்.



பல்வேறு போர்முனைகளில் வீரர்கள் வெற்றி ஈட்டித் தந்தனர்; பகைவர்களை முறியடித்துள்ளனர்; பாராட்டுதலுக்கு உரியராகின்றனர். ஆற்றல் மறவர்களைப் போற்றி வரவேற்கின்றனர்; அவர்கள் பெற்றுள்ள புண்கள் புகழ்க் குறிகள் என்று எழுச்சியுடன் செப்புகின்றனர்; இத்தகு திறம் படைத்த வீரர் துணை இருக்கும்போது இனி எதற்கு நாம் பயப்பட வேண்டும்; ஜெயமுண்டு! பயம் இல்லை மனமே! என்று சிந்து பாடுகின்றனர்.

அந்தப் பெருமிதத்துடன், எழுச்சியுடன், நம்பிக்கையுடன், ஆட்சி நடாத்திடும் கட்சியினர் குறித்து மக்கள் பேசிட முடிகிறதா! வினோபா பாவேவாலேயே முடியவில்லையே!!

எமது படையினர் எதிரியை முறியடித்திடுவர் என்ற நம்பிக்கை எமக்கு நிரம்ப உண்டு, அவர்தம் ஆற்றலை, அக்னூர் முனையிலிருந்து பார்மார் முனைவரையில், டாங்கிச் சண்டையிலிருந்து விமானப் போர் வரையிலே கண்டோம்; பாய்ந்து சென்றிட, உயிரைத் துச்சமென்று எண்ணி வீரப் போரிட்டுப் பகைப் படையினை முறியடித்திட அவர்கள் தயக்கம் காட்டினார்கள் இல்லை. தம்மிடம் தரப்பட்டுள்ளனவற்றினைக் காட்டிலும், வலிவு மிக்க படைக் கருவிகளைப் பகைவர்கள் கொண்டுள்ளனர் என்றபோதிலும், வலிவிலே குறைந்த தரமுள்ளது என்று நிபுணர்கள் கூறத்தக்க விதமான படைக்கலன்களே இருந்தபோதிலும், கருவியின் வலிவு அதனைக் கொண்டோனின் கரத்தைப் பொறுத்தது, திறத்தைப் பொறுத்தது, நெஞ்சின் உறுதியைப் பொறுத்தது என்ற நேர்த்தியான நம்பிக்கை கொண்டு, வீரதீரம் காட்டி வெற்றி ஈட்டினர், தமது குருதி கொட்டி. அவர்கள் சூழ்ச்சித் திறன் மிக்க, போர்க் கருவிகளின் துணை மிகக் கொண்ட பகைப் படையினை, திறத்தாலும் தீரத்தாலும், தன்னல மறுப்புடனும் தளராத நம்பிக்கையுடனும் வீழ்த்தினரே, விரட்டி அடித்தனரே, அதுபற்றி மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் பேசிடும்போது, மக்களின் மனத்திலே, மற்றோர் வினா தன்னாலே எழாமலிருந்திடுமா! இத்துணை ஆற்றல் பெற்றுள்ளனரே இந்த வீரர்கள்! எத்தனை பெரிய ஆபத்தினின்றும் நாட்டை மீட்டளித்துள்ளனர்! இவர் காட்டிடும் திறம்போன்ற திறம் காட்டி, பகைவர்களை இவர்கள் வீழ்த்தியதுபோல, நம்முடைய போற்றுதலுக்கு உரியவர்களாகக் கடந்த 18 ஆண்டுகளாக விளங்கி

வருப்பவர்களும், ஆதரவினைத் தொடர்ந்து பெற்று வருப வர்களுமான ஆட்சி நடாத்திவரும் காங்கிரஸ் கட்சியினர்' மக்களின் நலனைப் பெற்றளித்திடும் துறையில், பசி யோடும் பஞ்சத்தோடும் பற்றாக்குறையோடும், வறுமை யுடனும் பேதத்துடனும் மூண்டிட்ட போரினிலே, வெற்றி ஈட்டிக் காட்டினரா? வேதனையைத் துடைத்தனரா? என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளத்தான் செய் கின்றனர். கிடைத்திடும் பதில் என்ன? லாகூருக்கு வெளியே முகாம் அமைத்திருக்கிறோம்! காசூர் முனை யிலே வலிவுடன் நிற்கிறோம்! பாகிஸ்தானிய டாங்கிப் படையிலே பெரும் பகுதியினை அழித்துவிட்டோம்! விமானங்களை வீழ்த்திவிட்டோம்! எல்லா முனையிலும் இறுமாப்பாளர்கள் இடுப்பொடிந்த நிலையில்தான் உள்ளனர் என்று படையினரால் கூறிட முடிகிறதே, அவர் தம் பேச்சே இசையாகி இனிப்பளிக்கிறதே, அதுபோல 18 ஆண்டுகளாக ஆட்சி நடாத்திடும் காங்கிரஸ் கட்சியினால் மக்களின் உரிமைகளை வழங்குவதிலும், அவர் நலன் பேணி வளர்ப்பதிலும் பெற்ற வெற்றிப் பட்டியலைக் காட்டிட முடிகிறதா! வினோபா பாவே உள்ள பட்டி யலைக் காட்டுகிறார், காண்போரின் கருத்திலே உண்மை நிலை பதிந்திடும் வகையில்.

பீகார் மாநிலத்தில் சகார்சா என்னும் இடத்தில், சென்ற திங்கள் முப்பதாம் நாள் மூதறிஞர் வினோபா பேசுகிறார்.

> சுதந்திரம் கிடைத்த இந்த 18 ஆண்டுக் காலமாக, உழவன் வாழ்வும் செம்மைப்படவில்லை, அன்றாடத் தேவைப் பொருள்களான உணவு, பால் வெண்ணெய் போன்ற பண்டங்களின் உற்பத்தியும் பெருகவில்லை, இது வருந்தத்தக்கது.

உழவன் வாழவில்லை என்றால் நாடே வாழவில்லை என் பதுதான் பொருள். ஏனெனில், நூற்றுக்கு எண்பது பேர் இங்கு உழவர்கள். இவர்களின் வாழ்வே செம்மைப்பட வில்லை பதினெட்டு ஆண்டுக் காலமாகக் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடாத்தியதில்!

> போர்முனை வெற்றி பற்றிப் பூரித்து நிற்கி றோம், அந்த வெற்றியினைப் பெற்றளித்த வீரர் தம்மை வாழ்த்தி மகிழ்கிறோம், ஆனால், இந்த 18 ஆண்டுகளாக ஏர்முனையைக் கூடச் செம்மைப்படுத்த முடியவில்லையே ஆட்சி நடாத்தும் காங்கிரசினால், இதனை எண்ணிடும்போது நெஞ்சு பிளந்து போகும் நிலையன்றோ எழுகிறது!



படைவீரர்களிடம் கொடுத்ததுபோலப் பட்டம் சூட்டிக் கொண்ட காங்கிரஸ் கட்சியிடம் தேவைப்படும் பொருளை, கருவியைத் தராமலிருந்தனரோ மக்கள்! கேட்டதை எல்லாம் கொடுத்தனர், தட்டாமல் தயங்கா மல் பல ஆண்டுகள்; தத்தளித்திடும் நிலையிலும் தந்தனர்.

அன்னியனான வெள்ளையன் உருட்டி மிரட்டி, ஈட்டி முனை காட்டிப் பெற்ற வரித் தொகையுடன், ஆட்சி நடத்த முற்பட்ட காங்கிரஸ் கட்சி, உதட்டிலே புன்னகை காட்டி, மகாத்மா படத்தைக் காட்டி, சத்தியாக்கிரகக் காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டிப் பெற்றுள்ள வரித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்திடின், எவ்வளவு பெரிய அளவிலே படைக்கலனை மக்கள் தந்துள்ளனர் என்பதும், எத்தனை நம்பிக்கையுடன் அளித்துள்ளனர் என்பதும் விளங்கிடும்.

கட்டாந்தரை; மழையோ இல்லை! கரமே கடப்பாரை! நான் என்ன செய்வது! படாதபாடு படுகிறேன், பலன் இன்னமும் கிடைத்திடவில்லையே எனப் பதறுகிறீரே, பலன் கிடைத்திடுவதற்கு ஏற்ற வசதியினைத் தந்துள் ளீரா என்று ஏழை உழவன் கேட்பதில்லை; கற்கள் நிரம் பிய இடத்திலும் எதனையாவது பயிரிட்டுக் காட்டு கிறான். காங்கிரசார் ஆட்சிப் பண்ணையை ஏற்றதும், மக்கள் பணத்தை ஏராளமாகவும் தாராளமாகவும் வாரி இறைத்தனர். பலன்? சிலர் சுகபோகச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கின்றனர். பண்ணையோ பசி போக்கிடத் தக்கவிதமான பலனைத் தந்திடவில்லை. அமெரிக்கப் பண்ணையிலிருந்து வருகிறது அரிசி! இங்கு முன்பு மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று ஆனைகட்டிப் போரடித்தனராம்! இப்போது? அரிசி மட்டும் அனுப் பினால் போதாது, ஆடு வேண்டும், மாடு வேண்டும், கோழி வேண்டும், எல்லாம் உடனே வேண்டும், தொடர்ந்து வேண்டும், கடனுக்கு வேண்டும்; முகம் கோணாமல் தந்திடவும் வேண்டும் என்று கேட்டிடும் நிலை. கட்சியினரைக் கூட்டிவைத்து லால்பகதூராரின் ஒப்புதலையும் எடுத்துக்காட்டி, அமெரிக்கா பொதுச்

சட்டம் எண் 480 எனும் திட்டத்தின்படி, உணவுப்
பொருள் தந்தாலொழிய, நாடு பிழைத்திட இயலாது
என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் உணவு
அமைச்சர் சுப்பிரமணியம்! இந்தநிலை, 18 ஆண்டுக் கால
ஆட்சிக்குப் பிறகு!

போம்டில்லாவிலே தோல்வி, தேஜ்பூரை விட்டு வெளி
யேற்றம் என்று நிலை ஏற்பட்டதே, மூன்றாண்டுகளுக்கு
முன்பு; சீனத் தாக்குதலின் போது! பாவம் கிருஷ்ண
மேனன் பலியானார்!! படைத் தளபதிகளைப்பற்றி
எல்லாம் கடை வீதிகளில் பேசப்பட்டது. அந்தப் போர்
முனையின் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தவர், விலகி
னார் உடல் நலம் இல்லை என்பதால். போர்முனையில்
'திறம்' காட்டாவிட்டால், கொதிப்பு வருகிறது, கோபம்
எழுகிறது; திட்டத்தை மாற்றவேண்டும் என்கிறோம்,
இதற்கேற்ற தளபதியைக் கொண்டு வா என்கிறோம்.

ஆட்சி நடத்திடும் காங்கிரசிடம், மக்கள் பலப்பல
ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களைக் கொடுத்து,
வாழ்த்திப் பாராட்டி, அர்ச்சித்து ஆலவட்டம் சுற்றி,
பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கண்ட பலன் என்ன?
மக்களின் நம்பிக்கைகள் பாட்டன் டாங்குகளைப் போல
நொறுக்கப்பட்டு விட்டுள்ள நிலையைத்தானே? அதனைத்
தான் வினோபா எடுத்துக் காட்டுகிறார். பதினெட்டு
ஆண்டுகளாயின. உழவன் வாழ்வும் செம்மைப்படவில்லை
என்று.

பிரார்த்தனைக் கூட்டத்திலேதானா, இந்த அரசியல்
நிலைமையைக் கூறிட வேண்டும் என்று சிலருக்கு வியப்பு
ஏற்படக்கூடும் இதிலே வியப்பதற்குக் காரணம் இல்லை.
மக்களிடம் இந்த நிலைபற்றிப் பல கட்சிகள் எடுத்துக்
கூறியும் பலனைக் காணோம், அதனால் இதுபற்றி
ஆண்டவனிடமாவது முறையிடுவோம் என்று வினோபா
எண்ணியிருக்கக்கூடும் அதனால்தான் பிரார்த்தனைக்கூட்
டத்திலே இது குறித்துப் பேசினார் என்று கூறத்தோன்று
கிறது. உழவன் வாழ்வு செம்மைப்படவில்லை; உணவுப்
பொருள் உற்பத்தி பெருகவில்லை என்று கூறுகிறாரே
வினோபா, பதினெட்டு ஆண்டுகளாக ஒரு பலம் வாய்ந்த
கட்சி ஆட்சி நடத்திடும்போது ஒன்றுமேவா விளையாது
போகும் நம்ப இயலவில்லையே என்று ஐயப்பாடு எழு
மல்லவா, வினோபா அதனையும் போக்கத் தவறவில்லை,



என்ன பெருகிவிட்டிருக்கிறது என்பது பற்றியும் கூறு
கிறார்.

> உணவுப் பொருள் பெருகவில்லை. ஆனால்,
> சிகரெட்டும், பீடியும், ஒயினும், மற்ற போதைப்
> பொருளும் அமோகமாகப் பெருகி இருக்கிறது. டில்லி
> போன்ற பெருநகர்களில், மாநிலத் தலைநகர்களில்!

வினோபா தந்துள்ள பட்டியல் முழுமை பெற்றதல்ல,
பட்டியலில் சேர்க்கப்படவேண்டியவை பல உள! புதிய
புதிய சேரிகள், சாக்கடை ஓரக் குடிசைகள், நடைபாதை
வாசிகள், ஆயிரத்தெட்டுப் பிணிகள், இவைகளுக்கு
இடையில் நவநாகரீக நாரிமணிகள், அவர்களின் இதழுக்கு
அழகளிக்கும் வண்ணப்பூச்சுகள், அதனால் ஈர்க்கப்படும்
காசாதிபதிகள், அவர்கள் நடத்திடும் கள்ள வாணிபம்,
அதன் பலனாகக் கிடைத்திடும் மாளிகைகள், அங்குக்
காணக்கிடக்கும் மந்தகாச வாழ்வு முறைகள். அம்மமோவா!
பலப்பல உற்பத்திகள் பெருகி உள்ளன. அவை குறித்துக்
கூறிட இயலவில்லை, தூயவரால். நாடு நன்கு அறிந்திருக்
கிறது நிலைமையினை!

> துரைத்தனத்தின் போக்கை மாற்றிட முடியவில்லை,
> காங்கிரஸ்காரர்களால் என்றும் கூறுகிறார்.

ஆட்சியை நடத்துகிறது காங்கிரஸ்! அலங்கோலம்
தான் விளைந்திருக்கிறது; அதனை தடுத்திடத் திறமை
யற்று உள்ளனர் காங்கிரசார். இது நிலைமை! இதனை
எங்ஙனம் மக்கள் மறந்துவிட முடியும்; இந்த நிலைமை
நீடித்திட எப்படி விரும்புவர்? இதனால் ஏற்படும் வேத
னையை அடக்கிக் கொண்டுள்ளனர், வெளியே கொட்டிக்
காட்டாமல் உள்ளனர் என்றால், மறந்துவிட்டார்கள்
என்பதல்ல பொருள், மாற்றான் நம்மை மல்லுக்கு இழுத்
திடும் நேரத்தில், நமது வேதனையைக் கூட வெளியே
காட்டிக் கொள்ளத்தான் கூடாது! என்ற பொறுப்
புணர்ச்சிதான் காரணம். மக்களின் அப்பழுக்கற்ற
நாட்டுப்பற்று, அவர்களை வேறு எது குறித்தும் இந்த
நேரத்தில் எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது என்ற ஒரு
உன்னதமான கட்டு திட்டத்தை மேற்கொள்ளச் செய்
திருக்கிறது. இது பழக்கமாகி, இயல்பே ஆகிவிடும். இனி
நாம் எந்த முறையிலே ஆட்சி நடத்தினாலும் இந்த
மக்கள் ஏனென்று கேட்டிட மாட்டார்கள், எதிர்ப்புக்

குரல் எழுப்பிட மாட்டார்கள் என்று எண்ணிக்கொள்வது ஏமாளித்தனம்,

மக்கள் எழுச்சி பெற்றிருப்பது, ஆற்றல் மறவர்களின் வெற்றிகளைக் கண்டு; காங்கிரசாட்சியின் சாதனைகளைக் கண்டு அல்ல; சாதனைக்குச் சான்றாகத்தான் அளவரிசி முறை இருக்கிறதே!

மக்கள் ஒன்றுபட்டு நிற்பது காங்கிரஸ் ஆட்சியினிடம் கொண்ட பரிவு காரணமாக அல்ல; பாகிஸ்தானும் சீனாவும் பகை கக்கி நிற்பதைக் காண்பதால்!

மக்கள் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுப்பதும், காங்கிரசின் ஆட்சித்திறம் கண்டு மகிழ்ச்சி கொண்டு பரிசு வழங்கிடும் முறையிலே அல்ல! இவர்களின் ஆட்சித்திறத்தை நம்பி நாடு கெட விட்டுவிடக் கூடாது; நம்மாலான எல்லாவற்றையும் நாம் அளித்து, நாடு காத்திடும் நற்பணியிலே ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தால், ஆர்வத்தால்!

இந்த ஆர்வம், நாட்டுப் பாதுகாப்புக்காக, காங்கிரஸ் ஆட்சியின் பாதுகாப்புக்காக அல்ல.

நெல்லுக்கு இறைத்திடும் நீர் புல்லுக்கும் பாயுமாமே, அதுபோல, நாட்டுப் பாதுகாப்புக்காக மக்கள் காட்டிடும் ஆர்வம், ஓரளவு காங்கிரஸ் கட்சிக்கும் போய்ச் சேர்ந்திடக்கூடும். அது இடையிலே நேரிட்டு விடும் நிகழ்ச்சி; மக்கள் மேற்கொண்டுவிட்ட ஆதரவு ஆகிவிடாது. அதுபோல எண்ணி ஏமாறாதீர்கள், இன்று காணப்படும் எழுச்சியும் ஆர்வமும், உதிர்ந்து போய்விடும், உலர்ந்து போய்விடும். இப்போதே அதனைப் பக்குவப்படுத்தாவிடின் என்று இந்தியாவின் பிரதம நீதிபதி கஜேந்திர கட்கார் எச்சரித்துள்ளார், சென்ற திங்கள் பத்தாம் நாள், புது தில்லியில்.

> இன்று மக்களிடம் காணப்படும் ஆர்வமும் எழுச்சியும் தக்கவிதத்தில் பக்குவப்படுத்தாவிடின், உதிர்ந்துபோய்விடும், கலைந்து போய்விடும் என்று அஞ்சுகிறேன்

என்று கூறிவிட்டு, கஜேந்திர கட்கார், அந்த அவையிலே அமர்ந்திருந்த பாதுகாப்பு அமைச்சர் சவான் அவர்களைச் சுட்டிக் காட்டியபடி,



> இன்றைய ஆர்வம் எப்போது கலைந்து விடும் என்று எனக்குத் தோன்றுகிறது என்றால், இதோ இருக்கிறாரே பாதுகாப்பு அமைச்சர் சவான், அவர் பாராளுமன்றத்தில் எழுந்து நின்று நிலைமை சரியாகி விட்டது என்று அறிவிக்கிறாரே, அப்போது

என்றும் குறிப்பிட்டார்,

வினோபாவும் கஜேந்திரகட்கரும் ஓட்டுவேட்டைக்காகவே உழல்பவர்கள் அல்ல; எதையாவது இட்டுக்கட்டிப் பேசியாவது பதவி பிடித்தாக வேண்டும் என்ற அரிப்புக் கொண்டவர்களுமல்ல. அதன் காரணமாகவே அவர்களின் கருத்தாழம் மிகுந்த கண்டனம் வலிவு மிக்கதாகிறது இவர்கள் இடித்துரைக்கும் அளவுக்கு ஆட்சியை நடத்திச் சென்றிடும் காங்கிரஸ்கட்சி இன்று போர் வீரர்களின் புகழாரங்கள் தந்திடும் புதுமணம், தமது ஆட்சி எழுப்பிடும் நறுமணம் என்று தவறாகப் பொருள் கொண்டுவிடக்கூடாது. ஆனால் காங்கிரஸ் கட்சியின் 'தேர்தல் சூரர்கள்' இப்படித்தான் எண்ணிக் கொண்டுள்ளனர், சுவை காணுகின்றனர். நெருக்கடி நிலைமை காரணமாக, எல்லாவிதமான கருத்தோட்டமும் தடைப்பட்டுப் போயிருப்பதனைச் சாதகமாக்கிக்கொண்டு, போரில் கிடைத்த வெற்றிக்கான மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருக்கும் மனத்தைப் பக்குவமாகத் தடவிக் கொடுத்தபடி இருந்தால், ஆட்சிப் போக்கினாலே ஏற்பட்டு விட்டுள்ள கசப்பு போய்விடும், கனிவு பிறந்திடும், ஓட்டுக் குவிந்திடும் என்ற கணக்கினைப் போட்டுப் பார்த்துப் பூரித்துக் கிடக்கின்றனர்.

போர்ச் சூழ்நிலையில் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும், கட்சிக் கண்ணோட்டத்துடன் காரியமாற்றக் கூடாது என்ற கண்ணியத்தை மற்றக் கட்சிகள் கடைப்பிடித்து வருகின்றபோது, ஆளுங்கட்சி தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ளும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது! இதனைக் கண்ட பிறகும், போக்கை மாற்றிக் கொள்ளக் கழகம் விரும்பவில்லை; நாடு பெரிது, மற்ற எதனையும்விட என்ற எண்ணத்தில்!

நாட்டிலே நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதனை, மற்ற கட்சிகள் உணர்ந்து அதற்கு ஏற்ற முறையில் ஒழுகி வருவதுபோல, காங்கிரசிடம் ஒப்படைக்கப்

பட்டுள்ள ஆட்சித் துறைகள் செயல்படுகின்றனவா என்றால், இல்லை என்றே தெரிகிறது.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் சென்ற மாத இறுதியில் இதுபற்றிக் குறிப்பிட்டார் திகைப்புடன்,

புதுதில்லியில் நடைபெற்ற மாநாட்டில் — காங்கிரஸ் அமைச்சர்களிலே சிலரும் இதிலே கலந்து கொண்டனர் — பேசும்போது, ஜெயப்பிரகாசர் மனம் நொந்து பேசியிருக்கிறார்,

> சர்க்கார் அலுவலகங்கள் பலவற்றில், பிரதம மந்திரி சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் உட்பட, எப்போதும் போல 'தூங்கி விழுந்திடும்' போக்கிலேயே அலுவல் நடைபெற்றுக்கொண்டு வருவதனை நான் அறிவேன், நாட்டிலே ஒரு நெருக்கடிநிலை மூண்டு விட்டிருப்பதுபற்றிய எண்ணமே அந்த இடத்தில் உள்ளவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பழைய மந்தத்தனம், அக்கறையற்ற போக்குத்தான் இப்போதும் இருக்கிறது

என்று கூறியிருக்கிறார். ஆனால் காங்கிரஸ் கட்சியை நடத்திச் செல்வோர் இதுகுறித்துக் கவலைப்படுவதாகவே தோன்றவில்லை. காரணம், எத்தனை பாட்டன் டாங்குகளை நொறுக்கினார்கள் தெரியுமா! எத்தனை விமானங்களை வீழ்த்தினார்கள் தெரியுமா! பாகிஸ்தானியப்படை எப்படி மிரண்டு ஓடிற்று தெரியுமா! — என்று பேசினால், எழுச்சி பெற்ற மக்கள் அகமகிழ்கிறார்கள், வாழ்த்துகிறார்கள்; அந்தச் சமயமாகப் பார்த்து, 'அப்படிப்பட்ட வீரவெற்றிகள் பெற்றிருக்கிறோம், ஆகவே உமது ஓட்டுகளை எமக்கே அளித்திடவேண்டும் என்று கேட்டுப் பெறலாம் என்று நினைக்கிறார்கள் சித்தத்தில் மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், பிரச்சினைகளைப் பற்றிய சிந்தனைத்திறம் குறைந்து காணப்படும் அல்லவா அதனை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டு வருவோம் என்றும் பேசிவருகின்றனர்; இந்த நேரத்தில் இவர்கள் தீட்டிடும் திட்டங்களிலே உள்ள குறைபாடுகளைக் குறித்தும், அவைகளை நிறைவேற்றுவதிலே உள்ள திறமைக் குறைவு பற்றியும், முளைத்து நெளியும் ஊழல் குறித்தும் ஒருவரும்



ஒரு பேச்சும் பேசமாட்டார்கள் என்ற எண்ணத்துடன். பேசுவது இல்லைதான், எந்தக் கட்சியும், அதிக அளவில். காரணம் என்ன? குற்றங் குறைகள் இல்லை என்பதாலே அல்ல, அவைகளைக் கூறிக் கொண்டிருக்க இதுவா நேரம் என்றல்லவா ஆட்சியில் அமர்ந்தவர்கள் கேட்பார்கள்; அதனால்.

> நெருக்கடி நிலை பற்றிய கவலையற்று, கிண்டி குதிரைப் பந்தயத்தைக்கூட நடத்த விட்டிருக்கிறார்கள்; ஆனால், ஆட்சியினரின் திட்டங்களிலே உள்ள குறைபாடுகளைச் சொன்னால், இந்தச் சமயத்திலா இதனை எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது என்று கேட்கிறார்கள்.

திட்டங்கள் இத்தனை போட்டும், போதுமான அளவிலே பொருத்தமான பலனை ஏன் மக்கள் பெற்றிட இயலவில்லை என்ற கேள்விக்கு, யார் பதில் கூறுகிறார்கள்? நெருக்கடி நீங்கவில்லை! என்பதன்றி வேறு பேச்சு வேண்டாம் என்றல்லவா கருதிவிடுகிறார்கள்! ரஷ்யாவிலே தாம் கண்ட பெருவியப்பளிக்கத்தக்க முன்னேற்றத்தைப் பற்றி கஜேந்திர கட்கர் குறிப்பிட்டுப் பேசுகையில்,

> அங்கு யாரைக் கண்டு பேசினாலும் சரி, நீதிபதியானாலும் வழக்கறிஞரானாலும், ஆலைத் தொழிலாளியானாலும், அவர்கள் முகத்தில் ஒரு வெற்றிக்களை இருந்திடக் காண்கிறேன். இந்த முன்னேற்றத்தில் நம் பங்கு இருக்கிறது என்ற பெருமிதம் கொண்டுள்ளனர். இது இந்நாட்டுக்குத் தேவை. இலட்சோப இலட்சம் மக்களும் உணர்ந்து உவகை கொண்டு பங்கேற்றுப் பலன் பெற்றுப் பெருமிதம் கொள்ளத்தக்க விதமாக முன்னேற்றத்துக்கான முயற்சிகள் அமைந்திட வேண்டும் என்று கூறினார்.

அப்படித்தான் அனைவரும் அகமகிழ்ச்சியுடன், ஆர்வத்துடன் தத்தமது பங்கினைச் செலுததி வருகின்றனர் என்று கூறிடுவர், ஒளிவிடு கண் பெற்ற காங்கிரஸ் நண்பர்.

பங்கினைச் செலுத்துவது பகைவனை வீழ்த்திட எடுக்கப்படும் முயற்சிகளில். நாட்டை வளப்படுத்த என்ற பெயரால் நடத்தப்பட்டு வரும் காரியங்களிலே பங்கு கிடைப்பதில்லை; தரப்படுவதில்லை.

திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால், வயலிலே வேலை செய்திடுபவனும், ஆலையிலே பாடுபடுபவனும், திட்டத்தின் பலன் தமக்கும்தான் என்ற நம்பிக்கை பெற்றிடத்தக்க நிலை எழவேண்டும் என்று முன்பு, அமைச்சர் சஞ்சீவய்யா குறிப்பிட்டார்.

இப்போது இரண்டு கிழமைகளுக்கு முன்பு சர்க்கார் துறையிலே செயல்பட்டு வரும் தொழில் அமைப்புகளில் நிர்வாக அமைப்பிலே பங்குபெறும் திட்டம் தனக்கு மகிழ்ச்சி தரத்தக்க முறையிலே நடைபெறவில்லை என்று சஞ்சீவய்யா வருத்தம் தோய்ந்த குரலில் பேசினார்.

முதலாளிகளிடம் சென்று, தொழிலாளர்களுக்கு உரிய பங்கு கிடைத்திடச் செய்திடுக என்று நான் கூறும்போது, அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள், சர்க்காரிடம் உள்ள தொழில் அமைப்புகளிலே இந்த யோசனை எந்த அளவு ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது, சொல்லுங்கள் கேட்போம் என்கிறார்கள்; என்னால் தகுந்த பதில் கூற முடியவில்லையே என்று அமைச்சர் சஞ்சீவய்யா ஏக்கத்துடன் பேசியிருக்கிறார், கடந்த மாதம்.

வினோபா பாவே ஏக்கக் குரலிலே அல்ல, சிறிதளவு கோபக் குரலிலேயே பேசுகிறார் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறமுறை குறித்து.

பீகார் மாநிலத்து சகார்சாவில் அக்டோபர் 30ம் நாள் ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றி அளிக்காத காரணம் என்ன என்பதுபற்றி வினோபா தமது கருத்தைத் தெரிவித்திருக்கிறார். கட்சி மாச்சரியத்தால் திட்டங்களைப் பற்றிக் கண்டபடி உளறுகிறார்கள் என்று காங்கிரசின் பெரிய தலைவர்கள் முழக்கம் எழுப்பிக் காட்டுகிறார்களே, அவர்கள் வினோபாவின் கண்டனத்தைக் கேட்டு, வாயடைத்துப் போவதுமட்டுமல்ல, சமயத்தைத் தேடிப் பெற்றுக்கொண்டு அவருடைய காலைத் தொட்டுக் கண்களிலே ஒற்றிக்கொண்டு, மகாத்மாவுக்குப் பிறகு எமக்குத் தாங்களே வழிகாட்டி என்று புகழாரம் சூட்டிவிட்டு, பத்திரிகை நிருபர்களிடம் வினோபாவிடம் மனம்விட்டுப் பேசியதுபற்றிய சேதியையும் இலேசான ஒரு புன்னகையையும் வீசிவிட்டுப் படகு மோட்டார்



ஏறிப் பறந்துவிடுகிறார்கள். மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளார் வினோபா.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களுடைய ஒத்துழைப்புக்கிடைக்காத காரணம் என்ன? திட்டம் தீட்டுபவர்கள், மக்களுக்குத் தமக்கு ஏற்ற திட்டம் எது என்று கண்டறியத் தெரியாது என்ற எண்ணத்தில் மக்களை மாடுகள் என்று எண்ணிக்கொண்டு நடத்திவருவதுதான், மக்களை மக்களாகவே கருதுவதில்லை. எங்கோ மேலே அமர்ந்துகொண்டு திட்டம் தீட்டி விடுகிறார்கள்!

இந்தக் கடுமையான கண்டனம் காங்கிரஸ் கட்சியிடம் உள்ள பதவியைப் பறித்துக் கொள்ளவேண்டும் என்ற பதைப்பின் விளைவு அல்ல. மக்களின் பேராதரவை, ஆசை காட்டியும் நம்பிக்கை ஊட்டியும் பெற்றுக் கொண்ட காங்கிரஸ் கட்சி, மக்களை மாக்களாகக் கருதி நடத்துகிறதே என்பதனை எண்ணிடும்போது, ஒரு உத்தமர் உள்ளம் கொதித்துக் கூறிடும் உண்மை உரை.

திட்டத்தால், ஏழையும் நாசமாகிறான், பணக்காரனும் பாழாகிறான். ஒரு சிலரைத்தான் திட்டம் பணம் படைத்தோன் ஆக்கிவைக்கிறது. அதனால் அவன் உள்ளம் காலிப் பாண்டமாகி விடுகிறது. போக போக்கியத்தில் புரளும்படி அவனைத் தூண்டுகிறது. ஏழை மக்களோ, தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உண்மைக்கு மாறாக வினோபா பேசமாட்டார், ஆனாலும் சிறிதளவு மிகைபடப் பேசிவிட்டிருப்பாரோ என்று சந்தேகப்படுபவர்கள் இருந்திடின், அவர்களின் ஐயப்பாட்டினை இந்தச் செய்தி போக்கிவிடும்:

அகோலா
நவம்பர் 2

மராட்டியத்தின் கிராம முன்னேற்ற அமைச்சர் டாக்டர் G.B. கேட்கார், நிம்பா என்ற கிராமத்திற்கு விஜயம் செய்தபோது, ஆண் பெண்கள் அடங்கிய ஐந்நூறு பேர் கொண்ட கூட்டம் அவருடைய

மோட்டாரைச் சுற்றி வளைத்துக்கொண்டு உணவு கொடு! வேலை கொடு! என்று முழக்கமிட்டது. பக்கத்துக் கிராமமான ஊரலில் உள்ள சர்க்கார் தானியக்கிடங்கிலிருந்து 20 மூட்டை சோளம் அனுப்பி வைப்பதாகக் கூறிவிட்டு அமைச்சர் சென்றார்.

தங்கள் கிராமத்திலிருந்து சோள மூட்டைகளை எடுத்துச் செல்லக்கூடாது என்று ஊரல் கிராமத்தவரில் சிலர் தடுத்திட முயன்றதாகத் தெரிகிறது.

மிகச் சிறிய செய்தி இது என்று தள்ளிவிடத் தோன்றினால், நாட்டிலே ஏற்பட்டுள்ள உணவு நிலை நெருக்கடியைப் பார்க்கும்போது, அமெரிக்காவிடம் பி. எல், 480 திட்டப்படி உணவுப் பொருள் பெற்றாகவேண்டும் என்று உணவு அமைச்சர் சுப்பிரமணியம் உருக்கமுடன் பேசியதை இந்தச் செய்தியுடன் இணைத்துக் கொள்ளட்டும்!

> கொடு! கொடு! என்று அமைச்சர்கள் கேட்கிறீர்கள்; நாங்களும் கொடுத்தபடி இருக்கிறோம்; ஆனால் உங்கள் நாட்டிலே விவசாய வளர்ச்சியைப் போதுமான அளவு வெற்றிகரமாக நடத்திக்காட்டத் தவறியபடி இருக்கிறீர்களே! எத்தனை ,காலத்துக்குக் கொடுத்துக்கொண்டு இருப்பது! எவ்வளவு என்று கொடுப்பது? நீங்கள் அங்கே உணவு உற்பத்தியைப் பெருக்கிட என்னதான் திட்டமிட்டிருக்கிறீர்கள்? அதனை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள்? விவரம் கூறுங்கள்! கணக்குக் காட்டுங்கள். உதவிசெய்தால் அதனால் உருப்படியான பலன் கிடைக்கவேண்டுமே

என்று அமெரிக்கா கேட்கிறது.எதிர்க்கட்சிகள் இதுபோல, விவரம் தரச்சொல்லிக் கேட்டால், கணக்குக் காட்டச் சொன்னால், ''எம்மிடமா கணக்குக்கேட்கிறீர்கள்? அத்தனை ஆணவமா? இரு! இரு! பொறு! பொறு! உன் கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்று கொதித்துக் கூறுவார்கள், கேட்பது சோறு தரும் சொர்ணப்பனல்லவா!கோபித்துக்கொள்ள முடிகிறதா? விவரமா? அனுப்பி இருக்கிறேன்! கணக்கா? அனுப்பி வைக்கிறேன்! என்று தான், பணிவாக, குழைவாகப் பேச முடிகிறது, காங்கிரஸ் அமைச்சரால்!!



பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதைபதைத்துக் கேட்கிறார், அமைச்சர் சுப்பிரமணியத்திடம், ''ஒரு சுதந்திர நாட்டிடம் மற்றோர் நாடு இப்படித் தலையிட்டு விவரம் கேட்கலாமா?'' என்று. கேட்டால், என்ன தவறு! கப்பல் கப்பலாகக் கோதுமை தருகிறான், நாமும் பெறுகிறோம்; மேலும் கேட்டபடி இருக்கிறோம், நம்முடைய நிலை அவ்விதம் இருக்கிறது. கொடுப்பவன், கணக்குக் கேட்கிறான், என்ன தவறு? என்ற கருத்துப்படஅமைச்சர் சாந்தம் ஒழுகிடும் விதமாகப் பேசுகிறார்.

> உணவு முனை, தொழிலில் நிம்மதி ஏற்படுத்தும் துறை, இல்லாமையை ஒழித்திடும் துறை எனும் எதிலேயும் வெற்றி பெற்றிடாதவர்கள் இன்று, போர்முனையில் வீரர்கள் ஈட்டிய வெற்றியாலே, மக்கள் பெருமையும் பூரிப்பும் அடைந்து இருந்திடக் கண்டு, காங்கிரஸ் ஆட்சியின் மீது உள்ள பரிவுக்கு இது சான்று என்று கருதிக்கொள்கிறார்கள்!

உண்மையை உள்ளந்திறந்து பேசியிருக்கிறார் வினோபா, மக்களை மாக்களாக நடத்துகிறார்கள் என்று. இது போதாதா இவர்களின் ஆட்சித் திறமை குறித்து நாடு அறிந்துகொள்ள?

அண்ணன்,

*14—11—'65*

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 41

# கிழக்கு வெளுத்திடும் வேளை

அறிவொளி பரவப் பழமைப் பனி கலையும்!

கொள்ளையடித்த பணத்தில் கொண்டாட்டம்!

ஆண்டவன் அவராக விரும்பும்போதே வரவேண்டும்!

கடவுள் கொள்கையிலே மறுமலர்ச்சி!

யூத இனம் இன்று பழிபோக்கப் பெற்ற இனம்!

தம்பி,

மூன்று கிழமைகளுக்கு முன்பு, பழனியில் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரியில் பேசும் வாய்ப்புக் கிடைத்தபோது, மாணவரொருவர்,

நான் நினைத்தபோதே நீ வரவேண்டும், முருகா!

என்றோர் 'பிரார்த்தனை'ப் பாடலைப் பாடினார். இசை இனிமையாக இருந்தது; பாடல் மட்டுமல்ல, கல்லூரியின் பெயரே எனக்கு இனிமையாகத்தான் இருந்தது; பழனி ஆலய நிதியின் துணையால் அமைக்கப் பட்டுள்ள கல்லூரி. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கிறித்தவ சமயத்தார் பெரும் பொருள் செலவிட்டு இங்குக் கல்லூரிகளும் மருத்துவ மனைகளும் நடாத்தி, தமது மார்க்கம் அறிவையும அன்பையும் அடிப்படையாகக் கொண்டது என்பதனை விளக்கிக் காட்டுகின்றனரே அது



போல, தமிழகத்துத் திருக்கோயில்களின் தொன்மை குறித்தும் மகிமை பற்றியும், மானியம் குறித்தும் மாநிதி குறித்தும், தேர்த் திருவிழா பற்றியும் தேவாலயக் கட்டட நேர்த்தி பற்றியும் எடுத்துப் பேசிப் பெருமிதம் அடைப வர்கள், அன்பு அரசோச்சிட, அறிவு பெருகிட, ஏன் ஆலயத்தில் முடங்கிக் கிடக்கும் செல்வத்தையும், வருவாயையும் அறிவாலயங்களான கல்லூரிகளும் அன்பாலயங்களான மருத்துவமனைகளும் அமைத்திடப் பயன் படுத்தக் கூடாது! அமைக்கப்படும் கல்விக்கூடங்களுக்கு, 'தலத்தி'லுள்ள தேவனின் பெயரையே சூட்டிடலாமே—பழனியில் பழனி ஆண்டவர் பெயராலேயே ஒரு கல்லூரி அமைத்திடலாமே! ஏனோ இந்த எண்ணம் அவர்கட்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. திரும்பத் திரும்ப வெள்ளி இடபவாகனமும், தங்க மயில்வாகனமும், புதிய நீராழி மண்டபமும் கோபுரத்துக்குப் பொற்கலசமும் அமைத்துத் தமது பக்தியினைக் காட்டியபடி உள்ளனரே! ஏன் ஆலயங்களில் முடங்கிக் கிடக்கும் பொருளைக் 'கோயிற் பெருச்சாளிகள்' தின்று கொழுத்திடத் துணை நிற்கின்றனர்; இதுவா நெறி வளர்த்திடும் முறை, இஃதோ மனத்தூய்மை தந்திடும் மார்க்கம் என்றெல்லாம பேசி வந்த நினைவு, அன்று பழனி தேவஸ்தானம் நடாத்திடும் பழனி ஆண்டவர் கலைக்கல்லூரிக்குள் நுழைந்தபோது என் மனத்திலே எழுந்து தவழ்ந்தது.

பழனியில், பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி! எத்தனை பெரிய மாறுதல்! எவ்வளவு ஏற்றமிகு மாறுதல்! தூற்றலைத் தாங்கிக்கொண்டது, பலன் தராமலா போய் விட்டது?

ஆலயத்தைக் காட்டிலும் வேறோர் அறிவாலயம் உண்டோ, ஆலயப் பணத்தைக் கொண்டு அறிவாலயம் அமைக்கச் சொல்கிறானே இந்த அறிவிலி என்று ஆத்திரம் மேலிட்டு ஆர்ப்பரித்தவர்களும்,

ஆலயம் ஆண்டவன் இருப்பிடம்; அருளைப் பெற்றிட வழிகாட்டும் புனித இடம்; இங்கு உள்ள செல்வம், கிடைத்திடும் வருவாய், ஆண்டவனுக்கான 'பூஜா' காரியங்கட்கும், 'பக்தர்கட்கான' வசதிகட்கும் செலவிடப்பட வேண்டுமேயன்றி, வேறு காரியத்துக்கு—கல்விக்குக்கூடச் செலவிடுவது பாபம் என்று பதறிக் கூறியவர்களும்,

ஆதி காலம்தொட்டு இருந்து வருவதும், ஆகம விதிப்படி அமைக்கப்பட்டதுமான ஆலயத்தில் புதுமுறை புகுத்திட வேண்டுமாமே! இது புரட்சியாமே! பேசுகிறான், கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! சித்தர்களும் ஜீவன் முக்தர்களும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதரித்த திருநாடு இது. அவர்களுக்குத் தோன்றாதது, இந்த அற நெறி அறியாதானுக்குத் தோன்றிவிட்டதோ? ஆலயப் பாதுகாப்புக்கும் அம்மையுடன் ஐயன் பவனி வந்திட ஆகிடும் செலவினுக்கும், அபிஷேக ஆராதனைக்கும் செலவிடவன்றோ பக்தர்கள் காணிக்கை தந்தனர், மானியங்கள் அளித்தனர்; அந்தப் பணத்தை வேறு காரியத்துக்குச் செலவிடுவதா! தகுமா! தர்மம் செய்தவர்களின் மனம் என்ன பாடுபடும்! இது களவு! மோசடி! நாசத்திட்டம்! நாத்திகத்திட்டம்!! என்றெல்லாம் பேசி ஏசியோரும், அன்று என் மனக்கண்முன் தோன்றினர்; எதிரிலேயோ நூற்றுக்கணக்கான இளைஞர்கள், ஒளிவிடு விழியும் புன்னகை சிந்திடும் இதழும், அழகளிக்க வீற்றிருந்தனர். கல்லூரி நடைபெற்று வரும் முறைபற்றி, நடத்திச் செல்வோர் மகிழ்ச்சியுடன் என்னிடம் கூறினர். என் செவியில் அந்தப் பேச்சு விழவில்லை! பாவி! பழிகாரன்! நாத்திகன்! என்றெல்லாம் முன்பு கிளம்பிற்றே 'தூற்றல்'-அந்தச் சத்தம்தான் நிறைந்திருந்தது.

எப்படியோ ஒன்று, பழைய முறைகளை இனியும் விடாப்பிடியாகக் கொண்டிருக்கக்கூடாது, பலன் இல்லை, சமூகம் தாங்கிக் கொள்ளாது; அறிவுக் கதிரொளி பரவப் பரவ பழைமை மூடுபனி கலையத்தான் செய்யும் என்ற எண்ணம் வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறது. பழைய முறைகளுக்கும், பழைய கோட்பாடுகளுக்கும் புதிய விளக்கங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்திடும் தேவை வலுவடைந்துவிட்டிருக்கிறது. சொல்கிறோம், கேட்டுக் கொள்கிறார்கள் என்று இறுமாந்து கிடந்த நிலை குலைந்து போய்விட்டது; கேட்பவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதமாகச் சொல்லவேண்டுமே என்ற எண்ணம் மேலோங்கி விட்டிருக்கிறது.

வெண்ணீறு அணிந்ததென்ன

வேலைப் பிடித்த தென்ன?

என்ற பாடலும் ஒலிக்கிறது; கிரேக்க சாம்ராஜ்யம், முக்கோணத்தின் இலக்கணம், தக்காணத்தின் தனிவளம்,



வானவெளிப் பயணம், புதுமுறைப் பாசனம் போன்றவை பற்றிய கருத்தொலியும் பழனியில் பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி மூலம் கேட்டபடி இருக்கிறது.

கல்லூரி அமைத்தாலும் மருத்துவமனை அமைத்தாலும் 'கந்தன்' பெருமை பற்றிக் கசிந்து உருகும் நிலை மட்டும் மாறாது என்பதனைக் காட்டவோ என்னவோ, 'முருகனை' வழிபடும் பாடலைப் பாடினார், மாணவர். இனிமையாக இருந்தது என்றேன், விந்தையாகவும் இருந்தது.

முருகா! நீ வரவேண்டும்! என்ற முறையிலே மட்டும் பாடல் அமைந்திருந்தால், வியப்புத் தோன்றி இருந்திருக்காது.

அதே கருத்துள்ள பாடலை அதற்கு முன்பு ஒருமுறை கூடக் கேட்டதாக நினைவு.

என் கவனத்தை ஈர்த்ததும் விந்தையாகத் தென்பட்டதுமான பகுதி,

மயில்மீது வா!

மங்கையை விட்டு வா!

என்பன போன்ற பகுதிகள் அல்ல.

நான் நினைத்தபோதே, நீ வா!

என்ற கருத்து அமைந்த பகுதி.

பாடலாசிரியர் என்ன எண்ணத்தினால் அந்தக் கருத்துப்படப் பாடலை இயற்றினாரோ, நானறியேன்; ஆனால், பலர், ஆண்டவனை வேண்டிக் கொள்வதும், வர வேண்டும் என்று இறைஞ்சுவதும்,

தாங்கள் நினைக்கும்போது

என்று இருப்பதுதான் எனக்கு விந்தையாகத் தென்பட்டது. நினைத்தபோதே—என்று கூறியது உடனே வா! தாமதிக்காமல் வா! என்ற பொருளில் என்பது புரிகிறது. ஆனால், பலர் தாங்கள் அழைக்கும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்றே பொருள் கொண்டவர்கள் போலச் செயலாற்றி வருகின்றனர்.

எப்போது, ஆண்டவன் வர வேண்டும் என்று விரும்பு வார்கள் பெரும்பாலும்?

பெரும்பான்மையினரான மக்கள், அண்டசரா சரத்தை ஆக்கி, காத்து, அழித்திடும் வல்லமை பெற்ற ஆண்டவன் எப்படி இருக்கிறார் என்று பார்த்திடும் ஆவலினால் அல்ல, ஆண்டவனை வரவேண்டும் என்று அழைப்பது அவர் வந்தாரானால், தனக்கு உள்ள அல்லலைப் போக்குவார், இன்னலை நீக்குவார், இதம் அளிப்பார், வரம் அருளுவார் என்பதால், இல்லை என்று கூறிட மாட்டார்கள் நம்மையொத்த சாமான்யர்கள். பெரியவர்கள் தம்பி! மறுத்துப் பேசுவார்கள்! ஆண்டவனைக் காண எண்ணுவது, அது வேண்டும் இது வேண்டும் என்ற அற்ப ஆசைக்காக அல்ல, வரம் கேட்டுப் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துக்காக அல்ல! ஜென்மம் சாபல்யம் பெற! பிறவிப் பிணி ஒழிந்திட! பேரின்பத்தில் திளைத்திட!! அவன் திருவடி நீழலில் சேர்ந்திட!! என்றெல்லாம் கூறுவார்கள். அந்தக் கோடி சூரியப் பிரகாசத்தைக் கண்டதும், ஏ! அறிவிலி! உனக்கு மாடுமனை வேண்டும், மன்னனாக வேண்டும், மகன் பிறந்திட வேண்டும் என்ற அற்ப எண்ணங்களா தோன்றிடும்! ஐயனைக் கண்ட அந்தக் கணமே, ஆசைகள் அற்றுப் போகும், பாசங்கள் மடிந்து போகும், பார்த்திடுவாய், பரவெளியில் கலந்திடுவாய், நான்—எனது எனும் அகங்காரம் அழிந்துபடும்! அவனே எல்லாம்! என்ற மெய்ஞ்ஞானம் உதித்துவிடும்! மதியிலி! அவனைக் கண்டான பிறகு 'நீ' என்று தனியான நிலையும் நிலைக்குமோ! என்று பேசி மெய் சிலிர்க்கச் செய்திடும் மேதைகள் உள்ளனர், இப்போதுகூட! நான், தம்பி! சராசரிகளைப் பற்றிப் பேசுகிறேன்; 'நாம் சொல்லுவது எல்லாம் சரி!' என்று பேசிடும் உபதேசிகளைப் பற்றி அல்ல.

ஆண்டவனே வரவேண்டும்! என்று நெஞ்சு நெக்குருக அழைத்திடுபவர்கள், தம்மை வாட்டி வதைத்திடும் இன்னலைப் போக்குவார் என்ற நம்பிக்கையுடனும், போக்க வேண்டும் என்ற முறையீட்டுடனும்தான், அழைக்கிறார்கள்.

இன்னல் வந்துற்றபோது இறைவனை அழைக்கிறார்கள், இன்னலைத் துடைத்திடுக என்று துதிபாடுகிறார்கள்,



ஆண்டவனே! தீராத நோயால் தாக்குண்டு தவிக்கிறேன். உட்கொள்ளாத மருந்தில்லை! பார்க்காத மருத்துவர் இல்லை, எனக்கு வந்துற்ற கொடுநோயோ போவதாகத் தெரியவில்லை! உம்மைத்தான் நம்பி அழைக்கிறேன்! என்றோ,

உழைத்து உழைத்து உருக்குலைந்து போகிறேன், வாழ வழி இல்லை! நடைப்பிணமாகிக் கிடக்கிறேன், காத்திடுவார் இல்லை! ஐயனே! உன்னைத்தான் நம்பி அழைக்கிறேன், என் கஷ்டத்தைத் துடைத்திடு என்றோ,

உன் அருளால் ஆண்டவனே எல்லாம் இருக்கிறது எனக்கு! மாடமாளிகை இருக்கிறது! மணி விளக்கென ஒளிவிடும் கண்ணினாள் எனக்கு மனையாட்டியாக வாய்த்து இருக்கிறாள்! ஆனால், மகேசா! மழலைச் செல்வத்தை மட்டும் நான் பெற்றேனில்லை. பாவி நான் என் செய்வேன்? உம்மைத்தான் நம்பித் தொழுது நிற்கின்றேன்! உமையொரு பாகா? வந்திடு! எனக்கோர் வரமது தந்திடு! மகனொருவனை ஈந்திடு என்றோ, இது போன்ற ஏதேனும் ஓர் 'வரம்' பெற்றிடவே ஆண்டவனை நாடுவர் தேடுவர் இதுவே 'வாடிக்கை'யாக, நடைமுறையாக இருந்து வருவதனை எவரும் மறுத்திட இயலாது தத்துவ ஏடுகளில் உள்ளவை இந்த வாடிக்கைக்கு முற்றிலும் மாறானதாக இருக்கக்கூடும். நான் தத்துவ விசாரணையில் ஈடுபடவில்லை, நடைமுறையில் உள்ளவற்றினை எடுத்துக் காட்டும் பணியினில் ஈடுபட்டிருக்கிறேன். எனவே, அதனைக் குறித்துக் கூறுகிறேன். தத்துவங்களைத் தாளச் சத்தத்துடன் பேசி மகிழ்விப்போர், வேறு உளர்,

இன்னலைத் துடைத்திடும்படி இறைவனை வேண்டி அழைப்பது மட்டுமல்ல, ஏதேனும் இக்கட்டிலே சிக்கிக் கொள்கிற போதும், இனி அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்ற திகைப்பு மேலிடுகிறபோதும் தன்னைக் காப்பாற்றிட ஆண்டவனை அழைப்பவர்கள் நிரம்ப உண்டு.

தான் நியாயமாக—நேர்மையாக நடந்து கொண்ட போதிலும், பிறரால், சூழ்நிலையால், இன்னல் ஏற்பட்டு, அதன் காரணமாகப் பதறி ஆண்டவனை அழைத்திடுவார் உண்டு. அவர்கள் மட்டும் அல்ல! நீதிகொன்று, நேர்மை நெறி நடவாது தன் சுகத்துக்காகப் பிறரை வாட்டிடும்

போக்கிலே நடந்துகொண்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு தத்தளிக்கும்போது அதிலிருந்து தன்னை விடுவிக்கும்படி வேண்டிக் கொள்வாரும் உளர்.

இவர்போன்றார், பொதுவாக இன்னலைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்குடன் உள்ளவர். அவர்கள் ஆண்டவனை எப்போது அழைத்திடுவர்? தங்களுக்கு ஆண்டவன் உதவி தேவைப்படும்போது!!

எனக்கு இதிலே விந்தையாகப்பட்டது, இன்னல் வந்துற்றபோது இறைவனைத் தேடும் வாடிக்கை இருக்கிறதே என்பது அல்ல;

ஆண்டவன், தன்னை நோக்கி வந்திட, நேரம் குறித்துக் கூறும் பகுதிதான், விந்தையாக இருக்கிறது. சிறிதளவு கோபம்கூட எழுகிறது,

ஆண்டவன், வந்தால்போதும், எந்த நேரமாக இருந்தால் என்ன, அவருக்கு உகந்த நேரத்தில் வரட்டும், எப்போது அவருக்குக் கருணைபிறக்கிறதோ அப்போது வரட்டும், அவரைக் காணும் அளவு எப்போது தூய்மை துளிர்விடுகிறதோ அப்போது வரட்டும் என்று கூறிடாமல், நான் நினைத்தபோது நீ வரவேண்டும் என்று கூறுவது பக்தியாகத் தோன்றவில்லை, ஏதோ ஓர் எச்சரிக்கை விடுவது போல இருக்கிறதல்லவா! ஆண்டவனே! நீ சமயம் தெரியாமல், சந்தர்ப்பம் தெரியாமல், உனக்காகத் தோன்றிய நேரத்தில் வந்துவிடாதே! நான் என்ன அலுவலிலே ஈடுபட்டிருப்பேனோ! என்ன வேலையிலே மூழ்கிப் கிடப்பேனோ! என்பது பற்றிய எண்ணம் கொள்ளாமல், வந்துவிடாதே, நான் வேண்டும்போது வந்திடு! என்றல்லவா, அழைப்பதுபோல இருக்கிறது, ஆண்டவனை!!

காலையிலே பன்னிரெண்டு மணிவரையில் அலுவலகத்தில் கடுமையான வேலை! பிறகு சாப்பிடும் நேரம்! மூன்று மணி வரையில் ஓய்வு! நான்கு மணிக்கு வெளியூர் புறப்படவேண்டும்! ஆகவே, மூன்று மணிக்குமேல் நான்கு மணிக்குள் வந்து என்னைக் காணவும் என்று கடிதம் அனுப்புவது போலவா, கடவுளுக்குக் காணும் நேரம் குறித்து நாம் தெரிவிப்பது! கண்டநேரத்தில் வந்துவிடாதே! நான் கூப்பிடும்போது வந்தால் போதும் என்ற முறையிலா! நினைக்கும்போதே தம்பி! எனக்குச் சிரிப்பாய் வருகிறது. நான் அறிந்த வரையில், பலர், ஆண்ட-



வன் எந்த நேரத்திலும் வரலாம், வந்தால் போதும் என்ற அச்சமற்ற நிலையில் இல்லை,

சத்தியப் பிரமாணமாகச் சொல்கிறேன், சரக்கு அறுபத்து ஆறுக்கு வாங்கியது. வழிச்செலவு, வட்டி, கடைச்செலவு இவைமட்டும் நாலு ஆகுது. நீங்களாக இஷ்டப்பட்டு எனக்கு ஏதாகிலும் இலாபம் போட்டுக் கொடுத்தால் போதும். பழனியாண்டவர் படத்துக்குப் பக்கத்திலே இருந்துகொண்டு சொல்கிறேன், நம்பினாலும் சரி, இல்லை என்றாலும் சரி, என்று நாற்பத்துஎட்டு ரூபாய்க்கு வாங்கிய சரக்குபற்றி 'புளுகு' பேசி இலாபவேட்டை ஆடும் பெரிய புள்ளி எப்போது வேண்டுமானாலும் ஆண்டவன் வரட்டும் என்றா எண்ணுவார்! வந்தாரானால் நிலைமை என்ன ஆகும்?

அட பாதகா! பாலாபிஷேகமும் பன்னீர் அபிஷேகமும், பல்லக்கு உற்சவமும் நீ நடத்துவது, இப்படி அண்டப் புளுகு பேசி அடிக்கிற கொள்ளைப் பணத்தைக் கொண்டு தானா? எத்தனை நெஞ்சழுத்தத்துடன், என்மீது ஆணையிட்டு ஏமாற்றப் பார்க்கிறாய்! அறுபத்து ஆறு கொடுத்தா வாங்கினாய்? சொல்லு! என்னைப் பார்த்துச் சொல்லு!! ஆறுமுகனே! பன்னிரு தோளா! என்றெல்லாம் இந்தப் பொய் உமிழும் வாயினால் பஜிக்கிறாயே, எவ்வளவு துணிவு உனக்கு!—என்று என்னென்ன கேட்பாரோ ஏதேது பேசுவாரோ என்ற கிலி அல்லவா அவனைப் பிடித்து ஆட்டும்!

நான் நினைக்கும்போது,

நீ வரவேண்டும்

என்ற முறை வைத்துக்கொண்டால், இந்த ஆபத்து வராதல்லவா!

'தொட்டேன்; கண்டேனா உடனே நீ தொட்டிலுக்குப் பாரம் சேர்த்துக்கொள்வாய் என்று. ஏதோ பணம் கொடு என்று கேள்; இயன்றதைத் தருகிறேன்; எங்காவது சென்றுவிடு; என் தலைக்குத் தீம்பு வைக்காதே! காலில் விழுந்தாலும் கண்ணீர் பொழிந்தாலும் கடுகளவு பயனும் ஏற்படாது. இவளை நான் கண்டதே இல்லை என்றுதான் சொல்லுவேன். ஆமாம்! ஊர்ப் பெரியவர்கள் நம்பு

மறுத்தால் கோயிலிலே கற்பூரம் கொளுத்தி அடித்துக் காட்டிக் கூடச் சத்தியம் செய்வேன். வேறே வழி' என்று காமுகன் உறுமிக் கொண்டிருக்கும்போது, எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்ற நிலையில் ஆண்டவன் அங்கு வந்துவிட்டால்?

ஆண்டவன் வந்துவிடக்கூடும் என்ற அச்சம் ஏற்படு மானால் அக்கிரமம் செய்திட நேரம் கிடைக்குமா! அக்கிரமம் செய்தாக வேண்டுமே, சுயநலம் ஆட்டிப் படைக்கிறதே!! அத்தகையவன் எப்படி ஆண்டவன் எந்த நேரத்தில் வந்தாலும் சரி, வந்தால் போதும் என்று கருது வான். நான் வேண்டும்போது வரவேண்டும்! — என்ற முறை இருந்தால்தான் நல்லது என்றுதான் எண்ணிக் கொள்வான்,

அந்தவிதமான நோக்கத்தின் அடிப்படையிலேதான் அப்படி ஒரு பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறவில்லை; நான் அற்பனுமல்ல, அடாவடிப் பேர்வழியு மல்ல; நான் சொல்லுவது, ஒருவர் வேண்டும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்ற முறை இருக்கக்கூடாது, ஆண்டவன் வரவேண்டிய அவசியம் ஏற்படும்போது, வரவேண்டும் என்ற முறை இருக்க வேண்டும் என்பது. நாம் அழைக்கும்போதுதான் அவர் வரவேண்டும் என்ற முறை இருப்பதைவிட, எந்த நேரத்திலும், அவர் விரும் பியபோது வருவார் என்று முறை இருந்தாலாவது ஒரு அச்ச உணர்ச்சி மனிதனைத் தவறு செய்யவிடாது தடுக்கக்கூடும்,

தீதான எண்ணங்கள் முளைத்திடும்போது, ஆகாத வழியினில் நடந்திட முனைந்திடும்போது அடுத்துக் கெடுத்தாலும் ஆதாயம் தேடிடலாம் என்ற கெடுமதி பிறந்திடும்போது, மற்றவர்க்குக் கொடுமை விளைவிக்கக் கிளம்பும்போது, நேரமறிந்து, நமது பிறவியிலே ஒருவன் தவறு இழைக்கப் போகிறான். அதனால் பலருக்கு கேடு விளைந்து சமூகம் பாழ்படப் போகிறது என்று அறிந்து, செல்வோம்! அவனைத் தடுத்திடுவோம்! என்று ஆண்டவன் வந்திடும் முறை மட்டும் இருந்திடின் தம்பி! இத்தனை கொடுமைகள், அநீதிகள் நெளிந்து கொண் டிருக்க முடியுமா!

ஆண்டவன் அத்தகைய நேரங்களில் வராதது மட்டு மல்ல, வரக்கூடாது என்று எண்ணுபவர்களாகவன்றோ,



கெடுமதியினர் உள்ளனர். இந்த நிலையில், ஒருவர் வேண் டும்போதுதான் ஆண்டவன் வரவேண்டும் என்ற ஒரு நிலையும் நிலைத்திடின், அது அக்கிரமக்காரர்களுக்கு அல்லவா கொண்டாட்டமாகிவிடும்!

இதனை எண்ணிடும்போதுதான், எனக்கு வியப்புடன் திகைப்பும் பிறந்தது. ஆண்டவனை வேண்டுபவர்கள், நான் அறிவை இழந்திடும் வேளையில். அறத்தை மறந் திடும் போதினில், அக்கிரமத்தைச் செய்ய முனைந்திடும் நேரத்தில், ஆண்டவனே! வந்திடு! என்னைத் தவறான பாதையிலே போகாதபடி தடுத்திடு! என்று இறைஞ்சிட வேண்டும். அல்லவா?

ஆனால், அந்த நிலை இருப்பதாகத் தெரியவில்லையே தம்பி! என்ன செய்வது!!

அக்கிரமம் நெளிகிறது; அநீதி தலைவிரித்தாடுகிறது, கொடுமை கொக்கரிக்கிறது; கொட்டு முழக்குடன் திருவிழாக்களும் நடக்கின்றன! சித்தம் உருகப் பாடிடு வோருக்கும் பஞ்சமில்லை, செய்த வினையெல்லாம் பொறுத்திடுவாய் சேவற்கொடியோனே! என்று பஜனை பாடிடுவோருக்கும் குறைவு இல்லை. களவும் நடந்தபடி இருக்கிறது, காவல் நிலையமும் புதிது புதிதாக அமை கிறது என்பதுபோலவேதான, கொடுமையும் இருக்கிறது கோயில்களில், பூஜைகளும் குறைவின்றி நடக்கின்றன என்று இருந்து வருவது!

கடவுளைப்பற்றிய எண்ணம், நம்பிக்கை, அதன் அடிப் படையில் எழும் வழிபாட்டு முறைகள், எதற்குப்பயன்பட? கொடுமைகளைத் தடுத்திட அல்லவோ! கொடுமை புரிந் டும் கெடுமதியைச் சுட்டுப் பொசுக்கிட அல்லவோ பயன் படவேண்டும்! பயன்படக் காண்கின்றோமா? இல்லையே! நீண்ட நெடுங்காலமாகவே, ஆண்டவன், ஒருவர் வேண்டும்போதுதான் வருவது என்ற முறைப்படிதான் நடந்துகொண்டு வருகிறாரோ? இல்லையென்றால், சூதும் சூழ்ச்சியும், வஞ்சகமும் கொடுமையும், பொய்யும்புரட்டும் கொலையும் களவும் இந்த அளவு தலைவிரித்து ஆடிடச் செய்திடும் கொடியவர்களின் கொட்டத்தை எப்போதோ அடக்கிவிட்டிருக்கக்கூடுமே. காணோமே!

மனம் உருகி, உள்ளன்புடன் நீ முறையிடும்போது ஆண்டவன் வந்திடுவார் என்ற பக்திப் போதனையைத்

தம்பி! ஆண்டவன் எப்போது வேண்டுமானாலும் வந்திடுவார், அவர் வரமாட்டார், காணமாட்டார் என்ற எண்ணத்தில். அக்கிரமம் செய்திடத் துணியாதே! பாதை தவறிடும்போது, ஆண்டவன் வந்து நிற்பார், கேட்பார்! —என்றவிதமாக 'பக்தி' போதனை வெற்றிகரமாக நடைபெற்றிருந்தால் கூட, உலகிலே இத்தனை அக்கிரமம் நெளிந்து கொண்டிருக்காது.

ஆண்டவனைப் பற்றிய எண்ணம், நம்பிக்கை, அறநெறி நடந்திட, அனைவரையும் அன்புடன் நடத்திட, சுயநலத்தை ஒழித்திடப் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் கொலையும் கொள்ளையும், காமச்சேட்டையும் பிறவும் பெருமளவு குறைந்திருக்குமே!

அதற்கு எங்கே பயன்படுத்தினார்கள் கடவுட் கொள்கையை, நம்பிக்கையை! கோயில்கள் கட்டவும் குளங்களை வெட்டவும், வேலிகள் விடவும் செல்வம் குவிக்கவும், பூஜைகள் நடத்தவும், அதற்கான படையினை வளர்க்கவும், அற்புதம் கூறவும் அதற்கான கதைகளைக் கட்டவும், மகிமை பேசவும் காணிக்கை கேட்கவுமான காரியங்களுக்குத்தானே பயன்படுத்தி வந்தனர்.

அதனால் வளர்ந்தது என்ன? ஒருபுறம் அக்கிரமக் காரனின் கொட்டம் அடங்காது நின்றது! மற்றோர்புறம் அர்ச்சனையும் ஆராதனையும் சிறப்புடன் நடைபெற்று வந்தன!

பலவற்றிலே மறுமலர்ச்சிக் கருத்துக்கள் தோன்றியது போலவே கடவுட் கொள்கையும் நம்பிக்கையும் எதற்குப் பயன்படுதல்வேண்டும், எம்முறையில் வடிவம் பெற வேண்டும் என்பதிலேயும், மறுமலர்ச்சி, புது எழுச்சி தோன்றிடத்தான்வேண்டும். தோன்றும் என்பதற்கான அறிகுறியில் ஒன்றாகவே கல்லூரியை நான் கருதிக் களிப்புறறேன்.

கடவுட் கொள்கையும் நம்பிக்கையும் மக்களை நல்ல நெறியிலே அழைத்துச் செல்வதற்காகத்தான் என்று கூறப்படுவது முழு உண்மையாக இருக்குமானால், நல்ல நெறிபற்றியும், அதன்படி ஒழுகிவருவதால் தனிமனிதனும் சமூகமும் அடைந்திடும் ஏற்றம் குறித்தும் வலியுறுத்தும் விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார்கள்; ஆனால். நடைபெற்றுக்கொண்டிருப்பது அஃது அல்ல,



வீண்விரயம், வெற்றொலி நிரம்பிய ஆரவாரம், விரும்பத்தகாத சடங்குகள், அவைகளுக்கு விசித்திரமான விளக்கங்கள் ஆகியனவற்றிலே மூழ்கிக்கிடக்கின்றனர். இதுஎற்றுக்கு என்றுகேட்டிடுவோர்கள் மீதோ, பாய்கின்றனர், காய்கின்றனர்; கடவுள்மீது நம்பிக்கை இல்லையோ என்றுகடாவுகின்றனர். கடவுள் நம்பிக்கைக்கும் கடவுள் பெயர் கூறி நடத்தப்பட்டுவரும் நானாவிதமான காரியங்களுக்கும் பொருத்தமோ பொருளோ இருப்பதாகக் கூற முடிகிறதா? மெய்ப்பிக்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. ஆனால், எத்தனை மோசமான மூடநம்பிக்கையாகு இருப்பினும், அதனை விடாப்பிடியாகக் கட்டிக்காத்து வருவதிலே எத்தனை தீவிரம் காட்டுகின்றனர்! என்னென்ன காரணங்களைக் கட்டிக் காட்டுகின்றனர்! மறுத்துப் பேசிடுவோர் மீது எத்தனை கடுங்கோபக் கணைகளை வீசுகின்றனர்! பழைய விளக்கங்கள் புதிய அறிவு வளர்ச்சி காரணமாகப் பொய்த்துப் போகக் காணும்போது, அலறித்துடிதுடித்து பதறிப் பதைபதைத்து, பொய்த்துப் போனதை விட்டுத் தொலைப்போமே என்ற துணிவு பெற்றிட முடியாமல் திகைத்து புதிய விளக்கம் ஏதேனும் கிடைத்திடாதா என்று தேடித் தேடி, ஏதேனும் ஒன்றினைக் கண்டதும், அதனைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டுவந்து காட்டி, இதோ விளக்கம்! எமது கோட்பாட்டினை மெய்ப்பிக்க வல்ல விளக்கம்! என்று புது உற்சாகத்துடன், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன் பேச முற்படுகின்றனர். இவை காட்டிடும் பாடம் யாதெனில், ஓர் புத்துணர்ச்சி பூத்துக் கொண்டு வருகிறது என்பதுதான்,

தம்பி! விடியும் வேளையில் கருக்கலும் கப்பிக் கொண்டிருக்கும், இமையைத் தூக்கமும் அழுத்திட முனைந்திடும், அதேபோது காரிருளைப்பிளந்துகொண்டு கதிரொளி கிளம்ப முற்படும், தூக்கத்தின் அழுத்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, விழிமலர் புத்தொளி கண்டிட முற்படும். மிகப் பலரின் மனம் இன்று அந்த 'விடியற் காலை' நிலையிலே உள்ளது, இமையை அழுத்திட முற்படும் தூக்கத்தைப்போல, மீண்டும் மூடுபனி படர்ந்திடச் செய்திடும் முயற்சியிலும் சிலர் வெகு மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வளவுக்கும் இடையிலே குறிப்பிடத்தக்க வெற்றிகள், புதுமைகள் கிடைத்தபடி உள்ளன. இங்கு மட்டுமல்ல, தம்பி! உலகெங்கணும்.

ஏசுபிரானைக் காட்டிக் கொடுத்தவன் ஜுடாஸ். அவன் ஒரு யூதன்; அதன்காரணமாக யூத இனமே சபிக்கப்பட்ட இனமாகக் கருதப்பட்டு, ஜுடாஸ் தேடிக்கொண்ட பாபம் யூத இனத்தின் மீது படர்ந்திருப்பதாகக் கருதப்பட்டு, யூத இனத்தவர்கள் மீது பகையும் வெறுப்பும் காட்டிடவும் கொட்டிடவுமான நிலை, தேவையற்றது, பொருளற்றது; புனிதமானது ஆகாது என்று கூறவும் அஞ்சினர் சென்ற ஆண்டு வரை — ஏன்! சென்ற திங்கள் வரையிலும் கூட அந்த எண்ணம் இருந்து வந்தது. ஜுடாசின் செயலுக்காக, ஒரு இனம் முழுவதும் பழியினை ஏற்க வேண்டுமா, பாபாத்மாக்களாகக் கருதப்பட வேண்டுமா என்று கேட்டிடத் துணிபவனை மன்னிக்க முடியாத குற்றம் செய்தவனாகவே அருளாலய அதிபர்கள் கருதி வந்தனர். யூத இனத்தின்மீது பகையும் வெறுப்பும் கப்பிக்கொண்டதற்கும், அதன் காரணமாகப் பல்வேறு நாடுகளில் மக்களும் அரசும் யூதர்களைக் கொடுமைக்கு ஆளாக்கி வந்ததற்கும். வேறு அரசியல், பொருளியல் காரணங்கள் இருந்தன என்றாலும் வெறுப்புக்கான அடிப்படைக் காரணம், யூத இனத்தவன் ஜுடாஸ், அவன் ஏசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்பதுதான், கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த இந்த அழுத்தமான நம்பிக்கையை, கத்தோலிக்க மார்க்கத்தின் இணையற்ற தலைவராம் போப்பாண்டவர் சென்ற மாதம் தேவையற்றது, என்று கூறி நீக்கிவிட்டார், குற்றம் இழைத்தவன் ஜுடாஸ்; கொடுமையை அனுபவிக்க வேண்டியவர்கள் யூத இனத்தவரோ, ஏன் இது என்று கேட்டு இனி யூத இனத்தைப் பகைத்திடும் செயல் ஆகாது என்று ஆணை பிறப்பித்து விட்டார். யூத இனம் பழி துடைக்கப்பட்ட, மன்னிப்புப் பெற்றுவிட்ட இனமாகிவிட்டது. இனி அந்த இனத்தவரின் வேறு நடவடிக்கைகள் அல்லது நிலைமைகள் காரணமாக, பகையும் வெறுப்பும் இங்குமங்குமாக எழலாம்—ஏற்கனவே அரபுக்கள் யூதர்களின் மீது பகைக்கி வருகின்றனர்—ஆனால், அந்தப் பகைக்கும் வெறுப்புக்கும் காரணம், ஜுடாஸ் ஏசுவைக் காட்டிக் கொடுத்ததை எண்ணி என்பதனை இனி வலியுறுத்திட இயலாது, கூடாது என்று ரோம் ஆணை பிறப்பித்துவிட்டது.

யூத இனத்தின்மீது கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக ஏற்றப்பட்டிருந்த பழி துடைக்கப்படும், பகை போக்கப்



படும் என்று யார் கருதிட முடிந்தது. ஆனால் நடைபெற்று விட்டிருக்கிறதே!! எத்தனை பெரிய மாறுதல்.

பழங்காலக் கோட்டைகள் காலத்தால் கலனாகி இருந்திடும் இடம் என்ற நிலையினை இழந்த பிறகும், நெடுங்காலம், கோட்டை வடிவத்துடன் நின்று காட்சி தரும்! இங்கொரு வெடிப்பு, அங்கொரு விரிசல், என்ற முறையில் தொடர்ந்து சேதம் வளர்ந்தபடி இருக்கும். சேதம் மிகுந்த நிலையிலேயும், அடியோடு வீழ்ந்திட மாட்டேன் என்று ஆர்ப்பரித்திடுவதுபோல நின்று காட்டும். பழங்காலந் தொட்டு இருந்து வரும் பல எண்ணங்களும் ஏற்பாடுகளும், தத்துவங்களும் அவற்றினுக்கான விளக்கங்களும், இன்று அத்தகைய கோட்டைகளைத்தான் நினைவுபடுத்துகின்றன—எனக்கும் உனக்கும். அவ்விதந்தானே தம்பி! தோன்றுகிறது? இதனைத்தான் கிழக்கு வெளுத்திடும் வேளை என்பார்கள்.

அண்ணன்,

21—11—'65

அண்ணாதுரை

## காஞ்சிக் கடிதம்: 42

# வானுலக வீதியிலே...

**மக்களிடம் ஒரு மனமாற்றம்!**

**அறிவுப் பிரச்சாரம் தேவை!**

**இரண்டும் கெட்டான்கள் எள்ளி நகையாடப்படுவர்!**

**பழங்கதைகள் குழந்தைப் பிதற்றல்கள்!**

தம்பி,

அன்று இரவு, இன்று எப்படியும் விடியற்காலை எழுந்திருந்து 'வால் நட்சத்திரத்தை'ப் பார்த்தாக வேண்டும் என்ற எண்ணத்தை அணைத்தபடியேதான் படுக்கச் சென்றேன்; மணி நாலு என்று கருதுகிறேன், எழுந்திருந்து பார்த்தேன்; என்னைப் போலவே வேறு பலரும் வால் நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக் கண்டேன், பெரிதும் வியப்புற்றேன்; வால்நட்சத்திரத்தைக் கண்டு அல்ல; அதனைப் பார்த்த மக்கள், பதறாமல் பயம்கொள்ளாமல், கைபிசைந்து கொள்ளாமல், கண்களில் மிரட்சியின்றி வால் நட்சத்திரத்தைப் பார்த்துவிட்டு, பிறகு அவரவர்கள் தத்தமது அலுவலைக் கவனிக்கச் சென்றது கண்டு!

ஐயோ! வால்நட்சத்திரம்! என்ன நேரிடப் போகிறதோ! யாருக்கு என்ன பேராபத்தோ!!—என்றெல்லாம் அலறவில்லை! ஆச்சரியமாக இருந்தது, மக்களிடம் நான் கண்ட அந்த மன மாறுதல். நான் இதைக் கூறுவது



கேட்க, தம்பி! உனக்கு வியப்பாக இருக்கிறது. வால்நட்சத்திரத்தைக் கண்டு மக்கள் பதறாதது பற்றி அண்ணன் ஆச்சரியப்படுகிறானே, பதறுவதற்கு இதிலே என்ன இருக்கிறது; விண்வெளியின் விந்தைகளிலே ஒன்று இது; இது குறித்து மக்கள் ஏன் பீதிகொள்ளப் போகிறார்கள் என்று கேட்டுத் துடிப்பாய். நான் பார்த்த மக்களை, நீ பார்க்கவில்லையே தம்பி! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, வால் நட்சத்திரம் முளைக்கப் போகிறதாம் என்ற பேச்சு எழும்பியதும் பீதிகொண்டவர்கள், பதறியவர்கள் பலப்பலர்; நான் பார்த்திருக்கிறேன். அதனால்தான் இன்று சமூகத்திலே பூத்திருக்கும் மாறுதலைக் கண்டு நான் வியப்படைகிறேன்.

வால் நட்சத்திரம்!

பல நாட்களாக வால்நட்சத்திரம் முளைத்து, மக்கள் கண்டு வருகின்றனர். பலர் பார்த்தனர்; பலர் பார்க்கவில்லை. பார்த்தவர்களும் சரி, பார்த்தவர் கூறக்கேட்டவர்களும் சரி, அதிகமான அளவு பரபரப்பு அடையவும் இல்லை. பயப்பட்டுவிடவுமில்லை.

''வால் நட்சத்திரம் தெரிகிறதாமே! நீ பார்த்தாயா?''—என்று ஒருவர்க்கொருவர் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொள்வதுடன் இருந்தார்களே தவிர, 'ஐயோ வால் நட்சத்திரமாமே' என்று கிலிகொண்டு கூவவில்லை,

> வால் நட்சத்திரம் முளைத்துவிட்டது! மகா ஜனங்களே! பக்த சிகாமணிகளே! உலகுக்குப் பெரிய கேடு நேரிட இருக்கிறது. ஆகவே, ஆண்டவனின் கிருபா கடாட்சம் கிடைக்க வேண்டுமென்று உடனே அபிஷேகம் செய்யுங்கள்! ஆராதனை செய்யுங்கள்! தானம் கொடுங்கள்!!

—என்று குருமார்கள் கூறக்கூட இல்லை. மாறாக, கொடைக்கானல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அறிக்கை வெளிவருகிறது, வால் நட்சத்திரம் இன்ன திக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; அதைக் கவனித்து வருகிறோம், படம் எடுத்திருக்கிறோம் என்று!

படம் எடுத்திருக்கிறார்கள், வால் நட்சத்திரத்தை! நம் நாட்டில்!!

எவ்வளவு திடுக்கிடக் கூடிய மாறுதல்!

சூரிய, சந்திர நட்சத்திராதிகளைப் பற்றி இங்கு இருந்து வரும் கதைகள், கற்பனைகள் யாவும் கவைக்கு உதவாதன என்பது நடைமுறை உண்மையாகிவிட்டது—அந்தக் கதைகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட சடங்குகள் சத்தற்றவை என்பது உணரப்பட்டு, ஊராள்வோரால் நிர்வகிக்கப்படும் கொடைக்கானல் ஆராய்ச்சி நிலையத்தார் வால் நட்சத்திரத்தைப் படம் எடுத்திருக்கிறார்கள்!

விண்ணையும், மண்ணையும், காற்றையும் கடலையும், நீரையும் நெருப்பையும் தேவர்களாக்கி—ஒவ்வொரு தேவர்க்கும் தேவியர்க்கும் திருவிளையாடற் காதைகள் கற்பனை செய்து, கவிதைகளாக்கி, ஞானக்கண்ணினரும், இனிமை பண்ணினரும் தர, அவைகளையே அழிக்க முடியாத உண்மைகள்! மாற்ற முடியாத தீர்ப்புகள்!!—என்று நம்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, வால் நட்சத்திரத்தைப் படம் கூடப் பிடித்திருக்கிறார்கள் என்பது எப்படிப்பட்ட மகத்தான செய்தி!

வால் நட்சத்திரத்தைப் படம் பிடிக்க முடியும் என்று ஒரு இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சொன்னால் நம்புவதற்கு இந்த நாட்டில் ஆள் கிடையாது. வால் இல்லாத நட்சத்திரங்களைக்கூட ஆராய முடியும் என்று கூறினால், கேட்பவன். கேலி பேசுகிறாயா? என்று கேட்டிருப்பான்! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு!!

நமது பாட்டனார் காலத்திலே, இன்றைய அடிப்படை உண்மையையே நம்ப, ஆள்கிடையாது — பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்னால், பாட்டனார் பல்லிழந்த வாயைத் திறந்து, பயலே! என்னிடமா விளையாடுகிறாய்? என்றுதான் கேட்டிருப்பார்!

அப்படிப்பட்ட நாட்டில், ஒரு தலைமுறையில், மற்ற நாடுகளிலே பத்துத் தலைமுறைகளேனும் பாடுபட்டுக் கண்டுபிடித்த உண்மைகள், சர்வ சாதாரணமானவைகளாக ஆகிவிட்டன!

நமது தலைமுறை இந்த விஷயத்திலே மிகமிக வாய்ப்புப் பெற்றது என்று கூறலாம்!



நமது பாட்டனாருக்கு, ''சூரியன் சுற்றுவது'' தான் உண்மை! நமது தகப்பனாருக்குச் சுற்றுவது சூரியனா, பூமியா என்ற சந்தேகம்! நமக்கு, சூரியன் சுற்றுவதாகக் கூறும் அறிவுச் சூன்யர்களும் இருக்கிறார்களே என்ற கேலி! நமது மகனோ, அவன் மகனோ சந்திரமண்டலம் போய் வரும் நிலை பெறக்கூடும்!! மாறுதல், அவ்வளவு மகத்தான வேகத்திலும் முறையிலும் ஏற்பட்ட வண்ணமிருக்கிறது.

வால் நட்சத்திரம் முளைக்கிறது என்று கேள்விப்பட்டவுடனே, இங்கு மட்டுமல்ல, உலகில் எல்லா நாடுகளிலுமே கிலி பிடித்தாட்டிய காலம் இருந்தது—எப்போதோ ஒரு நாள் அல்ல—1910 ல் கூட வால் நட்சத்திரத்தைக் கண்டு ஐரோப்பிய நாடுகளிலேயே, அடக்க முடியாத அச்சம்! இன்று, எப்படியோ அந்த அச்சம் அடங்கிவிட்டது.

வால் நட்சத்திரத்தின் அமைப்பு, இயல்பு, அது மேற்கொண்டுள்ள பயணம், செல்லும் பாதை ஆகிய இவ்வளவும் ஞானக் கண்ணினர் அல்ல, விஞ்ஞானக் கண்ணினர் கண்டுபிடித்தது.

இப்போதும் இங்கே வால் நட்சத்திரத்தின் போக்கை, நமக்குக் கூறினவர் சங்கராச்சாரியாருமல்ல, தம்பிரானுமல்ல; அவர்களின் திருப்பாதந் தாங்கிகளுமல்ல; ஆராய்ச்சியாளர்கள்! வால் நட்சத்திரத்தைப் படம் பிடித்துக் காட்டினவரும், விபூதி மகாத்மியத்தாலோ, துளசி மகிமையாலோ, அம்பிகை உபவாசத்தாலோ, அனுமத் பிரபாவத்தாலோ அல்ல, நமது மார்க்கத்தவரல்லாத, நமது நாட்டவருமல்லாத விஞ்ஞானிகள், கருத்துத் தெளிவாலும், ஆராய்ச்சித் திறத்தாலும் அமைத்துள்ள கருவியின் துணைகொண்டு, கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சியாளர் படம் பிடித்தனர்.

படம் பிடித்து விட்டார்களோ, படம்! என்ன பலனாம்? என்று கேட்கத் தோன்றும் பஜனைப் பிரமுகர்களுக்கு!

பயத்தைப் போக்க—அது பற்றிக் கட்டி விடப்பட்ட கட்டுக் கதைகளைப் போக்க—அதன் மூலம் அறிவு வளர்ச்சிக்கு வழி செய்ய உதவுகிறது இந்த ஆராய்ச்சி!

வைகுந்த, கைலாயப் படப் பிடிப்பாளர்களுக்கு, வால் நட்சத்திரப் படப்பிடிப்பாளர்கள் பற்றிக் கேள்விப்படும் போது கோபமாகத்தான் இருக்கும்! ஏனெனில்,

விஞ்ஞானக் கண்ணினரின் ஆக்கம் வளர வளர, ஞானக் கண்ணால் எதை எதையோ கண்டதாகக் கதைபேசிக் காலந் தள்ளும் கபந்தங்களுக்குப் பிழைப்புக் கெட்டுவிடும்!

சந்திரனைப் படம் பிடிக்கிறார்கள்; சூரியனில் உள்ள புள்ளிகளைப் படம் பிடிக்கிறார்கள்; மழையை வரவழைக்கிறார்கள் என்றெல்லாம் கேள்விப்படக் கேள்விப்பட, எவ்வளவு காட்டானாக இருந்தாலும், அறிவிலே சிறு சிறு அளவு சுறுசுறுப்பு ஏற்படாமலா போகும்?

ஒரு புறத்திலே பூமாதேவி பற்றியும், வான வீதியிலே நாரதர் பாடிக்கொண்டு போவது பற்றியும், சந்திரனைப் பாம்பு விழுங்குவது பற்றியும், இந்திரன் ஆயிரம் கண் பெற்றது பற்றியும்; சித்திரகுப்தன் கணக்கு எழுதியபடி இருப்பது பற்றியும், சக்தியும் சிவனும் நடனம் ஆடுவது பற்றியும், இன்னும் இது போன்ற கற்பனைகளை, ஏடுகள் மூலம், பாட்டுகள் மூலம், கூத்துகள் மூலம், குருக்களின் கூச்சலின் மூலம், பாமர மக்கள் பெற்றுக்கொண்டே உள்ளனர்,—நம்பும் படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அதேபோது, வேறோர் புறத்தில் சந்திர மண்டல ஆராய்ச்சி, சூரியபுள்ளி பற்றிய விளக்கம், வால்நட்சத்திரப் படப் பிடிப்பு, வானிலை பற்றிய வேறு பல ஆராய்ச்சிகள் ஆகியவற்றையும் செய்தவண்ணம் உள்ளனர்.

இந்த இரு சக்திகளுக்கும் இடையே, பாமர மக்களைத் தள்ளிப் படாதபாடு படுத்தி வைக்கிற நிலையின்றி விஞ்ஞான உண்மைகளைக் கிராமவாசியும் உணரும் அளவுக்கு அறிவுப் பிரச்சாரம் நடைபெற்றால் மிகமிக விரைவில் மக்களின் மனம் வளமாகும்.

புதுமையைப் போரிட்டுத் தடுக்க, விஞ்ஞானத்தை வேண்டாமென்று விரட்டவும் துணிவு இல்லை; விஞ்ஞானத்தால் பொய்யாக்கப்படும் பழமையை விட்டுவிடவும்



துணிவு இல்லை, திறந்த வாயினராகின்றனர், விஞ்ஞானத்தின் விசேஷத்தைக் காணும்போது! ஆச்சரியத்தால் நீண்ட வாயினராகின்றனர், பழைமையைப் பற்றிப் பேசும்போது! மாதவியையும், கண்ணகியையும் ஒரு மனையில் வைத்துப் பரிபாலிக்கும் புதிய கோவலன்களாக இருப்பதிலே இவர்களுக்குப் பெருமகிழ்ச்சி!

புலி மீதேறி எலி வேட்டைக்குப் போவதுபோல, விமானம் ஏறிக்கொண்டு விட்டல பஜனைக்குப் போகும் விசித்திரவான்கள் போல, இவர்கள் கொடைக்கானலில் உள்ள ஆராய்ச்சியாளர்களையும் கேட்கிறார்கள், வால் நட்சத்திரம் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பு என்று; அதேபோது வரலெட்சுமி விரத மகிமைபற்றி வானொலி மூலமும் பேசுவர்.

சிலருக்கு உண்மையிலேயே சந்தேகம்—திகைப்பு—குழப்பம். ''விஞ்ஞானி சொல்வதும் சரியாகத்தானிருக்கிறது; நமது பூர்வீக ஞானத்தையோ அடியோடு விட்டு விடவும் பயமாக இருக்கிறது'' என்ற குழப்பம் குடைகிறது—குடையும்போது, சுயநலம் குறுக்கிடுகிறது. அதன் வயப்பட்டதும், ''நமக்கென்ன, இரு சாராருக்கும் நல்ல பிள்ளையாகி விடுவோம்—பகை எங்கிருந்தும் கிளம்ப வேண்டாம்—விஞ்ஞானி தருகிற டெலஸ்கோப்பையும் வாங்கிக் கொள்வோம்! சனாதனி தருகிற துளசி மாலையையும் போட்டுக்கொள்வோம்''—என்று எண்ணுகிறார்கள்,

நாளாவட்டத்தில் இரு சாராரும் இவரைச் சந்தேகிக்கத் தொடங்குவர் என்பதையோ, இருசாராரும் இவருடைய இதய சுத்தியிலே நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என்பதையோ, இந்த இரண்டுங்கெட்டான் பிழைப்பு கடைசியில் இரு சாராராலும் எள்ளி நகையாடப்படும் என்பதையோ, இந்த 'மேதை'கள் எண்ணிப் பார்ப்பதில்லை! 'அறிவுத் தாக்குதல்' பலமாக நடந்தான பிறகே, இந்த அளவுக்காவது இவர்களை இடம் கொடுத்தனர்.

ஒரு காலம் இருந்தது, பிடிவாதமாகப் பொய்யை உண்மை எனக்கொண்டு, மெய் உரைக்கத் துணிந்தவர்களைக் கொடுமைப்படுத்திய காலம்,

இயற்கையின் கோலங்களிலே, அடிக்கடியும் நிரந்தரமாகவும் உள்ளவற்றைப் பற்றிப் பலகதைகள் கட்டி வைத்

தமிழ் ... விருத்தாசலம்

தனர். வால் நட்சத்திரங்கள் அடிக்கடி தோன்றுவன வல்ல—ஆகவேதான், புராணக் கதைகள் இல்லை; வால் நட்சத்திரம், பார்வதியின் ஜடை முடியிலே உள்ள ஒரு பட்டுத் துண்டு, அல்லது பரமசிவனின் நெற்றிக் கண்ணி லிருந்து புறப்பட்டு அடங்கும் ஒலி அம்பு என்று ஏதும் கதை கட்டவில்லை!

வால் நட்சத்திரங்களைக் கண்டு கிலிகொண்டு மக்கள் அல்லோலப்பட்டிருக்கின்றனர் முன்னாளில்!

1832ம் ஆண்டு, தோன்றிய வால் நட்சத்திரத் தால், பூமியே அழிந்துபடும் என்று பயந்து வீடு, வாசல், உடைமைகளை விற்றுவிட்டுப் பலர், மாதா கோவில்களிலே போய்த் தங்கிவிட்டனர்—இறக்கும் போது இறைவன் சந்நிதியிலே போய் இறப்போம்—என்று!

வால் நட்சத்திரம் வந்தது! மறைந்தது!! உலகம் அழியவில்லை! உடனே மாதா, கோவில் இவைகளின் மீதல்ல—குறைந்த விலைக்கு விற்றுவிட்ட மனை, மாடு, மணி, இவைகள் மீது சிந்தனை சென்று, சோகித்தனராம்! ஐரோப்பாவில்!!

வால் நட்சத்திரம் முளைக்கிறது என்றால், வந்தது விபத்து என்று முடிவு செய்வர், முன்னாளில்.

மாதா கோவில்களில் மணி ஓசை கிளம்பும்! ஜெப மாலைகளுக்கு அதிகமான கிராக்கி ஏற்படும்! தானதருமம் செய்வாராம்! பாவத்தை மன்னிக்கும்படி குருமார்களிடம் கெஞ்சுவார்களாம்!! ஆலயமணி அடித்தவண்ணமிருந் தால், வால் நட்சத்திரம் கேடு ஏதும் செய்யாமல் போய் விடும் என்று நம்பி பூஜையை இடைவிடாது செய்வராம்!

மிகப் பழங் காலந் தொட்டு, வால் நட்சத்திரம் உலக மக்களை இவ்வளவு மிரட்டி இருக்கிறது. எனினும், விஞ்ஞானம், அஞ்சாது படையெடுத்து, இந்தப் 'பய மூட்டி'யைப் படம் எடுத்துத் தந்துவிட்டது.

ஞானக் கண்ணினர் கூறினர், "அதோ பார்! வால் நட்சத்திரம்! ஆண்டவனின் சீற்றம்! அழிவு வருகிறது என்பதைக் காட்டும் அறிகுறி" என்று. விஞ்ஞானக் கண் ணினர் கூறுகின்றனர், "வால் நட்சத்திரம், கிரஹங்களைப் போலவே, சூரியனைச் சுற்றி வருகின்றது. நீண்ட கோழி



முட்டை வடிவில், அது செல்லும் பாதை, அமைந்திருக் கிறது, அஞ்சாதே! வால்நட்சத்திரங்கள் ஒன்று, இரண் டல்ல; ஓராயிரம், ஈராயிரமல்ல! சூரிய மண்டலத்திலே இலட்சத்துக்கு மேற்பட்ட வால் நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு பாதைகளில் சுற்றி வருகின் றன. ஒருமுறை பயணம் செய்து திரும்ப, ஒவ்வொரு வால் நட்சத்திரத்துக்கும், வெவ்வேறு கால அளவு பிடிக் கும். சில வால் நட்சத்திரங்கள், மூன்றரை வருடத்தில் சூரியனைச் சுற்றி வரும்; சில வால் நட்சத்திரங்கள் 10 லட்சம் ஆண்டுக்காலம் பிடிக்கும் சுற்றிவிட்டு வர!" என்று.

இந்த முடிவுகளுக்கு ஆதாரங்களை, ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எப்படி படிப்படியாகச் சென்று இந்த உண்மைகளைக் கண்டறிய முடிந்தது என்பதையும் விளக்கியுள்ளனர்.

முதலிலே, யாருக்குமே புரியத்தான் இல்லை, வால் நட்சத்திரம் எங்கிருந்து கிளம்புகிறது? எங்கே போகிறது? எப்படி மறைகிறது? அதன் இயல்பு என்ன? என்ப தெல்லாம்!

வால் நட்சத்திரங்கள் சீன ராஜ்யம், ஜெருசலம் சாம்ராஜ்யம், கிரேக்க ரோம் சாம்ராஜ்யங்கள் ஆகியவை ஜொலிப்புடன் இருந்த நாட்களிலேயும் தோன்றின. ஆராய்ச்சியாளர்கள் கி. மு. 48-ல், கி பி. 69-ல், கி.பி. 79-ல், கி. பி, 451-ல், கி. பி 455-ல், கி. பி, 1000-ல், கி. பி. 1076-ல், கி. பி. 1456-ல், கி. பி. 1832-ல் கி பி. 1910-ல் என்று இப்படிப் பல தடவைகள் தோன்றிய வால் நட்சத் திரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை அறிவு மன்றத்துக்கு அளித்திருக்கிறார்கள்.

இவை தோன்றிய ஒவ்வொரு சமயத்திலும், ஏதேனும் ஒருவகை அழிவு நேர்ந்திருக்கிறது உலகில். ஒரு பேரர சனின் மரணம், பெருவெள்ளம், பெருநெருப்பு, படை யெடுப்பு, சாம்ராஜ்யச் சிதைவு என்பன போன்றஏதேனும் ஒன்று நடைபெற்றுள்ளன—வால் நட்சத்திரத்தைப் பற்றி மட்டுமல்ல, பொதுவாகவே வானநிலை பற்றிய ஆராய்ச் சியே உருவடையாதிருந்த காரணத்தால், இந்தச் சம்பவங் களுக்கும், வால் நட்சத்திரம் தோன்றியதற்கும் தொடர்பு வைத்து, இதனால்தான் அது என்று மக்கள் நம்பினர்,

உலகிலே, மக்கள் மனத்தை உலுக்கக் கூடிய எவ்வளவோ விபத்துக்கள் ஏற்பட்ட போதெல்லாம் வால் நட்சத்திரம் வந்ததில்லை. விஞ்ஞானி பிறகு கூறினான்; "வால் நட்சத்திரத்திற்கும் விபத்துக்கும் சம்பந்தமில்லை; அஞ்சாதே!"—என்று.

வால் நட்சத்திரத்தை, பூமியிலிருந்து புறப்படும் புகையென்று அரிஸ்டாடில் கூறினார். அவர் அறிஞர் தான்; ஆயினும், அவரே அதுபோலக் கூறிவிட்டாரே! சும்மா இருந்து விட்டனரா?

இல்லை; அவர் அறிந்தது அவ்வளவு தான்—நாம் ஆராய்வோம் என்று எண்ணினர். ரோம் நாட்டு அறிஞர் செனகா, ஒரு படி முன்னேறினார். "முன் கூட்டியே சொல்ல முடியும், வால் நட்சத்திரம் எப்போது வருமென்பதை" என்று சொன்னார்.

விஞ்ஞான முறையிலே, வால் நட்சத்திரத்தைப்பற்றி ஆராய்ந்தவர் ஹாலி என்பவர். அவர், 1682-ல் தோன்றிய வால் நட்சத்திரம் சூரியனைச் சுற்றிவிட்டு 76 ஆண்டுகள் கழித்து மீண்டும் தோன்றும் என்று கூறினார். அதன் படியே 1759-ல் வால் நட்சத்திரம் வந்தது!

ஹாலி, 1682-ல் தோன்றிய வால் நட்சத்திரம், இவ்வண்ணம் இயல்பு கொண்டது; அது 1759-ல் மீண்டும் தோன்றும்; கவனித்துப் பாருங்கள்—என்று கூறினார்.

யாரும் நம்பவில்லை, அவரும் இறந்துவிட்டார். ஆனால், அவர் சொன்னபடி 1759-ல் வால் நட்சத்திரம் தோன்றிற்று. மக்கள் அவர் அறிவை வியந்தனர்—விஞ்ஞானததைப் போற்றினர். அந்த வால் நட்சத்திரத்துக்கு ஹாலி வால் நட்சத்திரம் என்று பெயரிட்டனர்.

பிறகு வால் நட்சத்திரத்தைப் பற்றிய விவரமான ஆராய்ச்சிகள் தொடர்ந்து வெளிவரலாயின.

ஹாலி வால் நட்சத்திரம், 1682-ல் ஒருமுறை தோன்றி, 76 ஆண்டுகள் பயணம் செய்து சூரியனைச் சுற்றிவிட்டு 1759-ல் அது மீண்டும் வந்தது மட்டுமல்ல; அது மறுபடியும், மறுபடியும் அந்தக் குறிப்பிட்ட கால அளவில் வருவதையும், ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.



1910-ல் ஹாலி வால் நட்சத்திரம் வந்தது—மீண்டும் 1986-ல் ஹாலி வால் நட்சத்திரம் வரும் என்று குறித்து வைத்திருக்கிறார்கள்.

வால் நட்சத்திரம், விஞ்ஞானக் கண்களுக்கு மிக வசீகரமான தோற்றத்துடன் காட்சி அளிக்கிறது. பலவித வர்ணங்கள் உள்ளனவாம்! கண்கூசும் ஒளியாம்! இருண்ட வெளியிலிருந்து கிளம்பிச் சூரியனைச் சுற்றிக் கொண்டு செல்கிறதாம்!

வால் நட்சத்திரத்தின் தலைப் பகுதி 30,000-லிருந்து, 1,50 000 மைல் வரை இருக்குமாம்! வால் சிலவற்றுக்கு 10 கோடி மைல் நீளமாம்! சிலவற்றுக்கு 20 கோடி மைல் நீளமாம்.

சூரியனிலிருந்து பலப்பல கோடி மைல்களுக்கு அப்பால் சென்று, வால் நட்சத்திரம் திரும்புகிறது.

1811-ல் தோன்றிய வால் நட்சத்திரம், சூரியனிலிருந்து 4000 கோடி மைல் தூரம் சென்று திரும்ப மீண்டும் 3000 ஆண்டுகள் பிடிக்குமாம்! இது தன் பயணத்தை முடிக்க!! மறுபயணத்தைத் துவக்க. அதாவது இந்தவால்நட்சத்திரம் மீண்டும் 4811-ல் தோன்றும்.

காற்றைவிட மிக இலேசான பொருள் வால் நட்சத்திரம்.

இவ்வளவு விஞ்ஞான உண்மைகளுக்கும் ஆதாரங்கள் உள்ளன.

படமும் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

சீனப்புராணிகர்கள் ,வால் நட்சத்திரங்களை மேலுலக அரசியல் தூதுவர்களாகக் கருதினர். பூலோகம் போலவே வானலோகம், பல நாடுகள் கொண்டதாக இருப்பதாகவும் பூலோக நாடு ஒவ்வொன்றுக்கும் வானலோகத்தில் ஒரு பிரதிநிதி இருப்பதாகவும் பூலோக நாட்டின் கதியை அங்கே நிர்ணயிப்பதாகவும் அவர்கள் கற்பனை செய்து கொண்டனர்.

வான மண்டலத்திலே கிரகங்கள் ராஜாக்கள்! நட்சத்திரங்கள் மந்திரிகள்! வால் நட்சத்திரங்கள் தான் அரசியல் தூதுவர்கள்!!


கற்பனைக் கதைகளின் மீதுதான் கடவுள் கொள்கை கட்டப்படவேண்டும் என்ற எண்ணமே, இன்று, அறிவுலகில் எள்ளிநகையாடப்படும் அளவுக்கு மக்கள் உள்ளம் பண்பட்டிருக்கிறது. விசித்திரமான உருவங்கள், விதவிதமான செயல்கள் இருந்தாகவேண்டும் தெய்வத்துக்கு என்ற எண்ணம் முறியடிக்கப்பட்டுவிட்டது. பழைய கற்பனைக் கதைகளை மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவப் பிதற்றல்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வானத்திலே உலவும் மேகங்கள், மின்னும் நட்சத்திரங்கள், ஒளியை அள்ளித் தரும் நிலவு போன்றவைகள், குழந்தையின் உள்ளத்திலே எத்தனையோ விதவிதமான எண்ணங்களை எழுப்புகின்றன மழலை மொழியிலே ஏதேதோ கூறுகிறது. மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவத்திலே, இதே நிலைதான்!

மழலைகேட்டு இன்புறும் தாய் குழந்தைவாலிபனான பிறகும், சந்தமாமாவைப் பிடித்துத் தா!! என்று கேட்டால், மகிழமுடியுமா? மருள்வாள் தாய்; மகனுக்கு ஏதோ மனமருள் என்று! அதுபோலத்தான் மனித சமுதாயம், முறுக்கேறிய வாலிபப் பருவம் பெற்றிருக்கும் இந்நாளிலே, குழந்தைப் பருவத்துக் கதைகளை, கற்பனைகளைக் கூறிக்கொண்டும், நம்பிக்கொண்டும், அந்த நம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கையை அமைத்துக்கொண்டும், அப்படிப்பட்ட வாழ்க்கைதான் ஆஸ்திகம் என்று பேசிக்கொண்டும், அதனைச் சந்தேகிப்பது பாபம் என்று மிரட்டிக்கொண்டும் இருந்தால், மகிழ்ச்சியா பிறக்கும், மதியுள்ளவர்களுக்கு!

அண்ணன்,

5—12—'65



காஞ்சிக் கடிதம் : 43

# கனிவும் கசப்பும்-1

**பேச்சுரிமையின் அவசியம்**

**நெருக்கடி நிலைக்கு முன்னும் பின்னும்**

**அச்சமற்ற மனப்போக்கு—சூழ்நிலை தேவை.**

**பேச்சுரிமை தந்து பொதுத் தேர்தல் நடத்துக!**

தம்பி!

மூன்று சர்ஜன்கள் கூடிப் பேசும் வாய்ப்பு ஓரிடத்தில் ஏற்பட்டதாம்-ஒருவர் பிரிட்டனைச் சார்ந்தவர், மற்றொருவர் அமெரிக்காவைச் சார்ந்தவர், மூன்றாமவர் ரஷியாவைச் சார்ந்தவர். மருத்துவத் துறைப் பிரச்சினைகள் பற்றி, அதிலும் குறிப்பாக 'அறுவை' முறைபற்றிப் பேச்சு எழுந்தது.

அறுவைச் சிகிச்சையிலேயே மிகக் கடினமானது இருதய அறுவைதான் என்றார் பிரிட்டிஷ் சர்ஜன்.

இல்லை! அதைவிடக் கடினம் மூளையிலே செய்யப்படும் அறுவை என்றார் அமெரிக்க மருத்துவர்.

இவை இரண்டையும்விடக் கடினமானது 'டான்சல்' (தொண்டையில் வளரும் சதை) அறுவை என்று ரஷிய சர்ஜன் கூறினார். பிரிட்டிஷ் அமெரிக்க அறுவை நிபுணர்கள் வியப்பால் அதிர்ச்சி அடைந்தனர். அறுவையிலேயே,

மிக எளிதானது, ஆபத்தற்றது. டான்சல் அறுவை; அவ் விதமல்லவா மருத்துவமுறை ஏடுகள் தெரிவிக்கின்றன; நடைமுறையிலும் அது விளக்கமாக இருக்கிறதே; இவர் என்ன 'டான்சல்' அறுவைதான் மிகக் கடினம் என்று கூறு கிறாரே என்று வியப்படைந்தனர். அதைப் புரிந்து கொள்ளாமலில்லை, ரஷிய மருத்துவர்.

'டான்சல்' அறுவையை நாங்கள் காது வழியாகத்தான் செய்யவேண்டி இருக்கிறது. ஏனென்றால், எங்கள் நாட்டிலே மக்கள் வாய் திறப்பதில்லை என்று கூறினார் ரஷிய மருத்துவர். உட்பொருளை உணர்ந்துகொண்ட மற்ற இரு மருத்துவ வித்தகர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

இப்படி ஒரு நகைச்சுவைக்கான துண்டு கூறப்பட்டிருக்கிறது; நகைச்சுவைக்காக மட்டுமல்ல, மறைமுகமாக சோவியத் ரஷியாவுக்கு எதிர்ப்புப் பிரசாரம், இதிலே தொக்கிக் கிடக்கிறது. சோவியத் ரஷியாவிலே மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரம் கிடையாது, அச்சத்தால் வாய் மூடிக்கிடக்கிறார்கள் என்று இடித்துரைக்கக் கட்டிவிடப் பட்ட துணுக்கு.

வாயைத் தாராளமாகத் திறந்தால்தான், எளிதாகத் தொண்டையிலே வளரும் சதையை வெட்டி எடுக்க முடியும்; வாயைத் திறக்கவே மறுத்தால்? அல்லது இயலாமற் போய்விட்டால்? காது வழியாகத்தான் கருவியைச் செலுத்தித் தொண்டையில் வளர்ந்துள்ள சதையை அறுத்தெடுக்க முடியும்.

இவ்விதம் கூறியிருப்பது மருத்துவ முறைபற்றிய விளக்கம் தர அல்ல; பிரிட்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் மக்களுக்குத் தரப்பட்டுள்ள பேச்சுச் சுதந்தரம், ரஷியாவிலே கிடையாது, அங்கு மக்கள் வாயில்லாத பூச்சிகளாகிவிட்டுள்ளனர் என்று கேலி பேசி, அரசியல் பிரச்சாரம் நடத்தவேயாகும்.

தம்பி! இதனை நான் கூறுவதற்குக் காரணம், சோவியத்தில் பேச்சுரிமை இல்லை என்று கண்டிக்கக்கூட அல்ல; பேச்சுரிமை எத்தனை அடிப்படையானது என்பதற்கான பொருள் இந்தத் துணுக்கிலே இருந்து பெறமுடிகிறது என்ற காரணத்தாலேதான்.



எத்தகைய அரசு முறையிலே பேச்சுரிமை வளமாக இருக்கும், எவ்விதமான ஆட்சிமுறையிலே மக்கள் வாய் பொத்திக் கிடக்கவேண்டி நேரிடுகிறது என்பது பற்றிய விவரம் கூறவும் ஒப்பிட்டுக் காட்டவும் முனையவில்லை. நான் கூற விரும்புவது, பேச்சுரிமை என்பது பற்றிய பொதுவான, முக்கியமான கருத்துக்களை.

பல பிரச்சினைகளைப் பற்றியும், பல பிரச்சினைகளிலே இயல்பாகவே எழுந்திடும் கருத்து வேற்றுமைகளைப்பற்றியும், எடுத்துப் பேசிடும் உரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கும் நேரம் இது; இந்த நேரத்தில் பேச்சுரிமை பற்றிக் கருத்துரைப்பது தேவையா என்று எவரேனும் கேட்டிடின், தம்பி! நெருக்கடி நிலையின் போதும் பேச்சுரிமை தந்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்த அல்ல; ஆனால், கேடு கக்கிடும் நிலை எழாத போது, சாதாரண நாட்களில் பேச்சுரிமை இருந்தாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இதனை எழுதுகிறேன் என்பதை எடுத்துக் கூறிட வேண்டுகிறேன்.

நெருக்கடி நிலையின்போது, பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துவது, அளிக்க மறுப்பது என்பது ஒன்று; பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தவும், மறுத்திடவும், பறித்திடவும் சூழ்ச்சி மேற்கொண்டு, நெருக்கடி! நெருக்கடி! என்று சவுக்கடி கொடுக்க முற்படுவது முற்றிலும் வேறானது.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்வதும் கடினமானது அல்ல.

பேச்சுரிமையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டுக்கு நெருக்கடி மூண்டிருக்கும் நேரத்தில் சீர்குலைவு, ஒற்றுமைக் குலைவு, முயற்சிக் குலைவு ஏற்படுத்துவது கண்டிக்கத்தக்கது. நான் அதனை வெறுக்கிறேன். ஆனால், நெருக்கடி நிலை என்ற அபாயச் சங்கினைப் பேச்சுரிமையைப் பறித்திடும் நோக்கத்துடனேயே ஊதிக் கிடக்கும் போக்கினை நான் மட்டுமல்ல, பேச்சுரிமையின் நல்லியல்புகளையும், அதனால் கிடைத்திடும் நற்பயன்களையும் உணர்ந்த எல்லோருமே, ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள்.

'பத்தியம்' இருந்தாக வேண்டும், உடல் நலிவு இருக்கும் போது; அதனைப் போக்கிக்கொள்ள; ஆனால் 'பத்தியம்' என்பதையே ஒரு 'முறை' ஆக்கிடும் எண்ணத்துடன், உனக்கு உடல் நலம் இல்லை! இல்லை! என்று கூறினால், எப்படி அதற்கு ஆம்! என்று கூறிட முடியும்?

> போரிலே தனது நாடு ஈடுபட்டிருந்த நாட்களி லேயே, நாங்கள் போரை வெறுக்கிறோம், சமாதான வாழ்வையே விரும்புகிறோம், ஆகவே, போரை ஆதரிக்க மாட்டோம், படையினில் சேரமாட்டோம் என்று ஒரு சிலர் கூறியது பற்றிய வரலாறும் எனக்குத் தெரியும்.

நான் அந்த 'அளவு' செல்லலாம் என்றும் கூறவில்லை; செல்வது சரிதான் என்றும் வாதாடவில்லை; நாட்டுக்குப் பகைவர்களால் ஆபத்து நேரிடும்போது, எல்லோருடனும் கூடி, ஆற்றலுடன் போர் நடாத்திப், பகைவனை விரட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்; அதன் படியேதான் நமது கழகத்தவர் ஒழுகி வருகின்றனர்.

பேச்சுரிமை, ஜனநாயகத்திற்கு அடிப்படை.

பேச்சுரிமை என்ற சொற்றொடரில், உரிமை என்பது எத்தனை முக்கியமானதோ, அத்தனை முக்கியமானது 'பேச்சு' என்பதற்கான இலக்கணம்.

பேசத்தக்கன! பேச வேண்டியன!—என்ற வகை அறிந்து, பேசும் முறையும் தெரிந்து, பேச்சின் விளைவு யாதாக இருக்கும் என்பதனையும் யூகித்துணர்ந்து, பேச வேண்டும், பேச்சுரிமையை மேற்கொள்ள வேண்டும்.

> எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம், என்ன விளைவு என்பது பற்றி எண்ணாமலே பேசலாம்

என்ற, பொறுப்பற்ற தன்மையை நான் விரும்பவுமில்லை; பிறரும் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; கூடாது. ஆனால், இவைபற்றி எவருக்கும் ஏதும் தெரியாது, கவலை கிடையாது என்ற எண்ணத்தைத் தடிப்பாக்கிக் கொண்டு, பேசாதே! என்ற கட்டளையை, நெருக்கடி நிலை நீங்கிய பிறகும் முழக்கிடுவாரானால், அவர் தம் நோக்கம், நாட்டுப் பாதுகாப்பு அல்ல, பேச்சுரிமையை மக்களுக்கு வழங்குவதால், தமது ஆதிக்கம் அழிந்துபடும்



என்ற அச்சம் கொண்டு, தமது பதவியை, அமுலைப் பாது காத்துக் கொள்வதே அவர் தம் நோக்கம் என்பது எளி தாகப் புரிந்துவிடுகிறது. அதைவிட மோசமானது, நெருக்கடி நிலை நீண்டு கொண்டே போகவிடுவது, தேவையா அல்லவா என்பது பற்றிய சிந்தனைக்குக்கூட இடமளிக்காமல்!

இன்று நம்நாட்டில், நெருக்கடி நிலை; உண்மை; மறுப்பார் இல்லை; அந்த நிலைக்கு ஏற்றவிதமாக, மக்கள் தமது பேச்சுரிமையைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் விட்டுக் கொடுக்கவும், கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பகைப் படைகள், சதித் திட்டங்களை வகுத்தபடி இருக்கும்போது, இங்கு நாம், பல்வேறு பிரச்சினைகள் பற்றி, நமக்குள் எழுகின்ற கருத்துகளை எடுத்துரைத்துக் கொண்டும், மக்களைப் பல்வேறு முகாம்களுக்குள் அழைத் துச் சென்று கொண்டும் இருப்பது, அடாத செயல்.

ஒரே ஒரு முகாம்தான் அமைந்திருக்க வேண்டும், நாட்டைக் காத்திட. இதிலே எவருக்கும் ஐயப்பாடு எழாது.

ஆனால், நெருக்கடி நிலை நீங்கியபிறகு, பேச்சுரிமை உண்டு என்பதிலேயும் ஐயப்பாடு எழுந்துவிட்டால், ஜன நாயக முறையை மேற்கொள்வதிலே, பலன் என்ன காணப் போகிறோம்?

நெருக்கடி நிலையின்போது பேச்சுரிமையை விட்டுக் கொடுத்திடும் கடமை மக்களுக்கு இருப்பது போலவே, கருத்து வேற்றுமைகளைக் கிளறிவிடத்தக்க காரியங்களில், எல்லோரையும் ஒரே முகாமில் இருந்திடுக! என்று கூறிடும் ஆட்சியாளர்கள், தம்மை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடாது.

> புதிய காரியம், புதுச் சட்டம், புதுவரி, புதுக் கட்டளை, எது எனினும், அது நாட்டுப் பாதுகாப்புக் காகப் பயன்படத்தக்கதாகவும், தேவைப்படத்தக்க தாகவுமே இருக்கவேண்டும். அஃதன்றி, இது நெருக்கடி நிலையுள்ள நேரம், பேச்சுரிமையை மக்கள் விட்டுக் கொடுத்துவிட்டுள்ள நேரம், ஆகவே, இந்த நேரத்தில், எத்தகைய செயலைச் செய்திடினும், ஏன் என்ற கேள்வி எழாது; எழுமேல், பாதுகாப்புக்குக்

குந்தகம் விளைவிப்பதாகக் கூறி, வாயை மூடிடச் செய்யலாம் என்ற நினைப்புடன், ஆட்சியினர் செயல்களில் ஈடுபட்டால், அது, ஜனநாயகத்தை மாய்த்திடும் கொடுமை என்றே கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

இன்றுள்ள ஆளுங்கட்சி, மக்களின் ஆணையின் துணை கொண்டு அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது,

இன்றுள்ள ஆளுங்கட்சி, அரசு கட்டிலில் அமர்ந்திருக்கும் நாட்களிலே, அன்னியன் படை எடுத்து விட்டான்; அவனை விரட்டிடும் போர் நடாத்திட, பொறுப்பேற்றுக்கொள்ள, ஆளுங்கட்சி கடமைப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையை ஆளுங்கட்சி, செம்மையாக நடாத்திச் சென்று, அன்னியனை விரட்டி ஓட்டிடும் பணியினில், நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும்; மக்கள் சமுதாயம் முழுவதும், ஒன்றுபட்டு ஈடுபட, ஆட்சியினர் கரத்தினை, வலிவுபடுத்த அவர்கள் மேற்கொள்ளும் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கடமை, அந்த வகையில் இருக்கிறது.

மக்கள் அந்தக் கடமையைச் செய்திடுவர் என்பதிலே ஆட்சியினருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்திடினும், எந்த விதமான குந்தகமும் தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகக் கட்டுதிட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள உரிமை பெறுகிறார்கள்.

அந்த உரிமையின் அடிப்படையிலேதான், பேச்சுரிமையைப் பறித்திடும் சட்டம் இயற்றிக்கொள்ளவும் இடம் கிடைக்கிறது.

ஆகவே, போர் நடாத்திடவும், போர் முயற்சிக்கு எல்லா மக்களின் துணையையும் பெற்றிடவும், பெற்றிடுவதற்கான வழி வகை வகுத்துக்கொள்ளவும், மக்கள் வழி தவறிச் சென்றிடாமலிருக்கக் கட்டுதிட்டம் ஏற்படுத்தவும் ஆளுங்கட்சிக்குப் பொறுப்பும் கடமையும் இருக்கிறது; உரிமையும் இருக்கிறது,

ஆனால், அந்த உரிமை அந்த நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, தமது ஆதிக்கத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும் நீட்டிக் கொள்ளவும், அழுத்தமாக்கிக் கொள்ளவும் பயன்படுத்துதல், கூடாது; அறமாகாது.



நாட்டிலே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுத் தேர்தல், மக்களின் ஆணை என்ன என்பதனைக் கேட்டறிந்து, அந்த ஆணைக்கு ஏற்றபடி அரசு முறை அமைத்துக் கொள்வதற்காக.

மக்களின் ஆணையைக் கேட்டறிய, பல்வேறு கட்சிகளும் முனைய வேண்டும்; ஆளுங் கட்சியும் மீண்டும் எமமையே அரியாசனம் அமர்த்துக என்று கேட்டிட வேண்டும்.

முன்பு அரியாசனம் அமர்ந்து, மக்களுக்குச் செய்தளித்த நலன்கள் பற்றி எடுத்துரைத்து, இனி ஒரு முறை அரியாசனம் அமர அனுமதி கொடுத்திடின், மேலும் இன்னின்ன நலன்களைச் சமைத்தளிப்பேன் என்று ஆளவந்தார்கள் கூறிடவேண்டும்.

அரியாசனத் தமர்ந்து இந்த ஆளவந்தார்கள் மூட்டிவிட்ட கேடுகள் பற்றியும், செய்யத் தவறியவை பற்றியும், செய்திருக்கக் கூடியவை பற்றியும் எடுத்துரைத்து, மற்றும் ஒருமுறை இவர்களை ஆளவந்தார்களாக்கினால் இன்னின்ன கேடுகள் சூழ்ந்திடும் என்ற எச்சரிக்கையினைக் கூறி, ஆட்சிப் பொறுப்பினை எம்மிடம் ஒப்படைப்பின் இன்னின்ன நலன்கள் பெற்றிடலாம் என்று வாக்களித்து, பிரசாரம் செய்திடும் பொறுப்பும் உரிமையும், மற்ற எந்த அரசியல் கட்சிக்கும் உண்டு.

இந்த உரிமை எந்தவிதமான தங்கு தடையற்று இருந்திட வேண்டும், பொதுத் தேர்தலில், மக்கள் தங்கள் கடமையைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமானால்.

பல்வேறு பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களைக் கேட்டிடவும், ஒரு சாராரின் கருத்துடன் மற்றோர் சாராரின் கருத்தினை ஒப்பிட்டுப் பார்த்து, நல்லன கொண்டு அல்லன தள்ளிடவும் தக்க தெளிவும், துணிவும் எழவேண்டும். ஒரு அரசுமுறையை அமைத்திட அல்லது ஒரு அரசுக் குழுவை அனுமதித்திட, என்னென்ன திட்டங்கள், பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கணக்கெடுக்க அச்சமற்ற மனப்போக்கும், சூழ்நிலையும் வேண்டும். பகைப்படைகள் சதித் திட்டத்துடன் நாட்டைத் தாக்கத் துடித்தபடி

உள்ளன என்ற நிலையை வைத்துக்கொண்டு, ஆட்சி முறை பற்றியும், ஆட்சிக் குழு பற்றியும், அதனை ஒட்டிய பிரச்சினைகளைப் பற்றியும், அவைகளை விளக்கிடப்பல்வேறு கட்சிகள் கூறிடும் வாதங்கள் பற்றியும், பொது மக்கள் அமைதியான நிலையில் சிந்தித்துச் செயல்பட முடியுமா என்று கேட்கிறேன், தம்பி!

பகைப் படைகள் விரட்டப்படாத வரையில், நெருக்கடி நிலை இருக்கும் வரையில். மக்கள் மனத்திலே ஓர் அச்ச உணர்ச்சி இருந்து வரும்; பகையினை முறியடிப்பது பற்றிய சிந்தனை முனைந்து நிற்கும்; அரசியல் பிரச்சினைகள், பல கட்சிகளின் திட்டங்கள் பற்றிய நினைப்பு எழ வேண்டிய அளவிலும் வகையிலும் எழாது.

அந்தச் சூழ்நிலையைச் சாதகமாகக் கொண்டு பொதுத்தேர்தலை நடாத்தி மீண்டும் ஆட்சியிலே அழுத்தமாக அமர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் அல்லவா, என்ன நேரிட்டாலும், திட்டமிட்டபடி 1967-ல் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது முறையா? ஏற்றுக் கொள்ளத் தக்கதுதானா? என்று எண்ணிப் பார்க்கும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பேச்சுரிமையும் இருந்திடாது, பாதுகாப்புச் சட்டமும் இருக்கும், நெருக்கடி நிலையும் நீடிக்கும், ஆனாலும் பொதுத்தேர்தல் திட்டமிட்டபடி நடந்திடும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

'ஆனாலும்' என்ற சொல் காணப்படுகிறதே, தம்பி! அது அல்ல, உண்மையில் அங்கு பயன்படுத்த வேண்டிய சொல்.

பேச்சுரிமை இருந்திடாது, பாதுகாப்புச் சட்டம் இருக்கும், நெருக்கடி நிலையும் நீடிக்கும். ஆகவே பொதுத் தேர்தல் திட்டமிட்டபடி நடந்திடும்

இவ்விதம் எண்ணுகின்றனர் காங்கிரசின் பெருந் தலைவர்கள். இதனை நான் உணர்ந்திருக்கிறேன் என்பதை உன்னிடம் எப்படி நான் கூறாமலிருக்க முடியும்?

பேச்சுரிமை இல்லை; பிரச்சினைகளை ஆராயத் தேவைப்படும் மன அமைதி மக்களிடம் இல்லை,



எவரையும் எந்த நேரத்திலும் எங்கும் பிடித் தடைக்கலாம் என்ற சட்டமும் கூராக இருக்கிறது.

மக்களுக்கு அச்சமூட்டத்தக்க விதமாக, பகைவர்களின் நடவடிக்கை இருந்து வருகிறது.

இந்த நேரமாகப் பார்த்து, நமது காரியத்தை நாம் சாதித்துக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறார்கள்.

அதனால்தான் தம்பி! நெருக்கடி நிலை நீக்கப்பட வேண்டும், அல்லது பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை நான் வெளியிட நேரிட்டது.

கட்சிகள் தத்தமது கருத்துக்களைத் தாராளமாக எடுத்துரைக்கும் சூழ்நிலையும உரிமையும் இல்லை என்று கூறுகிறபோது, காங்கிரசின் பெருந்தலைவர்கள்,

பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்காமல்

பேசலாம் என்று தெரிவிக்கிறார்கள்.

எத்தகைய பேச்சு பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கூறிடும் உரிமையும் அதிகாரமும் யாருக்கு? காங்கிரஸ் ஆட்சியாளருக்கு! அவர்களை எதிர்த்து மற்றக் கட்சிகள் போட்டியிட வேண்டும்—பொதுத் தேர்தலில். புரிகிறதா, தம்பி! பின்னப்பட்டுள்ள மாயவலை!!

பொதுத் தேர்தலில் ஈடுபட்டாகவேண்டும் என்றால், காங்கிரஸ் ஆட்சியினர் செய்தவைகளைப பற்றி ஒவ்வொரு கட்சியும் தத்தமது கருத்தினை மக்களிடம் தெரிவித்தாக வேண்டும். உணவு முனையிலே ஏற்பட்டுள்ள வேதனை நிலைமை முதற்கொண்டு, போசச் சூழ்நிலையிலும் முதலாளிகளுக்கு ஆதரவளித்திடும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கொடுமை வரையில் விளக்கி ஆகவேண்டும். வரி விதிப்பு முறைகள் பற்றிய கருத்துரையைக் கூறியாகவேணடும். ஏழை மேலும் கசக்கிப் பிழியப்படுகிறான், எத்தன் கொழுத்துக் கிடக்கிறான் என்பதனை அம்பலப்படுத்தியாக வேண்டும். பாதுகாப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் எப்படியெல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும், திருத்தப்பட வேண்டும், என்பனபற்றிப் பேசவேண்டும்.

இந்தப் பேச்சில் எந்தப் பேச்சு பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை யார் கூற உரிமை பெற்றிருக்கிறார்கள்? அதிகாரத்தில் உள்ள காங்கிரசார்! அவர்களுடன் நாம் போட்டியிட வேண்டும், பொதுத் தேர்தலில்; முறைதானா என்று கேட்கிறேன்.

தம்பி! கட்சி சார்பாக வாதாடுவதைக்கூட நிறுத்திக் கொள்கிறேன். நாட்டின் மொத்த நன்மையின் சார்பாகவே கேட்கிறேன், எவ்வளவு முறையான கட்டுக்கடங்கிய பிரசாரம் நடத்தப்பட்டாலும், சமூகத்தில் மக்கள், பல பிரிவுகளாகத்தானே நிற்பார்கள். பொதுத் தேர்தலின்போது, கசப்பு, கிலேசம், மாறுபாடு, மாச்சரியம், இவைகள் ஏற்படத்தானே செய்யும். என் கட்சி! என் வேட்பாளர்! என் ஆதரவாளர்!—என்ற பேச்சு எழத்தானே செய்யும்! இந்தநிலை, எல்லாக் கருத்து வேற்றுமைகளையும் மறந்து 'நாட்டுப் பாதுகாப்புக்காக அனைவரும் ஒரு பேரணியாக நிற்கிறோம்' என்று இன்று மகிழ்ச்சியுடன், எழுச்சியுடன், பெருமிதத்துடன் பேசிக்கொள்கிறோமே, அந்த நிலைக்குக் குந்தகம் விளைவித்துத்தானே தீரும்? இதனை வரவேற்கத்தான் முடியுமா, இது பற்றிக் கவலையற்றுத்தான் இருக்க முடியுமா?

பல பிரச்சினைகளில்; அடிப்படைப் பிரச்சினைகளில் ஆளுங்கட்சியிடம் பலத்த மாறுபாடு இருக்கிறது; அது இறந்துவிடவில்லை

இந்தி ஆதிக்கப் பிரச்சினை இருக்கிறது. பொதுத் தேர்தலிலே ஈடுபடுவது என்றாகி விட்டால், இந்தி ஆட்சி மொழியாவதனை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற 'பிரசாரம்' நடந்தாக வேண்டும்; அது இந்தி ஆதரவாளர், இந்தி எதிர்ப்பாளர் என்ற இரு முகாம்களில் அல்லவா மக்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

மெள்ள மெள்ள, ஆனால் துணிவுடன் மதுவிலக்குச் சட்டத்துக்குக் காங்கிரஸ் அரசு, சாவுமணி அடிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தக் கொடுமையைக் கண்டிக்கும் பொறுப்பிலிருந்து எப்படி நாம் விடுபட முடியும்? கண்டிக்கும்போது, கசப்பும் கொதிப்பும் எப்படி எழாமலிருக்கும்? இந்தக் கசப்பும் கொதிப்பும், ஏற்பட்டுள்ள கனிவையும் எழுச்சியையும் எப்படிப் பாதிக்காமலிருக்கும்? என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.




கசப்பு. கொதிப்பு மூட்டும்படி பேசினால் கம்பி எண்ணவேண்டி வரும் என்கிறார்கள் போலும்.

அதற்குப் பயந்துகொண்டு, பிரச்சினைகளைப் பேசாதிருப்பது என்றால், கருத்து வேறுபாடுள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் பொதுத் தேர்தல் நடாத்துவது எப்படிப் பொருத்தமுள்ளதாகும், பொருளுள்ளதாகும்?

அண்ணன்,

12—12—'65



காஞ்சிக் கடிதம் : 44

# கனிவும் கசப்பும் 2

**மணத்துக்கு அனுமதி இல்லை!**
**'மலடி' வசைமொழியும் நிற்காது!**

**உணவு நெருக்கடி காங்கிரஸ் ஆட்சியின் விளைவு!**

**பேச்சுரிமை மறுப்பது ஆளுவோர்**
**ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவே!**

தம்பி,

பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை பளிச்செனத் தெரிகிற வரையில், பொதுத் தேர்தலை நடத்தக்கூடாது என்று நான் எண்ணுகிறேன்.

பொதுத் தேர்தலுக்கு ஏற்ற சூழ்நிலை, பளிச்சென இல்லாவிட்டாலும் ஓரளவுக்காகிலும், தெரியவேண்டு மானாலும், பாதுகாப்புச் சட்ட அமுலாகிலும் நீக்கப்பட வேண்டும்.

கருத்து வேற்றுமைகளே இல்லை என்றோ, அந்த வேற்றுமைகள் இப்போது தாமாகப் போய்விட்டன என்றோ, எவ்வளவு துணிந்த பேர்வழியும் கூறிட மாட்டார். பழைய வேற்றுமைகள் மட்டுமல்ல, புதுப்புது கருத்து வேற்றுமைகள் எழுந்துள்ளன.

வேறு எங்கும்கூடச் செல்லவேண்டாம், காம ராஜரின் கருத்துக்களையே எடுத்துக்கொள்வோம்.

நிலவரி முறை மாறவேண்டும் என்று கூறி வருகிறார்.



எப்போது? எப்படி? என்று கேட்கவும், இந்தத் திட்டம் பற்றி, எட்டாண்டுப் பதவியின்போது ஏன் எண்ணிப் பார்க்கவில்லை என்றும், அதற்குப் பிறகாகிலும் மற்ற 'சகாக்களை'க் கொண்டு ஏன் முறை மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கேட்க வேண்டுமல்லவா? அதையொட்டிய பேச்சிலே இவர்கள் நிலச் சீர்திருத்த சட்டத்தையே கேலிக்கூத்தாக்கி விட்ட கொடுமையை விளக்க வேண்டுமல்லவா; அதனை விளக்கிடும்போது நில முதலைகளை நம்பிக் கிடக்கும் ஒரு கட்சி எப்படி நிலச்சீர்திருத்தம் செய்யும் என்று கேட்க வேண்டுமல்லவா? கேட்கும்போது, ஆட்சி நடாத்திடுவோருக்குப் பாலும் பழமும் சாப்பிட்ட மாதிரியாகவா இருக்கும்! எண்ணிப் பார்க்கட்டுமே நேர்மையாளர்கள்.

இப்போதே, எத்தனையோ வகைவகையான யோசனைகளை வெளியிட்டு வருகிறார்கள், பல கட்சியினர்; பல தலைவர்கள்.

இந்தியாவும்—பாகிஸ்தானும் கூட்டரசு அமைக்க வேண்டும் என்று பேசுகிறார் டாக்டர் லோகியா.

பொதுத்தேர்தலில் ஈடுபடுவதென்றால் அந்தத் திட்டம் பற்றி அவர் மேலும் சூடாகவும் விரிவாகவும் பேசத்தானே செய்வார். அந்தப் பேச்சு உள்ள தோழமையை, ஒன்று பட்ட உணர்ச்சியைக் குலைக்குமா குலைக்காதா என்று கூறும் உரிமை பெற்றவர் யார்? ஆட்சியாளர்! ஆட்சியில் உள்ள கட்சி காங்கிரஸ்! லோகியா எந்தக் கட்சியை எதிர்த்து நிற்கவேண்டும்? காங்கிரஸ் கட்சியை! முறையாகுமா? நடுநிலை நின்று பிரச்சினைகளை ஆராய்ந்திட வல்லவர்களை இது குறித்து எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனன்,

போர்! போர்! என்று சதா பேசிக்கொண்டிருக்கக் கூடாது

என்றும், ஜெயப்பிரகாஷ் நாராயணன்,

போரின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது

என்றும் பேசி வருகிறார்கள்,

இந்தக் கருத்துகள் தேவை என்ற எண்ணத்தில், பொதுத் தேர்தலில் ஈடுபடும் கட்சிகள், பேசினால், நிலைமை எப்படி இருக்கும்! விரும்பத்தகாத நிலைமையைத் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வருவது தேவைதானா? எதற்காக? இதுதான் சரியான சமயம், மறுபடியும் பதவியைப் பிடிக்க என்ற ஆசையை நிறைவேற்றிக்கொள்ளவா!! பொறுப்புள்ள போக்காகுமா இது?

அமெரிக்காவிடம் கேட்டுப்பெறும் (பி.எல். 480) உணவு இருக்கிறதே, அது குறித்து, எத்தகைய கடுமையான அபிப்பிராய பேதமிருக்கிறது. தேர்தலை நடத்துவது என்றால், அதைப் பற்றிய விவாதம் மக்கள் மன்றத்தைப் பிளவு படுத்தாதா!

மக்களைப் பிளவுபடுத்தத் தக்க பிரசாரம் தடுக்கப்படும்; ஆனால், பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

இது என்ன விசித்திரம்! மணம் செய்துகொள்ளவும் அனுமதி கிடைக்காது, மலடி என்ற வசை மொழி கூறுவதும் நிற்காது!!

இன்று மக்களை அலைக்கழிக்கும் பிரச்சினைகள் யாவும், போர் மூண்டதன் விளைவாக எழுந்தவை என்றால், இவைகளுக்கு ஆளுங்கட்சி பொறுப்பல்ல என்று கூறலாம், மெய்ப்பிக்கலாம் ஆனால், போர் மூள்வதற்கு முன்பிருந்தே இருந்து வருபவைகள், மக்களை வேதனைக்குள்ளாக்கி வரும் பல பிரச்சினைகள்.

எட்டு அவுன்சு அல்ல இரண்டு அவுன்சுதான் தர முடியும்; நாட்டைக் காத்திடும் புனிதப் போரில் ஈடுபட்டிருக்கும்போது வயிறாரச் சாப்பிட்டாக வேண்டும் என்றா எண்ணுவது; கேட்பது. நாட்டுப் பற்றுள்ளவன் அவ்விதம் கேட்கலாமா!

இவ்விதம் பெருந் தலைவர்கள் பேசும்போது, கேட்போர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். எதையும் இழந்து நாட்டைக் காத்திடவேண்டும் என்ற உணர்ச்சி எழும் நேரம் என்பதால்.

ஆனால், எட்டு அவுன்சு என்ற நிலை, போர் காரணமாகவா ஏற்பட்டது? இல்லையே! பாகிஸ்தானியப் பகைவன் கிளம்புவதற்கு ஆண்டு பல



வற்றுக்கு முன்பே அல்லவா, 'பசி' எனும் பகைவன் நாட்டு மக்களைத் தாக்கிடத் தொடங்கினான்.

ஏன் உமது ஆட்சியிலே இந்த அவலநிலை ஏற்பட்டது என்று ஆட்சியாளர்களைக் கேட்கவும், இத்தகைய அவதி நிலையை ஏற்படுத்தியவர்களையா மறுபடியும் அரியணை அமர்த்துவது என்று மக்களைக் கேட்கவும், நமக்கு உரிமை இருக்கிறது. உணவுப் பிரச்சினையை இன்றைய ஆளவந்தார்கள், குழப்பமிகுந்த செயல்களினால், மேலும் மேலும் சிக்கல் உள்ளதாக்கி விட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்து விளக்கிட வேண்டும். உணவு நெருக்கடி, சீன ஆக்கிரமிப்பின் விளைவு அல்ல; பாகிஸ்தான் படை எடுப்பினால் ஏற்பட்டது அல்ல; காங்கிரஸ் ஆட்சியின் திட்டங்கள் கோணலாகிப் போனதனால் ஏற்பட்டதாகும். எனவே இதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் காங்கிரஸ் ஆட்சியினர் ஆனால், நெருக்கடி நிலை இருப்பதனால், அவர்களுக்குத் தங்கள் குற்றங்களை மறைத்துக் கொள்ள வசதி கிடைக்கிறது. உணவுநிலை இப்படி மோசமாகிக்கொண்டு வருகிறதே என்று எவர் கேட்டிடினும்,

நாட்டுக்கு நெருக்கடி!

பகைவன் பல முனையில்!

பாதுகாப்பு! பாதுகாப்பு!

இஃதன்றி, அரிசி, கோதுமை, என்ற அற்பப் பொருள்கள் பற்றிப் பேசவே கூடாது!

நாட்டுப் பற்றுள்ளவன் சோறுபற்றிய நினைப்பா கொள்ளுவான், இந்த நேரத்தில்!

என்று முழக்கம் எழுப்பிட முனைகிறது. இங்கே இவர்கள் ஆட்சியிலே, உழவுத்தொழில் செழித்து, உணவுப் பண்டங்கள் மலைமலையாகக் குவிந்து, போதும்! போதும்! என்று சொல்லுமளவு மக்களுக்கு உணவுப் பொருள் கொடுத்து, மிகுந்ததைக் கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துக்கொண்டு இருந்து, பகைவர்கள் பாய்ந்துவந்து தாக்கி, களஞ்சியங்களைக் கொளுத்தி நாசமாக்கி, வயல்களை அழித்து, சோற்றுப் பஞ்சம் ஏற்படும்படி செய்து விட்டார்கள் என்ற நிலை இருந்தால், பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்! ஆட்சியை ஒழுங்காகத்தான் நடத்திக்கொண்டு வந்தார்கள், இல்லை என்ற சொல் எழாதபடி, மக்களுக்கு வசதிகளைத் தேடிக்கொடுத்து வந்

தார்கள்; மலைமலையாக செந்நெல் குவிந்திருக்கக் கண் டோமே! மனைகளிலே மகிழ்ச்சி பொங்கிடக் கண் டோமே! ஒரு குறையுமின்றி மக்கள் வாழ்ந்திருக்கக் கண் டோமே. பகைவர்கள் பாய்ந்துவந்து தாக்கி அல்லவா வளத்தை அழித்தார்கள், வாழ்க்கையைக் கெடுத்தார்கள். பகைவர்களால் ஏற்பட்ட படுநாசத்திற்காகப் பரிவுடன் ஆட்சி நடாத்தி வந்தவர்கள்மீது கோபித்துக் கொள்ள லாமா! அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்!—என்று மக்கள் கூறிட முடியும்—அந்தப் பெருந்தன்மை நம் மக்க ளிடம் உண்டு.

ஆனால், உணவு நெருக்கடி இன்று நேற்றா ஏற் பட்டது! காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட நாள்தொட்டு இருந்து வருவதல்லவா, இந்த உணவு நெருக்கடி.

பற்றாக்குறையும், விலை ஏற்றமும், எவரால் விளைந்தன? பகைவர்களால் அல்லவே!

தம்பி, சுதந்தரம் கிடைத்ததிலிருந்து இதுவரையில், வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட உணவுப் பொருள் களின் மொத்த மதிப்பு 2600-கோடி ரூபாய் என்கிறார் கள், பொருளாதார நிபுணர்கள்

இந்தப் பெரிய தொகையை இங்கே, காடுதிருத்திக் கழனி ஆக்கவும், பாசன வசதிகளைப் பெருக்கிடவும், உரம் தயாரித்துத் தரவும், விவசாயக் கருவிகளைச் செய் தளிக்கவும் பயன்படுத்தி இருந்திருப்பின், கணிசமான அளவு உணவுப் பொருள் இங்கேயே விளைந்திருக்கும்; தேவைக்கு மேலேயும் விளைந்து, மிகுந்ததை வெளிநாடு களுக்கும் அனுப்பி இருந்திருக்க முடியும்.

இவ்விதம் கூறுபவர் பதவிப்பசி கொண்டவரல்ல; இவர்களிடம் அருவருப்பு அடைந்த அரசியல்வாதியு மல்ல; சொல்லப்போனால் அரசியலே வேண்டாம் என்று கூறிவிட்டு, சர்வோதய இயக்கத் துக்காகத் தம்மைத் தாமே தானமாகத் தந்து விட்ட தகைமையாளர், ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

இவைகளுக்கெல்லாம் ஒரே பதில் அல்லவா வெளிவரும், இந்தச் சமயம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால்; அன்னியன் தாக்குகிறான், அறிவிலி! இந்த நேரத்திலா



அவுன்சுக்கணக்கும்; அரிசிக்கணக்கும் பேசுவது!-இவ்வளவு தானே பதில்.

ஐயா! நான் தாய் தந்தையை இழந்தவன்; என் மீது இரக்கம் காட்டி, தண்டனையை நீக்கிவிடுங்கள்; நான் தாய் தந்தையை பூஜித்துப் புண்ணியம் பெற விரும்புகிறேன். என் தவ நோக்கத்தைக் கெடுத்து விடாதீர்கள் என்று, தாயையும் தகப்பனையும் கொன்று விட்ட ஒரு கொடியவன், கூறினானாம், ஆயுள் தண்டனை விதித்த நீதிபதியைப் பார்த்து.

தாயையும் தந்தையையும் இவனே கொன்றுபோட்டான்; ஆனால் இவனே நான் தாய் தந்தையை இழந்து தவிக் கிறேன், ஆகவே என்னிடம் இரக்கம் காட்டுங்கள் என்றும் கேட்கிறான். எப்படி இருக்கிறது வேடிக்கை! உணவுப் பஞ்சம் ஏற்படும்படி செய்தவர்கள் ஆட்சி நடத்தும் காங்கிரசார். ஆனால், அவர்களே பேசுகிறார்கள், உணவுப் பஞ்சம் வந்துவிட்டது, ஆகவே, வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொள்ளுங்கள், கிடைத்ததைச் சாப்பிடுங் கள் என்று.

ஏனய்யா, இப்படி உணவுப் பஞ்சம் வந்தது? என்று கேட்டாலோ, பேசாதே! பகைவன் தாக்கு கிறான்! பாதுகாத்திடும் பணியில் ஈடுபட வேண்டிய நேரம் இது; மற்றவை பற்றிய பேச்சு எதுவும் பேசிட லாகாது என்று கூறுகின்றனர். இது எந்தவகையான நியாயம்?

நிலைமை அவ்விதம், என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்து விடுவோம் என்றாலோ, பொதுத் தேர்தல் வருகிறது, எல்லாக் கட்சிகளும் தாராளமாக ஈடுபடலாம், என்கிறார்கள். பொதுத் தேர்தலில் ஈடுபடவேண்டு மானால், அவரவர்கள் தத்தமது கருத்துக்களைக் கூற வேண்டுமே என்றால்,

கூறுங்கள், ஆனால், நாட்டுப் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படாதபடிப் பேசுங்கள்; ஏனெனில், இது நெருக்கடி நேரம் என்கிறார்கள், எந்தப் பேச்சு, பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதை எடுத்துக் கூறிட, அதற்கான நடவடிக்கை எடுத்திட உரிமை பெற்றவர்? காங்கிரஸ் ஆட்சியினர்!!

பாதுகாபபு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் பேச்சின் இலக்கணம் இப்படி இப்படி இருக்கும் என்று ஏதாகிலும் ஒரு வரையறை உண்டா? இல்லை. சர்க்கார் தமக்குக் கிடைத்திடும் தக்க ஆதாரங்களின் பேரில் நடவடிக்கை எடுக்க முற்படுவர். சர்க்கார் காட்டிடும் ஆதாரங்களை, காரணங்களை எடுத்துக்கூறச் சொல்லிக் கேட்டு, வழக்கு மன்றத்தின் மூலம் நியாயம் தேடலாமா? முடியாது! ஏன்? எந்தெந்த வகையிலே பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டது என்பது பற்றி வழக்கு மன்றத்திலே எடுத்துக் கூறினால், அந்தச் செய்தி எதிரிக்குப் பயன் பட்டுவிடும், ஆகவே, கூறுவதற்கில்லை. பிறகு? உள்ளே தான்! வேறே வழி!! இந்த நிலையில், ஆளுங்கட்சியை எதிர்த்துப் பொதுத்தேர்தலில் எந்தக் கட்சியும் போட்டி யிடலாம் வருக! வருக! விரைக! விரைக! என்று அறிவித் திருக்கிறார்கள். இது குறித்து எனக்குத் தோன்றிய ஐயப்பாட்டினை எடுத்துக் கூறியதறிந்த 'ஸ்டேட்ஸ்மன்' நிருபர் என்னை அணுகி ஒரு கேள்வி கேட்டார்.

> இந்த நிலையில், பொதுத் தேர்தலை நடத்தியே தீர்வது என்று முனைந்தால், உங்கள் கழகம், தேர்தலில் ஈடுபட முடியாது என அறிவிக்குமோ?

அவர் கேட்ட கேள்வியை வேறு பலரும் கேட்க எண்ணுவர் என்பதால், அவருக்கு அளித்த பதிலையும் இங்குக் குறிப்பிடுவது தேவை என்று கருதுகிறேன். நான் அளித்த பதில்,

> இல்லை! பொதுத் தேர்தல் நடந்தே தீரும் என்று ஏற்பட்டு விடுமானால் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடும், ஆனால், எவ்விதமான உள்நோக்கத்துடன், எத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ் ஆட்சியினர் பொதுத் தேர்தலை நடத்த விரும்புகிறார்கள்; அதிலே காணக் கிடக்கும் சூழ்ச்சி எத்தகையது என்பதை முன்னதாகவே பொதுமக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே, இதனைக் கூறி வருகிறேன்.

நெருக்கடி நிலை காரணமாக, மராட்டியத்திலும் மற்றும் சிலபகுதிகளிலும், உள்ளாட்சிக்கான தேர்தல்கள்-பேரூர்—வட்டம்—மாவட்டம் — இவற்றினுக்கான தேர்தல்கள் நடத்தப்பட மாட்டா என்று அறிவித்திருக்கிறார்கள்.



காங்கிரஸ் கட்சி, தன் அமைப்புக்கான தேர்தலையும் ஒத்திப் போட்டிருக்கிறது, நெருக்கடி நிலை காரணமாக.

நாமும் நமது கழக அமைப்பின் தேர்தல்களைத் தள்ளி வைத்திருக்கிறோம்.

நாட்டுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நேரத்தில் நேரமும் நினைப்பும்ஒன்றுபட்ட உணர்ச்சியை வளர்த்திட மட்டுமே பயன்பட வேண்டுமேயன்றி, பேதம், பிளவு, முகாம், அணி, இவைகளை உண்டாக்கிடும் செயல் க்ளுக்குப் பயன்படக்கூடாது என்பதாலே.

உள்ளாட்சித் தேர்தல்களிலே ஈடுபடுவோர், ஆட்சி முறை, சட்ட திட்டம், பொருளாதாரப் பிரச்சினை, உணவு நெருக்கடி போன்றவை குறித்து, கருத்துரைத்துக் கொண்டிருக்கப் போவதில்லை; தேவையுமில்லை. எனினும், பல கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு, அதன் காரணமாக வீண்மாச்சரியம் சச்சரவு எழ இடம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்துடன், அந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தல் என்றாலோ முழுக்க முழுக்க, 'கருத்துப்போர்' எழுந்தே தீரவேண்டிய நிலையை ஏற்படுத்திக் கொள்வது; சச்சரவும், மாச்சரியமும், நிரம்ப எழக்கூடும்; ஒன்றுபட்டுப் பணியாற்றும் சூழ்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடும்.

> இதை அறிந்தும் பொதுத் தேர்தலை நடத்திட எண்ணுவதன் நோக்கம் என்ன? பொதுத் தேர்தலை, பேச்சுரிமையற்ற சூழநிலையிலேயே நடத்திவிடுவது தான் மீண்டும் தமது ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்ளும் வழி என்பதால்!

இந்தச் சூழ்ச்சியை மக்கள் உணர்ந்திட வேண்டும் என்பதற்கே இத்தனையும் கூறுகிறேன்.

சட்ட மன்றங்களிலும் பாராளுமன்றங்களிலும், இந்த நெருக்கடி நிலையிலும் சர்க்காரின் திட்டங்களைச் சாட லாம், கண்டித்து வாக்களிக்கலாம்.

தங்கப் பத்திரத் திட்டம் முதற்கொண்டு திங்கள் இரவு விரதம் இருக்கும் திட்டம் வரையில், பாராளு

மன்றத்தில் பாராட்டியவர்கள் மட்டுமல்ல, பலமாகக் கண்டித்தவர்களும் இருக்கிறார்கள்,

தங்கப் பத்திரத் திட்டம் பற்றிப் பாராளுமன்றத்திலே வீசப்பட்ட கண்டனங்களைக் கணைகளாக்கி, பொது மேடைகளிலே இருந்து வீசிடின், தங்கம் திரட்டித் தாயகத்தைக் காத்திடும் பாதுகாப்பு முயற்சிக்கு அந்தப் பேச்சு குந்தகம் விளைவிப்பதாக ஏற்பட்டுவிடக்கூடும்; ஏற்பட்டு விட்டதாகக் கூறப்படக் கூடும்.

> ஆனால், பொதுத் தேர்தலை நடத்துவதானால், அதுபோன்ற திட்டங்கள்பற்றி ஒவ்வொரு கட்சியும் கருத்தறிவித்தாக வேண்டும்.

நெருக்கடி நிலையையும் வைத்துக்கொண்டு, பொதுத் தேர்தலையும் நடத்த முற்பட்டால், கட்சிகள் எப்படிச் செயல்பட முடியும்?

பொதுத் தேர்தலில் முழுப் பேச்சுரிமையுடன் ஈடுபடுவதானால், ஆட்சிப் பொறுப்பிலுள்ள காங்கிரஸ் அமைச்சர்கள், தலைவர்கள் ஆகிய்யாரின் நிர்வாக ஊழல்களை அம்பலப்படுத்தியாக வேண்டும்; கெய்ரோன்கள பற்றிப் பேசியாக வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பெருகிய செல்வம், எங்கே போய்விட்டதோ தெரியவில்லையே என்று காமராஜர் கேட்டாரே, அதற்குப் பதில் கூற வேண்டும்; அந்தச் செல்வம் சென்ற இடம், சென்ற வகை, அதிலே காங்கிரஸ் கட்சி பெற்ற 'பங்கு' இவைகளை வெட்ட வெளிச்சமாக்கியாக வேண்டும்,

அமைச்சர்கள் மீது கூறப்பட்டு வரும் முறைகேடுகள் பற்றிப் பொது மன்றங்களிலே பேசவேண்டி ஏற்படும். இப்போதே சட்ட மன்றங்களிலும், சிலர் துணிந்து பொது மன்றங்களிலும், இவைபற்றிப் பேசிக்கொண்டு வருகின்றனர்.

காங்கிரசுக்கும் பிற கட்சிகளுக்கும் இடையிலே உள்ள கருத்து மாறுபாடு காரணமாக மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே, ஆதிக்கம் செலுத்தும் குழு, அகப்பட்டுக்கொண்டு விழிக்கும் குழு என்று ஒரு 'முகாம்' ஒவ்வோரிடத்தில் இருந்து வருகிறது. இதன் காரணமாக



ஏற்படும் சச்சரவின்போது, பல ஊழல்கள் வெளியாகின்றன, பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன,

**ஒரிசாவில்**, முன்னாள் முதலமைச்சர், டாக்டர் அரிகிருஷ்ணமேதாப், 'போட்டிக் காங்கிரஸ்' மாநாடே நடத்தினார் சென்ற மாத இறுதியில்.

ஒரிசா சட்டசபை உறுப்பினர்கள் பலரும், பல மாவட்டத் தலைவர்களும் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டுள்ளனர். மாநாட்டிலே என்ன பேசப்பட்டது தெரியுமா, தம்பி! இன்று ஒரிசாவில் ஆட்சி செய்யும் காங்கிரசை எப்படியும் வீழ்த்தியாக வேண்டும் என்பது பற்றி.

> பொறுத்துக்கிடந்தோம். மேலிடம் நியாயம் வழங்கும் என்று காத்துக்கிடந்தோம் ஊழல் நாற்றம் சகிக்க முடியவில்லை. ஆட்சிப் பொறுப்பில உள்ள பலர்மீது இலஞ்சக் குற்றம் இருக்கிறது.

இவை அவர்கள் எடுத்துக்காட்டிய காரணங்கள்.

> காங்கிரசைவிட்டு விலகி விடுவதாக அறிவித்து விடுவோமே, என்று ஒருவர் கூறுகிறார். டாக்டர் அரிகிருஷ்ணமேதாப், விலகிவிட்டோம் என்று அறிவித்தால்தானா! மேலிடத்துக்கு நாம் ஒரு தனிக் கட்சியாக இருந்து வருவது ஏற்கனவே தெரியாதா!

இன்று ஆட்சியை நடத்தும் கூட்டத்தை விரட்டி அடிக்க வேண்டும் என்பது நமது நோக்கம்; அதனை நாம் ஏற்கனவே வெளிப்படையாகக் கூறியாகிவிட்டது என்கிறார். அனைவரும், அடுத்த பொதுத்தேர்தலில், காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக முடிவு செய்துள்ளனர் ஒருவர், காங்கிரஸ் 'டிக்கட்' கொடுத்தாலும் ஏற்கப்போவதில்லை என்று ஆத்திரத்துடன் பேசினார்.

ஒரிசா காங்கிரஸ் சர்க்கார் போடும் புதிய வரிகளைக் கண்டித்ததுடன், அந்த வரிகளை எதிர்க்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

> உணவுப் பிரச்சினையைத் தக்க முறையில் விரைவில் தீர்த்து வைக்காவிட்டால், பெரியதோர் கிளர்ச்சி நடத்தப்படும் என்று மேதாப் அறிவித்திருக்கிறார்.

இந்த எதிர்ப்பும் கொதிப்பும், பொதுத் தேர்தல் நடத்தப் படுவது என்றால், எத்தனை வேகமாகும்; என்மென்ன விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படக்கூடும் என்பது பற்றிய எண்ணமே காணோம் காங்கிரசின் பெருந் தலை வர்களுக்கு ஏன்? நெருக்கடி நிலை நீடிக்கிறது,பேச்சுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது, இந்தச் சூழ்நிலையைச் சாதக மாக்கிக்கொண்டு, எதிர்ப்புக் குரலை அடக்கிவிடலாம் என்ற தைரியம்.

இத்தனை சூழ்ச்சித் திறத்துடன், காங்கிரஸ் கட்சி யினர் எளிதாக ஆதிக்கத்தைக் கெட்டிப்படுத்திக்கொள்ள, பொதுத் தேர்தலை நடத்த விரும்புகிறார்கள். அதனை விளக்க வேண்டிய கடமை உணர்ச்சியில் இத்னைக் கூறி னேன்; பலன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கவலை இல்லை; நிலைமையை விளக்கி இருக்கிறோம் என்ற அளவிலே மகிழ்ச்சி அடைகிறேன். ஒன்று கூற விரும்புகிறேன், ஜனநாயகத்தையும் பேசிக்கொண்டு, ஒரு கட்சி ஆதிக்கத்துககாக இத்தனை சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும், ஒரே அடியாக, நேர்முக மாக, இனி இங்கு ஒரு கட்சி ஆட்சிதான்! என்று சட்டம் இயற்றிக் கொள்ளலாம். ஜனநாயக முறை இருப்பதாக எண்ணிக்கொண்டு, பல கட்சிகள் நம்பி மோசம்போகும் கொடுமையாவது இல்லாமற் போகும்.

இந்த என் எண்ணத்தைச் சிலருடன் எடுத்துரைத்த போதுதான், பலருக்கு இதேவிதமான எண்ணம் இருப்பது எனக்குத் தெரியவந்தது. சிலரிடம் கேட்டானாம், பலர் கருத்து தெரிந்து கொண்டானாம், பார்த்தீர்களா இவன் காட்டும் தப்புக் கணக்கை என்று பேச்சாளர்கள் சொற் பொழிவு ஆற்றக்கூடும். தம்பி! சிலரிடம் நான் பேசினேன், அவர்கள் தமது கருத்தையும் தாம் மற்றவர்களுடன் பேசியதையும் கூறினர்; அதனால் பலருடைய கருத்து தெரியவந்தது. என் கடமை அல்லவா! வேறு என்ன நான் உனக்குத் தர இருக்கிகது, எனக்குத் தோன்றும் எண் ணத்தை அனுப்பித் தருவதைத் தவிர,

அண்ணன்,

19—12—'65

காஞ்சிக் கடிதம் : 45

# அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! - 1

**சுதந்தரத்துக்கு முன் பேசியதை இன்று மறந்தோமே!**

**உள்நாட்டான் ஆட்சியை எதிர்ப்பது**
**அத்தனை எளிதன்று!**

**உள்ளதை உள்ளபடி உரைப்பதே உன்னதப் பண்பு!**

தம்பி,

கொள்ளைச் சம்பளம் ஒழிக!

குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக!

அதிகாரவர்க்கம் அடியோடு ஒழிக!

ஆடம்பரச் செலவு ஒழிக! ஒழிக!

இவ்விதமான முழக்கம் நாடெங்கும் எழுப்பப்பட்டு வந்ததே, நினைவிலிருக்கிறதா! ஆத்திரம் பீறிட்டுக் கிளம்புமே! அக்கிரமம்! அநியாயம்! என்று பலரும் கூறு வார்களே, சபிப்பார்களே, கவனமிருக்கிறதா! ஏழை இங்கே சோற்றுக்குத் 'ததிங்கிணத்தோம்' போடுகிறான். அவனைக் கசக்கிப் பிழிந்து வரி வாங்கிக் குவித்துக் கொண்டு 'பரங்கிப்பயல்கள்' குடித்துவிட்டுப் புரளுகிறார் களே. இது அடுக்குமா? குந்தக் குடிசையின்றி ஏழை வதை

படுகிறான், குளிப்பதற்குப் பளிங்குக் குளம் அமைத்துக் கொண்டு கொட்டமடிக்கிறான் வெள்ளையன், இது நீதியா! குமுறிக் குமுறிச் சாகிறான் ஏழை இங்கு, இந்த நாட்டில் பிறந்தவன்; எந்த நாட்டிலேயோ இருந்து இங்கே வந்தவன், தான் வளர்க்கும் குச்சி நாய்க்குப் ''பிஸ்கட்டு'' தருகிறானே, பார்த்தீர்களா அக்கிரமத்தை! ஆடை இல்லை, இந்த நாட்டுக் குடிமகனுக்கு, வந்தவன் வசித்திடும் மாளிகை ஜன்னலுக்கு வண்ணத் துணியாலே அலங்காரம் செய்கிறானே, காண்போரின் கண்கள் கனலைக் கக்காதிருக்குமா? வரி! வரி! வரி! ஓயாமல் வரி! எதற்கும் வரி! எப்போதும் வரி! அவ்வளவும் எதற்குப் பயன்படுகிறது; வந்தவன் ஆயிரக்கணக்கிலே சம்பளம் பெறத்தானே! இத்தகைய அக்கிரம ஆட்சியை அகற்ற வேண்டாமா!

கொள்ளைச் சம்பளம் ஒழிக!

குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக!

அதிகாரவர்க்கம் அடியோடு ஒழிக!

ஆடம்பரச் செலவு ஒழிக! ஒழிக!

இதுபோல எழுப்பப்பட்ட முழக்கம் கேட்கப்படாத ஊர் இல்லை! ஒவ்வொரு நாளும் முழக்கம்! ஒவ்வொரு முழக்கமும் அடிவயிற்றிலிருந்து! ஒரு கூட்டம் கிளப்பிய கூச்சல் அல்ல, ஒரு நாடு எழுப்பிடும் நாதம், விடுதலைக்கான கீதம், அன்னியனை விரட்டிடும் துந்துபி, ஆத்ம பலத்தின் எதிரொலி! — இவ்விதமாகவெல்லாம் பேசப்பட்டது நினைவிலிருக்கிறதல்லவா?

நினைவிலிருக்கிறது அண்ணா! நினைவிலிருக்கிறது; ஆனால், இப்போது எதற்காக அதனை நீ நினைவுபடுத்துகிறாய்? அந்த முழக்கம், தேசிய ஆர்வத்தின் காரணமாக எழுந்தது. தூங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பி விட்டது. கேடான ஆட்சியை எதிர்த்திடும் ஆற்றலை அளித்தது. நல்லாட்சி அமைத்தாக வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்தது. நமதாட்சி அமைத்திடும் உறுதி பிறந்தது, தேசிய எழுச்சி எழிலுடன் விளங்கிய நாட்களில் கிளம்பிய முழக்கம்.

கொள்ளைச் சம்பளம் ஒழிக!

குட்டிக் குபேரர் கூண்டோடு ஒழிக!



என்பன போன்றவை! இப்போது அவை உன் நினைவிலிருக்கிறதா என்று கேட்டிடக் காரணம் என்ன என்கின்றாய், தம்பி! அந்த நாட்களையும், அதுபோது சொன்னவைகளையும் மறந்தேவிட்டோம், என்று நான் அல்ல, பதவியில் உயர்ந்தவர் அந்த நாட்களில் முழக்க முன்னணி நின்றவர் சொல்லியிருக்கிறார். அதனால்தான் நான் உன்னைக் கேட்கிறேன், அந்த நாட்களில் எழுப்பப்பட்ட முழக்கங்கள் நினைவிலிருக்கிறதா என்று.

நாட்டு விடுதலைக்காக மூட்டிவிடப்படும் ஆர்வம், இதயத்தில் கொழுந்துவிட்டு எரிவது, உலகெங்கும் காணக் கிடக்கும் ஓர் உன்னதம். இந்நாட்டுக்கு மட்டுமே உரியது அல்ல. அந்த ஆர்வம் தந்திடும் ஆற்றல், அடிமைத் தளைகளை உடைத்திடும், அன்னிய ஆட்சியை விரட்டிடும், நமது ஆட்சியை அமைத்தளித்திடும், அதிலே ஐயமில்லை. அஃது இங்கும் நம் கண் முன்பாகவே நடைபெற்றுவிட்டது.

முழக்கம் எழுப்புவதும், முறையாக முனைந்து பணியாற்றினால் பலன் கிடைப்பதும் கடினம் அல்ல; குருதி கொட்டிடவும் குடும்பத்தைச் சிதைத்துக் கொள்ளவும் குண்டடிபட்டுச் சாகவும் குலக்கொடி அறுக்கப்படுவதைத் தாங்கிக்கொள்ளவும் தேவைப்படும் வீரம், தீரம், தியாகம் அந்த முழக்கம் எழுப்பிடும்; ஐயமில்லை.

ஆனால், விடுதலை கிடைத்த பிறகு, சொந்த ஆட்சி அமைந்த பிறகு, முன்பு எழுப்பிய முழக்கம், நினைவில் இருப்பதுதான் கடினம். அந்த முழக்கம் எழுப்பியபோது என்னென்ன எழிலான 'எதிர்காலம்' மனக்கண் முன் தென்பட்டதோ, அந்த நினைவு நெஞ்சைவிட்டு அகலாமலிருப்பதுதான் கடினம்.

அக்கிரமத்தைக் கண்டித்து முழக்கம் எழுப்பிடும் போது, அந்த அக்கிரமத்தை வீழ்த்திவிட்டு, நீதியை அரியணை அமர்த்தவேண்டும் என்ற ஆர்வம், பின்னிப் பிணைந்து இருக்கிறது. அக்கிரமம் ஒழிக்கப்பட்டான பிறகும், எந்த நோக்கத்துடன் அன்று முழக்கம் எழுப்பினோம் என்ற நினைவு மட்டும் கலையாமல், குலையாமல் இருக்குமானால், அறம் அரசோச்ச வழி காணும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட முடியும்; வெற்றி பெற முடியும். முழக்கம் பற்றிய நினைவே அற்றுப் போய் விட்டால்? எழுச்சி கொந்தளித்துக் கொண்டிருந்த நாட்களில், என்

னென்ன திட்டமிட்டோம் என்ற நினைவு நசித்துப் போய் விட்டால்! வாதாடிப் போராடி, ஒளிவிளக்கைப் பெற்ற பிறகு, அதற்கு எண்ணெய் பெய்து, திரியிட்டு, ஏற்றி வைக்காவிட்டால்! இருளே ஒழிக! ஒளியே வருக! என்று முழக்கம் எழுப்பி, ஒளிவிளக்கினைப் பெற்றதனால் என்ன பயன்? இல்லையல்லவா! ஆகவேதான், விடுதலைக்கான ஆர்வத்துக்காக எழுப்பிய முழக்கம் பற்றிய நினைவு விடுதலை பெற்ற பிறகும் இருந்திட வேண்டும் என்கின் றனர் நல்லோர்.

விடுதலைப் போராட்ட காலத்தில், பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்த நாட்களில், அந்த ஆட்சியை என் னென்ன காரணத்துக்காகக் கண்டித்தோம், எதிர்த்துப் போரிட்டோம் என்பது விடுதலை பெற்ற பிறகு, சுய ராஜ்யம் கண்ட பிறகு மறந்தே விட்டோமே, இது ஆகுமா என்று ஆயாசத்துடன் கேட்கிறார், முழக்க முன்னணியில் நின்றவர்; இன்று சுயராஜ்ய சர்க்காரில் இடம் பெற்றுள் ளவர்; அமைச்சர்.

அன்று எழுப்பிய முழக்கம் அவ்வளவும் மறந்தே போனீர்களே, முறையாகுமா! முன்பு கொண்டிருந்த இலட்சியம் யாவற்றையும் விட்டுவிட்டீர்களே, ஆகுமா, ஐயன்மீர்! முன்பு கூறினவற்றை இன்று நினைவிலே இருந்தே அகற்றிவிட்டீர்களே, தகுமா அரசாளவந் தோரே! என்று நானோ நீயோ கேட்டால், தம்பி! அதே அமைச்சரேகூட ஆர்த்தெழுந்து, ஆஹா! அங்ஙனம் சொல்லலாமா! நாங்களா இலட்சியத்தை மறந்திடுவோர்! எம்மைப் பார்த்தா கேட்கின்றீர்கள் துடுக்குத் தனமாக, பழைய நினைவுகள் உள்ளனவா என்று!—என்றெல்லாம் சாடுவார். ஆனால் அவரே கூறிவிட்டிருக்கிறார், அந்த நாளில் நாம் பேசியதை இன்று மறந்துவிட்டோமே என் பதாக. அன்று பேசியது என்னென்ன என்பது பற்றிய முழுப்பட்டியலை அவர் தரவில்லை. கோடிட்டுக் காட்டி யிருக்கிறார், அறிவுத் தெளிவுள்ள மக்கள் அதிலிருந்தே முழுவதையும் உணர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை யுடன்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது அதிகார வர்க்கத் துக்காகப் பெருஞ் செலவு செய்யப்படும் அக்கிரமத் தைக் கண்டித்துப் பேசி வந்தோமே, அதனை இன்று நாமே மறந்து விட்டிருக்கிறோமே



என்ற அளவு மட்டுமே அவர் பேசியிருக்கிறார், ஆனால் 'அன்றும் இன்றும்' எனும் தொடரும், 'நிலையும் நினைப் பும்' எனும் தொடரும், தன்னாலே மனக்கண் முன்வந்து நிற்கிறதல்லவா?

அன்று அன்னிய ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி நடாத்தியபோது, கண்டித்துப் பேசிய பலவற்றிலே ஒன்றை மட்டுமே அமைச்சர் குறிப்பிட்டுக் காட்டினார், அதிகார வர்க்கத்திற்காகச் செலவிடப்படும் பெருந் தொகை நாட்டு மக்களின் முதுகெலும்பை முறித்திடும் பெரிய சுமையாக இருப்பதனை. பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த பல கேடுகளிலே, அதிகாரவர்க்கம் பெருத்ததும் கொழுத்ததும், வரித்தொகையில் பெரும் பகுதியை உறிஞ் சியதும் ஒன்றாகும்.

வயலுக்குப் பாய வேண்டிய தண்ணீரில் பெரும் பகுதியை வாய்க்காலே குடித்துத் தீர்த்துவிட்டால், வள மான விளைச்சல் எங்ஙனம் கிடைத்திட முடியும்? அது போலவே மக்களிடம் பெற்றிடும் வரிப்பணத்தில் பெரும் பகுதியை அதிகார வர்க்கம் கொழுத்திடவே செலவிட்டு விட்டால், மக்களுக்கு நல்வாழ்வு அமைப்பதற்காகத் தேவைப்படும் செலவுக்குப் போதுமான பணம் எங் கிருந்து கிடைக்கும்?

வரி வாங்குவது மக்களின் நலன்களைப் பெருக்கிடவே என்ற உணர்வும் பொறுப்பும், அக்கறையும் இருக்கு மானால், அதிகார வர்க்கத்தைக் கொழுத்திடச் செய்வதற்குப் பெரும் பொருளைச் செலவிட மனம் இடந் தருமா?

பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு, அந்தப் பரிவும் பொறுப்பும் இல்லை. அன்னியர் என்ற காரணத்தால்; அடக்கி ஆளவந்தவர்கள் என்பதனால்; சுரண்டல் யந்திர மாகவே சர்க்காரைக் கருதிய காரணத்தால்!

இந்தக் காரணத்தால்தான், பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போரிட்டபோது,

கொள்ளைச் சம்பளம் ஒழிக! என்றும்

கோலாகல தர்பார் ஒழிக! என்றும்

முழக்கம் எழுப்பப்பட்டது; விடுதலைப்போர் தொடுக்கப்பட்டது; வெற்றி கிடைத்தது; அன்னியராட்சி அகற்றப்பட்டது.

கொள்ளைச் சம்பளமும் கோலாகல தர்பாரும் ஒழிய வேண்டும் என்று எழுப்பிய முழக்கமும் அதன் தொடர்பான எண்ணமும், விடுதலை பெற்ற பிறகு நினைவிலே இருக்குமானால், நமது ஆட்சி அமைத்ததும்,

கொள்ளைச் சம்பளமும்

கோலாகல தர்பாரும்

ஒழிக்கப்பட்டு, மக்களின் நல்வாழ்வுக்கான வகையில், வரிப்பணம் செலவிடப்பட்டிருக்கும்.

அவ்விதம் இல்லையே என்பதுதான், அமைச்சருக்கே உள்ள வருத்தம். அன்று கொண்டிருந்த எண்ணம் இன்று நினைவிலே இல்லையே என்பது அவருக்கு வியப்பையும் வேதனையையும் தந்திருக்கிறது; அதையெல்லாம் மறந்தே போய்விட்டோமே! என்று கூறிக் குமுறுகிறார்.

ஆட்சியில் உள்ளவர்களைப் பார்த்து, முன்பு சொன்னதையெல்லாம் மறந்தே போனீர்களே, இது முறையா என்று கேட்க வேண்டும்; கேட்டிடும் துணிவு எளிதிலே வருவதில்லை.

சென்னைக் கூட்டமொன்றில் பேசும்போது கிருபளானி சொன்னார், அன்னியனின் கொடுங்கோன்மையை ஒழித்துக்கட்ட ஒரே ஒரு பலமான முயற்சி போதும், வெற்றி கிடைத்திடும்,

ஆனால் நம் நாட்டவர்களே நம்மை ஆளும்போது அவர்கள் எண்ணிக்கைப் பலத்தைக்காட்டி நடத்திடும் கொடுங்கோன்மை இருக்கிறதே அதை எதிர்த்து ஒழித்திட ஒரு முயற்சி போதாது, தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொண்டாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஒரு நாட்டு மக்களை அடிமை கொண்டிடும் அன்னியன் நடத்திடும் தர்பார் கொடுங்கோன்மை என்று உணருவதும், அதனை எதிர்த்துக் கொதித்து எழுவதும் எவ்வளவு எளிதானதோ, அத்தனை எளிதானதல்ல, நம்மவர்களே நம்மை ஆளத்தொடங்கி கொடுங்கோன்



மையை நடாத்தும்போது எதிர்த்திடுவது, அதிலே வெற்றி காண்பது.

பாய்ந்து வரும் புலியை அடித்துக் கொன்றிடலாம், ஆற்றலைப் பெற்றுக் கொண்டால். ஆனால் உடலுக்குள் புகுந்து கொள்ளும் கெட்ட கிருமிகளைக் கண்டறிந்து கொல்லுவது அவ்வளவு எளிதானதல்ல. மிகப் பக்குவமான மருத்துவ முறையின் மூலமாக மட்டுமே நோய்க் கிருமிகளை அழித்திட முடியும்.

நம்முடைய ஆட்சி நடக்கிறது என்ற நினைப்பே தேனாக இனிக்கும். நெடுங்காலம். கேடுகள் கிளம்பித் தேளெனக் கொட்டும்போதுகூட, தேனுண்ட மயக்கம் பற்றிக் கொண்டிருக்கும், விட்டுவிட மறுக்கும்.

நம்மவர்களா நமக்குக் கேடு செய்வார்கள்,

அத்தனை ஆற்றலுடன் விடுதலைப் போர் நடத்தியவர்களா விபரீதம் புரிவார்கள்,

இலட்சிய முழக்கம் எழுப்பியவர்களா மக்களை அலட்சியப் படுத்துவார்கள்;

கொடுங்கோன்மையை எதிர்த்தவர்களா, கொடுங்கோலர்களாகி விடுவார்கள்.

நமக்கு நலன் பல காணத்தானே அவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர்,

நாமாகப் பார்த்துத்தானே அவர்களை ஆட்சியில் அமர்த்தினோம்,

ஏழைக்குக் கேடுகள் என்னென்ன வடிவில் இருக்கும் என்பதை எடுத்துச் சொன்னவர்கள்தானே இன்று ஆட்சியில உள்ளனர்,

கொள்ளைச் சம்பளம் ஒழிக! கோலாகல தர்பார் ஒழிக! என்று முழக்கம் எழுப்பியவர்கள்தானே இன்று முடிசூடா மன்னராகி உள்ளனர்

என்ற எண்ணம், மக்களிடம் நிரம்பி நின்றிடும். அதன் பிடியிலிருந்து விடுபட்டு, நமது வீட்டு நெருப்பு என்பதாலே அது சுட்டெரிக்காமலிருந்திடுமோ, திருவிளக்கு எனினும் முத்தமிட்டால் உதடு புண்ணாகாது போகுமோ, நம்மவர்கள் ஆட்சி என்பதாலேயே, பொல்லாத தெல்

லாம் நல்லது ஆகிவிடுமோ, தங்கத்தாலான தெனினும் விலங்கு விலங்குதானே என்று உண்மையை உணர்ந்திட, எளிதிலே முடியாது. உணர்ந்த பிறகோ, நாமாகப் பார்த்து, நல்லது நடக்கும் என்று நம்பி, ஆட்சியில் அமர்த்திவிட்டவர்களை, நாமே எப்படி எதிர்ப்பது என்ற தயக்கம் குறுக்கிடும்.

அதுபோலவே, ஆட்சியில் அமர்ந்ததும், அலட்சியப் புத்தியினாலோ, ஆணவத்தினாலோ, கூடா நட்பினாலோ, கூட்டுக் கொள்ளைப் போக்கினாலோ இலட்சியங்களைக் காற்றிலே பறக்க விட்டு விட்டு, ஆணவ அரசு நடாத்திடும் நிலையிலும்,

இந்த மக்களுக்காக என்னென்ன இன்னலை ஏற்றோம்!

இவர்களை அன்னியன் பிடியிலிருந்து விடுவிக்க எத்தனை அரும்பாடு பட்டோம்!

விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வை இவர்கட்கு ஊட்டினதையும் மறந்தனரே! தலைவரே என்றும் தயாபரா என்றும், தாள் பணிவோம் என்றும். உடல் பொருள் ஆவியைத் தருவோம் என்றும் பேசி வந்த இந்த மக்கள்,-முறையா என்றும், சரியா என்றும், ஆகுமா என்றும், அடுக்குமா என்றும், நமமையே எதிர்த்துப் பேசுகிறார்களே, நன்றி கெட்ட நிலையில்!

என்று எண்ணிக் கோபித்துக் கொள்வதும், புத்திமதி புகட்ட முனைவதும், அதற்கும் மக்கள் கட்டுப்படாமலிருந்திடின்,

சுயராஜ்யம் என்றால், சுக்கல்ல மிளகல்ல என்றும்,

ஆட்சியை எதிர்த்திடின் அடக்கியே தீருவோம் என்றும்,

கலாம் விளைத்திடின் தண்டனை தருவோம் என்றும்,

மிரட்டிப் பேசிடவும், கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்துவிடுவர். அடக்க அடக்க, எதிர்ப்பு வளர்ந்திடக் கண்டாலோ,



நாட்டுப்பற்று அற்றவர்கள் நாசவேலைத் திட்டமிடுகிறார்கள் என்றும்,

வெளியேறிய அன்னியனை மீண்டும் அரசபீடம் ஏற்றச் செய்யப்படும் சூழ்ச்சி இது என்றும்,

ஆயுத பலமிக்க அன்னியனை விரட்டிய எமக்கு, இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கி ஒடுக்குவது முடியாததாகுமா என்றும்,

பெற்ற சுதந்தரத்தைப் பேணிக் காத்திடும் கடமைக்காக, பொறுப்பற்றவர்களை அடக்கித் தீரவேண்டியது எமது கடமை என்றும்,

கிளர்ச்சி மூட்டி கலாம் விளைவித்து ஆட்சியைக் கைப்பற்ற ஒரு சதிக் கும்பல் வேலை செய்கிறது என்றும்,

பதவிப் பித்தம் பிடித்தலையும் ஒரு கூட்டம், சட்டத்தையே துச்சமென்று எண்ணிச் செய்திடும் 'அராஜக'த்தை அடக்கிடும் ஆற்றல் எமக்கு உண்டு என்றும்,

புதிதாக விடுதலை பெற்றுப் பொன்னாடாக நம் நாட்டைச் செய்திடும் புனிதப் போர் நடாத்திவரும் வேளையில், புல்லர்கள் கிளம்பி உள்ளனர்; பொசுக்கியே தீருவோம் என்றும்,

நாட்டுப் பற்று என்றால், உரிமை! உரிமை! என்று சதா கூச்சலிடுவது அல்ல;

கடமை! கடமை மறவாதீர் என்றும்,

மிரட்டியும் மயக்கியும். எதிர்ப்பினை முறியடித்திட முனைவர்.

வெளிநாட்டானை எதிர்த்து ஒரு நாட்டு மக்கள் நடாத்திடும் போர், தேசிய விடுதலைப்போர் எனும் சிறப்புப் பெயர் பெற்றிடும்; பற்பல நாட்டினரும் பாராட்டி வரவேற்பர், சிற்சில நாட்டினர் துணையும் புரிவர்.

ஆனால், ஒரு நாட்டு மக்களை அந்நாட்டு மக்களிலேயே சிலர் ஆண்டிடும்போது ஆட்சிக் கொடுமையினை எதிர்த்து, கிளர்ச்சி நடத்திடின், அதனைச் சட்டத்தையும்

ஒழுங்கையும் குலைத்திடும் செயலென்றும். கலகம் குழப்பம் மூட்டிடும் செயலென்றும், உள்நாட்டுக் கலவரம் விளைவித்திடும் பயங்கரமென்றும் ஆட்சியினர் கூறிடுவர்; பற்பல நாட்டினர் ஆமென்பர்; சிற்சிலர் மக்களின் மனக் குமுறலைக் கவனித்துப் பரிகாரம் தேடித்தருவதே முறை என்று வாதிட முன்வந்திடின், 'உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது, சர்வதேச நியதிக்கே முரணானது' என்று பேசிடுவர்.

இத்தனை இன்னல்கள் எழும் என்பதனால்தான் கிருபளானி அவர்கள், வெளிநாட்டானின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒழிப்பது எளிதான காரியம், உள் நாட்டானே ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு கேடு செய்திடின், அந்த ஆட்சியை எதிர்த்து நிற்பதும், மாற்றி அமைப்பதும் அத்தனை எளிதானதல்ல என்று கூறினார்.

மயக்கவும் மிரட்டவும் வசதியும் வல்லமையும் பெற்றுக்கொள்ளும் நம்மவர் நடத்திடும் ஆட்சியை மாற்றி அமைத்திடும் ஆற்றல் மக்களுக்கு ஏற்பட்டா லொழிய, உண்மையான மக்களாட்சி, நல்லாட்சி மலர்ந் திடாது.

அந்த ஆற்றலுக்கு அடிப்படை, ஆட்சியை ஏற்றுக் கொண்டவர்கள், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எதை யெதைச் சொன்னார்களோ, அவைகளை மறவாமல், நடந்து கொள்ளுகிறார்களா என்பதை, விழிப்புடன் இருந்து கண்டறியும் திறனும், தவறி நடந்திடின் தடுத் திடும் கடமை உணர்வும், மக்களிடம் வளர வேண்டும்

அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! இப்போது அடித்துத் துரத்திட துணிந்தாயே! வாழ வைப்பேன் என்று கை அடித்தாயே, இப்போ வாட்டி வதைக்கிறாயே வாழ்வையே!—என்று கொடுமை செய் திடும் கணவனை அழுகுரலிலாகிலும் மனைவி கேட்டிடக் காண்கிறோம்! ஆட்சி நடாத்திடுவோர் முன்பு சொன்ன வைகளை மறந்து தவறான போக்கிலே செல்லும்போது ஆகுமா இது என்று கேட்டிடவும் அன்றையப் பேச்செல் லாம் நினைவிலே இல்லையா என்று கேட்கவும் மக்கள் முன்வந்தாக வேண்டும்; தன் ஆடையே என்றாலும் அழுக்கு ஏறிவிடின் வெளுத்தாகவேணடும்.

ஒருசிலர் துணிந்து கடமையாற்றிடும்போது, அவர் களிடம் கடும் கோபம்கொண்டு, தாக்கிடும் போக்கிலேயே



ஆட்சியினர் உள்ளனர் என்றாலும், சிற்சில வேளைகளில், அவர்களையும் அறியாது உணமை நிலைமையை அவர் களே எடுத்துக் காட்டிவிடுகின்றனர்.

அத்தகைய ஒரு நேரத்தில் என்று எண்ணுகிறேன், தம்பி! டில்லிப் பேரரசின் அமைச்சர் அளகேசன் அவர்கள்,

> திட்டப்படும் திட்டங்களுக்காகச் செலவிடப் படும் பணத்திலே பெரும்பகுதி வீண் ஆடம்பரத்திற் காகவும், அதிகார வர்க்கத்துக்காகவும் செலவழிக்கப் பட்டு விடுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து வந்த போது, அதிகாரிகளுக்கான செலவு பெரிய பளுவாகிப் போயிருப்பதை நாம் கண்டித்து வந்தோமே, இப் போது, அதனை மறந்தே போய்விட்டோமே!

என்று பேசி இருக்கிறார்.

பக்திப் பாசுரங்களில் அளகேசன் அவர்கள் நிரம்ப ஈடுபாடுள்ளவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாகவோ என்னவோ ஏற்பட்டு விட்ட குறைபாட் டினை அவரே எடுத்துக்காட்டிட முனைந்திருக்கிறார்.

மாயலோகமிது என்பதனை மறந்தேனே!

மாநிதி திரட்டிடவே முனைந்தேனே!

மாபாதகச் செயலில் அமிழ்ந்தேனே!

மாதேவன் மன்னித்திடுவானோ

என்றெல்லாம் உள்ள பதிகம்போல, அதிகாரவர்க்கத்திற் காக ஏராளமான பணத்தைக் கொட்டி அழுகிறீர்களே ஆகுமா என்று அன்று கேட்டோமே; இன்று அதனை அடி யோடு மறந்துவிட்டோமே என்று பேசியிருக்கிறார்.

திட்டங்களுக்காக ஒதுக்கும் தொகையிலே பெரும் அளவு, சொகுசான விடுதிகளை (அதிகாரிகளுக்காக)க் கட்டச் செலவழித்து விடுவது பற்றியும்,

திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள பல தொழில் அமைப்புகளில் அதிகாரிகளுக்காக அமைக் கப்படும் சிங்காரத் தோற்றம் கொண்ட சிறு நகரங் கள் போன்ற நேர்த்தி, தொழிற்சாலையிலே காணப்

படுவதில்லை என்றும் அமைச்சர் அளகேசன் கூறி னார்; குமுறினார்.

உள்ளதை உள்ளபடி உரைத்திடுவது உன்னதமான பண்பு என்ற முறையில், இதனை நான் வரவேற்கிறேன்; ஆனால் இந்தக் குறைபாடு ஏற்படுவதற்குக் காரணமாக உள்ள ஆட்சியில் பொறுப்பான பங்கு பெற்றிருப்பவர் என்ப தாலே, இவரும் அதற்கு 'உடந்தை'யாக இருந்தார் என் பதனை எப்படி எடுத்துக்காட்டாதிருக்க முடியும்?

மக்களின் பணம் பாழாக்கப்பட்டிருக்கிறது இதனை ஒப்புக்கொண்டுவிடுவது, இழைக்கப்பட்டு விட்ட கேட்டினைத் துடைத்துவிடுமா!!

இனி, இதுபோலப் பணம் பாழாகி இருப்பது, இதுவரை யில் தெரியாமலிருந்தது. எவரும் இதனை இதற்கு முன்பு எடுத்துக் காட்டிடவில்லை. அதனால்தான் இந்தக் கெடுதல் ஏற்பட்டுவிட்டது என்று வாதாடுவார்களேல், தம்பி! அது மிகமிகச் சொத்தையான வாதம் என்றே கூறுவேன். ஏன் என்று கேட்கிறாயா, தம்பி! தக்க காரணத்தோடுதான் அவ்விதம் சொல்லுகிறேன். அதற் கான விளக்கம் அடுத்த கிழமை தருகிறேன்.

அண்ணன்,

26—12—'65

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம்: 46

# அன்ன மென்றும் சொர்ண மென்றும் சொன்னாயே!-2

சுண்டைக் காய் கால் பணம்;
சுமை கூலி முக்கால் பணம்!

அமைச்சர் பேசும் பேச்சு
வெறும் பசப்புப் பேச்சு!

ஒரேவித வேலைக்கு
இருவேறு அதிகாரிகள்!

'தர்பார்' நடத்தப்பட்டு வரும் விதம்!
'லாண்ட் சீலிங்'கில் பெரும் ஏமாற்றம்!

உழைப்பாளியே கடவுள்!

அழகுத் தேமல் ஆராத நோயாகிவிட்டதே!

வினோபா பாவேயின் கண்டிப்பு!

தம்பி,

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வந்தபோது

கொள்ளைச் சம்பளம் ஒழிக
கோலாகல தர்பார் ஒழிக

என்றெல்லாம் கண்டித்து வந்தோமே, இப்போது அதை எல்லாம் மறந்தே போய்விட்டோமே என்று கூறி வருத்தப் பட்டார் அமைச்சர் அளகேசன் என்று குறிப்பிட்டிருந் தேனே அவர்,

எதை எதை எல்லாம் மறந்துவிட்டார்கள்

என்ற விளக்கமளித்துப் பேசவில்லை; நிர்வாகச் செலவு, ஆடம்பரச் செலவு செய்திடும் போக்கினை மட்டுமே சுட்டிக் காட்டினார்.

சென்னைக்கு அருகே பேரரசு அறுவைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைந்துள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கான நிர்வாகத் துறையினருக்காகக் கட்டப்பட்டிருக்கும் சிறுநகருக்குச் செலவிடப் பட்டுள்ள தொகையின் அளவைக் கண்டுதான் அமைச்சர் அளகேசன் அவர்கள் மனம் குமுறி அவ் விதம் பேசியுள்ளார்.

ஆடம்பரச் செலவுக்காகக் கொட்டப்பட்டிருக்கும் தொகை, திட்டச் செலவிலே பெரும்பகுதியை விழுங்கி விட்டிருக்கிறது. இது கடன் வாங்கிப் பிழைப்பு நடத்தும் நிலையில்!

ஏழைகள் புழுப்போலத் துடிக்கிறார்கள், அவர்களுக்கு இதமளிக்கும் திட்டத்திற்காகப் பணம் தாராளமாகச் செலவிடாமல்,

விருந்து மாளிகைகள், விதவிதமான மோட்டார் கள், அலங்காரப் பூங்காக்கள், சிங்காரச் செயற்கைக் குளங்கள்

போன்றவைகளுக்காகப் பணத்தைப் பாழாக்குகின்றனரே பாவிகள்! அன்னியர் என்பதால் அல்லவா, நமது நாட்டு ஏழைகளிடம் பரிவு பச்சாதாபம் பிறக்கவில்லை, நமது சொந்த ஆட்சி நடைபெற்றால், இப்படிப்பட்ட நிலைமை நீடிக்கவிடுவோமா என்று பேசினவர்கள் இன்று ஆட்சியில் அமர்ந்துள்ளனர்; ஆனால், அவர்களின் போக்கு,

சுண்டைக்காய் கால்பணம் சுமைகூலி முக்கால் பணம்

என்று கூறத்தக்க விதமாக இருக்கிறது. இதைக்கண்டு உள்ளம் நொந்து அமைச்சர் அளகேசன் பேசினார்.



இவர் பரவாயில்லை! இதுபற்றிப் பேசவாவது செய் தாரே. மற்றவர்கள் பேசவும் மறுக்கிறார்களே! இவரா வது இந்த விரயத்தைக் கண்டறிந்து கூறினார், மற்றவர் கள் இதுபற்றிய கவலையற்று உள்ளனரே என்று எண்ணத் தோன்றும் ஆனால், உண்மை அதுவல்ல. இதுபோல மனக்குமுறலைவெளியிடுவதனை ஒரு'வாடிக்கை'யாக,ஒரு 'பிரச்சாரக் கலை'யாக ஆக்கிக் கொண்டுவிட்டனர் ஆட்சி யாளர். வீண் செலவு குறித்தும், ஆடம்பரம் பற்றியும், கொழுத்த சம்பளம் குறித்தும், கோலாகல தர்பார்பற்றி யும் பேசுவதைக் கேட்கும்போது, மக்கள் அவர்களைப் பாராட்டவும் செய்கின்றனர். ஆனால், இந்த 'வீண் செலவு' ஏற்படாதிருக்க வழி காணப்படுகிறதா என்று பார்த்தால் விந்தையாக இருக்கும்; கொள்ளைச் சம்பள மும் கோணல் செலவும் தொடர்ந்து நடந்தபடிதான் இருந்து வருகிறது.

இன்று அமைச்சர் அளகேசன், எடுத்துக் காட்டிய தைப் போலவே 'சுதந்தர' இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் பண்டித ஜவஹர்லால் சோவியத் ரஷியா சென்றிருந்த போது, சைபீரியாவில் பனிக் காடுகளைக் கோதுமை வயலாக மாற்றி அமைக்கும் தீவிரமான திட்டத்தை மேற்கொண்டிருந்த அதிகாரி கள், தமக்காக வசதியான, அழகு நகர்களை அமைத்துக் கொள்ளாமல், தற்காலிகமாகக் 'கூடாரங் கள்' அமைத்துக்கொண்டு அதிலே இருந்துகொண்டு, தமது பணியினை நடாத்திவந்ததனைக் கண்டு பெரு வியப்படைந்து, அதுபற்றிக் குறிப்பிட்டுக் காட்டி, இந்தியாவிலே செய்யப்படும் வீண் ஆடம்பரச் செலவுபற்றிச் சாடினார்!

சாடினார்! அவ்வளவுதான்! அதனைக் கேட்டு கேலிப் புன்னகையுடன், அதிகாரவர்க்கம் பழைய போக்கிலேயே சென்று கொண்டிருந்தது. பண்டிதர் அந்த முறையைத் திருத்தி அமைத்திட முனைந்தார் இல்லை. பொருள் உற்பத்திக்காக அமைக்கப்படும் தொழிற்சாலைகளில், மிகப் பெரிய அளவு தொகை, துரைமார்கள் காலம் போலவே, விடுதிகளுக்கும் நிர்வாகத்தினரின் வசதிகளுக் கும் பெருமளவு செலவாகிக் கொண்டு வந்தது. ஆண்டு பலவற்றுக்குப் பிறகு, பண்டித நேரு சுட்டிக்காட்டியதை,

இப்போது அமைச்சர் அளகேசன் எடுத்துக்காட்டுகிறார். கண்டு பிடிப்பும் அல்ல, வேறு எவருக்கும் எழாதிருந்த துணிவும் அல்ல அது!

கண்டோரை மலைக்கச் செய்திடும் கட்டடங்கள் விண்ணை முட்டும் விதத்தில்! இரவைப் பகலாக்கிடும் விதமான பளபளப்பு! ஜொலிப்பு! வெள்ளையர் காலத்தில் தரப்பட்டது போன்ற கொள்ளைச் சம்பளம்! வெப்பத் தடுப்பு முறைகள்! மலையூர் பயணம்! என்று குறைவில்லை, இவை கூடாது என்று பேசுவதற்கும் தயங்கவில்லை; கூடாதவற்றைக் கூசாமல் செய்திடும் போக்கும் நின்றபாடில்லை.

இவை கூடாது தடுக்கப்பட்டாக வேண்டும் என்பதிலே உண்மையான நாட்டம் இருந்திடின் காங்கிரஸ் அமைச்சர்கள் பொதுக்கூட்டத்திலா இவைபற்றிப் பேசுவார்கள்! தமது கட்சிக் கூட்டத்திலே பேசி, இந்த வீண் செலவினை நிறுத்தியிருப்பர்.

அதைச் செய்யாது, ஊர்மெச்ச ஒரு நாளைக்கு இது பற்றிப் பேசுவது பயனில்லை என்பது மட்டுமல்ல; வெறும் பசப்பு என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது.

இதற்காக இத்தனை கோபமா! நிர்வாகத்தைத் திருத்தி அமைத்திட இப்போது பேரரசு திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கி விட்டது; மொரார்ஜி தேசாய் தலைமையில் இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது; தெரிந்து கொள்! என்று துந்துபி முழக்குவர், உணர்கிறேன். ஆனால், தம்பி! நிர்வாகத்தைத் திருத்தப் போகிறோம், செலவைக் குறைக்கப் போகிறோம், தரத்தை உயர்த்தப் போகிறோம், மந்தத்தனத்தை மாய்த்திடப் போகிறோம் என்றெல்லாம் இதற்கு முன்பு எத்தனையோ முறை கூறினரே, என்ன ஆயிற்று என்று கேட்டுப்பார்! குழுக்கள் அமைத்தனரே, என்ன விளைவு என்று கேட்டு அறிந்து கொள்ளேன் பார்க்கலாம்! வெளிநாட்டிலிருந்தே தருவித்தார்கள், இதற்காகவே—ஆப்பில்பீ என்பவரை; அவரும் பேரரசின் நிர்வாக முறைபற்றி நன்கு ஆராய்ந்து பார்த்து, திருத்தி அமைக்கப்படுவதற்கான வழி முறைகளை வகுத்தளித்தார். ஆப்பில்பீயின் அறிக்கை என்ன ஆயிற்று? என்று கேட்டுப்பார். இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு நிர்வாகச் செலவை 100க்கு



10 என்ற அளவு குறைத்துக் காட்டுகிறேன் பார்! என்று சூளுரைத்து, அதற்காக ஒரு குழு அமைத்தார், டி.டி. கிருஷ்ணமாச்சாரி. கண்ட பலன்—?

எனவே, இப்போது மொரார்ஜி தேசாய் குழுவின் மூலம், நிர்வாகம் திருத்தி அமைக்கபபடும் என்று எப்படி நம்புவது? மொரார்ஜி திட்டம் காரணமாக நிர்வாகச் செலவிலே சிக்கனம் ஏற்படும் என்று எந்தச் சான்றினைக் கொண்டு உறுதி பெறுவது?

துவக்கமே, கசப்பினை அல்லவா கிளறுவதாக இருந்திடக் காண்கிறோம். நிர்வாகத்தைத் திருத்தி அமைத்து, சிக்கனம் காண அமைகிறதே மொரார்ஜி குழு, அது, வேலையைத் துவங்குவதற்கு முன்பே ஒரு கொலு அமைத்திட விரும்புகிறது. இநதக் குழுவின் அலுவல்களைக் கவனிக்க, உடனடியாக

> 9 கூட்டுக் காரியதரிசிகள், 28 துணைக் காரியதரிசிகள், 243 கிளார்க்குகள்

வேண்டுமாம்! கேட்டாயா தம்பி! வேடிக்கையை! நிர்வாகச் சிக்கனத்திற்குத் துவக்க விழா!!

40 மோட்டார்கள் வேண்டுமாம், இந்தக் குழுவின் அலுவல்களுக்கு!

இந்தக் குழு எங்கெங்குப் பயணம் நடத்துமோ, எவ்வளவு பயணப்படி, வசதிப்படி விழுங்குமோ யார் கண்டார்கள்! காஷ்மீரத்துச் சீநகரிலும் தமிழகத்து கொடைக்கானலிலும், குழு, விசாரணைகளை நடத்திடக் கூடும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் பயணம் நடாத்தி, கருத்தறியக் கூடும். மொத்தத்தில் எவ்வளவு செலவாகுமோ, தெரியவில்லை.

அதிகாரிகள் பயணம் செய்யும்போது செலவு எந்த அளவுக்குச் செல்லக்கூடும் என்பதை ஓரளவு புரிந்து கொள்ள ஒரு கணக்குத் தருகிறேன்.

> (1965ல்) இந்த வருஷம் முதல் ஏழு மாதங்களில் வெளிநாடுகள் பயணம் செய்த அதிகாரிகளின் எண்ணிக்கை 1689.

அதிகாரிகள் சென்றுவந்த வெளிநாடுகளின் எண்ணிக்கை 46.

இதற்காகச் செலவான தொகை ஒரு கோடி ரூபாய்.

ஒரே வகையான வேலைக்கு இருவேறு துறையின் அதிகாரிகள் உள்ளனர்; இதனால் இரட்டிப்புச் செலவாகிறது என்பதுடன், இருவேறு அதிகாரிகளின் நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று துணை செய்யும் முறையில் அமையாமல், ஒருவர் வேலையை மற்றவர் வேலை குந்தகப்படுத்துவதாக அமைகிறது என்பதனை, இனி ஒரு நிபுணர் குழு கண்டறிந்து கூறத் தேவையில்லை; ஏற்கனவே அறிந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக ஒன்றினைக் குறிப்பிடுகிறேன் தம்பி! நாட்டிலே விவசாயப் பொருள் உற்பத்தியைத் திட்டமிட்டுத் தீவிரமாக்குகிறார்களல்லவா!... ஏன் தம்பி அப்படிப் பார்க்கிறாய்—அவர்கள் சொல்வதைச் சொல்கிறேன்—அந்தத் தீவிரத் திட்டத்திற்காக—உற்பத்திப் பெருகுவதற்காக - யாரார் பணியாற்றுகிறார்கள், தெரியுமா? விவசாயிக்குக் கடன் கிடைத்திடச் செய்தல், உரம் கிடைத்திடச் செய்தல், பூச்சிமருந்து கிடைத்திடச் செய்தல், பாசனவசதி (கிணறு வெட்டுவது) செய்தளித்தல், பொறுக்கு விதைகள் கொடுத்து உதவுதல்—ஆகிய இவைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஒரு துறைக்கு அல்ல;

சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்துறை,
விவசாயத்துறை

எனும் இரு 'துறையினரும்' இதைக் கவனித்துக் கொள்கின்றனர்.

ஒரேவிதமான வேலை, அதற்கு இருவேறுவிதமான 'அதிகாரிகள்'—என்ன நடக்கும்? நடக்கக்கூடியது என்ன என்பது விளங்கவில்லையா! இப்போதுதானே திரும்பி இருக்கிறார் உணவு அமைச்சர் அமெரிக்காவிலிருந்து—கோதுமையும் அரிசியும் மலைமலையாகத் தருவதற்கு ஏற்பாடு செய்துகொண்டு. இனி அவரை 'வானமும் பூமியும்' மிரட்ட முடியுமா! பூச்சியும் புழுவும் நெளிந்து அவருக்குச் சங்கடம் விளைவிக்க முடியுமா! அதோ கப்பல்! பார்! பார்! பெரிய கப்பல்!! பலநாட்டுக் கப்பல்! எல்லா



வற்றிலும் கோதுமை! அரிசி! ஏராளமாக!! என்றல்லவா எக்காளமிடுவார்.

ஏதோ ஓர் நகைச்சுவைப் பேச்சினைப் பார்த்தேன், தம்பி!

பள்ளிக்கூடத்து ஆசிரியர், மாணவனைக் கேள்வி கேட்கிறார்; நமக்குத் தேவைப்படும் கோதுமை எங்கெங்கு விளைகிறது? என்று.

மாணவன் கூர்மையான அறிவு படைத்தவன். ஆகவே பதில் சொன்னான்; கோதுமை பஞ்சாப், உத்திரப்பிரதேசம், அமெரிக்கா போன்ற இடங்களில் அமோகமாக விளைகிறது என்று.

நிலைமை இவ்விதம் இருப்பதால், உணவுப்பொருள் உற்பத்தியைத் திட்டமிட்டு அதிகமாக்குகிறார்கள் என்று நான் சொல்லும் போது, உனக்குப் புன்னகை எழுகிறது.

இந்தத் திட்டமிருக்கிறதே—உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டம்—இதற்காக விவசாயிகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்தளிக்கும் பொறுப்பை, விவசாயத் துறை, சமுதாயநலத்துறை எனும் இரு துறைகளும் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால், வேலை நேரமும், வேலையை முடித்துக்கொள்ள எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியும் இரட்டிப்பு ஆகிறது; யாரிடம் எதைக் கேட்பது? யாரிடம் எதை எந்தமுறையில் கேட்பது? என்பதைக் கண்டறிந்து காரியத்தை முடித்துக்கொள்வதே ஒரு பெரிய சிக்கலுள்ள வேலையாகி, குடியானவர்களை அலைக்கழிக்கிறது;

இருவேறு துறையினர் ஒரு வேலையைக் கவனித்துக் கொள்ள அமர்த்தப்பட்டிருப்பதால் நிர்வாகச் செலவும் இரட்டிப்பு ஆகிவிடுகிறது.

இதுபற்றிப் பலமுறை எதிர்க்கட்சியினர், பொது நிலையில் உள்ளவர்கள் எடுத்துக் காட்டியாகிவிட்டது. ஒரு திருத்தமும் ஏற்படக் காணோம்.

இதழ்களைப் பார்த்தால் தம்பி! விவசாயத் துறையினர் நடத்திடும் மாநாடு பற்றிய செய்தியும், அந்தத் துறையினர் உணவு உற்பத்திக்காக மேற்கொள்ளும் தீவிரத் திட்டம் பற்றியும் பேசப்படும் கருத்து விருந்தும்

கிடைக்கிறது. அதுபோலவே உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்துக்காக, எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் 'பயன் தரும்' முறைகள் பற்றி சமுதாய நலத் துறையினர் பேசுவதும் வெளிவருகிறது.

ஏன் இதுபோல இருவேறு துறையினரிடம் ஒரே வேலையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும். புரியவில்லை!

மத்தியப்பிரதேசம் துணிந்து கூறிவிட்டது, எங்களுக்கு வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (B. D. O.) தேவையே இல்லை! என்று.

எந்த (B. D. O.) வட்டார வளர்ச்சி அதிகாரிகளால் தான் விவசாயத்துறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு, உணவுத் துறையில் 'தன்நிறைவு' ஏற்படப் போகிறது என்று மற்ற எல்லா மாநிலங்களிலும் பேசப்பட்டு வருகிறதோ, அந்த அதிகாரிகளே வேண்டாம் என்று மத்தியப்பிரதேசம் தெரிவித்து விட்டது.

இதைவிடக் கடுமையான கண்டனம் வேறு என்ன இருக்க முடியும், வட்டார வளர்ச்சித் துறை என்ற திட்டத்துக்கு?

பாராளுமன்றத்திலேயும் இது பற்றிய பேச்சு எழுந்த போது பல உறுப்பினர்கள்—கட்சிப் பாகுபாடு அற்று—ஆறுதல் புன்னகை உதிர்த்தனர்—அப்பாடா! என்றனர்.

வினோபாபாவே மேலும் ஒருபடி முன்னாலே சென்று மத்தியப்பிரதேசத்தில் B. D. O. பதவிகளையே எடுத்து விட்டதை வரவேற்கிறேன்; நாடு முழுவதுமே இது போலச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.

கிராமராஜ்யம் அமையவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர் அந்தத் தூயவர்.

கிராமராஜ்யம் அமைக்கத்தான் பணியாற்றி வருகிறோம் என்று பேசுபவர்கள் வட்டார வளர்ச்சி அதிகாரிகள்.

வட்டாரவளர்ச்சி அதிகாரிகளால் உருப்படியான எந்தப் பலனும் நலனும் விளைந்திடவில்லை, அந்த அதிகாரிகளே தேவையில்லை என்று வினோபா கூறும்



அளவுக்குத் 'தரமாக', நேர்த்தியாக வேலை நடந்திருக்கிறது விளங்குகிறது அல்லவா!

நிர்வாகத்திலே வீண் செலவும் வேலை நடப்பதிலே குந்தகமும் ஏற்பட்டிருப்பது பற்றி எடுத்துக்காட்ட பல உள; ஒன்று மட்டுமே காட்டினேன்.

கொள்ளைச் சம்பளம் பற்றியும் கோணல் முறை பற்றியும் முன்பெல்லாம் கண்டித்துக் கொண்டிருந்தோமே இப்போது அந்தக் கண்டனத்தையே நாம் மறந்துவிட்டோமே என்று அமைச்சர் அளகேசன் வருத்தப்பட்டார்; அமைச்சர் சுப்பிரமணியமோ, நிர்வாக யந்திரமே துருப்பிடித்துக் கிடக்கிறது என்று வெளிப்படையாகவே பல கூட்டங்களிலே கண்டித்துப் பேசிவிட்டார்.

> விவசாய அமைச்சுத் துறையில் உள்ள அலுவலர்களில் 100-க்கு 75 பேர்களுக்கு விவசாயம் பற்றிய தொடர்பு தரும் அறிவோ, கிராமிய மனப்பாங்கோ இல்லை. நிர்வாக யந்திரம் கிழமாகிக் கிடக்கிறது. பத்தாம் பசலியாக இருக்கிறது.

இதைவிட மோசமான ஒருநிலை இருக்கவே முடியாதல்லவா? வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்தபோது, அதிகாரிகளிடம் என்ன குறை காணப்பட்டதோ அந்த நாட்களில் இருந்த அதிகாரிகளுக்கு மக்களின் குறைகள், பிரச்சினைகள் எப்படிப் புரியாமல் இருந்து வந்ததோ, அதுபோலவே இப்போதும் இருக்கிறது என்றால், இந்தப் பதினெட்டு ஆண்டுகளாக இவர்கள் சாதித்தது என்ன என்று கேட்டுத்தானே தீரவேண்டும்! ஏன் அதிகாரிகளின் போக்கை மாற்றி அமைத்திருக்கக் கூடாது? யார் வேண்டாமென்றார்கள்? எது குறுக்கிட்டது?

தம்பி! இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், பழைய மனப்பான்மையுள்ள அதிகாரவர்க்கத்தை மாற்றி அமைத்து, புதிய நிர்வாக முறையைப் புகுத்தவே சமுதாய நலத் திட்டத்தில் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (B.D.O.) என்ற 'புதியவர்களை' அமர்த்துகிறோம் என்று ஆளுங்கட்சியின் தலைவர்கள் மார்தட்டிக் கொண்டார்கள்.

இப்போது அவர்களே தலையில் அடித்துக் கொள்ளுகிறார்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (B.D.O.) சரியாக இல்லை என்று,

அந்த அதிகாரிகளை மூட்டை கட்டிக்கொள்ளச் சொல்லி விட்டோம் என்று மத்தியப் பிரதேச அமைச்சரவை கூறி விட்டது.

எத்தனை எத்தனை எக்களிப்புடன் இந்த அதிகார வர்க்கத்தை உருவாக்கி உலவவிட்டார்கள், இப்போது எவ்வளவு பலமான குட்டுகள் அவர்கள் தலையில் விழுகின்றன என்பதைப் பார்க்கும்போது, விந்தையாக இருக்கிறது; இத்தகைய தேவையற்ற காரியத்துக்காகச் செலவாகியுள்ள தொகையைப் பார்க்கும்போது வேதனையாகவும் இருக்கிறது.

உணவு அமைச்சர் சுப்பிரமணியமோ தமது துறையிலே உள்ளவர்களிலே முக்கால் பங்கு, உருப்படியில்லை என்று கூறிவிட்டார்.

அங்கே போய் விட்டாரே நமது நண்பர், அவர் பாடியதுதான் நினைவிற்கு வருகிறது.

'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா'

என்ற பாட்டு. அதுபோலல்லவா இருக்கிறது

'ஒன்பதிலே ஒன்றுகூட உருப்படி இல்லை'

என்பதாக!!

சந்திகளில் பேசுகிறார் அமைச்சர் சுப்பிரமணியம், இந்த நிலைமை பற்றி, வெகு தெளிவாக, வெகு துணி வாகக்கூட. அமைச்சர்கள் வெறும் 'ரப்பர் ஸ்டாம்பு களாக'—முத்திரை குத்துபவர்களாக—மட்டுமே இருக்க முடிகிறது. ஏனெனில், அவர்களிடம், அந்த 'இலாகா வினர்', ஏற்கனவே அதிகாரிகள் பார்த்து முடிவு செய்து விட்ட திட்டத்தைத்தான் நீட்டுகிறார்கள், கையொப்பத் திற்கு! வேறு மாற்றுத் திட்டங்கள் தரப்படுவதில்லை. எனவே, தம்மிடம் தரப்படுகிற திட்டத்தை ஒப்புக் கொள்வது தவிர வேறு வழி இருப்பதில்லை.

தம்பி! தர்பார் எப்படி நடத்தப்பட்டு வருகிறது என்பது புரிகிறதல்லவா?

இந்த இலட்சணத்தில் கொள்ளைச் சம்பளம், கோலாகல தர்பார், வீண் செலவு!

அமைச்சர் சுப்பிரமணியம் மெத்தவும் துணிச்சல் உள்ளவர், புட்டுப்புட்டுக் காட்டி விட்டார் என்றும் கூறி விடுவதற்கில்லை,



நிர்வாக யந்திரம் பற்றிய கண்டனம் இருக்கிறதே, 'பத்தாம்பசலி'ப் போக்கு இருக்கிறதே, அதனைக் கண்டறிந்து கூறின முதல் 'தீரவான்' என்ற 'விருதும்' அமைச்சர் சுப்பிரமணியத்துக்குக் கொடுத்து அவரை மகிழ்ந்திடச் செய்ய முடியவில்லையே என்று எனக்கு வருத்தந்தான். ஏனெனில், இவர் இவ்விதம் பேசுவதற்கு ஆண்டுகள் பலவற்றுக்கு முன்னாலே, பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இதே கண்டனத்தை அவருக்கே உரிய பாணியில் அழகுபட எடுத்துக்கூறி இருக்கிறார்.

1960ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ம் நாள் பேசுகிறார் பண்டிதர்,

நாம் நமது பிரச்சினைகளின் வேகத்தை உணர்ந்து கொள்ளாமல், விக்டோரியா மகா ராணியார் கால மனப்போக்குடன் (நிர்வாக) வேலை செய்து கொண்டு வருகிறோம். வாதாடிக் காலந் தள்ளிக்கொண்டிருக்கிறோம். பந்தாட்டத்தில் இவர் அவரிடம், அவர் இவரிடம் பந்தை வீசிவிடுவது போல, பிரச்சினைகளை ஒருவர் மற்றொருவரிடம் தூக்கிப்போட்டுக்கொண்டு இருக்கிறோம்.

அதே 'பந்தாடும்' போக்கினைத்தான் அமைச்சர் சுப்பிர மணியம் காணுகிறார்; காட்டுகின்றார். ஆனால் 'ஓட்டு கள்' மட்டும எமக்கு வேண்டும்—எமக்கே வேண்டும் என்று மட்டும் கூசாமல் கேட்கிறார்கள்!

பண்டித நேரு நிர்வாக யந்திரத்தை அந்த விதமாகக் கண்டித்ததற்குக் காரணம தம்பி! அமெரிக்க அறிஞ ரொருவர், உலகின் பல இதழ்களில் நேர்த்தி மிக்க விளக்கக் கட்டுரைகளை வெளியிட்டு, கருத்துகளை வடிவமெடுக்கச் செய்திடும் வல்லவர், வால்ட்டர் லிப்மான் என்பவர் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தைப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சாதிக்கப்பட வேண்டிய புரட்சிகரமான வேலை களைச் செய்திடக்கூடிய நிலையிலா, விக்டோரியா காலமனப்பான்மையுள்ள அதிகாரிகள் இருக்கிறார் கள் என்பதை எண்ணி நான் வியப்படைந்தேன், சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று நின்றாலொழிய

மிகப்பெரிய பொருளாதாரப் புரட்சியை, பாராளு மன்ற அரசியல்வாதிகளாலும், நிர்வாக அதிகாரி களாலும் சாதித்திட முடியுமா என்று ஐயம் கொள்கிறேன்.

வால்ட்டர் லிப்மான் கூறியதை ஒப்புக்கொள்ளுகிற முறையிலேதான் பண்டிதர் அதுபோலப் பேசினார்.

வீண்செலவு, நிர்வாகத் திறமைக் குறைவு, கர்னாடக மனப்பான்மை என்பவைகள் திடீரென்று முளைத்து விட்டவைகள் அல்ல, இன்று கண்டு பிடித்துக் கண்களைக் கசக்கிக்கொள்ள. அவற்றுடன் சேர்ந்தே காங்கிரஸ் அரசு வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது; அவற்றைப் பயன்படுத்திக் கொண்டும் காங்கிரஸ் வளர்ச்சியைத் தேடிக்கொண்டிருக்கிறது.

நிர்வாகத் திறமைக் குறைவு காரணமாகத்தான் உணவுத்துறையில் நெருக்கடி ஏற்பட்டு விட்டது என்ப தைச் சுட்டிக்காட்டாதவர்கள் இல்லை.

சொன்னதும், காங்கிரஸ் அமைச்சர்கள் தமது முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொண்டு, போ! போ! தெரியும்! தெரியும்! என்று கையை அசைப்பதும், கனைத்துக் காட்டுவதுமாக உள்ளனரேயன்றி, எங்கே நிலைமைகளைத் திருத்த முற்பட்டனர்?

> புதுமுறைக் கருத்துகள் கிடைக்காமலில்லை, போதுமான பணவசதி கிடைக்காமற் போகவில்லை. எனினும், சரியான முறையிலே நிர்வாகம் நடத்தி, எதை எப்போது செய்வது, எதற்கு முதலிடம் தருவது என்ற வகை தெரிந்து நடந்து கொள்ளாத தால்தான், உணவு உற்பத்தித் துறையிலே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இதுதான், வெளிநாட்டு நிபுணர்கள் கண்டறிந்து கூறியது. கடுங்கோபம்தான் பீறிட்டுக்கொண்டு வந்தது காங்கிரஸ் அமைச்சர்களுக்கு; இப்போது உணவு அமைச்சர் சுப்பிர மணியம் சொல்லுகிறார் நாங்கள் 'ரப்பர் ஸ்டாம்புகள்' என்று!!

நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாகத்தான் உழவன் உள்ளம் மகிழ்ச்சிகொள்ள முடியும்.



உழவன் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தால்தான், உற் பத்திப் பெருக்கம் ஏற்படும்.

அதனால் நிலத்துக்கு உச்சவரம்பு கட்டுகிறோம் என்று காங்கிரஸ் அமைச்சர்கள் பேசியபோது, மகிழ்ச்சி யும் எழுச்சியும் பொங்கி வழிந்தது. இப்போது?

உச்சவரம்புச் சட்டத்தினால் உருப்படியான பலன் கிடைக்கவில்லை.

சட்டம் ஏட்டிலே இருக்கிறது; நடைமுறையில் இல்லை.

அப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்ற நினைப்போ, அதைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டுமே என்ற கடமை உணர்வோ அதிகாரிகளுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை.

இப்படிக் கூறியுள்ளார் அமெரிக்காவிலிருந்து வந் திருந்த விவசாயத்துறை நிபுணர்.

சட்டம் உருவாக்கப்பட்ட போதே, அதிலே உள்ள 'ஓட்டைகளை'யும், அந்த ஓட்டைகளை அடைக்காமல் சட்டமாக்கினால், ஒரு பலனும் கிடைக்காது என்பதை யும், நாம் தம்பி! எடுத்துக்காட்டாமலா இருந்தோம்?

உங்களோடு சேர்ந்து விட்டுள்ள நிலப்பிரபுக்கள் உச்ச வரம்புச் சட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதை நேர்மையாக நிறைவேற்றி வைப்பார்களா? என்று நான் கேட்டபோது, எத்தனை கேலிப் பார்வை என்மீது பாய்ந்தது.

இம்முறை டில்லிப் பேரரசில், உணவு அமைச்சராக இருக்கும் சுப்பிரமணியம் அவர்களையே கேட்க வாய்ப்புக் கிடைத்தது.

> உங்கள் கட்சியினர் உள்ள பக்கமாகத் திரும்பி வெகு கம்பீரமாக கை அசைத்துச் சொன்னீரே, ஐயா! எம்முடன் உள்ள நிலப் பிரபுக்கள் 'தேச பக்தர்கள்' - அவர்கள் இந்தச் சட்டத்தை ஒழுங்காக நிறை வேற்றிக் கொடுப்பார்கள் என்றீர்களே? இப்போது என்ன நடந்திருக்கிறது?

என்று கேட்டபோது, பொருள் மிகுந்த ஒரு புன்னகை தான் பதிலாகத் தவழ்ந்திடக் கண்டேன என்னை விட்டுத் தள்ளு தம்பி! காங்கிரஸ் கட்சியினரிலேயே எத்தனைபேர் அப்போதே சுட்டிக் காட்டினார்கள். இந்தச் சட்டம் சரியான முறையில் உருவாக்கப்பட வில்லை. உழவனுக்கு இதனாலே உருப்படியான பலன் கிடைக்கப் போவதில்லை என்று கேட்டார்களா காது கொடுத்து? மதித்தார்களா துளியாவது? இல்லையே! தமது பக்கம் உள்ள ஆள் கணக்கை எண்ணி எண்ணி இறு மாந்து கிடந்தார்கள். இப்போது பேரரசில் கொலு விருக்கும் டி டி, கிருஷ்ணமாச்சாரியாரே ஒப்புக் கொள் கிறார், 'நிலச்சுவான்தார்கள் ஏமாற்றி விட்டார்கள், என்று. நமது மாகாணத்தை எடுத்துக்கொண்டால் உள்ள நிலத்தின் மூன்றில் ஒரு பாக நிலம் கோவில்களுக் கும் தர்ம ஸ்தாபனங்களுக்கும்தான் சொந்தமாக இருக் கிறது. அவைகளின் வரலாற்றைத் திரையிட்டு மறைக்கப் பார்க்கிறார்கள். தர்ம ஸ்தாபனங்களின் பெயரில் நிலத்தை வைத்துக் கொண்டு இலட்சக் கணக்கான ரூபாய்கள் கொள்ளையடிக்கப்படுகிறது இந்த நாட்டில் என்பதை எடுத்துக்காட்ட முடியும். இப்பொழுது ஒரு வருஷத்திற்குள்ளாக ஏற்பட்டிருக்கிற பாலிடெக்னிக், காலேஜ்கள், ஹைஸ்கூல்கள் இவைகளுக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அதன் டாகுமெண்ட்ஸ் எப்படி இருக்கிறது என்று பார்க்கவேண்டும். ஒரு ஹைஸ்கூலை நிர்வகிக்க 2000 அல்லது 3000 ரூபாய்கள் வருடம் ஒன்றுக்குக் கொடுப்பது என்ற முறையில் அதற்கு 200 ஏகர் நிலம் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். 200 ஏகர் நிலத்தின் வருமானம் 2000மா! இவ்வளவு நிலம் இதற்காக எழுதிவைக்க என்ன அவசியம் இருக்கிறது?

அரசாங்கத்தை ஏமாற்றி லாண்ட் சீலிங்கைத் தவிர்க்கவேண்டுமென்று நினைக்கிற தஞ்சை ஜில்லாவி லுள்ள பணக்காரர்களின் பட்டியலை நான் கொடுக்க முடியும்.

தண்ணீர்ப்பந்தலுக்காகப் பத்து வேலி எழுதிவைத் திருக்கிறார்கள். தண்ணீர்ப்பந்தல் வைப்பதற்கு 10வேலி அவசியமா? ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் பத்து வேலி எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு பிள்ளையார் கோயிலை வைத்து நடத்த 10 வேலி அவசியமா? ஒரு எலிமெண்டரி



ஸ்கூல் நடத்துவதற்கு 20 வேலி எழுதி வைத்திருக்கிறார் கள். அதற்கு 20 வேலி அவசியமா?

இப்படி அரசாங்கம் ஏமாற்றப்படுமானால் இந்த லாண்ட் சீலிங் வருவதும் வராமல் இருப்பதும் ஒன்று தான்.

இதைப்பற்றிச் சொல்லும்போது, ஆண்டவன் தலை மேல் கைவைக்காதே என்று சொல்கிறார்கள். நான் கேட் கிறேன். அசைய முடியாத ஆண்டவனுக்கு 20 வேலி நிலத் திலுள்ள வருமானம் தேவையா? அப்படி அசைய முடி யாத ஆண்டவனுக்கு 20-வேலி வேண்டுமென்றால், ஓடி ஆடி உழைக்கிற மனிதனுக்கு எவ்வளவு வேண்டும்; ஓடி ஆடி உழைத்துப் பாடுபட்டு உழைப்பவனுக்குக் கஞ்சிக்குக் கூட போக்கில்லாமல் இருக்கும்போது, ஆண்டவனுக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது? பாடுபட்டு உழைத்தும்கூட ஒன்றும் கிடைக்காமல் மனிதன் அழிந்து போவது நல்லதா, அல்லது ஒன்றும் செய்யாமல் ஆடாமல் அசை யாமல் இருக்கும் ஆண்டவன் அழிந்து போவது நல்லதா என்று ஆலோசிக்கவேண்டும்.

ஆண்டவன் தனக்கிருப்பதற்காகச் சிதம்பரத்தில் தங்கக் கூரையும், சீரங்கத்தில் தான் அணிந்துகொள் வதற்கு வைரமாலைகளும் கேட்கவில்லை. ஆண்டவனின் பெயரைச் சொல்லிக்கொண்டு மனிதர்கள் மனிதர் களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு மக்களை இதுவரை ஏமாற்றியது போதும். இனியாவது மனிதனே கடவுள் என்றும், எவன் ஒருவன் உழைக்கிறானோ அவனே இந்த நாட்டின் கடவுள் என்ற எண்ணத்திலும் லாண்டு சீலிங் கொண்டுவரவேண்டும்.

இம்மாதிரி அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருக் கின்றவர்களை — அரசாங்கத்தை மட்டுமல்ல — இந்த நாட்டிலுள்ள தொழிலாளிகளையும் ஏமாற்றிக் கொண் டிருக்கின்றவர்களுக்கு எந்தத் தண்டனை கொடுத்தாலும் போதாது. அவர்களுக்குத் தூக்குத் தண்டனை ஒன்று தான் கொடுக்கவேண்டும்.

இவ்விதம் பேசினார் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் K B,S. மணி என்பவர்; 1959-ல், உச்சவரம்புச் சட்டம், தேவையற்ற, தீமை பயக்கும் விதிவிலக்குகள் நிரம்பிய

தாக, ஓட்டைகள் நிரம்பியதாகக் கொண்டு வரப்பட்ட போது.

ஆகவே எதிர்பாராதது நேரிட்டு விட்டது. இப்படி நடக்கும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை எனறெல் லாம் இதுபோது ஆட்சியாளர் வாதாட முடியாது.

ஆகவே தம்பி! நாட்டிலே அமைந்துள்ள துரைத் தனத்தின் 'திருக்கலியாண' குணத்தைப் பற்றி ஒரு பட்டியல் போட்டுப்பார்!

கொள்ளைச் சம்பளம்

கோலாகல தர்பார்

ரப்பர் ஸ்டாம்பு மந்திரிகள்

பத்தாம்பசலி நிர்வாகம்

'ஓட்டை'ச் சட்டங்கள்!

இப்படி இருக்கிறது இவர்களின் இலட்சணம். ஆனால், மேடை அதிரப் பேசுகிறார்கள், கேட்கிறதல்லவா?

ஆஹா! எங்கள் அருமை என்ன! பெருமை என்ன! ஆற்றல் என்ன! சாதனை என்ன! எத்தனை பாட்டன் டாங்கிகள் நொறுங்கிவிட்டன தெரியுமா! எத்தனை சாபர் ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன தெரியுமா! என்றெல்லாம்!

இந்த நிலையில், யாரோ ஒருவராகிலும், அன்னமென்றும் சொர்ணமென்றும் சொன்னாயே! இப்போது ஆலாய்ப் பறக்க விட்டுவிட்டாயே! என்று மக்கள் கேட்பார்களே என்று நினைவு பெற்று, உள்ள குறையை ஓரளவு ஒப்புக் கொண்டுப் பேசியிருக்கிறாரே என்பதிலே எனக்கோர் மகிழ்ச்சி; அதனால்தான் இதனை எழுதினேன்.

ஆனால், இப்படி ஒருவர் இருவர் பேசிவிட்டால் போதுமா!

அழகுத் தேமல் என்றுதான் எண்ணிக்கொண்டிருந் தேன்; இப்போதுதான் தெரிகிறது இது ஆகாத நோய் என்று எனக் கூறிவிட்டால், நோய் போய் விடாதே. மருந்திட வேண்டுமே!

மக்களிடம்தான் அந்த மாமருந்து இருக்கிறது. அவர்கள் தெளிவையும் துணிவையும் பொடியாக்கி,



நேர்மையுடன் குழைத்துத் தந்திடின் ஆட்சியிலே ஏற் பட்டுள்ள வலிப்பு, இழுப்பு, படபடப்பு போன்றவை ஒழியும். அந்தக் கடமை, மக்களுடையது. அதனை நினைவுபடுத்த வேண்டிய பொறுப்பு, தம்பி! உன்னுடை யது.

நாம் வேண்டுமென்றே, பதவி விரும்பி, பதை பதைத்து ஏதேதோ பேசுகிறோம் என்று எவரேனும் கோபித்துக் கொண்டால், தம்பி! ஐயா! வீணாக எம்மீது வெகுண்டெழ வேண்டாம். காங்கிரசாட்சியின் போக் கினைக் கண்டிப்பது, எதிர்க்கட்சியினரான நாங்கள் மட்டும் அல்ல; இன்றும் உங்களால் 'ஞானாசிரியர்' என்று கொண்டாடப்பட்டு வரும் வினோபா பாவே மிகப் பலமாகக் கண்டிக்கிறார் என்று கூறி. அவர் தந்துள்ள கண்டனத்தை எடுத்துக்காட்ட வேண்டுகிறேன்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் வெளியிலிருந்து உணவுப் பொருள் வரவழைக்க வேண்டி இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

விவசாய நாடான இந்தியாவில் முதலில் செய்திருக்க வேண்டியது குறைந்த பட்சம் உணவு 'போதுமானதை' உற்பத்தி செய்துவிட்டு பிறகு மற்ற எதையாவது செய்து கொள்வது என்பதாக இருந்திருக்க வேண்டும்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் (பிரிட்டிஷ் வைசிராய்) மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு பற்றிய புத்தகம் என் நினைவிற்கு வருகிறது.

உணவு, கல்வி, பாதுகாப்பு ஆகிய மூன்று துறைகள் குறித்த வரையில், இந்தச் சர்க்கார் மீது அதுபோல குற்றம் சாட்டி வழக்குத் தொடரப் பட்டால், அந்தச் சர்க்கார் எங்கே செல்ல வேண்டி வரும்!

இந்தச் சர்க்கார் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டது, மக்களின் சம்மதத்தின் பேரில் நடந்து வருகிறது; ஆகவே, நடைபெற்று விட்டவற்றுக்கு மக்களே பொறுப்பு என்று ஒருவேளை சொல்லக் கூடும்.

ஜனநாயகத்தில் உங்கள் பங்கு என்ன? கடமை என்ன? என்பதனை உணர வேண்டிய காலம் வந்து விட்டது.

டில்லியை நம்பிக்கொண்டு வீட்டிலே சோம்பிக் கிடப்பதிலே பொருள் இல்லை.

டில்லியில், யமுனை நதி மட்டுமல்ல. சாராயமும் சீமைச் சரக்கும் ஆறாக ஓடுகிறது.

வெளிநாடுகளிலிருந்து டில்லிவரும் நண்பர்கள் கண்களை மூடிக்கொண்டு வியப்படைகிறார்கள். நாம் இந்தியத் தலைநகருக்கு வந்திருக்கிறோமோ அல்லது நம்முடைய பாரிஸ், அல்லது லண்டன் நகரில் இருக்கிறோமா என்று!

இதைவிட 'மனம் நொந்து' வேறு எவராலும் பேச முடியாது! தம்பி! வினோபா சொன்னதை நான் வேண்டுமென்றே கூட்டிக் குலைத்துச் சொல்லிவிட்டேன் என்று கூறிவிடப் போகிறார்கள். அவர் பேசியிருப்பதனை வட நாட்டு ஆங்கில இதழ் வெளியிட்டிருப்பதனை அப்படியே தருகிறேன், அதனையும் மறவாமல் காட்டு.

It is very unfortunate that after 3 five year plans the country should import food from abroad. The least that ought to have been done in an agricultural country like India was to make her self-sufficient in food and then do anything else.

I am reminded of the book Impeachment of Warren Hastings. If this Covernment were to be impeached on these Counts of food, education and defence let go my fourth charge of ignoring the poor, where would it be?

Perhaps it may be said that the Government is elected by the people and it is being run with their consent and the people themselves should be held responsible for what has transpired.

The time has now come when you should become conscious of your role in democracy. There is no sensc in relying on Delhi and sitting idle at home. In Delhi flows not only the Jamuna but also the river of wine and liquor. Friends from abroad coming to Delhi close their eyes in amazement and wonder whether they are in the Indian Capital or in their own city of Paris or London.



Dec.

Bihar—Dalmianagar.

அந்த ஆங்கிலத்தினை நான் தமிழாக்கும்போது, 'சூடு' அதிகமாக்கவில்லை; சொல்லப்போனால்! குறைத்தே தந்திருக்கிறேன்; அதனையும் கவனிக்கச் சொல்லு, அதற்கும் ஆதாரம் கேட்டிடின் தம்பி! வினோபாவின் பேச்சு ஆங்கிலத்தில் உள்ளதில் ஒரு இடத்தில்,

'no Sense'

என்று இருக்கிறதே, அதனை நான் அறிவீனம் என்றோ புத்தி இல்லை என்றோகூட தமிழாக்கவில்லை; பெரிய இடத்தில் உள்ளவர்கள்மீது சிறுசொல் விழக்கூடாதே என்பதற்காக, அதனால். No sense என்பதற்கு, பொருளில்லை என்ற தமிழையே தந்திருக்கிறேன்;

மக்களின் ஜனநாயகக் கடமையைக் கவனப்படுத்துகிறார் வினோபா!

காலம் வந்துவிட்டது என்றும் கூறியிருக்கிறார்.


கடமையாற்றிடச் சொல்லியும் கேட்டுக்கொள்கிறார்.

இதனைக் கண்ட பிறகேனும் பொதுமக்கள் விழிப்படையாமலிருக்கலாமா?

இதனை எடுத்துக்காட்டாமலிருப்பது நமக்கு முறையாகாதல்லவா! அதனால் எடுத்துக் காட்டினேன், தம்பி! நீ இதனை நாடெங்கும் எடுத்துச் சென்று அளிப்பாய் என்ற நம்பிக்கையுடன்.

அண்ணன்,

2—1—'66



காஞ்சிக் கடிதம்: 47

# அகமும் புறமும்

உழவர் நாட்டில் அமெரிக்க உணவுப் பொருள்!

புள்ளிமானுக்கு வேங்கையா தோழன்?

'ஏர்முனைத் திருநாளு'க்கு நம் பாராட்டு!

தனி மனித வாழ்க்கை நிலை

நமது ஈடுபாடு புதியதோர் விடுதலைப் போரில்!

'விடுதலை'க் கவிதையே நான் தரும் பொங்கல் பரிசு!

தம்பி,

நள்ளிரவு நேரந்தன்னில், உள அமைதி கெடுத்திடும் நோக்குடனோ என்றெவரும் கேட்கும் வண்ணம், மேகக் கூட்டம், கருத்துப் பெருத்து ஒன்றோடொன்று போரிட்டுக் குருதியினைக் கொட்டுதல்போல மழையைப் பொழிந்திட, கருங்காற்று வீசித்தருக்களைச் சாய்த்து எவரையும் வெளியே தலைகாட்டாதிருந்திடச் செய்திட ஓயுமோ இன்றேல் ஊர் அழியும் வரையில் பேய்ந்தே தீருமோ என்று பெரியோர் கவலை கொள, வேண்டும்போது எங்கோ சென்று ஒளிந்துகொண்டு வேண்டா வேளையில் வந்து எமை அலைக்கழிப்பதனையே ஓர் விளையாட்டு ஆக்கிக்கொண்டதோ விண்ணுலவும் மேகக்கூட்டம் என்று உழவர் உளம் நொந்து பேசிட, பெருமழை! பெருமழை! எதை நீவிர் தடுக்கவல்லீரெனினும், இதனைத் தடுத்திட



இயலாது உம்மால்! முடியுமெனில், முயன்று பாரீர்!! என்று மாந்தரை அறைகூவிடும் முரசொலி போன்ற இடியோசையும், வருவாரின் தலைதனைக் கொய்திடும் வாள் காண்பீர் என்றதனை வீசுதல்போல் மின்னல் வெட்டும் மிகுந்திருக்கும் வேளை! வயலுக்கும்வாவிக்கும், ஆற்றுக்கும் கரைக்கும், ஊருக்கும் ஏரிக்கும் வித்தியாசம் இல்லை என்றெண்ணத்தக்க விதமாக எங்கும் வெள்ளக்காடாகிக் கிடந்திடும் நிலைமை! படல்கொண்டு பக்குவமாகப் பாது காத்துக்கொண்டதனால் அணையாமல் சிறு விளக்கொன்று ஒளியினைச் சிந்திடும் ஓர் இல்லம். ஆங்கு, முற்றத்தில், அகமும் முகமும் கவலை தோய்ந்திடக் குனிந்த தலையுடன் குமுறிடும் ஆடவன், எதையோ எண்ணி எங்கோ பார்த்து, ஏதோ கூறி எதையோ விரட்டிடத் துணைதனைத் தேடி இங்கும் அங்கும் உலவுகின்றான். என்னடா! மகனே! ஏதுக்கித்தனை வேதனை கொள்கிறாய்! எல்லாம் நல்லபடியாய்த்தானே நடந்திடுமப்பா! கலக்கம் விட்டொழி! கவலையை விரட்டு! என்றெல்லாம் கூறிட எண்ணிடும் முதியவர் ஏனோ முயன்று பார்க்கிறார், இயலவேயில்லை! அன்று நானும் இவன் போல் தானே நெஞ்சில் நெருப்புடன் நின்றேன், உழன்றேன்! இன்று நான் எப்படி இவனைப் பார்த்து, ஏனடா மகனே! இத்தனைத் திகிலென எங்ஙனம் உரைத்திடுவேன் எவ்விதம் அவன் கவலை துடைத்திடுவேன், இயலாது என்னால் என்றெண்ணிப் பேச்சுக்காக எனப்பிறந்த ஓசையினைப் பெருமூச்சுத் தானாக்கி இருந்தார் ஓர் பக்கம். உள்ளேயோ, ஓ! அப்பா! அம்மம்மா! உயிர் போனால் போதும் இனித்தாளேன் வேதனையை! ஆயிரம்தேள் என்றன் அடிவயிற்றிலே தங்கி, எல்லாம் ஒன்றாகிக் கொட்டினால் நான் என் செய்வேன்! பல்லைக் கடித்துக்கொள் பருவதம்! என்று பாட்டி சொல்கின்றாள், பல்லுடைப்பேன் என்று கூடப் பதறி நான் கூறிவிட்டேன், பல்போன பருவத்தாள் என்பதனை மறந்து எல்லாம் இருண்டு கிடக்கிறதே! ஊரிலுள்ள நெருப்பெல்லாம் ஒன்றாக என் வயிற்றில்கொண்டு வந்து கொட்டினரோ கொடியோர்!— என்று பல எண்ணி, அத்தனையையும் சேர்தது அம்மம்மம்மா! அப்பப்பா! அய்யய்யோ! என்ற சொற்களாக்கி, அலறுகிறாள். 'அம்மா' ஆகின்றாள்! 'அவன்' அவளை அவ்வாறாக்கிவிட்டு, அவதிப்படுகின்றான், அனை

வரையும் பார்க்கின்றான். 'அந்த 'அவதி'யிலே உருவாகி வளர்ந்ததுவே அவனி முழுதும் என்பது அறிவான் அவன், நம்போல; ஆனால், அறிந்ததத்தனையும் பறந்திடுது 'அவள் எழுப்பும் அம்மம்மா ஒலி' கிளம்பி அவன் செவி வீழ்வதாலே, செச்சே! இது என்ன பிழைப்பு! பெண்ணாகப் பிறந்தாலே இதுதானே 'எழுத்து' எனப் பெற்றவர்கள், பேசுகின்றார்; பிஞ்சுகள் புரியாமல, "கத்தாதிருக்க மருந்திலையோ?" என்கின்றார். இந்நிலையில், ஓ! ஓ! என்ற பேரொலி வெளிக்கிளம்பி, மறுகணம் விந்தை அமைதிக்கு இடங்கொடுத்து விரட்டிட, உள்ளே இருந்தோர் 'இசை' மெள்ளக் கிளம்பிடுது; உலவியவன் செவியினிலே ஓராயிரம் பண ஒரே நொடியில்!! ஆண் பிள்ளை! என்பாரும், எல்லாம், 'அவன்போலே!" என்று அடையாளம் கூறுவாரும், "தாத்தா வாயினிலே கொட்டுங்கள் கற்கண்டு" என்பாரும், 'கற்கண்டா! அவருக்கா!!' எனக்கேட்டுச் சிரிப்பாரும் நடமாட ஒரே நொடியில், வேதனை சூழ்ந்த இல்லம் மகிழ்வெய்தித் துள்ளி நிற்கிறது! "எனக்குத் தெரியும் அப்போதே, இன்று இரவுக்குள் குழந்தை பிறந்திடும் என்பது" எனச் செப்புகிறார் ஒருவர்: 'அவன்' அவரைக்கண்டு சிரிக்கின்றான்!-அடடா! நீ இத்தனை கோழையாகிவிடுவாய் என்று நான் எண்ணிடவேயில்லை! எத்தனை பதறிவிட்டாய்! எதை எண்ணிக் கதறி நின்றாய்! என்று கேட்கின்றார் முதியவர், தந்தை ஆகிவிட்ட தன் தனயன்தனை நோக்கி. "என்னினும் பெரியோர்கள் இருந்த நிலை கண்டே நான் என்ன ஆகிடுமோ என்றஞ்சி இருந்திட்டேன்; எனக்குத் தெரியாதா, மருத்துவரே கூறினாரே!!" என்றுரைத்தபடி 'அவனும்' இன்னும் அனுமதியை வழங்கிடலாகாதா! இத்தனைக்கும் காரணமாம் என் 'மன்னவனை' நான் காண!!-என்றெண்ணி உலவுகின்றான். முன்பு உலவியது நெருப்பின் மீது; இப்போதுலாவுவது பூங்காற்றின் மீது! ஏன்? வாழ்வின் பயன் கண்டான்! காதற்கனி பெற்றான்! இன்பப் பெருக்கதுவும் கண்மூக்கு வாய்பெற்று, காலுதைத்துக் கை அசைத்து, "வந்துள்ளேன்! வாழ்வதற்கு! தந்திடுவேன் வாழ்வு உனக்கு" என்று கூறுகின்றான், பெற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புரியாத பேரின்ப மொழியாலே!

பிள்ளைக் கனியமுதைப் பெற்றிடும் வேளையிலே மற்ற நிலையத்தனையும் மறைந்திடுதல் போல எத்



தனையோ இன்னலுக்கு ஆளாகியுள்ள இந்த நம் தமிழகத்தில், விந்தையாம் ஓர் மாற்றம் விரைந்திடுதல் காண்கின்றோம், பொங்கற் புதுநாள் பூத்திடும் நந்நாளன்று!

களத்தினிலே கடும் போரிட்டு, ஆற்றல் மறவரவர் விரட்டினர் மாற்றாரை; எனினும், பகை ஒழிந்தபாடில்லை, புகை நின்று போகவில்லை, எப்போது என்ன விபரீதம் வெடித்திடுமோ என்ற நிலையதுவும் கப்பிக்கொண்டே உளது, காரிருள் போலே! போர் கிளம்பி பொல்லாங்கை விளைவிக்கும் முன்பே, பொன்னாடாய் இந்த நாட்டை ஆக்குதற்கே பொறுப்பேற்றோம் என்று கூறி, எந்நாட்டிலும் இல்லை எமக்கு நிகர் நல்லோர்கள் என்று அறைந்து, இறுமாந்து கிடந்திடுவோர், இல்லாமைதனை விரட்ட இயலாத தன்மையினால், இதனை இவன் முடிப்பான் என்றறிந்து அதனை அவன் கண்விடல் எனும் நெறி மறந்த காரணத்தால்,

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

★

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

★

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

எனும் குறள், ஏட்டிலே இருந்திட மட்டுமன்று, நாட்டிலே நடைமுறையாகிடவே என்பதனை மனத்திற்கொள்ளாத போக்கதனால், பொன் விளையும் பூமியென்றும் புவிக்கே ஓர் பூங்காவென்றும் பொய்யாமொழிப் புலவர் புகழ்ந்திட்ட திருநாட்டில் "திரு ஓட்டுத்" திட்டத்தால் தீர்த்திடுவோம் 'போதாமை' என்று கூறிடுவார் விழிநீர் அடக்கிடும் வழி வகுத்துள்ளார். அவர் படிக்க ஆன்றோர்கள் விட்டுச்சென்ற அருமைமிகு நூற்களிலே உள்ளந்தனைத் தொடும் ஓவியம் காண்கின்றார், நாட்டின் கோலம் நனி சிறந்திருந்ததென உணர்கின்றார். இன்றோ இன்னலும் இழிவும் இடரும் படர்ந்துள்ள பாழ்நிலை காண்கின்றார்;

இந்நிலை காண்பதற்கோ மூவாறாண்டாக முடிதரியா மன்னரென இருந்தீர் ஐயா! என்று கேட்டிடினோ, ஆளவந்தார், "அறியாச் சிறுவ! அன்று இருந்தவர் தம் தொகை என்ன, வகை என்ன? இன்றுள்ள மாந்தர் தொகை பெருகியதை அறியாயோ!" என்றுரைத்து, அந்த ஓர் விளக்கத்தில் அவனியின் அறிவத்தனையும் அடக்கித் தந்துள்ளோம் என்றெண்ணிக் களித்துக் கிடக்கின்றார்.

காலம் மாறுவதும், அதற்கேற்பக் கோலம் புதிதாகுவதும், புரியாத புதிரன்று; காலம் மாற்றுவது கோலத்தை மட்டுமன்று, முறை பலவும் மாறிடுதல் காண்கின்றோம்; அம்மாற்றம் அனைவருக்கும் நல்வாழ்வு கிடைத்திடும் ஓர் வழியை எத்தனையோ நாடுகளில் ஏற்றமுடன் தந்திருக்க, இந்த நாட்டினிலே மட்டும் ஏன் இந்த நிலை? என்பதே கேள்வி—இதற்கு யாது பதில்? குற்றம் கூறாதீர்! குறை கிளறிக்காட்டாதீர்! கொற்றம் நடத்திடுவோர் அறிந்துள்ளார் அவ்வளவும்! மெள்ள மெள்ளத்தான் மலர்ந்திடும் நல்வாழ்வு! என்கின்றார். இந்த ஒரு பதிலை, ஐயன்மீர்! எத்தனை முறை நீர் கூறிடுவீர்! ஏழை நாங்கள் எத்தனை முறை இதனை ஏற்றிடுவோம்; என்று கூறுகின்றார் சில பேர்கள்; மற்றையோர் அச்சம் கொண்டு குமுறுகின்றார், நலிவாலே.

உண்ண உணவின்றி ஒரு ஆளும் சாகவிடேன்! உறுதி! உறுதி இது! என்று உரைக்கின்றார்—நமை ஆளும் நல்லோர் அல்ல; எங்கோ நெடுந்தொலைவில் இருக்கும் அமெரிக்க அதிபர்! இந்தத் திருநாடு உழவர் தம் பெருநாடு!! இங்கு அனுப்புகிறார் விந்தைத் தொழில் புரியும் நாட்டினராம் அமெரிக்கர், உணவுப் பொருள் குவியல்!!

காருலாவ, ஏருலாவ, சீருலாவும் நாடு இது என்கின்றார் கவிஞர் இங்கு; இந்நாட்டில் போதும் என்று கூறத்தக்க அளவு விளைவு இல்லை என்கின்றார். ஏனெனிலோ, மெத்த ஆராய்ந்து கண்டறிந்து விட்டோம்! விளைவு மிகுந்திடாத காரணம் விளங்கியது, விளைவு மிகுந்திட வழி கண்டு கொண்டோம் யாம்! என்னை என்பீரேல், கூறிடுவோம், கேட்டிடுவீர், வயலில் வளம் காண உரம் இடுவீர் வகையாக! உரமிடுதல் வயலுக்கு வலிவிடுதல்! வலிவு பெறும் வயல், வழங்கிடும் செந்நெற் குவியல்! என்று உரைக்கின்றார் உணவமைச்சர்.



இத்தனைநாள் ஈதறியாது இடர்ப்பட்டு வந்தோமே! உரமிடுதல் வேண்டுமாம் வயலுக்கு!! உரைக்கின்றார் அமைச்சர் என நாடே வாழ்த்திடும் என்று எண்ணுவரோ அமைச்சர்! இருக்கும்! அந்த நம்பிக்கை மிகுதியுடன் பேசுகிறார்; தெரிகிறது. இதற்கு இவரை வாழ்த்திட வேண்டுமெனின் வள்ளுவரை அடியோடு நாம் மறந்திட இசைதல் வேண்டும்! அப்போதுதான் இவர் கூறிடும் முறை 'கண்டுபிடிப்பு' எனும் நிலை பெற்றிட இயலும். வள்ளுவரோ, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இயம்பியுள்ளார்:

ஏரினும் நன்றால் எரு இடுதல். கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு

என்பதாக! இதனையே இவர் கூறுகின்றார் இன்று எனில், எவர் இதனைப் புத்தறிவு என்றோ புதுமை முறை என்றோ கொள்ள இயலும்? ஒரு குறள் தன்னைப் பெறுகிறோம் பெருநிதி கொடுத்து என்றன்றோ எண்ணத் தோன்றும்!

உழவுநிலை இஃதெனில், தொழில் நிலையோ, ஒரு சிலரின் ஆதிக்கத்தில் சிக்கி 'ஓடப்பர்' மிகுந்துள்ள கேடு மிகு நாடாக்கிவிட்டதின்று.

சட்டம் எதுவெனினும் சாய்த்துவிடும் வல்லமை மிகப் பெற்றோர், சாயாத போக்கினரும் சாய்ந்திடும் விதமான சல்லாபப் பொருள் தந்து அவரைத் தம் 'சரக்காக்கிக்' கொள்வோர்கள், மூதறிஞர் பற்பலரும் மூக்கின் மேல் விரல் வைத்து அடடாவோ! இப்படியோ!! என வியக்கும் விதமாக, பொதுப் பணத்தைத் தமதாக்கிக் கொண்டிடும் முந்த்ராக்கள், ஆழ்கடலைத் தாண்டியும் எமது அரசு உண்டு அறிந்திடுக! அரசு நடத்திடுவோர் எமது ஆதாயம் தன்னைத் தடுத்திடவோ இயலாது, அவர் அரசின் அடிப்படைக்கே பொற்கட்டி தந்துள்ளோம் எனப் புகலும் டாட்டாக்கள், பிர்லாக்கள், டால்மியாக்கள்; பஞ்சையாய்ப் பாமரரை ஆக்கிவிட்டுப் பருத்தி ஆலையிலே பெரும் பொருள் ஈட்டிடுவோர், குடைந்தெடுத்து வந்திடுவீர், குவலயம் தழைத்திடவே என்றுரைத்து எளியோரை அமர்த்தி, அவர் குவிக்கும் இரும்பாலும் கரியாலும் பொறகோட்டை கட்டிடுவோர், பொருளாதாரக் கயிற்றில் அரசைப் பிணைத்திடுவோர், பொல்லாத போக்கினராம் முதலாளிகட்கே எல்லாம்

என்றாகிவிட்ட இழி நிலையைக் காண்கின்றோம். சோஷியலிசம் பேசுங்கள், சுவை உண்டு, சூடுண்டு; ஆயினும், தனியார் துறை உண்டு மறவாதீர்! என்றுரைத்து, பன்னாள் பாடுபட்டுப் பல பெரியோர் வகுத்தளித்த பாகுபாடு அகற்றும் முறையாம் சமதர்மமதைக் குலைத்திட்ட வன்கணாளர், கொலுவீற்றிருக்கும் நம் குடியாட்சிக் கோமான்கள் தமக்குக் கொஞ்சும் பொருளானார்கள்! உழைக்கின்றான்; உருக்குலைந்து உழல்கின்றான், ஓராயிரம் நோய்க்கிருமி உடலை அரிக்கிறது; உற்பத்தி பெருக்கிடுக! உற்பத்தி பெருக்கிடுக! என்று ஊராள்வோர் உரைக்கின்றார்; உற்பத்தி பெருகுவதும் உழைப்பாளி நொறுங்குவதும் காண்கின்றோம், இந்நிலையில் உள்ள தந்தோ தொழிலுலகம்!

விந்தைத் திட்டம் இதோ, விரட்டிடுவோம் வறுமைதனை, ஐந்து ஆண்டினிலே அமைத்திடுவோம் நல்வாழ்வு என்று அறிவித்து ஆளவந்தார், மூன்று திட்டங்கள் முடித்துவிட்டார்! மக்கள் முதுகெலும்பை நொறுக்கிவிட்டார்! திட்டங்கள் நடாத்திப் பின் திரும்பிப் பார்க்கின்றார், தேனாறு எங்கே! பாலாறுதானெங்கே!! என்று கேட்கின்றார்!! ஓடுவதோ உழைப்பாளி உகுத்திட்ட கண்ணீரும் செந்நீரும்! காணுகின்றார்! கண்டு பின்னர்க் கூறுகின்றார், பெருகிய செல்வமது சென்ற இடம் தெரியவில்லை! ஏழைக்கு அச்செல்வம் வாராத காரணமும் எள்ளளவும் புரியவில்லை! எங்கோ ஓர் 'மர்மம்' இருக்கிறது, கண்டறிவோம்; எம்மிடம் அவ்வேலைதனை விட்டுவிட்டு, நாட்டினரே! உழைத்திடுவீர்! இந்நாடு பொன்னாடு ஆகிடும் உம் திறத்தாலே!! என்று ஊக்குவிக்கும் பேச்சினை ஊற்றித் தருகின்றார்.

மூன்றடுக்குக்காரன் அவன் எட்டடுக்கு ஏறிவிட்டான்! மூட்டை சுமப்பவனோ, குப்பை அள்ளுகின்றான்; செல்வச் சுமைதாங்கி செருக்குடன் உலவுகிறான், சிவனே உன் பாதம் சேர்த்துக்கொள்! எனை என்று செபிக்கின்றான் உழைப்பாளி. மாளிகையின் மணம் பரவி மயக்கமளிக்கிறது. பாட்டாளி விடுதியிலே வறுமை பாம்பாய்ப் படமெடுக்கிறது, இந்நிலையில் சமுதாயம் இருந்திடின் என்னாகும் என்பதனை எத்தனையோ வித்தகர்கள் எடுத்துரைத்துச் சென்றுள்ளார். அத்தனைக்கும் மாற்று மருந்துண்டு, பெற்றிடப் பொருள் உண்டு என்று இறுமாந்து கிடக்கின்றார் செல்வரானோர், எமக்கு அவர்! அவர்க்கு



யாம்! என்றே உள்ள ஓர் எழுதாத ஒப்பந்தம் இயக்கி வருகிறது ஆட்சி முறைதன்னை. இந்நிலையில், இல்லாமை போவதெங்கே! இடுப்பொடிந்ததும் இருமிக் கிடப்பதும், ஓட்டைச் சட்டியும் ஓலமிடுவதும் குப்பைக் கூளமும் எலும்புருவங்களும், இதோ! ஐந்தாண்டுத் திட்டம் பெற்றெடுத்த அழகரசர் யாம்! என்று அறிவிக்கக் காண்கின்றோம்.

தைத் திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சிகொள்வர்
நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்டதுண்டோ பொங்கல்?
கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை;
தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

வெட்கமாகக்கூட இருக்கிறது, வேதனை சூழ்நிலையினிலே விழாக் கொண்டாடுக என்று கூறுகிறோமே என்று கவிஞர் இராஜேந்திரன் கவிதையைப் படித்திடும் போது.

ஆயினும், தமிழர்தம் விழாவாம் பொங்கற் புதுநாள் விழாவினைக் கொண்டாடுதல் முறையே என்று கூறிட முற்படல் ஏனோவென்றால், இவ்விழா உண்டு உருசி கண்டு மயங்கிக் கிடந்திடவுமல்ல; பழைய கணக்கினைத் துடைத்திடு, படையலிட்டேன்! பரமனே! புதுக் கணக்குப் போட்டிட முனைகின்றேன் நான்! என வேண்டிடும் வகைக்கும் அன்று; சமுதாய நிலைதன்னை உணர்ந்திடவும் திருத்திடவும் உழைப்போர்க்கே இவ் உலகம் எனும் உயர்நெறி வெற்றிபெற நாம் நம்மாலான அளவு பாடுபடுதல் வேண்டும் என்ற உறுதி பெறவும். நல்லெண்ணம் உள்ளமதில் பொங்கிடுதல் வேண்டும் என்பதற்கே இது விழா மட்டுமன்று விழி திறந்திட ஓர் அழைப்பு என்று கொண்டிட வேண்டும். அக்காரணம் பற்றியே நமது கழகத்தினரும் நற்றமிழை நாடு வாழத்தந்திடும் புலவர் பெருமக்களும், இவ்விழாவினை தமிழ், தமிழகம், தமிழ்நெறி என்பன பற்றிய விளக்கம் அளித்திடும் விரிவுரை

யாற்றுதற்கும், பண்பு மிகுந்திடும் முறை பற்றிய விளக்க உரை தந்திடுவதற்கும் வாய்ப்பாக்கிக் கொள்கின்றனர். கண்ணுக்கு விருந்து இல்லம் தந்திட, கருத்துக்கு விருந்து கற்றோர் அளித்திட இவ்விழா பாற்பொங்கலாக மட்டு மன்றித் தூய எண்ணப் பொங்கலாகவும் இருந்திடக் காண்கின்றோம். இந்த நற்பயன் பெறவே இந்நாளை விழா நாள் என்கின்றோம். மெய்யான விழாவோ, எல்லார்க்கும் எல்லாம் இனிது உளது என்ற நெறி வெற்றியுடன் அரசோச்சும் நன்னாளே; இன்றல்ல!

இந்நாள், இஞ்சியும் மஞ்சளும், கதலியும் கரும்பும், செந்நெலும் பிறவும் கொஞ்சுமொழி பேசிடும் கோலம் தனைத் தந்திடும் திருநாள்; உழைப்பால் கண்டிடும் ‘விளைவு’தனைக் கண்டிடச் செய்திடும் உன்னதமிகுநாள்! விதைத்தவர் அறுப்பர்! எனுமொழி தன்னில் தொக்கியுள்ள தத்தனையும் அறிந்துகொள்ளும் நல்வாய்ப்பு அளித்திடும் ஓர் அறுவடைத் திருநாள். இங்கு நாம் வாழப்பிறந்தோம், வாழ்வின் வகை நமது உழைப்பின் வகையையும், உழைப்பின் விளைவைப் பயன்படுத்தும் முறையையும், அம்முறையினைச் சீராக வகுத்திடும் அரசின் திறத்தையும், அந்தத் திறத்தினைப் பெற்றுள்ளோரையே அரசோச்சிடச் செய்திடும் உரிமை பெற்ற மக்களின் அறிவாற்றலையும் பொறுத்துளது.

துள்ளிடும் புள்ளிமான்களுக்குத் தோழன் வேங்கை என்று கண்டிடின், காடும் கெடும்! நாட்டினிலேயே இது போன்ற முறை ஒன்று நீடிக்கவிட்டிடின் என்னாகும்? இப்போதுள்ள நிலையே என்னாகும் என்பதற்குப் பதில், வேறு எதற்கு!

எனவே, தம்பி! வாழ்வின் விளக்கம் பெற்றிடவும், வாழ்வினைச் செம்மையாக்கிடத்தக்க முறைபற்றி அறிந்திடவும், அந்த முறைக்கேற்ற அரசு அமைத்திடவும், உறுதி தேடிப் பெற்றிடவும் இந்நாள் பயன்படுதல் வேண்டும்.

இவ்வாண்டு அரசாள்வோரே, பொங்கற் புதுநாளை ஏர்முனைத் திருநாள் என்று கொண்டாட முன் வந்துள்ளனர்! இது மெத்தவும் பாராட்டி வரவேற்கத்தக்கமாற்றம். ஏர்முனையின் வெற்றியே போர்முனை வெற்றிக்கும் அடிப்படை! ஒரு நாட்டு வாழ்க்கையின் அச்சாணியே



உழவு; அதிலும் விரிந்து பரந்துள்ள இந்நாட்டில் இன்றும் நூற்றுக்கு எண்பதின்மர் என்ற அளவுள்ள மக்கள் உழவுத் தொழிலிலேயே ஈடுபட்டவர்கள்; இன்று நேற்றல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக!

நிலத்திடை

நீரிடை

கானிடை

மலையிடை

என்று எங்கெங்கு விளைவுபெற முடியுமோ அத்தனையும் பெற்று வாழ்ந்தவர் முன்னோர். அவர்கள் நேர்த்தி மிகு உழவுமுறை வகுத்து நடாத்தி வந்த அந்த நாட்களில், இன்றைய நாகரிக நாடுகள் பல, காடும் மேடும் கொண்டதாக, கண்டதைத் தின்றிடும் விலங்குப் போக்கினரின் உறைவிடமாக இருந்து வந்திருக்கின்றன இன்று இத்திருநாடு, அமெரிக்க உணவுபெற ‘ஆள்’ அனுப்பும் நிலைக்கு முன்னேறிவிட்டிருக்கிறது. பெற்றோம் பெரு வெற்றி! என்கிறார்கள் அரசாள்வோர், ஐயமிட்டிட அயலவர் ஒப்புக்கொண்டது கேட்டு. உளம் பூரித்து!

இந்நாடு தன்னிறைவு பெறவும், இந்நாட்டில் கிடைப்பது இந்நாட்டவரிடையே வஞ்சனையின்றிப் பகிர்ந்தளிக்கப்படவுமான முறை கண்டிட வேண்டும். அதிலே நாம் பெறும் வெற்றியைப் பொறுத்தே எதிர்காலம் வடிவமெடுத்திடும்.

மணமற்ற மலர், சுவையற்ற கனி, வெந்திட மறுத்திடும் காய்கறி, இவைகளைக் கொண்டு விழா கொண்டாடிட முடியுமோ? அஃதே போலத்தான், வாழ்வு விழாவாக அமைய வேண்டிடின், பொருள்கள் பயன் தருவனவாக இருந்திடல் வேண்டும், பெற்றிடும் பயன் அனைவர்க்கும் என்ற நெறி நிலைத்திடவேண்டும்.

பொங்கற் புதுநாள், புத்தாடை அணிந்த பூவையின் புன்னகையைப் பெற்றுக் களித்திட மட்டுமன்று; இன்று போல் இன்பம் என்றும் இருந்திடவும், நமக்குக் கிடைத்ததுபோல் இன்பம் எல்லோருக்கும் கிடைத்திடவும் வழியாது, அதற்கு நாம் எங்கனம் பாடுபட வேண்டும் என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடவும், உறுதி பூண்டிடவும் பயன்படுதல் வேண்டும்.

கண்ணே! கனியமுதே! கற்கண்டே! செந்தேனே! என்று கொஞ்சினால் மட்டும் போதுமா. குழந்தை மகிழ்ச்சி ஒன்றினாலேயே குமரனாகிட முடியுமா? இயலாதல்லவா? அதுபோலவே, இந்நாடு எந்நாடு! பொன்னாடு. புலவர் போற்றிய திருநாடு, வீரம் பொங்கிடும் ஆற்றல் மறவர் நாடு, என்றெல்லாம் புகழ்பாடுவதால் மட்டும் நாட்டினை நன்னிலைக்குக் கொண்டுவந்துவிடமுடியுமா? நாட்டை நன்னிலைக்குக் கொண்டு வந்திடும் பொறுப்பினை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும். புதிதாக நாம் எதனையும் ஆக்கக்கூடத் தேவையில்லை; நாட்டிலே உள்ளது என்ன என்று கண்டறிந்து பெற்றாலே போதும்.

எரிமலையும் பாலை நிலமும், சதுப்பும் நிலநடுக்கமும், கடற்கொந்தளிப்பும் பிறவுமான இயற்கையின் கோபம் இந்நாட்டின்மீது அதிக அளவு வீசப்படவில்லை. மாறாக இயற்கை இங்கு பசுமையையும் வளத்தையும் பாங்குடன் அளித்திருக்கக் காண்கின்றோம். வாழ்ந்தே அறியாத மக்களாகவும் இந் நாட்டவர் இல்லை; 'மகஞ்சதாரோ, அரப்பா' எனும் நிலைகளை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே பெற்றிருந்த சீர்மிகு வாழ்க்கை நடாத்திய மக்கள் என்று வரலாறு காட்டுகின்றது. இந்நிலையில், இங்குச் சிலர் நச்சுக் காற்றினைப் பரவவிடும் போக்கினை மட்டும் நீக்கிடும் ஆற்றல் நமக்கு இருந்திடின், எக்குறையும் இங்கு இல்லை என்று உலகினை நோக்கித் தலை நிமிர்ந்து கூறிட இயலும். இன்று நிலைமை அதுவோ? இல்லையே! வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி!

பொங்கற் புதுநாள்! அதோ உன் அங்கயற்கண்ணி அழகுக்கு அழகளிக்கும் புத்தாடை பூண்டு நடக்கின்றாள், உன் இதய மேடையில்! உன் செல்வங்கள் பழத்தைக் குழைத்துக்கொண்டிருக்கக்கண்டு, அடிக்கிறேன் பார்! என்று மிரட்டியபடி அருகே சென்றிடும் அணிமயில், அடிக்கின்றாளா, பார்! இல்லையே! அணைத்துக்கொள்கின்றாள்! முத்தம் அளிக்கின்றாள்! ஏன்? அந்தச் சுட்டிப் பயல், பழம் குழைத்த விரலைத் தாயின் உதட்டருகே கொண்டு சென்று, அம்மா! அம்மா!! என்று கொஞ்சிவிட்டான்; அவ்வளவுதான்! ஒரு பழமா, உள்ள பழம் அத்தனையும், கையால், காலால் அவன் குழைத்துப் போட்டால்கூட அந்தக் காரிகையின் கண்களுக்கு விருந்தாகத்தான் தோன்றும். காணுகின்றாய், கண்கள் களிநடம் புரிந்திடுகின்றன. ஆனால், இந்தப் புத்தெழில் இல்லத்தரசி பெற்றிடக் கடன்பட்டிருப்பாயேல், அந்தக் கண்கள் கவலைக்குறிகளாக அல்லவா மாறிவிடும்!



''ராஜாபோல இல்லே! இந்தப் பட்டுச்சட்டை?'' என்று கேட்கிறாள், உன்னை வென்றாள். ஆம்! என்கிறாய் இழுத்தாற்போல, பட்ட கடனை நினைவுபடுத்திக்கொண்டு; அவள் புரிந்துகொள்கிறாள்; பூத்த மலர் வாடுகிறதே! கண்டனையா?

அந்தக் குடும்பத்தை விட்டுவிடு, பொங்கற் புதுநாள் இன்னின்னது வேண்டும் என்று கேட்டு, ஆகட்டும் என்று தலை அசைத்து, கடைசியில் இல்லை என்று கைவிரித்து விட்ட நிலையில் எத்தனை எத்தனை குடும்பங்கள்! ஆங்கு விழாவின் காரணமாக மகிழ்ச்சியா பிறந்திடும்? விம்மல்; குமுறல். வேதனை.

விழா முழுச்சுவை தந்திடுவதாக இருந்திடவேண்டுமெனில், அது எல்லோர்க்கும் விழாவாக இருத்தல் வேண்டும் அந்த நிலை கண்டிட உழைப்பதிலேயே ஓர் தனி மகிழ்ச்சி பெற்றிடலாம்.

எல்லோரும் ஒன்றுதான், எல்லோரும் வாழப்பிறந்தவர்களே என்று கவிதை மேற்கோள்கள் காட்டி எத்தனை நாளைக்கு நமக்கு நாமே மயக்கமூட்டிக் கொள்வது?

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ!

காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?

மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?

கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?

பொருட்சுவை மிகுந்திருக்கிறது ஏடளிக்கும் இப்பாடல்! குரல் இனிமையும் இசை அறிவும் பெற்றவரிடம் சிக்கிக் கொண்டால் போதும், இப்பாடலைக்கொண்டு 'ஒரு மணிநேரச் சொற்சிலம்பம்' நடத்திடுவார்; அவர் நாவிலே சரஸ்வதி தாண்டவமாடுவதாகப் பாராட்டப் பெறுவார். ஆனால், தம்பி! இல்லாமை எனும் கேடு பீடித்துக்கொள்வாரை, மாரிமாய்த்து விடுகிறது, காற்று பிய்த்தெறிகிறது. கதிரவன் சுட்டுப் பொசுக்குகிறான். மாநிலம் மட்டும் சுமக்க மறுப்பதில்லை, ஏனெனில் வறியவன்

உடல் தேய்ந்து தேய்ந்து வெறும் எலும்புக்கூடாகிப் போய்விடுவதால்! அவன் இருப்பது மாநிலத்துக்குத் தெரிவதுகூட இல்லை!

அறநெறிதனை எடுத்தியம்பிடின், நல்லொழுக்கந் தனை உணரச் செய்திடின், மக்களை நன்மக்களாக்கிடின், சமூகத்தில் உள்ள கேடுகள் மாய்ந்தொழிந்து போகும் என்கின்றனர். அதுபோல் அறநெறி கூறிடல் கூடாது என்று கூறுவேன் என்று எண்ணத் தேவையில்லை, தம்பி! ஆனால், அவையாவும், எரியும் கொப்பரைமீது தெளிக்கப் படும் பன்னீர்த் துளிகளெனப் பொரிந்து போகின்றன.

செய்ந்நன்றி கொல்லன்மின்;

தீநட்பு இகழ்மின்;

பொய்க்கரி புகலன்மின்:

பொருள்மொழி நீங்கன்மின்;

அறவோர் அவைக்களம்

அகலாது அணுகுமின்;

பிறவோர் அவைக்களம்

பிழைத்துப் பெயர்மின்!

என்று சிலம்பு ஒலித்திருக்கிறது! புதிதாக நன்னெறி பற்றி நாம் ஆராய்ந்தறிந்து கூறிடத் தேவையில்லை. சிலப்பதி காரத்திலேயே 'பொய்க்கரி'யால் விளைந்த பொல்லாங்கு விளக்கப்பட்டுமிருக்கிறது. எனினும், சிலப்பதிகார காலத்து இளங்கோ அடிகள் கால முதற்கொண்டு இன்றளவும் செய்யப்பட்டுவரும் நன்னெறி, சமூகத்தின் போக்கை மாற்றி அமைத்திடக் காணோமே, என் செய்வது?

'தனி மனித வாழ்க்கை' என்பதே, தம்பி! இப்போது மிகமிக அரிதாகிக்கொண்டு வருகிறது சுற்றுச் சார்பின் வேகமும் நெருக்கமும், 'தனி மனித வாழ்க்கை'யை இயலாததாக்கி விட்டிருக்கிறது.

கேடுசூழ் இவ்வுலகில் நடமாடிடின் கெட்டுப் போவேன் என்று கருதிக் கிரேக்க ஞானி ஒருவர். பீப்பாய்க்குள் ஒளிந்து கொண்டார் என்று கதை கூறுவார்கள்.



இன்று எந்தத் தனி மனிதரும் சமூகத்தைக் கப்பிக் கொண்டுள்ள சூழ்நிலையினின்றும் தம்மை வேறுபடுத்திக் கொள்ள முடிவதில்லை. நோய் தாக்காதிருக்கத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதுபோல, சூழ்நிலை தம்மைத் தாக்கிடாதபடி சில தடுப்பு முறைகளை வேண்டுமானால் தேடிப் பெற்றிடலாமேயன்றி, பண்டை நாட்களைப் பெற்றிடுதல்தங்கு தடையற்ற தனிமனித வாழ்க்கையைப் போலத் இது போது இயலாது.

மக்கட் தொகை பெருக்கம் மட்டுமல்ல, மக்களுக்குள் ஏற்பட்டுவிட்டுள்ள தொடர்புகள், அவர்கள் ஈடுபடும் அலுவல்கள், அந்த அலுவல்களின்போது கிளம்பிடும் வேகம், புதியதோர் பிரச்சினையாகி விட்டிருக்கிறது.

பண்டை நாட்களைக் காட்டிலும் அதிக அளவிலும் வேகத்திலும் தனி மனிதன், சமுதாயத்திலே ஈடுபட வேண்டியிருக்கிறது.

தம்பி! வேடிக்கையாகவே இருக்கும், நான் கூறுவதனை ஆராய்ந்து பார்த்திடின், ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நகர்களில், இத்தனை மக்கள் 'நடமாட்டம்' கண்டதில்லை; இன்றோ எந்த ஒரு காலைப் போதினைக் கணக்குக்காக எடுத்துக் கொண்டாலும், வீட்டினில் உள்ளவர்களைக் காட்டிலும் வெளியே உள்ளவர்களின் தொகையே அதிகம். எந்த நகரத்து நெடுஞ் சாலையினையும் கூர்ந்து பார்த்திடு தம்பி! சாரை சாரையாக மக்கள், ஆடவர் பெண்டிர், இளைஞர், முதியோர், சென்றவண்ணம் உள்ளனர்! எத்தனை வேகம் கவனித்தனையா! ஓர் வலிவுமிக்கவன் வீசிடும் சவுக்கடிக்குப் பயந்து, இதோ செல்கிறோம்! செல்கிறோம்! தாமதிக்கமாட்டோம்! என்று கூறிக்கொண்டே செல்பவர் போலத் தோற்றமளிக்கிறது, நடை, வேகம், பரபரப்பு. நண்பர்கள் தொலைவிலே இருந்துகொண்டே, புன்னகையை உதிர்த்துவிட்டுச் செல்கின்றனர். வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! கடிகார முள் வேலாகிக் குத்துகிறது, விழி! எழு! நட! என்று; சங்கொலி காதைத் துளைக்கறது, கிளம்பு! கிளம்பு! உருளைகள் அலைழக்கின்றன! உடனே வந்திடு! என்று, இத்தனை பரபரப்புக்கு இடையில், சமுதாயப் பின்னலுக்கு இடையில், தனிமனித வாழ்க்கை எப்படித் தப்பிப் பிழைத்துத் தழைத்திட முடியும்?

தம்பி! இந்தப் பிரச்சினைபற்றி அறிவாளர்கள் மேலும் நல்ல முறையில் தமது கருத்தினைச் செலுத்திட வேண்டும்.

இந்நிலையில், தனிவாழ்க்கை என்பது, அவரவர் தமக்கென அமைததுக்கொள்ளும் வாழ்க்கை என்ற இலக்கணத்தை இழந்து விடுகிறது. வாழ்க்கையே இன்று பெரிதும், சமூகத்தில் ஏற்படும் பிணைப்பினாலும், பரவிவிடும் சூழ்நிலையினாலும், இவைகளை முறைப்படுத்தும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசினாலும், அமைத்து அளிக்கப்படுகிறது,

அரசு இன்று மேற்கொண்டுவிட்டுள்ள பொறுப்பின் அளவும் அதிகம்; வகையும் பலப்பல.

இது, பண்டை நாட்கட்கும் இன்றுள்ள நிலைக்கும் இடையில் முளைத்துப் படர்ந்துவிட்டுள்ள மிகப்பெரிய வேறுபாடு, இதன் காரணமாக 'தனி மனித வாழ்க்கை' யில் அரசின் வலிவுமிக்க நீண்ட கரம் வெகுவாகப் புகுந்து விட்டது. அரங்கு அமைப்பதும், ஆடும் முறை வகுப்பதும் மட்டுமல்ல, அரசு மேற்கொண்டு விட்டுள்ள அலுவல் ஆட முற்படுவோருக்குக் கயிறு பூட்டி இயக்குவிக்கும் அலுவலையும் அரசு மேற்கொண்டு விட்டிருக்கிறது,

எனவேதான் தம்பி! இன்று வாழ்வு செம்மைப்பட வேண்டுமெனில், அது அவரவர்கள் தத்தமது அறிவாற்றலுக்கேற்றபடி செய்துகொண்டிட இயலும் என்பதிலிருந்து வெகுதூரம் விலகிவிட்டதுடன், வாழ்வின் வகையை ஆக்கித்தந்திடும் பொறுப்பினை அரசு மேற்கொண்டுவிட்ட நிலை உறுதிப்பட்டுப் போய்விட்டிருக்கிறது.

எனவே, சீர்கேடுகள், முறைகேடுகள் நீக்கப்படுவதற்கான பணியினைத் தனி மனிதர்கள் மேற்கொண்டு வெற்றிபெற்றிட வாய்ப்பு பெரிதும் கிடைப்பதில்லை—ஒருசிலர் அத்தகைய தூய தொண்டாற்றி வருகின்றனர், நன்றி, மகிழ்ச்சி—அரசு மேற்கொண்டிட வேண்டிய அளவுக்குப் பிரச்கினை பெரிதாகிவிட்டிருக்கிறது; சிக்கல் மிகுந்ததாகி விட்டிருக்கிறது.

அத்தனை பொறுப்பினை மேற்கொண்டுவிட்டுள்ள அரசு இருக்கிறதே அதன் பொருள் என்ன? வகை என்ன?



தனி மனிதர்கள் தமது வாழ்வை வகைப்படுத்திக் கொள்ளும வாய்ப்பையும் இழந்திட வேண்டிய விதமாகப் படை எடுத்துள்ள அரசு எனும் அமைப்பின் இலககணம் என்ன? விந்தை, தம்பி! மிக விந்தையானது!! அதே தனி மனிதர்கள ஆக்கித் தந்திடும் அமைப்பே அந்த அரசு!! அதறகா அததனை ஆறறல்? ஆம்! அதற்கே!! உலைக்கூடத்தான் அமைதது தருவதே வாள! ஆயின் அந்த வாள அவன் சிரததினையே கொய்திடும் வலிவு பெற்றுக் கொளகிறதல்லவா? மனிதன் வெட்டுவதே குளம்! ஆயின, இடறிவீழ்நதிடின் அவன் உயிரையே குடிததுவடுகிற தலலவா! பருகிடும் தேன், துளி சில உடலிலே தங்கிடின். சிற்றெறும்பு மொய்த்துக் கடிததிடுகிறதல்லவா, உடலை.

ஆகவே, தம்பி! இற்றை நாட்களில், தனி மனிதர்கள் பெற்றுவிட்ட வேகம நிறைநத வாழ்க்கை காரணமாக, சமுதாயப் பின்னலை அரசிடம் ஒப்படைத்துவிட்டிருப்பதாலும், அந்த அரசு தனிமனித வாழ்க்கையின் வடிவத்தையும வகையையும் உருவாக்கிடும பொறுப்பினை ஏறறுக்கொண்டிருப்பதாலும், அத்தகைய அரசு எவ்விதமாக அமைகிறதோ அதைப் பொறுத்தே, தனிமனித வாழ்வின் செம்மையும, சமுதாய வாழ்வின் மாண்பும் இருக்கிறது.

தனிமனித வாழ்க்கை மங்கி மடிந்துகொண்டிருக்கும் இந்த நாளிலேயே இன்னமும் போதுமான தெளிவுடன் உணரபபடாமலிருக்கிற இந்தப் பேருண்மையைத் தமிழர் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே உணர்ந்து நெல்லும் நீரும் அலல, மன்னனே நாட்டுக்கு உயிர் அளித்திடுவோன் எனறு அரசுக்கு உள்ள வலிமையினை முதன்மையான தாக்கிக் காட்டினர்.

அன்று அது எந்த அளவுக்கு உண்மையாக இருந்ததோ, அதனினும் பனமடங்கு அதிக அளவுள்ள உண்மை அது இன்று.

மன்னன்...என்பது அரசு முறையிலே ஒருவகை; எனவே, இன்று மன்னன் என்ற சொல்லுக்கு ஈடாக அரசு என்ற சொல்லினைக் கொண்டிடல், முறையேயாகும்.

தம்பி! மன்னன் பிறக்கிறான்; 'அரசு' அமைக்கிறோம். இருவேறு நிலைகள்! இந்த இருவேறு நிலைகளுக்கிடையில், இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடி

யிருக்கின்றன என்பதனை விளக்கிக் காட்டுகிறது வரலாற்றுச் சுவடி.

'அரசு' அமைத்திடும் பொறுப்பு. தனி மனிதரின் உரிமை. அதனை நிறைவேற்றுவதிலே தனி மனிதர் எத்தனைத் திறமை கொள்கின்றனரோ, அதனைப் பொறுத்தே அரசு அமைகிறது; அதன் தொடர்பாகத் தனி மனித வாழ்க்கையின் வாழ்வும் இருக்கிறது.

எனவே, இன்று அரசியல் என்பது, தீண்டத் தகாத ஒன்று என்று எண்ணுவோர், ஏற்பட்டுவிட்டுள்ள மாறுதலை அறிந்துகொள்ளாதவர்கள் என்றுதான் கூற வேண்டும். அரசு அமைத்திடும் உரிமையைச் செவ்வனே நிறைவேற்ற வழிவகுத்திடும் கலையே, அரசியல். பாமர மக்கள் பாராளும் காலமிது என்றும், சிட்டுக்குருவிகள் வல்லூறை விரட்டும் காலமிது என்றும், எடுத்துரைத்து விட்டு, அரசியல் அத்துணை இன்றியமையாத அலுவலல்ல என்றும் பேசுவது, நாம் எவரிடம் எதைப் பறித்துக் கொண்டோம், எவர் நம்மிடம் உள்ளதைப் பறித்துக் கொள்வர் என்று எண்ணிக்கொண்டு, பொருள் எடுத்துக் கொண்டு நெடுவழி போவதற்கு ஒப்பாகும்.

தம்பி! இதனை உணர்ந்தே நாம் அரசியல் பணியினை மேற்கொண்டுள்ளோம்; இந்தப் பணியின் வகை, திறம், இதிலே கிடைத்திடும் வெற்றி என்பதனைப் பொறுத்தே, சமூக இயல், பொருளாதார இயல், கலை இயல், பண்பாட்டு இயல், நெறி இயல் என்பவை அனைத்தும் சீர் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, நாம் ஓர் விடுதலைப் போரினில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதனை மறந்திடலாகாது,

விடுதலை என்றால், ஒருநாட்டைப் பிறிதோர் நாட்டார் பற்றிக்கொண்டுள்ளதனை நீக்கிடுவது மட்டுமே என்போர் குறையறிவினர்.

நமது நாட்டிலேயே, நமது நாட்டவராலேயே மூட்டிவிடப்படுபவை, பூட்டிவிடப்படுபவை ஆகிய தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் போரும் விடுதலைப்போரே.

அந்தப் போரினில் ஈடுபட்டுள்ளோருக்கு, மற்றைய விழாக்களைக் காட்டிலும் இவ்விழா, கருத்துக்கு விருந்தளிக்கும் தன்மையது என்பதுபற்றியே, கழகத்தவர்



பொங்கற் புதுநாளைப் போற்றுகின்றனர், அதன் பொலிவுபற்றி மகிழ்ந்துரைத்து விழா நடத்துகின்றனர்.

பொங்கற் புதுநாளின் பொலிவு, தம்பி! உன் இல்லத்திலும் இதயத்திலும் ஒளி தந்திடுவதாக! என்ற என் நல் வாழ்த்தை அளிக்கின்றேன். இவ்வளவுதானா என்கின்றாயா?

தம்பி! வில்லியம் கல்லன் பிரயான்ட் எனும் அமெரிக்கக் கவிஞரொருவர் (1794-1878) 'விடுதலை' பற்றித் தீட்டிய கவிதையினைப் படித்திடும் பேறு, மொழிக் கிளர்ச்சியின்போது சிறைப்பட்டிருந்தபோது கிடைத்தது.

இத்தனை கூறுகிறானே, அண்ணன் பொங்கற் புதுநாள்பற்றி, என்ன தருகின்றான் என்று எண்ணிக் கொள்வாய், தம்பி! உனக்கு நான் என்ன தந்திட இயலும், பொன்னும் பொருளுமா! சே! உன் வியர்வைத் துளியிலே அஃது விளைந்திடும்! எனவே, எனக்குக் கிடைத்ததை உனக்களிப்பது என்ற முறையிலே அந்தக் கவிதையைத் தந்திடுகின்றேன்:


விடுதலையே! இருண்ட மொய்குழல்
சுருண்டு அழகு தரும்
கொடிபோன்றாள்!
இளமங்கை!
என்று உன்னைக் கூறுகின்றார்.
உண்மை அல்ல அது.
கவிஞர் கனவில் உருவானது.
வாளொடு கரம்!
வந்திடு கேடு தடுத்திடும்,
கேடயம் மறுகரம், படைக்கலன் பலஉள
போரிடும் வீரன் நீ!
களம் பல கண்ட கட்டுடலோன் நீ!
நெறிந்த புருவம் நேர்த்தி அளித்திடும்

முகமெலாம் வடுக்கள் போர்ப்புகழ்க் குறிகள்!
இடிதனை ஏவினர் உனை அழித்திட
இலைஅதற்கு ஆற்றல் உனை வீழ்த்திட!
உலைபல தனிலே உருக்கி வடித்தனர்
உனைப் பிணைத்திடத் தளை பலப்பல
கட்டி அடக்கினோம் என்றவர் களித்தனர்.
பட்டுத் தெறித்திடப் பலமதை ஏவினாய்!
உனை அடைத்திட அமைத்தனர் ஆழ்சிறை!
உதைத்து எழுந்தனை சிறை பொடியாகிட!
கொழுந்துவிட்டெறி தீயென, நீயுமே
எழுந்தனை! எழுப்பினை, எங்குள பேரையும்!
உன்குரல் கேட்டதும் பற்பல நாட்டவர்,
இங்குளோம்! இங்குளோம்!
என்று உடன் முழக்கினர்.
அடக்கிடும் சழக்கர்கள் அரண்டு ஓடிட!

கன்னல் மொழிச் சுவையில், விழி விருந்தில், விழா மகிழ்வில் உள்ள உனக்கு இந்தக் கவிதையைத்தானா நான் அனுப்பித் தருவது என்று எண்ணிக் கொள்ளமாட்டாய்; அறிவாயே தம்பி! நீ, துறை இரண்டு, அகம்; புறம்.

அண்ணன்,

14—1—'66



காஞ்சிக் கடிதம் : 48

## வெள்ளை மாளிகையில்-1

**வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதர்!**

**'டாம் மாமா விடுதி'யின் கருத்துகள்**

**'டிரம்' (முரசு) எனும் நீக்கிரோவின் கதை**

**நீக்கிரோக்களின் உயர்வுக்கு எடுத்துக்காட்டு: புக்கர் டி. வாஷிங்டன்**

**இர்விங் வாலாஸ் எழுதிய 'மனிதன்' ஏடு கூறும் கதை**

தம்பி,

வெள்ளை மாளிகை சென்றிடலாம் வருகின்றாயா? ஆமாம்! அமெரிக்க அரசு அதிபர் கொலுவிருக்கும் அழகு மணிமாடம்தான். அங்கா? நாமா? என்று மலைக்காதே! நாம் யார்? மனிதரில்லையா!! மனிதருக்காக அமைவது தானே மாடம் கூடம் மணிமண்டபம் மாளிகை என்பவை யாவும்; மாளிகையின் நிறமும் பெயரும் எதுவாக இருந்தால் என்ன—வெள்ளை—சிவப்பு—பச்சை—நீலம்—இவை பல்வேறு வகையான வண்ணங்கள், வேறென்ன? அமெரிக்க அதிபர் வீற்றிருக்கும் மாளிகைக்கு 'வெள்ளை மாளிகை' என்று பெயர் இருப்பதாலேயே, மாநிறக்காரர் நுழையக்கூடாதா என்ன!

மேலும், நான் வெள்ளை மாளிகைக்கு வரச்சொல்லுவது, அதனை மனக்கண்ணால் காண்பதற்காகத்தான்.

நாம் மாநிறம்! ஆனால், நான் உன்னைக் காண அழைக்கும் வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதர் அரசோச்சுகிறார். எனக்குள்ள ஆசை அந்த வெள்ளை மாளிகையைக் காண்பதில்கூட அவ்வளவு இல்லை; அங்கு ஒரு கருப்பு மனிதர் ஆட்சி செய்வதைக் காண்பதிலேதான்.

வெள்ளை மாளிகையில் ஓர் கருப்பு மனிதர்!—என்று நான் கூறுகிறேன், ஆனால், தம்பி! அந்த ஏட்டுக்கு உள்ள தலைப்பு அது அல்ல; மனிதன் என்பதே தலைப்பு.

நிறம், வடிவம், நாடு, மதம், மொழி, நிலை, எப்படி எப்படி இருந்திடினும், மனிதன் மனிதன்தானே! அந்த உயர்ந்த பண்பினை உணர்த்தவேண்டும் என்பதற்காகவே நூலாசிரியர் தமது ஏட்டுக்கு மனிதன் என்ற தலைப்பிட்டுள்ளார். அந்த 'மனிதனை'க் காண்பதற்காகவே, உன்னை வெள்ளை மாளிகைக்கு அழைக்கிறேன்; அங்கு யாராரோ இருந்தனர்; ஆனால், மனிதன் கொலுவிருக்கும் மாளிகையாக இருந்திடும் நிலையை இந்த 'ஏடு' மூலமே காணமுடியும். கண்டேன், களிப்புற்றேன்; எண்ண எண்ண இனித்திடும் கருத்துண்டேன்; அந்தச் சுவையை நான், தம்பி! உன்னுடனன்றி வேறு எவருடன் கலந்துண்பதிலே மகிழ்ச்சி பெற்றிடுவேன். அதனால் உன்னிடம் கூறுகிறேன்; மேலும் உன்னிடம் கூறுவதென்பது உயர் கருத்துகளின் பெட்டகம் போன்ற மனம் படைத்த இலட்சியவாதியிடம் கூறுவதென்றல்லவா பொருள் படுகிறது; அதனால் கூறுகிறேன்.

இப்போது அந்த வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்சுபவர் லிண்டன் ஜான்சன்; அறிவாய். அவர் சென்ற திங்கள் பெருமிதத்துடன் பேருரையாற்றி இருக்கிறார், உலகிலேயே நமது நாடுதான் செல்வம் மிகுதியாக உள்ள நாடு என்று; பழக்கப்பட்ட 'பாஷை' விரும்புவோருக்காகச் சொல்லுகிறேன், 'குபேரபுரி'.

அந்தக் 'குபேரபுரி'யின் அதிபராகக் கொலுவிருக்கும் ஜான்சன், இப்போது உள்ளதுபோன்ற வளம்—செல்வப் பெருக்கம்—இதற்கு முன்பு எப்போதும் இருந்ததில்லை—அந்தச் செல்வம் மேலும் மேலும் வளருகிறது, "நமது நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பூந்தோட்டமாக்கிடத் தக்க அளவு மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே மணம் வீசும் வாழ்வு மலரச் செய்திடத்தக்க அளவுக்கு" என்று பூரிப்புடன் பேசியிருக்கிறார்.



இப்போதே, தம்பி! அந்த அமெரிக்கப் பணம் நடமாடாத நாடு இல்லை என்று கூறலாம்; அந்த நாட்டை நாடாத தலைவர்கள் இல்லை என்று சொல்லலாம். யாரோ ஒரு கணக்குச் சொன்னார்கள், இந்தியாவிலே மக்கள் சாப்பிடும் உணவில் எட்டுக் கவளத்தில் ஒன்று அமெரிக்கா கொடுப்பது என்று எனவே, ஜான்சன், அமெரிக்காவின் அளவுகடந்த செல்வம் இந்த அவனி முழுவதும் ஆனந்த வாழ்வு மலரச் செய்ய உதவிடும் என்று கூறிக்கொள்ள உரிமை பெற்றிருக்கிறார். அமெரிக்காவை எதிர்பார்த்துத்தானா நம் வாழ்க்கை அமைய வேண்டும் என்று எண்ணிப் பார்க்கவேண்டிய கடமை, கையேந்துபவர்களுக்கு இருக்கிறது. அது ஒரு தனிப் பிரச்சினை. இப்போது ஜான்சன் கூறியிருப்பதிலே நாம் கவனித்துப் பார்க்கவேண்டிய பகுதி அமெரிக்காவில் இன்றுள்ள செல்வ மிகுதி. அது மறுக்க முடியாத உண்மை. பணத்திலே புரளுகிறார்கள் என்று கதைகளிலே எழுதுகிறார்களே, அது மெய்யான நிலைமையாக இருக்கிறது அமெரிக்காவில்.

ஒரு கணக்குக் காட்டுகிறேன். பார்த்துத் தெரிந்து கொள்ளேன், நிலைமையை.

இன்று அமெரிக்காவில் உள்ள மோட்டார் கார்களின் எண்ணிக்கை 690 இலட்சம்! டெலிபோன்கள் 890 இலட்சம்! டெலிவிஷன் செட்டுகள் 600 இலட்சம்! உல்லாசப் படகுகள் 70 இலட்சம்!

அமெரிக்க மக்கள் ஆண்டொன்றுக்கு இப்போது செலவிடும் பணம் இருக்கிறதே, வாழ்க்கை நடத்த உல்லாசம் பெற. எவ்வளவு தொகை தெரியுமா, தம்பி! எச்சரிக்கையாக இரு, மயக்கம் வந்துவிடப் போகிறது, அவர்கள் செலவிடும் பணம் ரூபாய்!! 1985500000000! இவ்வளவு ரூபாய்கள் செலவிடுகிறார்கள் ஒரே வருடத்தில். பணத்திலே புரள்கிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது!!

தம்பி! ஓய்வு நாட்கள் உள்ளனவே, இயற்கை அழகு காண, செயற்கைச் சேட்டைகளைச் சுவைக்க, மலையுச்சி ஏற, கடலிலே குடைந்தாட, இவ்விதமான இன்பப் பொழுதுபோக்கு, இதற்கு மட்டும் இந்த ஆண்டு அமெரிக்க மக்கள் செலவிடும் தொகை 14,250 கோடி ரூபாயாம்! கேட்டனையா!! செயற்கை நீச்சல் குளங்கள்

மட்டும் சென்ற ஆண்டு புதிதாக 50,000 அமைத்திருக்கிறார்களாமே!

பணம் இந்த அளவு புரளும்போது, என்னென்ன சாமான்கள்தான் அவர்கள் வாங்கமாட்டார்கள்! இங்கு நமக்கிருக்கிற தரித்திர நிலை, மகன் சட்டை தைத்தால் தகப்பன் மேல் வேட்டியை ஒட்டுப்போட்டுப் போட்டுக் கொள்ளும் நிலையையும், மகளுக்குச் சேலை வாங்கினால் தாய் சாயம் போனதைத் துவைத்துக் கட்டிக்கொள்ள வேண்டிய நிலையையும் மூட்டிவிடுகிறது. அங்கே பணம் படுத்துகிறபாடு, என்னவாங்கலாம், எவ்வளவு வாங்கலாம் என்ற மன அரிப்பைத் தருகிறது. பண்டங்களை விற்பனை செய்பவர்கள், தத்தமது சரக்குகளை வாங்கும் படி மக்களைத் தூண்டிட விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரச் செலவுக்காக மட்டும் வணிகர்கள் செலவிடும் தொகை, ஒரு ஆண்டுக்கு 6850 கோடி ரூபாயாம்.

இதைப்போல முன்பு ஒருமுறை பணம் புரண்டது. உச்சிக்குச் சென்று உருண்டு கீழே விழுவதுபோல, அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய சரிவு ஏற்பட்டது; அது 1929ல் என்று எச்சரிக்கை தந்துள்ளனர் சிலர். ஆனால், பல பொருளாதார நிபுணர்கள் அவ்வித மான பயத்துக்குத் துளியும் ஆதாரம் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இதுபற்றிக் கருத்து வேற்றுமை இருப்பினும், இன்றைய செல்வப் பெருக்கம் பற்றி மட்டும் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அத்தகைய அமெரிக்க நாட்டின் ஆட்சிபீடம் அமைந்துள்ள இடம் வெள்ளை மாளிகை!

ஆட்சிப் பீடம் உள்ள இடத்துக்குத்தான் வெள்ளை மாளிகை என்று பெயர் இருக்கிறது. ஆனால், அந்த ஆட்சியிலே உள்ளவர்கள் அனைவரின் நிறமும் வெள்ளையல்ல; கருநிறம் கொண்டவர்கள் இருக்கிறார்கள்; நீக்ரோ மக்கள்.

நிறம் கருப்பு, இனம் நீக்ரோ, பூர்வீகம் ஆப்பிரிக்கா கண்டம்; ஆனால், அவர்கள் அமெரிக்கர்கள்; சட்டம் சொல்லுகிறது; ஆபிரகாம் லிங்கன் அவர்களும் அமெரிக்கர்களே என்று வார்த்தைகளை வீசி மட்டுமல்ல ஒரு பெரிய பயங்கரமான உள்நாட்டுப் போர் நடாத்தியே கூறிடவேண்டி நேரிட்டது. "சரி" என்றனர்; உதடு



அசைந்தது தம்பி! உதடு! உள்ளம் இருக்கிறதே அதிலே புற்றரவு புகுந்துகொண்டுதான் இருக்கிறது, சாகவில்லை; சாகடிக்கவும் முடியவில்லை; அதனைச் சாகடிக்கத் துணிந்து கிளம்பிய கென்னடியைக் கொடியோர் கொன்று விட்டனர், பதறப் பதற; பக்கம் இருந்த அவர் துணைவியார் ஜாக்குலீன் துடிக்கத் துடிக்க.

இறவாப் புகழ் பெற்றுவிட்ட கென்னடி இதே வெள்ளை மாளிகையிலேதான் தங்கி ஆட்சி நடாத்தி வந்தார். அந்த வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதரை—நீக்ரோவை—அதிபராக அமரச் செய்து பார்க்கிறார் 'மனிதன்' எனும் ஏடு எழுதியுள்ள இர்விங் வாலாஸ் என்பவர் அந்தப் புத்தகத்தைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே ஆவல், உன்னிடம் கூறவேண்டும் என்று. ஆனால், அந்த ஏட்டிலே கூறப்பட்டுள்ள கருத்தின் முழுப் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், 'கருப்பு மனிதர்கள்', வெள்ளை மாளிகை உள்ள நாட்டில் எப்படி நடத்தப்பட்டு வந்தார்கள், எப்படி நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டாக வேண்டும். 'நீக்ரோ'க்களின் பிரச்சினையின் வேதனை நிரம்பிய உண்மைகளை உணர்ந்தால் மட்டுமே, இர்விங் வாலஸ் தீட்டியுள்ள காவியம் போன்ற ஏட்டின் கருத்து பயனளிக்கும், பொருள் விளங்கும். வெள்ளைப் புலி என்பது விளங்க வேண்டுமானால், புலியைப் பற்றியும் வெள்ளை நிறம் பற்றியும் புரிந்திருக்க வேண்டுமல்லவா? தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறார் என்று பிரான்சு நாட்டிலே உள்ளவரிடம் சொன்னால் முழுப்பொருள் விளங்குமா? தீண்டாமைக் கொடுமையின் கேடுகளையும், தில்லை தீட்சிதர் என்ற முறையின் தன்மையையும், காலவேகம் இந்த இரண்டு நிலைமைகளையும் மாற்றிவிட்டிருப்பதனையும் அறிந்தவர்கள் மட்டுமே தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமை வகித்தார் என்ற வாசகத்தின் முழுப் பொருளையும் உணர முடியும், அது போலத்தான் 'மனிதன்' எனும் அந்த ஏட்டிலே உள்ளவற்றினை முழு அளவில் உணர வேண்டுமானால், அந்த ஏட்டிலே இல்லாத வேறு பல ஏடுகளிலே உள்ள பல உண்மைகளையும் நிலைமைகளையும் கூறியாக வேண்டும். ஆகவே, தம்பி! இந்த ஏடு என்னை உன்னிடம் வேறு பல ஏடுகளைப் பற்றிய நினைவுகளையும் கூறிடச் செய்கிறது.

ஒரு நல்ல, உயிருள்ள ஏட்டுக்கு இதுவே சிறந்த இலக்கணம் என்று கூடக் கூறலாம்.

'டாம் மாமாவின் விடுதி' என்ற ஒரு ஏடு, நீக்ரோ பிரச்சினையை உருக்கத்துடன் எடுத்துக் கூறுவது. அது 'அந்த நாட்களில்' புரட்சி ஏடு! இன்றுள்ள அமெரிக்க நீக்ரோக்கள், 'டாம் மாமா' என்றால் சண்டைக்கு வருவார்கள்! அந்த ஏட்டின் கருத்து நீக்ரோக்களுக்கு விடுதலை வாங்கித் தராது; அது அடிமை வாழ்க்கைக்கு ஒரு அலங்கார மெருகேற்றும் தந்திரத் திட்டம் என்று கூறுகிறார்கள்.

எந்த அளவுக்கு மனம் வெதும்பிக் கிடக்கிறது; ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பி விட்டிருக்கிறது என்றால், வெள்ளையர் எங்களைச் சம உரிமையுடன் நடத்தவே மாட்டார்கள்; எனவே, எமக்கென்று அமெரிக்காவில் ஒரு தனி நாடு அமைத்துக் கொடுத்திடுக! என்று கேட்கின்ற அளவுக்குச் சென்றிருக்கிறது. இன்னும் சிலர், நாங்கள் அமெரிக்காவில் இருக்கிறோம். ஆனால், அமெரிக்கர் அல்ல, அமெரிக்கர் ஆகவும் முடியாது; தேவையுமில்லை; நாங்கள் நீக்ரோக்கள்; எங்கள் தாயகம் ஆப்பிரிக்கா; நாங்கள் அங்குச் சென்று, 'எங்கள் இரத்தத்தின் இரத்தமாக உள்ள நீக்ரோ இனத்தாருடன் சேர்ந்து வாழ்ந்து கொள்கிறோம். இதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் போதும் என்று கேட்கத் தலைப்பட்டு விட்டனர்.

இத்தகைய நிலைமை இருந்திடுவது உணரப்பட்டால் தான், வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதர் என்பதன் பொருள் விளங்கும்,

அமெரிக்க அரசு. நீக்ரோக்களில் தகுதி மிகுந்த சிலருக்கு உயர் பதவி கொடுத்திருக்கிறது. கீர்த்திமிக்க வழக்கறிஞர்கள், கை தேர்ந்த மருத்துவர்கள், வளமான வாழ்க்கை நடாத்தும் வணிகர்கள் நீக்ரோக்களில் இருக்கிறார்கள். அதுபோலவே அரசாங்க அலுவலிலும் திறமைமிக்க அதிகாரிகளாகச் சில நீக்ரோக்கள் இருக்கிறார்கள்.

சென்ற திங்கள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன், அமைச்சரவையிலேயே ஒரு நீக்ரோவுக்கு இடம் கொடுத்திருக்கிறார்.

இந்தச் சம்பவங்கள் உலகத்தாருக்கு, பாராட்டுதலுக்குரியதாக, வாழ்த்தி வரவேற்கத்தக்கதாகத் தென்படுவ



தற்குக் காரணம், இவை கோபுரக் கலசங்கள் போலப் பளபளப்பாகத் தெரிபவை; உலகின் கண்களுக்குச் சரியான அளவிலே தெரியாமல் உள்ள, அமெரிக்கக் கருப்பர்களின் பொதுவான வாழ்க்கையிலே ஏற்றப்பட்டிருக்கும் இழிவுகள், சிறுமைகள், கொடுமைகள், இன்னல்கள் மலைபோல உள்ளன.

இத்தகைய நிலையிலே உள்ள கருப்பர்களிலே சிலர், டாக்டர்களாவதும். வழக்கறிஞராவதும், அரசாங்க அதிகாரிகளாவதும், அமைச்சர் அவையிலே இடம் பெறுவதும், நடைபெறக் கூடாதன நடந்து விட்டன என்ற பட்டியலைச் சேர்ந்தவை; மலடி வயிற்று மகன்! புதையல் எடுத்த தனம்!

அமைச்சர் அவையிலே இடம் பெற்றுவிடுவதே 'அதிசயம்' 'அதிர்ச்சி தரத்தக்க மாறுதல்' என்று கருதப்படுகிறது என்றால், ஒரு 'கருப்பு மனிதர்' வெள்ளை மாளிகையில், ஆட்சித் தலைவராகவே அமருவது என்றால், வெள்ளை வெறியர்களின் மனம் எரிமலையாகி வெடித்து ஆத்திரக் குழம்பினை அல்லவா கக்கிடச் செய்திடும்.

துணிந்து, ஆனால் தூயநோக்கத்தோடு, நூலாசிரியர் கருப்பு மனிதரை வெள்ளை மாளிகையில் அதிபராக அமரும்படி தம் கற்பனைக்குக் கட்டளையிட்டாரே தவிர, அவருக்கேகூட, அதிகதூரம் கற்பனையை ஓடவிடக் கூடாது, நம்பவே முடியாதது இது என்று படித்திடுவோர் கருதிவிடத்தக்க விதமாகக் கதை அமைந்து விடக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு, வெள்ளை மாளிகையில் ஆட்சி அதிபராக அமரும்படி, அமெரிக்க மக்கள், நிறவெறியற்று, நிறபேதம் பார்க்காமல் ஒரு கருப்பரை, குடிஅரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள் என்று எழுதவில்லை; எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால், ஒரு கருப்பர், வெள்ளை மாளிகையில் குடியரசுத் தலைவராக அமரவேண்டிய நிலை ஏற்பட்டது என்ற அளவிலேயே தமது கற்பனையை நிறுத்திக் கொண்டார்.

கற்பனை வளம் குறைவாக உள்ளவர்கள், ஒரு கருப்பர் வெள்ளை மாளிகையில் அதிபராக அமர்ந்தது போன்ற கனவு கண்டார்; அந்தக் கனவில்...என்று எழுதியிருந்திருப்பார்கள். இர்விங் வாலஸ் நல்ல கற்பனைச் செறிவு இருப்பதால், நடந்திருக்கக் கூடும் என்று அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விதமான ஒரு நிகழ்ச்சிச் சூழ்

நிலையைக் காட்டி, வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதரை இருந்திடச் செய்திருக்கிறார்.

தம்பி! அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நிறம் கருப்பு என்பதால், அவர்களை ஓட்டல்களில்—படக்காட்சிக் கொட்டகைகளில்—கல்விக் கூடங்களில்—மருத்துவமனைகளில்—பிரித்து வைக்கிறார்கள்; இத்தனைக்கும் இப்படிச் செய்யக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. நீக்ரோக்களுக்குக் கல்விக் கூடங்களில் வெள்ளையருடன் சேர்ந்து படிக்கச் சட்டம் உரிமை அளிக்கிறது; ஆனால் நிறவெறி தடுக்கிறது; போலீஸ் துணையுடன் மட்டுமே கருப்பு மாணவர்கள் அந்தக் கல்விக் கூடங்கள் செல்ல முடிகிறது அங்குத் தரப்படும் பாடமோ ''அனைவரும் சமம்'' என்பது. எத்தனை போலித்தனமான நடவடிக்கை!! எத்தனை காலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது! தலைமுறை தலைமுறையாக இந்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டுவரும் நீக்ரோ மக்கள், வெள்ளையரிடம் எப்படித்தான் 'நட்புறவு' காட்டமுடியும்! பெரும்பாலும் முடிவதில்லை; காட்டப்படும் 'நட்புறவில்' பெருமளவு 'நடிப்பாக'வே இருந்துவருகிறது, வேறு எப்படி இருக்க முடியும்?

அன்புரை, அறிவுரை, விளக்கவுரை எல்லாம் ஏடுகளிலே நிரப்பித் தந்துள்ளனர்; இப்போதும் தந்தபடி உள்ளனர்.

அமெரிக்காவில் 'நீக்ரோக்கள்' பற்றி 'முற்போக்காளர்' கூடத் தமது கருத்தினைக் கூறும்போது, அங்கு உள்ள நிறவெறியர்களின் ஆத்திரத்தை அதிக அளவில் கிளறிவிடாத முறையிலே பக்குவமாகவே கூற வேண்டி நேரிட்டது. அதற்கே 'புருவத்தை நெறிப்போரும்' 'புண்படப் பேசுவோரும்' தாக்க வருவோரும் கிளம்புவர்.

'நீக்ரோக்கள்' மனித இனத்திலே தாழ்ந்தவர்கள்; அமெரிக்கர்களைவிட 'மட்டம்', அது இயற்கைச் சட்டம், இறைவன் திட்டம் என்று பேசிடுவோர் அறிவாலயங்களென்று கூறப்படும் பல்கலைக் கழகங்களிலே பேராசிரியர்களாக இருந்திடும் நிலை.

'நீக்ரோக்கள்' அமெரிக்கரின் 'உடைமைகள்'. எனவே அவர்களுக்கு மனித உரிமைகள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டியது அல்ல நமது கடமை, சொத்து



உரிமைச் சட்டத்தின்படி நடவடிக்கை இருக்கிறதா என்று பார்க்கவேண்டியதே நமது கடமை என்று பேசிடும் சட்ட நிபுணர்களைத் தாங்கிக்கொண்ட நாடு அமெரிக்கா.

''என் உடைமை! இதனை நான் எதுவும் செய்வேன். கூடத்திலும் வைத்திருப்பேன், குப்பைமேட்டிலும் வீசுவேன், இரவல் கொடுப்பேன் அல்லது இன்னொரு பொருளுக்கு ஈடாக மாற்றிக்கொள்வேன், அல்லது உடைத்தெறிவேன்; என் விருப்பப்படி செய்வேன்; இது என் உடைமை!'' என்று வீடுகாடு. மாடு வண்டி. குதிரை ஆடு. போன்ற உடைமைகள் குறித்துப் பேசும்போது, ஒருவருக்கும் அந்தப் பேச்சு அக்ரமமானது என்று தோன்றுவதில்லையல்லவா? அமெரிக்காவில் — இன்று அல்ல, முன்பு—நீக்ரோக்கள் உயிருள்ள ஜீவன்கள் அல்ல, உரிமைபெற்ற மாந்தர் என்று அல்ல. வெறும் உடைமைகள் என்றே கருதப்பட்டு வந்தது.

கர்த்தரின் சம்மதம் இந்த ஏற்பாட்டுக்கு உண்டு என்று உபதேசம் செய்தவர்களும், இது நாம் இயற்றியுள்ள சட்டம் என்று வாதாடி வெற்றி பெற்றவர்களும் இருந்து வந்ததுகூட வியப்பல்ல; ஆமாம். நாம் 'ஐயா'வின் 'உடைமை'தான், என்ன செய்யவும் அவருக்கு உரிமை உண்டு என்று நம்பிக்கிடந்திடும் நிலையில் நீக்ரோக்களும் இருந்தனர்! திடுக்கிடச் செய்திடும் வியப்பு இஃதன்றோ?

தம்பி! அமெரிக்காவில் அந்த நாட்களிலே இருந்து வந்த முறை பற்றியும், நிலைமைபற்றியும் வெளிவந்துள்ள பல ஏடுகளிலே ஒன்று 'டிரம்' (முரசு) என்ற பெயர் கொண்டது. இதிலே அப்பன், மகன், அவன் மகன் என்று மூன்று தலைமுறையினரின் வாழ்வு விளக்கப்பட்டிருக்கிறது. வாழ்வா அது? இரத்தக் கண்ணீர் விடவேண்டும் அந்த வேதனையை உணரும்போது.

'டிரம்' என்பவன், ஆப்பிரிக்க நீக்ரோ—இளைஞன்—கட்டுடல்! அங்கு அவன் ஒரு அரசாளும் உரிமை பெற்ற மரபினன்கூட. அவனை அடிமை வியாபாரிகள் பிடித்திழுத்துக்கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள்; அமெரிக்கப் பண்ணையாருக்கு!

அமெரிக்காவில், பருத்தி கரும்புப் பண்ணைகள் அமைத்து பொருள் குவித்தனர்—அங்குப் பாய்ச்சப்

பட்டது தண்ணீர் மட்டுமல்ல—நீக்ரோக்களின் இரத்தமும் கண்ணீரும் கூடத்தான். அப்படி ஒரு பண்ணையில் 'டிரம்' பாடுபட்ட சோகக் காதைதானே இது என்று எண்ணுகிறாயா தம்பி! அதுதான் இல்லை. இந்த 'டிரம்' வேலை செய்தது, விந்தையான வேறோர் பண்ணையில்! உற்பத்திப் பண்ணையில்! விளங்கவில்லையா? விளங்காது சுலபத்தில், விளங்கினாலோ வேதனை உணர்ச்சி அடங்க நெடுநேரம் பிடிக்கும்.

ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களை வேட்டையாடிப் பிடித்துக்கொண்டு வந்து அமெரிக்காவில் விற்றுப் பொருள் குவித்து வந்தனர் கொடியவர்கள்—கொடியவர்கள் என்று இப்போது கூறிவிடுகிறோம்—அப்போது அவர்கள் வியாபாரிகள்! கடலிலே வலைவிசி மீன் பிடித்து விற்பதில்லையா, பறவைகளைப் பிடித்து விற்பதில்லையா, மான்களையும் காட்டுப் பன்றிகளையும், வேட்டையாடிக் கொன்று அந்த இறைச்சியை விற்பதில்லையா, அது போலத்தான் அடிமை வாணிபம் அனுமதிக்கப்பட்டு வந்தது. எனவே, அதிலே ஈடுபட்டவர்களைக் கொடியவர் என்று அந்த நாட்களில் கூறுவதில்லை.

விலைகொடுத்து வாங்கிய அடிமை உழைத்து உழைத்து ஓடாகி, உருக்குலைநது, நோயால் தாக்குண்டு இறந்துபோய்விட்டால், பண்ணையார் மறுபடியும் சந்தைக்குச் சென்று வேறு அடிமைகளை விலைக்கு வாங்கிக் கொள்வார். நாளாகவாக இந்த அடிமைகளை ஆப்பிரிக்காவிலே இருந்து கொண்டுவந்து விற்பதற்கு ஆகும் செலவு அதிகமாகிக்கொண்டு வந்தது; புதிதாக அடிமைகளை வாங்க அதிகப்பணம் செலவிடவேண்டி வந்தது. அடிமைகள் உழைத்து உருக்குலைந்து போவதால், நாளாகவாக அவர்களின் வேலைத்திறன் குறையலாயிற்று. தலைமுறைக்குத் தலைமுறை தேய்ந்து கொண்டு வந்தனர். அந்தப் பழைய கட்டுடல். தாக்குப் பிடிக்கும் வலிவு குறைந்துகொண்டே வந்தது.

அதிகச் செலவு, வலிவிழந்தநிலை ஆகிய இரண்டையும் கண்ட ஒரு வெள்ளை பண்ணை முதலாளி, புதுத் திட்டம் வகுத்தான். ஆப்பிரிக்காவிலிருந்து புதிது புதிதாக, தொகை தொகையாக நீக்ரோக்களைப் பிடித்துக் கொண்டு வருவதைவிட, அமெரிக்காவிலே இடம் பெற்று விட்ட நீக்ரோக்களைக்கொண்டே, உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டால் என்ன? அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களிடையே 'பிறப்பு' அதிகமானால், புதிய புதிய அடிமைகள் கிடைப்பார்களல்லவா என்று எண்ணினான். அதன் விளைவாகத்தான் அந்த ஆசாமி, 'நீக்ரோ உற்பத்திப் பண்ணை' அமைத்தான்;



கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை நடத்துபவர்கள் தரமான ஜோடிகளை இணைத்து, உற்பத்தியின் அளவையும் தரத்தையும் பெருக்குகிறார்கள் அல்லவா, அதுபோல கட்டுடல் படைத்த தரமான நீக்ரோ இளைஞர்களைப் பருத்திக் காடுகளிலே வேலை செய்யச்சொல்லிக் கசக்கிப்பிழிவதை விட, அவர்களை ஊட்டம் கொடுத்து வளர்த்து, வலிவும் பொலிவும் மிகுதியாகும்படி செய்து, அவர்களை நீக்ரோ பெண்களுடன் உறவுகொள்ளச் செய்து, உற்பத்தியைப் பெருக்குவது என்று திட்டமிட்டான். இதிலே அந்த ஆசாமி தன் திறமை முழுவதையும் செலவிட்டு, நல்ல தரமான நீக்ரோக்களைத் தனது பண்ணையில் உற்பததி செய்து, விற்பனை செய்து வந்தான்.

நீக்ரோப் பெண்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உடல் பாழாகும்படியான கடினமான வேலை கொடுக்காமல் வலிவளிக்கும் உணவு அளித்துத். தனிவிடுதிகளில் இருந்திடச் செய்து—அது போன்றே கட்டுடல் படைத்த நீக்ரோ வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து அந்த விடுதிகளில் 'விருந்தினராக இருந்திடச் செய்வது, உறவு பெற்றவள் கருவுற்றதும், அவனை வேறு விடுதிக்குச் சென்றிட உத்திரவிட்டு விடுவது, வேறு விடுதி அந்தச் சமயம் இல்லையானால், ஆடவர் பகுதியில் ,தக்க சமயம், வருகிறவரையில் இருந்திடச் சொல்வது, கருவுற்றவளுக்கு வலிவு குன்றாதிருக்கத்தக்க உணவளித்து வருவது குழந்தை பிறந்ததும், சிறிது காலம் தாயுடன் இருந்திடச் செய்துவிட்டு, பிறகு குழந்தைகள் வளர்ப்பு இடத்திற்கு எடுத்துச் சென்று வளரச் செய்வது!! இப்படி ஒரு பண்ணையே நடத்தினான் அந்தப் பாதகன்.

கணவன்—மனைவி என்ற உரிமைத் தொடர்போ, தாய்—மகன் என்ற பாசத் தொடர்போ ஏற்படவிடுவதில்லை; ஆண்—பெண்—குழந்தை என்ற ஒரு 'தொடர்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அந்தப் பண்ணையில், தயாரிக்கப்பட்ட 'அடிமை' என்றால் கிராக்கி அதிகம்;

பேசிக்கொள்கிறார்கள் அல்லவா புங்கனூர்ப் பசு பழைய கோட்டைக் காளை, மூரா எருமை என்று 'ரகம்' பற்றி' அதுபோல இந்தப்பண்ணைக்கு ஒரு பெயர்!!

இந்தப் பண்ணையில் வந்து சேருகிறான் தம்பி! 'முரசு' என்ற நீக்ரோ வாலிபன்! அடிமைச் சந்தைக்கு 'ஆட்களை'ப் பெற்றுக் கொடுக்கும் வேலைக்காக.

அவன் பட்டபாடு, அவன் மகன், பேரன் ஆகியோர் கண்ட அவதிகள் அந்த நூலிலே விளக்கப்பட்டிருக்கிறது. நான் முழுவதும் கூறப்போவதில்லை; நீக்ரோக்கள் விஷயமாக என்னென்ன வகையான ஈனத்தனமான கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதனை எடுத்துக் காட்ட மட்டுமே 'டிரம்' பற்றிய ஏட்டினைக் குறிப்பிட்டுக் காட்டினேன். அத்தகைய நீக்ரோ ஒருவன், அமெரிக்கக் குடி அரசுத் தலைவராக அமர்ந்து அரசோச்சுவது எனறால், அதிர்ச்சி அளிக்கத்தக்க அதிசயமல்லவா!! 'மனிதன்' எனும் ஏடு அந்த அதிசயத்தைஅல்ல, குடியரசுத் தலைவரான கருநிறத்தான் என்னென்ன அல்லலுக்கும் ஆபத்துக்களுக்கும், இன்னலுக்கும் இழிவுகளுக்கும், சூது சூழ்ச்சிக்கும் ஆளானான் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பொறுத்தார் பூமியாள்வார்; கல்வி எவரையும் உயர்த்தும்; காலம் மெள்ள மெள்ள, ஆனால் உறுதியாக மாறித் தீரும் என்று அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. தாழ்ந்த இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம், தத்தளிக்கும் சமூகம் என்ற நிலை இருப்பினும், அதிலேயும் நல்முத்துக்கள் தோன்றிடின் மதிப்பளித்தே தீருவர் என்று பேசி மகிழ்வர், தீவிரமான மாறுதலைத் திட்டமிட்டு ஏற்படுத்தத் துணிவற்றவர்கள்; மனமற்றவர்கள்; வழி அறியாதவர்கள், தமது வாதத்தை வலிவுள்ளதாக்கிட உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் கதைகளை ஆதார மாகக் கூறுவர். அவ்விதமான 'மணிகள்' நீக்ரோ சமுதா யத்திலே தோன்றாமலில்லை; உயர் பதவிகளிலே அமர்ந்து நற்பெயர் ஈட்டாமலில்லை, ஆனால், அவர்கள் வகித்த பதவி தந்திடும் மயக்கத்தில் தம்மை மறநது அத்தகைய 'கருப்பர்களை'ப் பாராட்டினார்களேயன்றி, கருப்பர் இனத்தை அல்ல! கருப்பரிலும் இத்தகையவர்கள் உள்ளனரே என்று வியந்து பேசினர். கருப்பரிலா இப்படிப்பட்டவன் தோன்ற முடிந்தது என்றும், இந்த



நிபுணன் நீக்ரோ இனமா? உண்மையாகவா? விசித்திர மாக இருக்கிறதே என்றும் பேசுவதை வாடிக்கையாக்கிக் கொண்டனர்.

வெள்ளை நிற வெறியர் இதுபோலக் கருதினர் என்றால், நீக்ரோக்களில் புரட்சி எண்ணம் கொண்ட வர்கள் தம் இனத்திலே ஒரு சிலர் இவ்விதமான "உயர் இடம் பெறுவது, இனத்தின் விடுதலைக்கோ மேம்பாட்டி னுக்கோ பயன்படவில்லை; அதற்கு மாறாக, மேலும் அந்த இனத்தை அழுத்திவைக்கவே பயன்படுகிறது; பலர் கோடரிக்காம்புகளாக்கப் படுகின்றனர்; அவர்களை உலகுக்குக் காட்டி நீக்ரோ இனம் ஒரு குறையுமின்றி வாழுகிறது என்று உலகுக்குக் கூறி உண்மை நிலைமையை மறைத்து விடுகின்றனர்; கழுத்துப் புண்ணை மறைத்திட (மாட்டின் கழுத்தில்) கட்டப்படும் வெண்கலமணி போன்றவர் இவர்! என்று கருதினர்; கூறிவந்தனர்.

புக்கர் டி. வாஷிங்டன் கல்வித் துறையில் பணி யாற்றிய வித்தகர்; நீக்ரோ; சோர்ந்த உள்ளம் கொண்ட வர்களுக்குப் புக்கர் டி. வாஷிங்டன் வரலாற்றை எடுத் துரைத்து, தன்னம்பிக்கையுடன் பணியாற்றி வந்தால், தகுதிகளைத் தேடிப் பெற்றால், மேம்பாடு அடைய முடியும், சமூகத்தில் உயர்ந்த மதிப்புப் பெற்றிட முடியும் என்று எடுத்துக்காட்டாத அறிவாளர் இல்லை என்று கூறலாம் அவ்விதம் 'எடுத்துக் காட்டு'க்குப் பயன் பட்டவர் புக்கர் டி. வாஷிங்டன்; கருநிறத்தவர்.

பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தமாக்கப்பட்டிருக் கிறது புக்கர் டி. வாஷிங்டன் வாழ்க்கை வரலாறு.

எபிநேசர் பேசெட் ஜொனாதன் ரைட், ஜெபர்சன் லாங், பிளான்ச் ப்ரூஸ், ராபர்ட் வீவர், பிரடரிக் மாரோ, ரால்ப் பன்ச், ஆண்ட்ரூ ஹாட்சர், கார்ல் ரோவன், இப்ப டிப் பட்டியல் இருக்கிறது, பல்வேறு துறைகளிலேவித்தகர் களாக விளங்கிய நீக்ரோக்களைப் பற்றி. எனினும், இந்த நிலைமை, உழைத்தால் உயரலாம், தகுதியைத் தேடிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற பாடங்களைப் போதிக்கப் பயன்பட்டனவேயன்றி, நீக்ரோ சமுதாயத்தைப் பிறவி காரணமாகவே, நிறம் காரணமாகலே வெறுத்தொதுக்கி யும் இழித்தும் பழித்தும் இன்னல் விளைவித்தும் வந்த வெள்ளை வெறியரின் போக்கை மாற்றிடப் பயன்பட வில்லை.

இந்தச் சூழ்நிலையில் வெள்ளை மாளிகைக்கு ஒரு கருநிறத் தலைவர்! என்கிறபோதுதான், வியப்புடன் கூடிய வெடவெடுப்பு எடுக்கிறது நிறவெறியர்களுக்கு.

எந்த ஆண்டு இந்த அதிசய நிகழ்ச்சி நேரிட்டது என்று நூலாசிரியர் குறிப்பிடவில்லை; அமெரிக்காவில் இன்றுள்ள மனப்போக்கைக் கொண்டு இதற்கான ஒரு 'நாள்' முன்கூட்டிக் குறிப்பிடுவது இயலாது என்பதால் போலும்.

கென்னடி, அதற்குப் பிறகு லிண்டன் ஜான்சன் ஆகியோர் காட்டும் உறுதி கலந்த போக்கைக் கவனிக்கும் போது, எல்லாத் துறைகளிலும் நீக்ரோக்கள் சமஉரிமை பெற்றுவிடுவது வெகுவிரைவில் என்று எண்ணிடத் தோன்றுகிறது. ஆனால், வெறியர்கள் இன்றும் நடாத்தி வரும் கொடுமைகளைப் பார்க்கும்போது எத்தனைத் தலைமுறைகள் பிடிக்குமோ நீக்ரோக்கள் மனித உரிமை பெற்றிட என்று திகைத்திடத் தோன்றுகிறது.

என்றோ ஓர் நாள், வெள்ளை மாளிகையில், ஆட்சித் தலைவராக ஒரு கருநிறத்தவர் நுழைந்தால், நிலைமைகள் என்னென்ன வடிவமெடுக்கக் கூடும், எந்தெந்த புற்றிலிருந்து என்னென்ன அரவு கிளம்பி வந்து தீண்டக்கூடும் என்பது பற்றி, 'கற்பனையாக', ஆனால், எல்லையற்ற பெருவெளியிலே பறந்திடாமல், ஆசிரியர் கதையொன்றைத் தீட்டித் தந்திருக்கிறார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தமது பதவிக் காலத்தில் இறந்துபடுவாரானால், உடனடியாகத் துணைத் தலைவர் தலைவராக்கப்படுவார். இது அங்கு மரபு. அந்த மரபின்படிதான், கென்னடியைக் கொடியோன் சுட்டுக் கொன்றதும், அப்போது துணைத்தலைவராக இருந்து வந்த லிண்டன் ஜான்சன் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கென்னடி இருந்திருந்தால் எவ்வளவு நாட்கள் குடியரசுத் தலைவராக இருந்திருப்பாரோ, அந்த நாள் வரையில் துணைத்தலைவராக இருந்த ஜான்சன் தலைவராகப் பணியாற்றினார்.

பிறகு புதிய தேர்தல் வந்தது. அதிலே ஈடுபட்டு, ஜான்சன் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது குடியரசுத் தலைவராக இருந்து வருகிறார்.



குடியரசுத் தலைவர் இறந்துபடும்போது, 'இடைக்கால'த் தலைவராக, துணைத்தலைவர் நியமிக்கப்படுகிற மரபின்படி, பலர் தலைவராகப் பணியாற்றியுள்ளனர்.

அவனி புகழ் நிலைபெற்ற ஆபிரகாம் லின்கன் ஒரு கொடியவனால், நாடக அரங்கமொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டதனை, தம்பி! அறிந்திருப்பாய். அப்போதும், துணைத்தலைவர், தலைவராக்கப்பட்டார்.

ஆரிசன், டைலர், கார்பீல்டு, மக்ஸ்லீ, ஆர்டின்சு, ரூசிவெல்ட், இப்படிப் பலர், தலைவர் பதவியில் இருந்தபடியே உயிர் நீத்தனர். அப்போதெல்லாம், துணைத் தலைவர்களே தலைவர்களாயினர்.

இந்த 'மரபை'ச் சற்று விரிவுபடுத்தி, அதன் அடிப்படையிலேதான், தமது கற்பனையை அமைத்திருக்கிறார் இர்விங் வாலாஸ்.

தலைவர் இறந்துபட்டால், துணைத்தலைவர், துணைத்தலைவரும் இறந்துபட்டால்? பாராளுமன்றத் தலைவர்! அவரும் இறந்துபட்டால்? பாராளுமன்ற மேலவைத் தலைவர்! இப்படி ஒரு மரபுபற்றி ஆசிரியர் குறிப்பிட்டுக்கொண்டு, தமது 'கற்பனையை'க் கட்டியிருக்கிறார்.

மேலவைத் தலைவர், குடியரசுத் தலைவராகும் நிலை எப்போது ஏற்படுமென்றால், எதிர்பாராத வகையில் தமது பதவிக் காலத்தின் போதே, ஒரே சமயத்தில், குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகிய மூவரும் இறந்துபட்டிருக்க வேண்டும்.

அவ்விதமான ஒரு சூழ்நிலையை நம்பத்தகாத முறையில் அல்ல, இருக்கக்கூடும் என்று எவரும் கூறிடத்தக்க விதத்தில், மனிதன்' என்ற ஏடு உருவாக்கிக் காட்டுகிறது.

திடீரென்று அமெரிக்கக் குடியரசின் துணைத் தலைவர் இறந்துபடுகிறார். குடியரசுத் தலைவர், நண்பர் இறந்ததால் ஏற்பட்ட துக்கத்தைத் துடைத்துக் கொள்ளவும் நேரமின்றி, ஐரோப்பாவில், பிரான்சு நாட்டில் ஓர் ஊரில் சோவியத் அதிபரைச் சந்தித்து ஆப்பிரிக்கப் பிரச்சினைபற்றிப் பேசவேண்டி ஏற்பட்டு விடுகிறது. அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்கிறார். அமெரிக்கத்

தலைநகரில், மற்ற அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களுடன், மாநாட்டு இடைவேளையில், 'தொலைபேசி' மூலம் பேசுகிறார், குடியரசுத் தலைவர்—சோவியத் அதிபரின் போக்குபற்றி, தான் மேற்கொள்ள இருக்கும் ராஜதந்திரம்பற்றி, கேட்டு, வியப்படைவதும், தமது கருததுக்களைக் கூறுவதும் மேலும் விளக்கம் கேட்பதுமாக—அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் இருக்கையில், 'தொலைபேசி' நின்றுவிடுகிறது; ஏதோ இயந்திரக்கோளாறு. பதைபதைக்கிறார்கள், பாதியிலே பேச்சு நின்றுவிட்டதே என்று. நிமிடங்கள் ஆண்டுகள்போல நகருகின்றன. பிரான்சிலே, குடி அரசுத் தலைவர்; வாஷிங்டனில்லே அவருடைய பேச்சைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கும் ஆட்சிக்குழுவின் பல்வேறு தரமுள்ள அதிகாரிகள்.

''அய்யோ'' என்று அவர்கள் அலறும்படியான செய்தி வருகிறது தொலைபேசி மூலம். நம்ப முடியவில்லை; அதிர்ச்சி; குழப்பம்; கலக்கம்.

தொலைபேசி தெரிவிக்கிறது, குடிஅரசுத் தலைவர் திடீரென்று இறந்தவிட்டார். மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாளிகையின் மேற்பகுதி இடிந்து விழுந்துவிட்டது. அந்த இடத்திலேயே குடிஅரசுத் தலைவர் மாண்டுபோனார்!

தம்பி! எப்படி இருக்கும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால். கதை என்பதால் உருக்கம் அந்த அளவுக்கு வராது; எனினும், எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதனை நாம் உணர்ந்துகொள்ளும் விதமாக அல்லவா, தாஷ்கண்டில் லால்பகதூர் மறைந்த செய்தி தாக்கிவிட்டது.

வாஷிங்டனில். குடியரசுத் தலைவர் நடாத்தும் மாநாட்டின் தகவல் அறிந்துகொள்ளத் தொலைபேசி-பக்கத்தில் திரள்கிறார்கள் அதிகாரிகள். அமைச்சர்கள். அவர்களுக்குக் கிடைப்பதோ, குடியரசுத்தலைவர் இறந்துபட்டார் என்பது.

துணைத்தலைவரோ ஏற்கனவே மறைந்து போனார்! தலைவரோ, பிரான்சிலே பிணமாகிக் கிடக்கிறார். எத்தனை சோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியும்; தத்தளித்தனர். அந்தத் தத்தளிப்புக்கு இடையிலேயே



'மரபு' குறிப்பிடுகிறபடி பாராளுமன்றத்தலைவர், குடிஅரசுத் தலைவராகப் பொறுப்பேற்கவேண்டுமே. அவருடைய முதல் அலுவலே, அந்தோ! முன்னாள் குடியரசுத் தலைவரின் உடலை வரவேற்று, உரிய முறையில் அடக்கம் செய்து, அனுதாபம் தெரிவிப்பதாக அமைகிறது. என்ன செய்வது! அவர்போன்ற ஒரு தலைவரை மறுபடியும் எங்கிருந்து பெறமுடியும்? பத்து நிமிடங்களுக்கு முன்பு, எவ்வளவு உற்சாகமாகப் பேசினார், 'தொலைபேசி' மூலம். வேடிக்கை மூட்டுகிற முறையிலேகூடப் பேசினாரே! இப்போது!! என்று எண்ண எண்ண அவர்கள் மனம் சுக்குநூறாகிறது. ஆயினும் அரசு நடைபெற்றாகவேண்டுமே, எனவே, துக்கம் உள்ளத்தைப் பிய்த்துக்கொண்டிருக்கும் நிலையிலும், ''சேதி அனுப்புக! உடனடியாக! பாராளுமன்றத் தலைவரை, குடியரசுத் தலைவராக்கும் சட்ட ஒழுங்கு நடைபெற்றாகவேண்டுமே! கூப்பிடுக அவரை!'' என்றார் ஓர் அமைச்சர். ''அவர் இங்கு எங்கே இருக்கிறார்? அவருமல்லவா, மாநாட்டில் கலந்துகொள்ள, குடியரசுத் தலைவருடன் சென்றிருக்கிறார்'' என்று விவரமளிக்கிறார் வேறொருவர். மீண்டும் பரபரப்பு, பதைப்பு! விபத்து நடந்தபோது 'அவர்' எங்கே இருந்தார்? அவருக்கு எதுவும் நேரிடவில்லையே! என்ற பதைப்புப் பேச்சு. தொலைபேசி வேலை செய்கிறது. அடிபட்டவர்களில் அவரும் ஒருவர். ஆனால். உயிர் போகவில்லை. மருத்துவமனையில் கிடத்தப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைக்கிறது. இவ்வளவு கேடுகளுக்கிடையில் இந்த ஒரு நல்ல செய்தியாவது கிடைத்ததே! அவருக்கு ஒன்றும் இல்லை! மருத்துவமனையில் இருக்கிறார். காயம்; அவ்வளவுதான் என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு தைரியத்தைத் தருவித்துக்கொண்டிருக்கும்போதே அவர்கள் அனைவரையும் அடித்துக் கீழே தள்ளிவிடத்தக்க தாக்குதலை நடத்திற்று தொலைபேசி; ''அவரும் இறந்துபட்டார். மருத்துவமனையில்'' என்ற செய்தியைத் தெரிவித்து.

ஒரு அடி விழுந்ததும் மற்றொன்று; அதைத் தொடர்ந்து இன்னொன்று விழுவதுபோல, கொடுமையான செய்திகள் கிடைத்தன அவர்கள் திகைத்தனர், தேம்பினர், தத்தளித்தனர். இப்படியா ஒரு சங்கிலித் தொடர்போல இழப்புகள்! எப்படித்தான் ஒருநாடு 'இவ்வளவை'த் தாங்கிக்கொள்ளும்? தலைவர், துணைத்

தலைவர், பாராளுமன்றத் தலைவர் மூவருமல்லவா மறைந்தனர்! இனி, இனி......?'' என்று கண்ணீர் பொழிந்த நிலையினர் குமுறினர்; "இனி, குடியரசுத் தலைவராக வேண்டியவர், பாராளுமன்ற மேலவைத் தலைவர்!'' என்றார் ஒருவர்; அவர் யார் என்பதுபற்றிய நினைப்புமற்ற நிலையில் சோகத்துடன் 'ஆம்' என்றனர் மற்றையோர். அந்த மேலவைத் தலைவர்தான் தம்பி டக்ளஸ் டில்மன் எனும் ஒரு நீக்ரோ!!

எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தீட்டி, ஒரு நீக்ரோவைக் குடியரசுத் தலைவர் ஆக்கிக் காட்டியுள்ளார் ஆசிரியர் பார்த்தனையா!!

தகுதியற்ற ஒருவர் தலைமைப் பதவியைச் சூழ்ச்சித் திறத்தால் பிடித்துக்கொண்டுவிட்டால், பிறகு தகுதி மிக்கவர்களும் அச்சத்தால் தாக்கப்பட்டு, அடிபணிந்து கிடக்கின்றனர், காண்கின்றோம்.

டக்ளஸ் டில்மன், காட்டிலே திரிந்துகொண்டிருந்த ஒரு தற்குறி அல்ல, நாட்டு ஆட்சி மன்றத்தில் ஒன்றான செனட் சபையின் தலைவர். தகுதி காரணமாக அந்த நிலை பெற்றார். வழக்கறிஞர். போதுமான அளவு வசதி பெற்றவர்; புகழ் ஈட்டிக்கொண்டவர். பதவிப் பசி கொண்டவரல்ல. எதிர்பாராத அழைப்பு! எட்டி எட்டிப் பார்த்தாலும் தொட்டுப் பார்த்திட முடியாத ஒரு பதவியில் அவர் 'நிலைமை'யால் இழுத்துச் சென்று அமர்த்தப் படவேண்டி ஏற்படுகிறது.

டக்ளஸ் டில்மன்—செனட் தலைவர்! அப்படியென்றால்? மரபு கூறுகிறது. அவர்தான் குடியரசுத் தலைவர் வேலை பார்க்கவேண்டும் என்று. குடியரசுத் தலைவராகவா? ஒரு நீக்ரோவா?

செனட் சபையின் தலைவர் டக்ளஸ் டில்மன்!

ஆமாம்! அவர் ஒரு நீக்ரோ! கருநிறத்தான்! கனவானாக இருக்கலாம், கற்றறிவாளனாக இருக்கலாம்! வழக்கறிஞராக இருக்கலாம்! ஆனால், அவர் ஒரு நீக்ரோ!!

மரபு இருக்கிறதே, தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகியோர் இறந்துபடின், செனட் சபைத் தலைவரே. குடியரசுத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று.



மரபு அது! ஆமாம்! ஆனால். டக்ளஸ் டில்மன், ஒரு நீக்ரோ!, ஒரு நீக்ரோவா, அமெரிக்கக் குடியரசுத் தலைவராவது! எந்த அமெரிக்காவில் அடிமையாகக் கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டானோ அந்த நீக்ரோவின் வழிவழி வந்தவன், அந்த இனத்தவன், அவன் படித்தவனாக இருக்கட்டும், பண்புள்ளவனாக இருக்கட்டும், மரபு ஆயிரம் கூறட்டும், அந்த நீக்ரோ, அமெரிக்கக் குடியரசின் தலைவனாகப் பதவி ஏற்பதா! அதை அனுமதிக்கலாமா! வெள்ளை இனத்தவர் ஏற்றுக்கொள்வார்களா! யார் உங்கள் குடியரசுத்தலைவர் என்று உலகினர் கேட்கும்போது, எப்படி மனம் ஒப்பி ஒரு நீக்ரோ கனவான் எமது தலைவராக இருக்கிறார் என்று கூறமுடியும். மாநாடு நடத்தச் சென்ற குடியரசுத் தலைவரைச் சாகடித்ததே, மண்டபம் இடிந்துவிழுந்து; அது அவரைமட்டும் அல்லவே, நமது இனத்தின் மானத்தையே அல்லவா நொறுக்கிவிட்டிருக்கிறது. வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர்!! காது குடைகிறதே கேட்கும்போதே; இரத்தம் கொதிக்கிறதே கோபத்தால்; கண்கள் இருளடைகின்றனவே அதிர்ச்சி தரும் மயக்கத்தால்! டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடியரசுக்குத் தலைவரா!! ஆமாம்! மரபு கட்டளையிடுகிறதே! எப்படி அந்தமரபை மீற முடியும்? ஆனால், எப்படி, ஒரு கருப்பரைத் தலைவராகக் கொள்ளமுடியும்? எப்படித் தாங்கிக்கொள்ளமுடியும்?

சவுக்கடிப்பட்ட இனம்! கட்டிவைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இனத்தினன், நமது வேட்டை நாய்கள் இவன் இனத்தவனை முன்பு துரத்தித் துரத்திக் கடித்திட, கடிபட்டவன் கதறிக் கதறித் துடித்திட, வெள்ளைச் சீமாட்டிகள் காட்சியினைக் கண்டுகண்டு கைகொட்டிச் சிரித்தனர் முன்பு! அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவன்—நீக்ரோ—ஆட்சித் தலைவனா! நமக்கா!!

இப்போது நீக்ரோ அடிமை அல்ல! சந்தைச் சதுக்கத்திலே அவனைக் கட்டி வைத்து அடிக்க, சட்டம் இடம் கொடுப்பதில்லை. இப்போது அவன் அங்காடிப் பொருள் அல்ல; ஆபிரகாம்லிங்கன், அடிமை முறையை ஒழித்ததால்! ஆனால, இப்போதும் நீக்ரோ தானே! அடிமை அல்ல! ஆனால், கருநிறம்! மட்டம்! தாழ்வு! அந்த இனத்தவனல்லவா, டக்ளஸ் டில்மன்.

இப்போதும், வெள்ளை இனத்தின் உயர்விலும் தனித்தன்மையிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள், கருப்பர்களைப் பள்ளிகளில், விடுதிகளில், படக்காட்சிக் கொட்டகைகளில் சேர்க்க மாட்டார்களே! ஒதுக்கித்தானே வைத்திருக்கிறார்கள்! ஓரத்தில்தானே இன்றும் தள்ளப்பட்டுக் கிடக்கிறான்; உழைக்கிறான் என்பதால் வேலை தருகிறோம்; வேலை செய்வதால் நாம் நடமாடும் இடத்தில் அவனும் நடமாடுகிறான்! ஆனால் நாமும் அவனும் ஒன்றா! ஒப்புக்கொண்டு விட்டோமா? இல்லையே! வேட்டையாடிப் பிடிப்பது, சங்கிலிகளால் பிணைப்பது, சந்தையிலே நிறுத்தி வைத்து விற்பது, சவுக்காலடிப்பது, இவை இல்லை! கூடாது என்கிறது சட்டம்; அதனால். ஆனால் வெள்ளை வெள்ளைதான், கருப்பு கருப்புதானே! வெள்ளை ஆளும் இனம்! கருப்பு, அடிமை இனம்தானே! உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகிவிடுமா! நீக்ரோ, படிப்பால், பணத்தால், பட்டத்தால், வெள்ளையனாகி விடுவானா? அமெரிக்காவில் பிறந்தான், வளர்ந்தான் என்பதாலேயே அவன் அமெரிக்கனாகி விடுவானா! அமெரிக்கன் என்று மக்கள் தொகைக் கணக்குக்காகக் கூறினாலும் நீக்ரோ வெள்ளையன் ஆகிவிடுவானா! அமெரிக்கா, எவருடைய நாடு? வெள்ளையர் நாடு! வெள்ளையர் நாட்டுக்கு ஒரு கருப்பர் தலைவராவதா!!

தம்பி! நிறவெறி கொண்டவர்களிலே. சற்று ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளத் தெரிந்தவர்களே இவ்விதமெல்லாம் தான் பேசியிருந்திருக்க முடியும்! டக்ளஸ் டில்மன் எனும் நீக்ரோ, வெள்ளை மாளிகை அமர்ந்து குடி அரசுத் தலைவராகப் போகிறார்; மரபு அவ்விதம் அமைந்திருக்கிறது என்று கூறப்பட்டபோது.

டக்ளஸ் டில்மன்! குடி அரசுத் தலைவர்; அமெரிக்காவுக்கு.

வெள்ளை மாளிகையின் கூடத்திலே குழுமியிருந்த அமைச்சர்கள், உயர்நிலை அதிகாரிகள், தமக்கு, 'அதிபராக'ப் போகும் டக்ளல் டில்மனைப் பார்க்கிறார்கள்; சிறிது தொலைவில் நிற்கிறார் டக்ளஸ்! அவர்களின் கண்களிலே பொறி பறக்கிறது. டில்மன்? திகைத்துப் போயிருப்பார்! வேறு எப்படி நிலை இருந்திருக்க முடியும்,



மரபின்படி, உயர்நீதி மன்றத் தலைவர் வருகிறார், பதவிப் பிரமாணம் செய்துவைக்க!

பைபிள்! ஆம்! வெள்ளையருக்கு ஒன்று, கருநிறக்கிறித்தவருக்கு வேறு ஒன்றா இருக்கிறது! இல்லையே! இரு நிறத்தவருக்கும் ஒரே பைபிள்!

கட்டினவனே காத்திடுவான்.
அமைத்தவனே பாதுகாப்பான்
அவன் துணையின்றிப் பாதுகாவலன்
எதையும் பாதுகாத்திட முடியாது

என்ற கருத்து கொண்ட மணிமொழியுள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்து, அதனையே தமது 'பிரார்த்தனை'யாகப் படிக்கிறார் டில்மன்!

பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.


அமெரிக்க நாட்டுக்கு அமைந்துள்ள அரசியல் சட்டதிட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றியும் அதற்குக் கட்டுப்பட்டும் நான் ஆட்சி நடத்தி வருவேன் என்று உறுதிமொழி கூறுகிறார் டில்மன்.

''அமெரிக்கக் குடியரசுத் தலைவரே, வாழ்க! கர்த்தர் தங்களை—அமெரிக்கக் குடியரசுத் தலைவரை-அமெரிக்கக் குடியரசுத் தலைவராக அமரும் முதல் நீக்ரோவைக் காத்திடுவாராக!—என்று உயர் நீதிபதி கூறுகிறார். சூழ நிற்கிறார்கள் வெள்ளை இனத்தவர்! அவர்கள் அனைவரும் எந்தக் குடியரசுத் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்து தீரவேண்டுமோ, அநதக் குடியரசுத் தலைவர் நிற்கிறார்; ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள்—ஓராயிரம் வகையான எண்ணங்கள் குமுறி எழுகின்றன!

வெள்ளை மாளிகையில் ஒரு 'கருப்பர்' அதிபராகிறார்! பிறகு? எனகிறாயா, தம்பி! துவக்கம் இது! தொடர்வது என்ன என்கிறாயா? அடுத்த கிழமை கூறுகிறேன். இப்போது, காணக் கிடைக்காத காட்சியைக் காண்பதோடு திருப்தி அடைவோம்; வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் அதிபராகி விட்டிருக்கிறார்.

அண்ணன்,

6—2—'66



காஞ்சிக் கடிதம்: 49

# வெள்ளை மாளிகையில்(2)

வெள்ளையர் கொதிப்பு

முற்போக்காளரும் இருந்தனர்

மேல் மட்டத்தார் போக்கு

கறுப்பர்கள் மனிதர்களா?

கறுப்பர் கண்களிலே ஒளி!

தம்பி,

வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்ச ஒரு 'கருப்பர்' அதிபரானதுபற்றி படித்ததும் உனக்கோ எனக்கோ, ஒரு மகிழ்ச்சி துள்ளிடுமேயன்றி அச்சம் எழாதல்லவா? நிறம் எதுவாக இருந்தால் என்ன, தகுதியும் திறமையும் இருந்திட வேண்டும், அஃதன்றோ முக்கியம், இந்த நாட்களிலா நிறம் என்ன என்று பத்தாம்பசலிப் பேச்சுப் பேசுவார்கள்! என்று கூறுவோம். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்ற எண்ணம் குடையாது, மனஉளைச்சல் ஏற்படாது, மருட்சி கொண்டிட மாட்டோம்.

கதைதானே!—என்று கூறிடுவர், பழமைப் பிடிப்பினர் கூட, உண்மையில் இதுபோல எங்கே நடைபெறப் போகிறது என்ற நம்பிக்கை கலந்த தைரியத்துடன்.

டில்மன் எனும் நீக்ரோ, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரானார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டதும்,



அமெரிக்க மக்களிடம் என்னென்ன விதமான உணர்ச்சிகள் கொந்தளித்துக் கிளம்பியிருந்திருக்கும் என்பதுபற்றி, யூகித்தறிந்து கொள்ள முடிகிறதல்லவா!

முட்டாள்! முரடன்! ஏய்! கருப்புப்பயலே! கண் மண் தெரியவில்லையா! எச்சில்பட்ட கோப்பையை எடுத்துக்கொண்டுபோய்க் கழுவிவரக்கூட மறந்துவிட்டாயா, மடையா!

அவன் ஏன் இனி எச்சில் கோப்பையைக் கழுவப் போகிறான் அன்பே! அவனை இனி கருப்பா என்று கூடக் கூப்பிடக்கூடாது! டில்மன் யார் தெரியுமா! குடிஅரசுத் தலைவர் யார் தெரியுமா, கருப்புதான்! கருப்பன் ஆள்கிறான், வெள்ளையர் நாட்டை!! என்று பேசுவாள்......காலம் மாறிவிட்டது, கண்ணாளா! கருப்பு வெளுப்பாகிவிட்டது!

இந்தப் பயல்களுக்கு மண்டைக்கனம் ஏறிவிட்டுத் தான் இருக்கும், புரிகிறது......ஆனால் கருப்பு வெளுப்பு ஆகிவிடாது, ஆகிவிடமாட்டார்கள்.

வெள்ளை மாளிகைக்குள்ளேயே நுழைந்தாகி விட்டதே,இன்னும் என்ன விபரீதம் நேரிடவேண்டும், இது போதாதா......!

என்னமோ சட்டமாம்! மரபாம்! இப்படி ஒரு இழிவைச் சுமத்திவிட்டார்கள். கருப்பு நிறத்தான் குடிஅரசுத் தலைவராகக்கூடாது என்றல்லவா சட்டம் இருக்கவேண்டும். ஏமாளித்தனமான ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட ஒரு இழிவைச் சுமத்திவிட்டார்கள்.

கேட்பார் எவரும் இல்லையா, அமெரிக்காவிலே அறிவாளர்களே இல்லையா......

தம்பி, நிறவெறி பிடித்தவர்கள் இல்லங்களிலே இது போன்ற அளவு அல்ல, இதைவிட மோசமான முறையிலும் அளவிலும் பேச்சு எழாமலிருந்திருக்க முடியுமா? மாளிகைக்காரர்கள், வெள்ளையர்; அங்கு தோட்டக்காரன், வண்டி ஓட்டி, சமையற்காரன், பணியாள் நீக்ரோக்கள்! அடிமைகள் என்ற நிலை இல்லை, ஆனால் கூலிக்காரர்களாக, குற்றேவல் புரிபவர்களாக உள்ளனர். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவேண்டும், இட்டபட்ட வேலை

யைச் செய்திட வேண்டும், ஏன் என்ற கேள்வியை எழுப்பக்கூடாது. இது அவர்கள் நிலைமை! அவர்களிலே ஒருவர் அமெரிக்க அதிபர்! விந்தை என்பர் மற்றையோர், விபரீதம் என்றுதானே கூவுவர் கொதிப்படைந்த வெள்ளையர்.

'டிரம்' என்பானுடையதைபற்றிக் குறிப்பிட்டிருந்தேனே தம்பி! அந்த அடிமையை ஒரு உற்பத்திப் பண்ணைக்காரனல்லவா விலைகொடுத்து வாங்கி 'தரமான' நீக்ரோக்களை உற்பத்தி செய்து வந்தான் என்று சொன்னேன், அந்த வெள்ளை முதலாளிக்கு ஒரு வெள்ளை மாது 'தொடர்பு'—அந்த வெள்ளை மாது 'டிரம்' என்ற நீக்ரோவுக்குத் தன் உடலை ஒப்படைத்தாள், அவன் கேட்டதால் அல்ல, அவள் விரும்பியதால்! கருவுற்றாள். இது தெரிந்த வெள்ளை முதலாளி 'டிரம்' என்பானை அடித்துக் கொன்றுபோட்டான்; அவளை விரட்டிவிட்டான். அவள் வேறு ஊர் சென்று ஒரு காமக் களியாட்டக் கூடம் நடத்தி வந்தாள். அங்கு வேலைக்காரனானான், அவள் பெற்றெடுத்த 'டிரம்சன்'.

தாயிடம் மகன் பணியாள்! தாய் அறிவாள் அந்தப் பணியாள் தன் மகன் என்பதை. அவன் அறியான், எஜமானி தன் தாய் என்பதை.

மகன் என்ற பாசம், அன்பு, துளியாவது அந்த வெள்ளை மாதுக்கு இருந்ததோ? இருந்தால், அவனைக் கடுமையாக மட்டுமல்ல, கேவலமான முறையிலும் வேலை செய்யச் சொல்லிக் கட்டளையிட்டிருப்பாளா! மாடாக உழைத்து வந்தான! நாய்போல நடத்தப்பட்டான்; பெற்றவளால். ஏன்? அவள் ஒரு வெள்ளைமாது; இவனோ கருநிறத்தான்; நீக்ரோ! தன் களியாட்டக் கூடத்தில் வேலை பார்த்துவந்த ஒரு நீக்ரோ கிழவியின் மகனே, 'டிரம்சன்' என்று சொல்லிவைத்தாள்.

கடைசிக்கட்டத்தில், மரணப்படுக்கையில் இருந்த போது, உண்மையைக் கூறினாளாம்; 'அம்மா!' என்று ஒரு தடவை கூப்பிடும் 'உரிமை'யை வழங்கினாளாம்.

இந்த நிலையில் தள்ளப்பட்டிருந்த நீக்ரோ இனத்தவரில் ஒருவன் அமெரிக்க அதிபதி ஆகிவிட்டதால், நிறவெறியர் அதிர்ச்சி அடைந்திடாமலிருக்க முடியுமா!



டில்மன், பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கிறான். கண்டனம்! குமுறல்! மிரட்டல்! எரிச்சல்! ஏளனம்; எச்சரிக்கை! இவைகளே மிகுதியாகக் காணப்பட்டன! படித்த டில்மன் மனம் என்னபாடு பட்டிருக்கும்! கர்த்தரே! என்னைக் கருப்பனாகவும் படைத்து, அதிபதியும் ஆக்கி, இத்தனைக் கண்டனமும் என் தலையில் விழ வைக்க வேண்டுமா! என்று மனம் உருகித் துதித்திடாமல் இருந்திருக்க முடியுமா?

இனத்தின் மீது வீசப்பட்ட இழிவு பெருமளவு தன் மீது விழாதபடி, ஒரு தகுதியை உழைத்துப் பெற்றுக் கொண்டு, நிம்மதியாக வாழ்ந்து வந்தான்; எதிர்பாராத முறையில், அதிபதி ஆக்கப்பட்டதால், வெள்ளை இனத்தவரின் வெறுப்பை அல்லவா பெற்றிட வேண்டியதாயிற்று. முள்முடி!

முற்போக்குக் கருத்தினைப் பரப்பிடும் ஓரிரு ஏடுகள், நிறபேதம் பார்க்கக்கூடாது, தகுதி திறமை பற்றி மட்டுமே பார்க்கவேண்டும், டில்மன் நீக்ரோவாக இருந்தால் என்ன, அமெரிக்கன், வழக்கறிஞர் துறையில் பெயர் பெற்றவன், நல்ல இயல்பினன், ஆகவே அவனுடைய ஆட்சி சிறப்பாகவே அமையும்; அனைவரும் ஆதரவு அளித்திட வேண்டும் என்று எழுதியிருந்த அந்தப் பாலைவன மலர் எழிலாக இருந்தது கருதி டில்மன் மகிழ்ச்சியுற்றான்; ஆனால் மறுகணமோ அத்தகைய இதழ்கள், அமெரிக்க மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை அல்ல என்ற உண்மை உள்ளத்தைத் தாக்கிற்று. செல்வாக்குப் படைத்த பத்திரிகைகளோ? நெருப்பையும் நாராசத்தையும் வார்த்தைகளாக்கி எழுதின! உண்மை அமெரிக்கா இதில்தான் தெரிந்தது-இதை எதிர்த்து நின்று வெற்றி பெறவேண்டும்; எதிர்ப்பதாக அறிவிக்காமலே இந்த நிலை டில்மன் பெற்றான்.

டில்மன் குடிஅரசுத் தலைவரானது சட்டப்படி மரபின்படி என்பதால், ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தவர்கள்கூட, எந்தச் சிறிய தவறு செய்தாலும் போதும், தன்மீது பாய்ந்து தாக்கித் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பது புரிந்தது. நடுக்கம் பிறந்தது.

தவறுகள் செய்திடும் தலைவர்களைக் கூடத் தாங்கிக் கொள்வார்கள், ஆனால் ஒரு நீக்ரோ! 'தலைவன் ஆகி,

அவன் தவறுகளையும் செய்தால், எப்படி தாங்கிக் கொள்வார்கள்! எரிமலை வெடிக்கும்.

எரிமலை குமுறிற்று! வெள்ளை இனத்தின் உரிமை மறுக்கப்பட முடியாத ஒன்று என்பதிலே அழுத்தமான நம்பிக்கையும், நிறவெறியும் கொண்ட இதழாசிரியன் ஒருவன், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நின்றான், இந்தக் கருநிறத்தானை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடித்தே தீருவேன் என்று!

சட்டம், மரபு, முறை என்று எதை எதையோ கருதிக் கொண்டுதானே இந்தக் கருநிறத்தானை கொலு மண்டபத்தில் அமரச் செய்தீர்கள், அந்தச் சட்டமே தவறு! அதிலே ஓட்டை இருக்கிறது! இந்த நியமனமே செல்லாது; சட்ட நிபுணர் கூறுகிறார்; டில்மன் குடிஅரசுத் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார்; ஆகிவிடவில்லை மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை; குடி அரசுத் தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்கும் வரையில் டில்மன் வேலை பார்க்கலாம்; அவ்வளவுதான்; ஆகவே உடனடியாகக் குடி அரசுத் தலைவர் தேர்தலுக்கு ஏற்பாடு செய்திட வேண்டும்; அது முடிந்ததும், இவனை வெளியேற்ற வேண்டும்; என்று அவன் வாதிடலானான். அரசு அமர்த்தியிருந்த சட்ட நிபுணன் அதற்கு ஆதரவான சட்டநுணுக்கங்களை விவரிக்கலானான் அந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த பேரதிகாரிகள், டில்மனுக்கு அடுத்தபடியில் இருந்தவர்கள், அந்த இதழாசிரியன் கூறிய ஏற்பாட்டுக்கு இணங்க மறுத்தனர்; நிறவெறி கூடாது, நியாயம் அல்ல என்பதால் அல்ல, வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் ஆட்சி செய்தால் என்ன என்பதால் அல்ல; வழக்காடப் போதுமான ஆதாரம் இல்லை என்பதால்!!

ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த அந்த இதழாசிரியன் தன் பேனாமுனையினாலேயே டில்மனைக் குத்திக் கொடுமை செய்து, அவனே மிரண்டோடும்படிச் செய்திடத் திட்டமிட்டான். தொடர்ந்து தொல்லைகளை உருவாக்கியபடி இருந்தான். ஆனால் டில்மன் கலங்கவில்லை. வெள்ளையர் என்னைவிட எந்தவகையில் மேலானவர் கருநிறம் எந்த வகையில் தாழ்வானது என்றெல்லாம் வாதாடவுமில்லை, வம்புகள் பேசவுமில்லை, ஒரேவித உறுதியைத்தான் தெரிவித்தான், நான் சட்டப்



படி குடிஅரசுத் தலைவராக அமர்ந்திருக்கிறேன்; என் கடமையைச் செய்து வருவேன்; நான் எந்த இனம், என்ன நிறம் என்பதுபற்றிய விவாதம் பொருளற்றது; நான் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவன்! இது டில்மன் கொண்ட உறுதி; கூறிய உறுதி என்றுகூடச் சொல்வதற்கில்லை.

தம்பி! நாட்டிலே ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஆக்கிவைத்துவிட்டால், பிறகு ஓர் நாள் அவர்களிலே ஒருவன், எக்காரணம் பற்றியோ 'உயர் பதவி'யில் அமர்ந்துவிட்டால், தம்மை உயர்வகுப்பு என்று எண்ணிக் கொள்பவர்கள், அவனுக்குக் கீழே வேலை செய்பவர்களாக இருப்பினும், அவன் தமக்குக் கட்டுப்பட்டு, அடங்கி ஒடுங்கி, விருப்பம் அறிந்து நடந்து கொள்ளத்தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். டில்மன், குடிஅரசுத் தலைவராக இருக்கட்டும்; சுவையைப் பெறட்டும். வெள்ளை மாளிகையில் உலவட்டும்! ஆனால், எமது விருப்பம் அறிந்து நடந்து கொண்டு வரவேண்டும்; சுய சிந்தனை, தனி நடவடிக்கை, புதிய போக்கு துளி தலைதூக்கினாலும், தூக்கி வெளியே எறிந்துவிடுவோம் என்றுதான் அமைச்சர் நிலையினர் கருதிக்கொண்டனர். டில்மன் உயர் மண்டபத்தில் அமரட்டும், அதன் தகத் தகாயத்தைக் கண்டு களிக்கட்டும், ஆனால் தன் இச்சையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நம் குறிப்பறிந்து நடந்துகொள்ள வேண்டும்... மீறினால்...''

டில்மன் அலங்கரிக்கப்பட்ட ஒரு அடிமையாக இருந்து வரவேண்டும் என்று விரும்பினார்கள்; குறிப்பும் காட்டினார்கள்.

வெள்ளை மாளிகையிலே நுழைந்த கருநிறத்தான், தன் உண்மையான 'எஜமானர்கள்' யார் என்பதை அறிந்து அதற்கு ஏற்றபடி நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தனர்.

அவர்களின் எண்ணத்தின்படி நடந்துகொண்டால், குடிஅரசுத் தலைவர் என்ற நிலையையே கேலிக்கூத்து ஆக்குவதாகிவிடும்.

அவர்களின் எண்ணத்துக்கு மாறாக நடந்தால் பதவி பறிபோய்விடும்!

பதவி பறிக்கப்பட்டு விடுவதுகூட அல்ல பயமளிக்கத் தக்கது; ஒரு கருநிறத்தவனால், அத்தனை உயரிய பதவியைச் சரியான முறையிலே நடத்திச் செல்ல முடியவில்லை! என்ற பழி சுமத்தப்படும்; இனத்துக்கே இழிவு ஏற்படும்.

ஆக தலையாட்டியாகவும் இருக்கக்கூடாது, தன்னிச்சையாகவும் நடந்துகொள்ளக்கூடாது. அப்படியானால் எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும்?

டில்மனுக்கு மிகவும் வேண்டியவர் கீர்த்தி வாய்ந்த ஒரு வழக்கறிஞர்; வெள்ளையர் இனம்; ஆனால் நிறவெறி அற்றவர். அவருடன் டில்மன் பேசுகிற ஒரு சந்தர்ப்பம் வருகிறது அப்போது இந்தப் பிரச்சினை எழுகிறது. டில்மன் அந்தப் பேச்சின்போது வெளியிட்ட ஒரு கருத்து, தம்பி! படிக்கும்போது, கண்கலங்கவைக்கிறது. நண்பருக்கு உற்சாகமூட்ட, உறுதி பெற்றிட வைக்க, அந்த வெள்ளை இன வழக்கறிஞர் கூறுகிறார், “டில்மன்! ஏன் கலக்கம்! உன் நிறம் கருப்பாக இருந்தால் என்ன!! நீ ஒரு மனிதன்!” என்று கூறுகிறார், மனித மேம்பாடு என்பது இனம், மதம், நிறம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டது என்ற அருங்கருத்தினை விளக்கிடும் முறையில். அப்போது டில்மன் வருத்தம் தோய்ந்த முறையில் “நண்பரே! என் நிறம் கருபபு எனினும் நான் மனிதன்! அந்த உணர்வைப் பெறவேண்டும் என்கிறீரே...எப்படி முடியும்...கருப்பர் மனிதரல்லவே...” என்று கூறுகிறார். வெள்ளை மாளிகையில் அதிபர்! அதிலே ஐயமில்லை!! ஆனால் கருப்பர், மனிதரா? இல்லையே!!—என்று டில்மன் கூறுவது அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்டுக்கிடந்த மனப்போக்கை அப்படியே எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. மனதை உருகச் செய்திடும் நிலை; ஆனால் உண்மை! அமெரிக்க நிறவெறியர், கருப்பரை மனிதர் என்று ஒப்புக்கொள்வதில்லை; அவர்கள் அடிமைகள் அல்ல என்று சட்டம் வந்த பிறகும்! அந்தச் சட்டம் வருவதற்கு முன்பு, நீதிமன்றங்கள் தீர்ப்பே அளித்திருக்கின்றன, நீக்ரோக்கள் மனிதர் அல்ல; வெறும் உடைமைகள் என்பதாக.

1781-ம் ஆண்டு, ஒரு வழக்கு நடைபெற்றது. மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஜமய்க்காவுக்கு 400-நீக்ரோக்கள் அடிமைகளாக விற்பதற்காகக் கப்பலில் கொண்டு செல்லப்பட்டார்கள், வழியிலே பலருக்கு நோய் கண்டு



விட்டது. கப்பல் தலைவன் நோயால் பாதிக்கப்பட்ட நீக்ரோக்களில் 132-பேர்களை (உயிரோடு) கடலிலே எறிந்துவிட்டு, மற்றவர்களைக் கொண்டுபோய்ச் சேர்த்ததுடன், கடலிலே எறியப்பட்ட 132-நீக்ரோக்களின் மார்க்கட் மதிப்புக்கு ஏற்ற பணத்தை இன்ஷியூரன்ஸ் கம்பெனிதான் கட்டித் தீரவேண்டும் என்று வழக்குத் தொடுத்தான். அதற்கு அவன் கூறிய வாதம் தம்பி! இப்போது நமது மக்களுக்குக் காட்டுமிராண்டிப் பேச்சாகப்படும்; கொண்டு செல்லும் சரக்கிலே கெட்டுப்போன பகுதிகளை அப்புறப்படுத்திவிடுவதன் மூலமே மற்ற சரக்கைக் கெடாதபடி பாதுகாத்திட முடியும் என்ற நிலையில் சரக்கிலே ஒரு பகுதியை அப்புறப்படுத்த நேரிட்டால் அதற்கான மதிப்புள்ள பணத்தை இன்ஷியூரன்ஸ் கம்பெனி தரவேண்டும் என்ற ‘விதி’யைக் காட்டினான் வாதமாக! உயிரோடு தூக்கி எறிகிறான் நூற்றுக்கு மேற்பட்ட நீக்ரோக்களை, பதறப்பதற; ஈவு இரக்கமின்றி; வழக்குமன்றததிலே அவன் படுகொலை செய்தான் என்று அல்ல, சரக்கை இழந்ததற்கு அவனுக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்று வழக்கு! கேட்டனையா, தம்பி! இந்த விபரீதத்தை. கேளேன் முழுவதையும். அடகொலைகாரா! நூறு பேர்களைப் படுகொலை செய்த பாதகனா நீ! உன்னைச் சித்திரவதை அல்லவா செய்ய வேண்டும். உன்னைப்போன்ற மனிதர்கள், கடவுளின் குழந்தைகள், அவர்களைக் கடலிலே தூக்கி எறிந்த காதகனே! உன்னை வெட்டித் துண்டுகளாக்கிக் கழுகுக்கு விருந்தளிக்க வேண்டும் என்றெல்லாம் நீதிபதி சீறிக் கூறினாரா? அதுதான் இல்லை!! கேட்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆயினும் என்ன செய்வது? ஆடுமாடுகள், குதிரைகள் கொண்டு செல்லப்படும் போது நோய் வந்துவிட்டால், நோயுற்றவைகளை அப்புறப்படுத்தி மற்றவற்றைக் காத்திடுவது போன்ற முறைப்படிதான் கப்பல தலைவன் நடந்து கொண்டான். ஆகவே அவனுக்குக் கம்பெனி நஷ்டஈடு தரத்தான் வேண்டும் என்று தீர்ப்பளித்தார். நீக்ரோ மனிதன் அல்ல! சரக்கு!! பொருள்! உடைமை! நீதிமன்றத் தீர்ப்பு!

டில்மன், கருப்பர், மனிதர் அல்லவே என்று கூறிய போது, இந்த வழக்கு அவருடைய மனக்கண் முன் நிழலுருவாகத் தெரிந்திருக்கும்போலும்!

அரசியல் தத்துவத்துக்கே வித்து அளித்த அரிஸ்டாடில், அடிமை எனும் சொல்லுக்குப் பொருள் அளிக்கும்போது உயிருள்ள கருவி, அடிமை என்றார்,

டில்மன் ஒரு கருவி! யாருடைய கருவி? யாருக்குப் பயன்படவேண்டிய கருவி? என்பதே பிரச்சினை என்று ஆகிவிட்டது. டில்மனைச் சூழ இருந்து வந்த அரசு அவையினர், வெள்ளையரின் விருப்பத்தை அறிந்து, அதற்குத் தக்கபடி பயன்பட்டுத் தீரவேண்டிய கருவி என்று உறுதியாக எண்ணிக்கொண்டார்கள், ஆனால் தங்கள் இனத்தவர் ஒருவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார் என்ற உடன், மகிழ்ச்சியால் துள்ளினது மட்டுமல்ல, நீக்ரோ மக்கள் மனதிலே புதியதோர் நம்பிக்கை மலர்ந்தது. இனி நமது இன்னல் தீரும், இழிவு துடைக்கப்படும்; நிலை உயரும், வாழ்வு தழைக்கும்; வெள்ளை மாளிகையிலே நமது இனத்தவர்; இனி நம்மைக் கப்பிக் கொண்டுள்ள இருளை ஓட்டி வாழ்விலே புத்தொளி கண்டிட வழி பிறந்திடும் என்று திடமாக நம்பினர். அவர்களின் கண்களிலே எத்தனை ஒளி பூத்திருக்கும்! முகத்திலே எத்தகைய ஒளி மலர்ந்திருக்கும்! பேச்சிலே என்னவிதமான இன்பம் கலந்திருக்கும் என்பதுபற்றி எண்ணிடும்போது இனிதாக விளங்குகிறதல்லவா, தம்பி!

நாசரின் கரத்தை நமது அப்துல்காதர், சென்னை மேயர் என்ற முறையில், குலுக்கி வரவேற்ற செய்தியை இதழில் படித்தபோது, எனக்குத் தம்பி நானே நாசரின் கரங்களைப் பிடித்துக் குலுக்கியது போன்ற ஒரு மகிழ்ச்சி உணர்ச்சி பிறந்தது.

நாம் மாநகராட்சி மன்றத்தில் அரசோச்ச வாய்ப்புப் பெற்றது, நடைபெறவே முடியாத, அதிர்ச்சி தரத்தக்க, தலைகீழ் மாற்றமான நிகழ்ச்சியல்ல, மிகச் சாதாரணமான ஒரு அரசியல் நிகழ்ச்சி. அதற்கே நமக்கு அகமகிழ்ச்சி எத்துணை ஏற்பட்டது! டில்மன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானது என்பது சாதாரணம் அல்ல; அடிமைப்படுத்தப்பட்ட இனம், இழிவாக நடத்தப்பட்டு வரும் இனம், நீக்ரோ இனம்; அதிலே ஒருவர் எஜமானர்கள் என்ற நிலையில் உள்ள வெள்ளையர்களும் அடங்கி நடந்தாக வேண்டிய 'அதிபர்' நிலைபெறுவது என்றால்! மகிழ்ச்சி, கொந்தளிப்பாக அல்லவா இருக்கும்!



டில்மன் குடி அரசுத் தலைவராகிவிட்டதால், ஒரே வரியில், தங்கள் இழிவுகளைப் போக்கிவிட முடியும் என்று நம்பினர், கருநிறத்தவர்.

டில்மன் இதனை அறியாமலிருந்திருக்க முடியாது,

கதிர் குலுங்குவது காணும் உழவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளுவதுபோலத் தன் இனத்தவர் இருப்பார்கள் என்பதை உணர்ந்தார்; புன்னகை பூத்ததா? இல்லை! பெருமூச்சு!

> அப்பா! அப்பா எனதருமை அப்பா! என் வாழ்த்துக்கள்! பாராட்டுதல்கள்! இங்கு ஒரே கொண்டாட்டம்! கோலாகலம்! எல்லோரும் என்னை வாழ்த்துகிறார்கள்! வந்து வந்து பார்க்கிறார்கள், புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்கள், நமது இனத்தவர் ஒரே ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள்! பல்கலைக் கழகமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது!

தொலைபேசி தந்திடும் இந்தத் தேன் துளிகள் செவியிலே பாய்கின்றன. டில்மன் கேட்கிறார்; இன்பமாகத் தான் இருக்கிறது; இனிப்பான பேச்சுதான்.

> சரி! சரி! சந்தோஷம்!
>
> அப்படியா! ஓஹோ!
>
> நல்லது! ஆமாம்! சரி. சரி.

இப்படிப் பதில் பேசுகிறார் டில்மன்.

மகிழ்ச்சிக் கொந்தளிப்புடன் பேசுபவன், டில்மன் மகன், கல்லூரி மாணவன்!!


இருக்குமல்லவா மகிழ்ச்சி, தந்தை, நாட்டை ஆளுந் தலைவராக அமர்ந்திருக்கிறார் என்பதால். எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய 'வாய்ப்பா' இது, வெள்ளை மாளிகையில் அதிபராக அமருவது! அதிலும் ஒரு நீக்ரோவுக்கு அந்த வாய்ப்பு!

மகன் பேச்சிலே களிப்பு, பெருமிதம் ததும்பிடுவது தெரிகிறது. என் மகன் மகிழ்கிறான்! பெருமிதம் கொண்

டுள்ளான்! நேற்றுவரையில் அவன் எத்தனையோ ஆயிரம் மாணவர்களிலே ஒருவன்; அதிலும் ஒரு நீக்ரோவின் மகன். கருப்பன்! இன்று? அவன் அமெரிக்கக் குடி அரசுத் தலைவரின் மகன்! பெருமிதம் கொள்ளத்தானே செய்வான், தம்பி! அந்த மாணவன் பெற்ற மகிழ்ச்சியை மாய்த்திட விருப்பம் எழவில்லை. எனவே இந்தக் கிழமை அவன் மகிழ்ந்திருக்கும் நிலையோடு நிறுததிக் கொள்கிறேன். மறறவை அடுத்த கிழமை.

அண்ணன்

13–2–'66



காஞ்சிக் கடிதம் : 50

# வெள்ளை மாளிகையில்...(3)

**நீக்ரோ என்றால் என்ன பொருள்?**

**மாணவர்கள் சமூகத்தின் ஈட்டி முனைகள்!**

**வீழ்ந்தவர்கள் வீழ்ந்தவர்களல்லர்!**

**விடுதலை, – இன்றேல் வீரமரணம்!**

**'டர்னரைட்' இயக்கம்**

**அபாண்டப் பழி!**

தம்பி,

அடிமை வேலைக்காகவே ஆண்டவனால் படைப்பிக்கப்பட்ட இனம் நீக்ரோக்கள் என்று நிறவெறியர்கள் எண்ணிக்கொண்டனர் என்ற போதிலும், உழைத்து உழைத்து அவர்கள் எல்லாத் துறைகளிலும் வெள்ளையருடன் சரிசமமாக நிற்கமுடியும் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வந்தனர்.

''மகனே! நீ ஒரு நீக்ரோ! பொருள் என்ன தெரியுமா? ஒவ்வொரு கட்டத்திலும் உனக்குத் திறமை இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியபடி இருக்கவேண்டும். வெள்ளை இனத்தவருக்கு அந்த நிபந்தனை இல்லை! அவர்கள் தகுதியுடன் பிறந்திடும் இனத்தவர்! நாம் தகுதியைப் பெற வேண்டும், உழைப்பால், திறமையால், கல்வியால்''

ஒரு நீக்ரோ தன் மகனுக்கு இதுபோல அறிவுரை கூறினார் என்று ஒரு ஏடு தெரிவிக்கிறது. அந்த நிலையில் இருந்து வந்த இனத்திலே பிறந்த டக்ளஸ் டில்மன், எந்த அமெரிக்க வும் மதிக்கத்தக்க பதவியைப் பெற்றான் என்றால், அவ னுடைய மகன் மட்டற்ற மகிழ்ச்சி அடையத்தானே செய்வான்.

ஜூலியன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான்—நீக்ரோக்களுக்காக மட்டும் என்று அமைந்த கல்லூரியில்!

டில்மன், கீர்த்திமிக்க வழக்கறிஞர், செல்வாக்கு பெற்ற செனட்டர், செனட் சபைக்கே தலைவர், என்றா லும் நீக்ரோவாயிற்றே! ஆகவே டில்மனுடைய மகன் நீக்ரோக்களுக்காக அமைந்திருந்த கல்லூரியில்தான் இடம் பெற முடிந்தது.

ஜூலியன்! ஜூலியன்! நமது இனத்துக்கே பெருமை! காலமெல்லாம் நமது இனத்தின்மீது சுமத் தப்பட்டு வந்த இழிவும் பழியும் ஒரே நொடியில் துடைக்கப்பட்டுவிட்டது!

நமது இனத்தின் தன்மானம் தரணியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது!

இனி எந்த வெள்ளைப் பயலாவது, கருப்பர் தாழ்ந்த இனம், மிருக இனம் என்று வாய்திறந்து கூறத்துணிவானா!

ஜூலியன்! உன்னோடு சேர்ந்து கல்லூரியில் ஒன்றாகப் படிக்கும் வாய்ப்புப்பெற்ற நாங்கள் பெரும்பேறு பெற்றவர்கள்! ஜூலியன்! அப்பா நமது இனத்தின் விடுதலைக்காக முழுமூச்சுடன் பாடுபடு வார் அல்லவா!

ஜூலியன்! நமது இனத்தவரை இன்னமும் இழி வாக நடத்தும் போக்கைக் கண்டவராயிற்றே உன் அப்பா! அவருடைய இரத்தம் கொதிக்குமல்லவா அதை நினைக்கும் போது.

ஒரே வரி! அவருடைய பேனாவிலிருந்து! நமது இனம், சபிக்கப்பட்ட இனம் அல்ல, ஆளும் இனம்! என்று புது நியதி பிறந்து விடாதா!



பட்ட கஷ்டத்தை யெல்லாம் மறந்தே விடுவர் நமது இனமக்கள். நாம் பரவாயில்லை; அடிமை வாணிபம் ஆபிரகாம் லிங்கனால் அகற்றப்பட்ட பிறகு பிறந்த தலைமுறை. முன்பு? காட்டு மிருகங் களை வேட்டையாடுவதுபோல் அல்லவா நமது இனத்தவரை நடத்திவந்தனர் இந்தக் கொடிய யவர்கள்.

சவுக்காலடிப்பது, சதை பிய்ந்துபோகும் வரை யில்! குற்றுயிராக வெட்டவெளியில் போட்டு வைப்பது, மரத்திலே தொங்கவிடுவது சாகடித்து. கேட்கும்போதே, நெஞ்சம் வெடித்திடும்! எத்தனை எத்தனைக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டனர் நமது இனத்தவர்!!

இன்று! எல்லாவற்றுக்கும் ஈடு செய்வது போல, செய்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடுவது போல, மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுபோல, உன் அப்பாவின் காலடியில், குடிஅரசுத் தலைவர் பதவி யைக் காணிக்கையாக வைத்திருக்கிறார்கள்!

வரலாற்றில் இடம் பெறுபவரின் மகன் நீ, ஜூலியன்! உன்னுடைய நண்பர்கள் என்பதைவிட எங்களுக்கு வேறு என்ன சிறப்பு வேண்டும்?

காரிருள் விலகிவிட்டது! கதிரவன் உதித்து விட்டான்!!

உணர்ச்சி கொந்தளிக்கும் பருவத்தினரல்லவா கல்லூரி மாணவர்கள்? வரலாற்று நிகழ்ச்சிகளையும், மக்கள் மனதிலே தோன்றிய எழுச்சிகளையும், உரிமைப் போர் நிகழ்ச்சிகளையும், விடுதலை வீரர்களின் கதைகளை யும், சமத்துவம், சகோதரததுவம் போன்ற இலட்சியங் களின் வரலாறுகளையும் படித்துப் படித்து, ஆர்வம் ததும்பும் உள்ளத்தினரல்லவா? ஆகவே, தம்பி! ஒரு நீக்ரோ இனவெறி பிடித்தலையும் அமெரிக்காவில், குடி அரசுத் தலைவரான சேதி கேட்டதும், துள்ளிக் குதித்துத் தான் இருப்பர்! ஜூலியனிடம் மகிழ்ச்சியுடன் எழுச்சியுடன் ஏதேதோ பேசித்தான் இருப்பர், நண்பர்களின் பேச்சு தேனாக இனித்திருக்கும் அந்த மாணவனுக்கு, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன்தான் ஜூலியன் தன் தந்தையிடம் பேசினான் தொலைபேசி மூலம்.

என் தந்தை வெள்ளை மாளிகையில்!

என் தந்தை அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர்!!

இந்த எண்ணம், அந்த இளைஞன் உள்ளத்தில், ஓராயிரம் நம்பிக்கைகளை ஏற்படுத்தித்தானே இருக்கும்?

நீக்ரோக்களில், கூலிகளாக, வேலைக்காரர்களாக, பாட்டாளிகளாக, அலுவலகங்களிலே பணியாற்றுபவர்களாக இருந்தவர்களால், படிப்படியாக முன்னேறினால் போதும், மனித உரிமைகளை மெள்ள மெள்ளப் பெற்றால் போதும் என்ற விதமாக மட்டுமே நினைத்திட முடிந்தது. மாணவர்கள் மனதில், இந்தப் போக்கா இடம் பெற்றிருக்கும்! மாணவர்கள் ஒரு சமூகத்தின் ஈட்டி முனைகள்! எழுச்சிப் பிழம்புகள்! நம்மாலே ஆகுமா என்ற இழுப்புப் பேச்சும், என்ன செய்வது என்ற ஏக்கப் பேச்சும், உள்ளத்திலே இருந்திட மறுத்திடும் பருவம்! எந்த இன்னலை ஏற்றுக்கொண்டாகிலும் இழிவுகளைத் துடைத்தாகவேண்டும் என்ற உறுதி குடிகொண்ட உள்ளம் அவர்களுக்கு. ஆகவே கல்லூரிகள், விடுதலைக்கு இளைஞர்களைத் தயாரிக்கும் பாசறைகளாகத்தானே இருக்க முடியும்! எத்தனையோ கொடுங்கோலர்கள் வீழ்த்தப்பட்ட வரலாறுகளைப் படித்தது வீண்போகுமா! எத்தனையோ வல்லமையுடன் அமைக்கப்பட்ட பேரரசுகள், மக்களில் ஒரு பிரிவினரைத் தாழ்வாகவும் மிருகத்தனமாகவும் நடத்திய காரணத்தால், சமூகத்தில் வெடிப்புகள் தோன்றி, புரட்சிகள் புயலெனக் கிளம்பி, அதன் வேகத்தாலே அழிக்கப்பட்டுப் போயின என்ற வரலாற்று உண்மைகள் இதயத்தில் பதிந்துள்ளனவே; அத்தகையவர்கள் அடிமைத்தளைகள் தன்னாலே விலகிடா, உடைத்தெறியப்படவேண்டும் என்ற உண்மையினைப் பெறாமலா இருந்திருப்பர்.

பெரியவர்கள், பொறாமை என்றும் பொறுப்புணர்ச்சி என்றும், சட்டம் என்றும் ஒழுங்கு என்றும் மெள்ள மெள்ள என்றும் படிப்படியாக என்றும் பேசுவது கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய்விட்டது. விடுதலைக்கான முயற்சியில், விளைவுபற்றிக் கவலைப்படாமல், ஆபத்து குறித்துப் பொருட்படுத்தாமல், உடனடியாக ஈடுபட்டாக வேண்டும்! நீண்ட நெடுங்காலமாகப் பொறுத்தாகிவிட்டது! இனியும் பொறுத்துக் கொள்வது முடியாது, கூடாது! மனிதத்தன்மை மாய்க்கப்



படுகிறது! உரிமைகள் உண்டு என்ற உணர்ச்சியே நசுக்கப்பட்டு வருகிறது எனவே, இப்போதே வீறிட்டுக் கிளம்ப வேண்டும், விடுதலைப்போர் தொடங்க வேண்டும். பலாத்காரமான முறையானாலும் சரி, புரட்சியே நடத்தித் தீரவேண்டும் என்றாலும் சரி, அச்சம் கொண்டிடலாகாது! அடிமையாக அஞ்சி அஞ்சி அடிபணிந்துக் கிடப்பதைக் காட்டிலும் விடுதலைக்காகப் போராடி குண்டடிபட்டு, மார்பிலிருந்து குபுகுபுவெனப் பீறிட்டுக் கொண்டு வரும் இரத்தத்தைப் பார்த்தபடி களத்தில் வீழ்ந்துபடுவதே, வீரம்!—என்ற விதமான எண்ணம் அமெரிக்க நீக்ரோக்களில் இளமைத் துடிப்பு உள்ளவர்களிடம் தோன்றிவிட்டது என்பதை எடுத்துக்காட்டுவது போல, பல புரட்சிகரமான நடவடிக்கைகள் அமெரிக்காவில் அவ்வப்போது நடைபெற்று வந்தன. அவைகளை அமெரிக்க வெள்ளை அரசு அழித்துவிட்டன என்றாலும், ஒவ்வொரு நடவடிக்கையும் நீக்ரோக்களை இன்னமும் தாழ்வாக நடத்திக் கொடுமைப்படுத்திக்கொண்டு வருவது நடைபெறக் கூடியதல்ல என்ற எச்சரிக்கையாகவே அமைந்தது.

தம்பி! நான் முன்பு குறிப்பிட்டிருந்தேனே 'டிரம்' என்ற கதை, அது கொடுமைக்கு இரையான நீக்ரோ பற்றியது. ஆனால் வெள்ளை நிற வெறியரை எதிர்த்து நின்று, கொல்லப்பட்ட நீக்ரோக்களின் வீரக்காதைகள் நிரம்ப உள்ளன. அந்த வீரக்காவியங்கள் அனைத்திலும், இறுதியில், புரட்சி மூட்டிய நீக்ரோ சுட்டுப் பொசுக்கப்பட்டானென்றோ, வெட்டி வீழ்த்தப்பட்டானென்றோ தான் இருக்கும். விடுதலை பெற்றார்கள் என்ற முடிவு இருப்பதிலலை! ஆனால் உயிர் அல்ல முக்கியம், உரிமையே உயிரினும் மேலானது என்ற தத்துவத்தை அவர்கள் ஒவ்வொருவரும் தமது இரத்தத்தால் எழுதிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

கொடுமைகள் குவிக்கப்படும்போது, அதனால் தத்தளிப்பவர்களிடமிருந்து கிளம்பும் சோகம், பெரும் புயலை எழுப்பிவிடும் என்பதனைக் கொடுமைப்படுத்துவோர் உணருவதில்லை. வீழ்த்திவிட்டோம், விழ்ந்து விட்டது! என்று எண்ணிக்கொண்டு விடுகின்றார்கள்! ஆனால் வீழ்த்தப்படுபவர்கள், எண்ணற்றவர்களை எழுப்பிவிட்டுத்தான் போகிறார்கள்! தனி மனிதர்களாக இருப்பவர்கள், தமது உயிரைத் தியாகம் செய்வதன் மூலம்

ஒரு அணிவகுப்பைப் பெற்றளித்து விடுகிறார்கள் இன்னமுமா இறுமாப்பு! இன்னமுமா எதிர்ப்பு! இவ்வளவு பேர் தூக்கிலே தொங்கிய பிறகுமா, புரட்சி செய்யும் நினைப்பு! என்று வியப்புடன் கேட்பர், கொடுங்கோலர்; ஆனால் கொடுமையை எதிர்த்துச் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும் கொடுமையை எதிர்த்திடும் உறுதியை ஓராயிரம் புதியவர்களுக்கு ஊட்டிவிடுகிறது.

ஒட்டி உலர்ந்துபோன உருவம்! உழைத்திட இலாயக்கில்லை என்று எஜமானனால் எக்கேடோ கெட்டுப்போ என்று ஓட்டிவிடப்பட்டுவிட்டவன் அவன், தன் போன்ற ஓர் அடிமையிடமிருந்து ஒரு குவளை சாராயம் பெற்றுக் கொண்டு போகிறான்! குதிரைகளுக்குத் தரும் மட்டரக மான சாராயத்தை. வெள்ளை முதலாளி பார்த்து விடுகிறான். கருப்பு அடிமை பதுங்குகிறான். பளார்பளார்! என்று சவுக்கடி விழுகிறது! துடிக்கிறான்! தடுமாறிக் கீழே விழுகிறான்! சவுக்கடி ஓயவில்லை! சவுக்காலடிப்பவன், குதிரை மீது! சவுக்கடிபடுபவன், தரையில்!!

பார்க்கிறார்கள் பலர்; பதறுகிறார்கள், ஆனால் வாய் திறந்து ஒரு வார்த்தை, ஐயோ! பாவம்! விட்டுவிடுங்கள்! என்று கூறவில்லை ஏன்? அடிப்பவன் எஜமானன்! வெள்ளை இனம்! துடிப்பவன், அடிமை; நீக்ரோ! பார்ப்பவர்களும் அடிமைகள்; நீக்ரோக்கள். ஐயோ! பாவம்! என்று சொன்னாலோ, போதும் நிறுத்துங்கள் என்று கூறினாலோ, அதே சவுக்கடி விழும் இவர்களுக்கு; இன்னும் வேகமாக. அடி தாளமாட்டாமல் ஓடினாலோ, வேட்டை நாய்களை அவிழ்த்துவிடுவார் எஜமானர்!! எனவே அவர்கள் பார்க்கிறார்கள், தங்கள் இனத்தவன் ஒருவன், தள்ளாடும் வயதினன், சவுக்கடி படுவதை! எஜமானன் அடிப்பதுடன் விடவில்லை குப்புறக் கீழே விழுந்தவன் மீது குதிரையை ஏற்றுகிறான்! குற்றுயிராகிறான் அடிமை! கோபம் தீருகிறது எஜமானனுக்கு. மாளிகை செல்கிறான்! இரண்டு நாட்களில் அந்தக் கருப்பு அடிமை இறந்து போகிறான் மற்ற அடிமைகள் அவனை அடக்கம் செய்கிறார்கள். பிரார்த்தனை செய்யப்படுகிறது!! சட்டம்? அடிமையை என்ன செய்யவும் உரிமை பெற்றவன் எஜமானன்! பயல் செத்துவிட்டான்!! என்று கூறுறது, அந்த அடிமை செய்த பல குற்றங்களிலே, சவுக்கடியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் செத்ததும் ஒன்று என்பதுபோல! இதைக் கண்ட ஒரு கட்டுடல்கொண்ட



நீக்ரோ இளைஞன், ஆயிரம் நீக்ரோக்களை இரகசியமாகத் திரட்டிக்கொண்டு, அந்த ஊரையே அழித்து, வெள்ளையர்களைக் கொன்று குவித்து, விடுதலை பெறத் திட்டமிடுகிறான். இந்தப் புரட்சி 1800ம் ஆண்டு, அமெரிக்காவில் நடைபெற்றதை, 'கருப்பு இடி' என்ற ஏடு எடுத்துக் காட்டுகிறது.

ஆயுதம் இல்லை, புரட்சி நடத்திட! பயிற்சி கிடையாது, போர்முறையில்! அடக்கிடப் பலமான பட்டாளம் வெள்ளை அரசிடம் இருப்பதும் தெரியும். பிடிபட்டுவிட்டால் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்பதும் புரிகிறது. ஆனாலும் எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்துக் கொண்டிருப்பது! கண் எதிரே சவுக்காலடித்துச் சித்திரவதை செய்கிறான் பார்த்துக்கொண்டுதானே இருக்க முடிகிறது! செத்தானே அந்தக் கிழவன், புரட்சியா செய்தான்? இல்லையே! அடங்கி ஒடுங்கிக் கிடந்தான்! சவுக்கடி விழ விழத் துடித்தான்; எதிர்த்தானா? இல்லையே? ஏன் என்று கேட்டானா இல்லையே! வாய் திறக்கவே இல்லை! கண்ணீர் வடித்தான்! முடிவு? புதைத்துவிட்டார்கள்! புரட்சி செய்து பிடிபட்டால் சாகவேண்டும்! சரி! புரட்சி செய்யாதிருந்தால் மட்டும் வாழ்கிறோமா! இது ஒரு வாழ்வா! எந்த நேரத்திலும் சவுக்கடி விழலாம், எந்தச் சமயத்திலும் குதிரையை விட்டு மிதிப்பார்கள், குற்றுயிராக்குவார்கள், பிறகு கர்த்தரிடம் சேர்ப்பிப்பார்கள்!! ஜெபம் நடத்துவார்கள்! இது ஒரு வாழ்வா! இதைவிட எதிர்ப்போம், வெற்றி பெற்றால் விடுதலை! இல்லையானால் வீரமரணம்!

இவ்விதம் கூறுகிறான் 'கருப்பு இடி' என்ற காவியத் தலைவன் கேப்ரியல்; சரி என்று இசைகின்றனர், ஆயிரம் அடிமைகள். ஊரை வளைத்துப் பிடித்துக்கொள்ள திட்டம் வகுக்கிறான். திட்டம் வெற்றி பெறவில்லை, பெருமழை, அவன் திட்டத்தை நாசமாக்கி விடுகிறது. பிடிபடுகின்றனர் பலர். கேபிரியலும் வேறு சில தளபதிகளும் தப்பி ஓடுகின்றனர், காட்டுப்புறம் படை வருகிறது! வெள்ளையரின் இதழ்கள் 'கருப்பு அபாயம்' பற்றிப் பொறி பறக்க எழுதுகின்றன. கேபிரியல் பிடிபடுகிறான். பிடிபடுகிறான் என்றுகூடச் சொல்வதற்கில்லை! தானே தன்னை ஒப்படைக்கிறான்! சரண் அடையவில்லை. அந்தச் சம்பவமும் கேபிரியலின் வீரத்தை விளக்குவதாகவே அமைகிறது, கேபிரியல் தப்பிச்

செல்வதற்காக ஒரு படகு தயாராகிறது. ஆனால் கடைசி நேரத்தில், அவனுக்குத் துணை செய்ய முன் வந்தவன் பிடிபடுகிறான். போலீஸ் அவனை வளைத்துப் பிடித்துக் கொண்டு எங்கே கேபிரியல்? என்று கேட்கிறார்கள்; அவன் தனக்கு ஏதும் தெரியாது என்று மறுக்கிறான்; கொடுமைப்படுத்துகிறார்கள் போலீஸ் படையினர்; தனக்காகத் தன் நண்பன் இம்சைக்கு ஆளாவது கண்டு தாங்காத கேபிரியல், போலீசிடம் நிற்கிறான், 'இதோ நான்தான் கேபிரியல் விடுங்கள் அவனை! என்னைக் கைது செய்து கொள்ளுங்கள்'' என்று கூறுகிறான்

தம்பி! 'கருப்பு இடி' என்ற அந்த நூலிலே கூறப்பட்டிருப்பது அவ்வளவும் கற்பனை அல்ல, வரலாற்று நிகழ்ச்சி. வடிவம், கதையாக்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ற சம்பவக் கோவைகள்; உரையாடல்கள் தரப்பட்டுள்ளன; ஆனால் ஒரு நீக்ரோ புரட்சி ஏற்பட்டதும், கேபிரியல் போன்ற நீக்ரோ தலைவர்கள் பிடிபட்டுக் கொல்லப்பட்டதும் உண்மைச் சம்பவங்கள்.

கடைசிக் கட்டம் உண்மையிலேயே கல் மனதையும் கரைத்து விடும்.

கேபிரியல் தூக்கிலே தொங்குகிறான். கலங்காமல் தாள் பணிய மறுத்து,

அந்தப் புரட்சியில் அவனுடன் துணிந்து ஈடுபட்டு ஆபத்துக்களைச் துச்சமென்று கருதிப் பணியாற்றிய அவனுடைய காதலி—நீக்ரோ பெண்மணி—வெள்ளை வெறியரிடம் சிக்கி அடிமையாக விற்கப்படுகிறாள்.

இதைக் காணுகிறான், கதையின் துவக்கத்தில் சவுக்கடி கொடுக்கப்பட்டு ஒரு நீக்ரோ இறந்தானே, அதைப் பார்த்த, மற்றோர் நீக்ரோ!

அந்த நீக்ரோவும் கேபிரியலின் புரட்சியிலே ஈடுபட்டவன்தான்; இடையிலே அச்சம் அவனைப் பிடித்தாட்டிற்று; அவன்தான் புரட்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டான்.

'கருப்பு இடி'யில் கூறப்பட்டுள்ளது போன்ற புரட்சிகள் பலப்பல அவ்வப்போது வெடித்துக் கிளம்பியபடி இருந்தன.



தம்பி! இதுபற்றி இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம் நீக்ரோக்கள் தங்கள் விடுதலைக்காக நடத்திடும் கிளர்ச்சியை அமெரிக்க வெள்ளை அரசு ஒழித்துக் கட்டுவதற்குக் கையாண்ட ஒரு முறை, அந்தக் கிளர்ச்சியை, 'அன்னியர்கள்' அமெரிக்காவுக்கு எதிராகத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்ற பழி சுமத்தி, அமெரிக்க மக்களின் ஆத்திர உணர்ச்சியைத் தட்டி, எழுப்புவது என்பதைக் குறிப்பிடத்தான்.

இந்தி மொழி ஆதிக்கம் தங்கள் எதிர்காலத்தை நாசமாக்கும் என்று உணர்ந்து கொதித்து எழுந்த மாணவர்களை, நாம் தூண்டிவிட்டு கலாம் விளைவித்தோம் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் கூறினாரல்லவா! இதே முறையைக் கையாண்டனர்; முன்பு; அமெரிக்காவில்.

'கருப்பு இடி' என்ற நூலிலே, புரட்சித் தலைவன் கேபிரியல் தான்தான் புரட்சி நடத்தியவன் என்று சொன்ன பிறகும் விசாரணை நடத்திய நீதிபதிகள் விடவில்லை.

உனக்கு எப்படி இவ்வளவு திட்டமிடத் தெரிந்தது; நீயோ அடிமை! உனக்கு எங்கிருந்து இத்தனைத் துணிவு பிறந்தது.

உண்மையைச் சொல், புரட்சியைத் தூண்டிவிட்டவர் யார்? சொல்லிவிடு! உன்மீது குற்றம் இல்லை. நீ பாவம், யாரோ ஆட்டுவித்தபடி ஆடிவிட்டாய். சூத்ரதாரிகளைக் கூறிவிடு. தப்பித்துக் கொள்ளலாம்,

என்றெல்லாம் கேட்கிறார்கள்.

ஒருவரும் தூண்டிவிடவுமில்லை, துணைக்கு வரவுமில்லை; திட்டமிடவுமில்லை. நானேதான் திட்டமிட்டேன். அன்று மட்டும் பெருமழை வாராதிருந்திருப்பின் என் திட்டம் வெற்றியும் பெற்றிருக்கும்,

என்று கேபிரியல் சொல்லுகிறான், நம்பிக்கை ஏற்படவில்லை! நீதிபதிகளுக்கு; ஏனென்றால் (1800) அன்றைக்கு அமெரிக்காவில் கிளர்ச்சிகளை, புரட்சிகளை மூட்டி விடுபவர்கள் பிரன்ச்சுக்காரர்கள் என்ற எண்ணம் பலமாக இருந்து வந்தது, பிரன்ச்சுப் புரட்சியின்போது மலர்ந்த கருத்துக்கள் சமத்துவம் என்பது! நீக்ரோக்கள் சமத்துவம்

அல்லவா கேட்கிறார்கள்! அவர்களுக்கு எப்படித் தெரியும் சமத்துவம் என்பது; பிரனச்சு நாட்டு புரட்சிக்காரர்கள் தூண்டிவிட்டதால் தெரிந்தது! ஆகவே நீக்ரோ கேபிரியல் நடத்திய புரட்சி பிரன்ச்சுக்காரர் மூட்டிவிட்டது! இது அமெரிக்கா நிறவெறியர் வாதம்

காக்கை கருப்பு நிறம்

கந்தசாமி நிறம் கருப்பு,

ஆகவே

கந்தசாமி காக்கை!

இப்படி ஒரு வாதம்! அந்த நாள் அமெரிக்காவில்தானே என்று கேட்கின்றாயா தம்பி. ஏன், இந்த நாள் பக்தவத்சலனார் வேறுவிதமாக வாதம் செய்கிறார்.

இந்தி ஒழிக என்கிறது தி. மு. க.

மாணவர்கள் இந்தி ஒழிக என்கிறார்கள்

ஆகவே

மாணவர்கள், தி. மு. க!

இப்படித்தானே வாதாடுகிறார்! ஆகவே பக்தவத்சல னாரின் வாதம் புதிது அல்ல! நெடுங்காலமாக இருந்து வருகிற வாதம்! ஆதிக்கம் அழிந்துபடுமோ என்ற அச்சம் பீடிக்கும் நிலையிலுள்ளவர்கள் வழக்கமாகக் கூறிடும் வாதம்!

தூக்குக் கயிற்றைக் கழுத்திலே மாட்டுவதற்கு ஒரு விநாடிக்கு முன்புகூடக் கேட்கிறார்கள் கேபிரியலை, 'ஏதாவது சொல்லிக்கொள்ள விரும்புகிறாயா?' என்று.

'நானா, ஏதும் இல்லை. கயிறு பேசும்!' என்கிறான் கேபிரியல்!

டக்ளஸ் டில்மன் குடியரசுத் தலைவரான நாட்களில் நீக்ரோக்களுக்குச் சமத்துவம் கிடைத்திடச் செய்வதற்குப் புரட்சியே சரியான வழி என்ற கருத்துடன் 'டர்னரைட்' என்ற ஒரு இயக்கம் இருந்து வருகிறது.

இந்த இயக்கம், கம்யூனிஸ்டுகளால் நடத்தப்பட்டு வருகிறது; அமெரிக்காவை அழிக்கவே, நீக்ரோக்களின்



விடுதலை என்று பெயர் கூறிக்கொண்டு இந்த பயங்கர இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது என்று அமெரிக்க அரசு கூறிவந்தது. ஒரு நீக்ரோவே குடிஅரசுத் தலைவர் ஆகி விட்டதால், இந்த பயங்கர இயக்கம் மேலும் துணிவு பெற்று ஆட்டம் ஆடுமோ என்ற அச்சம் கொண்ட வெள்ளைநிற ஆதிக்கக்காரர்கள் இந்த பயங்கர இயக்கம் கம்யூனிஸ்டுகளின் கைப்பாவை, ஆகவே அதனைத் தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம் அல்ல; நிறவெறியை நிலைநாட்ட விரும்பும் வெள்ளையர் சுமத்தும் பழி அது; ஆகவே டில்மன் அந்த இயக்கத்துக்குத் தடை ஏதும் போடக்கூடாது என்று நீக்ரோ மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

டில்மன் யார் பக்கம் சேருவார்? தன் இன மக்கள் பக்கமா? வெள்ளையர் பக்கமா? என்ற கேள்வி எழும் போது டில்மன் உறுதியாகத் தெரிவிக்கிறார். அந்த இயக்கம் உண்மையிலேயே பயங்கர நடவடிக்கையில் ஈடு படுகிறது, கம்யூனிஸ்டுகளால் நடத்தப்படுகிறது என்று மெய்ப்பிக்கப் பட்டாலொழிய அதனைத் தடை செய்யப் போவதில்லை; நமது சட்டம் இடந் தராது. நான் அந்த இயக்கம், கருப்பருக்காகவா, வெள்ளையருக்காகவா என்று பார்க்கப் போவதில்லை; அது அமெரிக்காவின் நன்மைக்கா, அமெரிக்காவைக் கெடுக்கவா, எதற்குப் பயன் படுகிறது என்பது பற்றித்தான் பார்க்கப் போகிறேன் என்று கூறுகிறார். அவரைச் சூழ இருந்த வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு அடக்கமுடியாத கோபம். ஒரு நீக்ரோவைக் கொண்டு நீக்ரோ விடுதலை இயக்கத்தைத் தடை செய்துவிடலாம். அதற்கு டில்மன் குடிஅரசுத் தலைவராகி இருப்பது பொன்னான சந்தர்ப்பம் என்று அந்த ராஜ தந்திரிகள் கருதித் திட்டமிட்டனர். டில்மன் ராஜதந்திரம் படிக்கவில்லை; ஆனால் இதயம் இருந்தது. அதிலே நீதிக்கும் நேர்மைக்கும் இடம் இருந்தது. பொறுப்புணர்ச்சி போதுமான அளவு இருந்தது. எந்தச் செயலும் அமெரிக்க நாட்டுக்கென அமைந்துள்ள சட்ட திட்டத்திற்கு உட் பட்டதாக, அதன் ஒழுங்கைக் குலைத்திடாததாக இருக்கும் படித்தான் அமையவேண்டும், மேலும் விருப்பு வெறுப்பு களுக்கு இடமளிக்கக்கூடாது என்று உறுதி கொண்டிருந் தார்.

மகன் ஜூலியன் வந்து பார்த்து மகிழ்ச்சி பொங்கப் பொங்கப் பேசும்போதுகூட, டில்மன் இந்த நோக்கத்தை உறுதியாகத் தெரிவிக்கத் தவறவில்லை.

> அற்புதம் நடந்துவிட்டது, அப்பா! அற்புதம்! வெள்ளை மாளிகையில் தாங்கள் வீற்றிருக்கும் வாய்ப்புக் கிடைத்ததை நாங்கள் ஒரு அற்புதம் என்றே கருதுகிறோம். அப்பா! நமது இனத்தவரும், அவர்களுக்காகப் பணியாற்ற ஏற்பட்ட அமைப்பு களும் ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சாதிக்க முடியாததை, தாங்கள் ஒரு நொடியில் சாதிக்கும் வாய்ப்பு அப்பா! இது! நமது இனத்தவர் எவ்வளவோ பேர் மடிந்தனர், உரிமை கேட்டு; அல்லற்பட்டனர்; அவதிப்பட்டனர். இப்போது வெள்ளையர்களுக்கு ஆணைபிறப்பிக்க முடியும் தாங்கள்...

ஆர்வமும் நம்பிக்கையும் கொந்தளிக்கும் விதமான ஜூலியன் பேச்சு, தன் தகப்பனார் பதவிக்கு வந்திருப்பது நீக்ரோ இனத்தின்மீது சுமத்தப்பட்டுள்ள பழியினை ஒரே வரியால் துடைத்திடத்தான் என்ற நம்பிக்கை. டில்மன் அமைதியாகத்தான் பேசுகிறார்.

> நான் யாரையும் எதையும் செய்யச் சொல்லி வற்புறுத்துவதாக இல்லை. நான் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவன், நீக்ரோ மக்களின் குடிஅரசுத் தலைவன் அல்ல!

தம்பி! டில்மன்தான் அவ்விதம் சொன்னாரே தவிர, அவர் அந்த உயர் பதவி வகிப்பது கண்டு சகித்திட முடியாத நிறவெறியர்கள், டில்மன் கருப்பரின் தலைவர், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் அல்ல, அதற்கு ஏற்ற தகுதியும் திறமையும் இல்லை; ஒழுக்கம் இல்லை; உயர் பண்பு இல்லை; கேட்பதற்கே கூசும் பல குறைபாடு கொண்டவர்; குடியன், கூத்திக்கள்ளன்!—என்றெல்லாம் பழி சுமத்தினர்; வெட்டவெளியில் மட்டுமல்ல, அரச அவையிலேயே கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தனர்!

அதிலே அவர்கள் குறிப்பிட்ட பல குற்றச்சாட்டுகளிலே முக்கியமானவை இரண்டு; ஒன்று கம்யூனிஸ்டுகளால் தூண்டிவிடப்பட்ட டர்னரைட் என்ற பயங்கர இயக்கத்தில், டில்மனுடைய மகன் ஜூலியன் ஒரு உறுப்




பினன் என்பது; மற்றொன்று உயர் நிலையிலுள்ள ஒரு மாதை டில்மன் கற்பழிக்க முயன்றார் என்பது.

திடுக்கிடத் தக்க குற்றச்சாட்டுகள் அல்லவா? எப்படி இந்தத் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள முடியும்? தாங்கிக் கொண்டார்! எப்படி இந்தக் குற்றச்சாட்டுகளை உருவாக்கினார்கள் என்பதையும் டில்மன் எப்படி உறுதியுடன் அவைகளைத் தாங்கிக் கொண்டார் என்பதையும் அடுத்த கிழமை விளக்குகிறேன்.

அண்ணன்,

20—2—'66



தமிழ் நூல் காப்பகம்
09217
தமிழ் நகர் விருத்தாசலம் பேட்டை